# நீங்களும்
# கோர்ட்டில் வாதாடலாம்

(திருத்திய பதிப்பு)

ஆசிரியர்

அருப்புக்கோட்டை**செந்தமிழ்க்கிழார்**

வெளியீடு :

திண்டிவனம் **D.ராஜா**

செயலாளர், பாதிக்கப்பட்டோர் கழகம்

நெ.227, 3வது தெரு,

7-வது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை-600037.

E.mail : neethiyaithedi2019@gmail.com. Cell : 9600765606

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **நீங்களும் கோர்ட்டில் வாதாடலாம்** (திருத்திய பதிப்பு) |
| நூல் ஆசிரியர் | : | அருப்புக்கோட்டை **செந்தமிழ்க்கிழார்** |
| நூல் சொல்வது | : | வழக்கு தாக்கல் செய்வது பற்றி |
| நூல் வெளிவந்த ஆண்டு | : | 2023 |
| நூல் விலை | : | ரூ.310/- |
| நூல் மொத்த பக்கங்கள் | : | 180 பக்கங்கள் |
| நூல் உரிமை | : | பொது உடைமையாக்கப்பட்டது. |
| நூல் அளவு | : | Demi 1/8 (8½ x 5½ Inches) |
| நூல் வரைகலை | : | வெற்றி டிசைன்ஸ்,<br>இராணிப்பேட்டை.<br>செல் : 8838854277 |


## நன்றி அறிவிப்பு!


இந்நூலில் பொதுமக்கள் மற்றும் கோர்ட்டில் வழக்குகளில் ஈடுபடுவர்களின் நலன் கருதி ஏற்கெனவே வெளிவந்த ஆசிரியர் அருப்புக்கோட்டை தெய்வத்திரு.செந்தமிழ்க்கிழார் அவர்களின் இந்நூல் திருத்திய பதிப்பாக மீண்டும் வெளியிடப்படுகிறது. பொதுமக்களும் வாசகர்களும் படித்து பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# என்னுரை

நான் எழுதிய புத்தகங்களிலேயே மிகவும் பயனுள்ள புத்தகம் என்று பலராலும் பாராட்டப்படுவது நீங்களும் கோர்ட்டில் வாதாடலாம் என்ற இந்தப் புத்தகம்தான். துவக்கத்தில் நான் இப்படிச் சொன்னபோது என்னைப் பலரும் கேலி செய்துள்ளனர். ஆனால் இந்தத்தலைப்பு தற்போது தீப் போல் பரவி சட்டத்துறையில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது என்றே கூறலாம்.

அருப்புக்கோட்டையில் சிவில் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு தவறைக் கண்டுபிடித்து பத்திரிகையில் எழுதியதற்காக என்மீது ஒரு பொய் வழக்கு அருப்புக்கோட்டை வழக்கறிஞர் சங்கத்தால் துவங்கப்பட்டது. எனக்காக வழக்கறிஞர்கள் யாரும் வாதாட மறுத்துவிட்டார்கள். இதை ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டேன். மதுரையில் புகழ்பெற்ற வழக்கறிஞர் உங்களுக்காக வழக்கறிஞர்கள் யாரும் வரமாட்ட்ரகள். அருப்புக்கோட்டை வழக்கறிஞர் சங்கத்தில் போன் செய்து ஊர் முழுக்க சொல்லிவிட்டார்கள் என்றார். அவரிடம் என்னைத் தேடி வழக்கறிஞர்களை வரச் செய்கிறேன் என்று சபதமிட்டேன். அந்தச் சபதம்தான் இந்தப் புத்தகம் எழுதக் காரணமாக அமைந்தது எனலாம். தற்போது பல வழக்கறிஞர்கள் என்னைத் தேடிவந்து பாராட்டுகிறார்கள். ஆலோசனை கேட்டுச் செல்கிறார்கள் என்பது சிறப்புச் செய்தி!

பொதுவாக பத்திரிகையில் தொடராக வெளிவந்தபிறகு புத்தகமாக வெளிவருவதுதான் இயற்கை. ஆனால் புத்தகம் 3 பதிப்புகள் வெளிவந்த பிறகு சரவணா ஸ்டோர் இதயம் பேசுகிறது வார இதழில் தொடராக வெளிவந்திருக்கிறது என்பது சிறப்பு செய்தி. அதன் பிறகு எத்தனை பத்திரிகைகளில் தொடராக வெளி வந்துள்ளது – இன்னும் வந்து கொண்டிருக்கிறது என்பது யாருக்குமே தெரியாத ஒன்று. இந்தப்புத்தகம் பற்றி விமர்சனம் வராாத பத்திரிகைகளே இல்லை. துக்ளக் கூட பாராட்டி இருக்கிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் சீர்த்திருத்த என்னைப் போல் ஒரு ஐந்து பேர் போதும் என்று கணக்குப் போட்டு இருந்தேன். அந்தக் கணக்கை எல்லாம் தாண்டி பாதிக்கப்பட்டோர் கழகத்தில் ஆயிரக்கணக்கில் வந்து விட்டார்கள் என்பதை அறியும் போது என் பணியில் எனக்கு மிகுந்த உற்சாகமாக உள்ளது.

## நீங்களும் கோர்ட்டில் வாதாடலாம் (திருத்திய பதிப்பு)

பாதிக்கப்பட்டோர் கழகத்தில் முன்பு சட்டப் பயிற்சி வகுப்பு நடத்தி வந்தோம். தற்போது பாதிக்கபபட்டடோர் கழகத்தில் மக்கள் சமரச மையம் துவங்கி ஆங்காங்கே செயல்பட்டு வருகிறோம். நீதிமன்றம் செல்லாமலே சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்ளும் வகையில் வழி காட்டுவதுதான் எங்கள் பணி.

சட்டம் பற்றிய விஷயங்கள் தமிழில் இருந்ததாலும் அது வழக்கறிஞர்களுக்கும் – ஏன் நீதிபதிகளுக்கும்கூடப் புரியவில்லை என்பதை என்னுடைய பல அனுபவங்களில் உணர்ந்துள்ளேன். சட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதுதான் காரணம். இதானல் அவற்நறை எளிய தமிழில் பாமரருக்கான சட்டம் என்ற தலைப்பில் ஆக்கித் தந்துள்ளேன். எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்தவர்கள்கூட இதைப் படித்து சட்டத்தில் தெளிவாகி விடலாம் என்பதற்கு பாதிக்கப்பட்டோர் கழகத்தில் பலர் உதாரணமாக இருக்கிறார்கள். எனவே பாமரருக்கான குற்ற விசாரணை முறைச்சட்டம், இந்திய சாட்சிய சட்டம், இந்திய அரசியல் சாசனம் ஆகியவற்றை வாங்கி கைவசம் வைத்துக் கொண்டால் மிகவும் உதவியாக இருக்கும்.

நீதியைத்தேடி சாமான்யர்களுக்கான சட்ட பத்திரிகையும் தன் சட்ட விழிப்புணர்வுப் பணியை சிறப்பாக ஆற்றி வருகிறது. இது ஒரு சட்டக் களஞ்சியம் எனலாம். பழைய நீதியைத் தேடி பத்திரிகைகளும் புத்தகமாகக் கிடைக்கும்.

இந்தப்புத்தகத்தில் உள்ள நடைமுறைகளைத் தெரிந்து கொண்டு பாமரருக்கான சட்டங்களையும், மாதிரி மனுக்களையும் வாங்கி வைத்துக் கொண்டால் கோர்ட்டில் வாதாடுவது மிகவும் எளிது.

13.8.2012

அன்புடன்,
செந்தமிழ்க்கிழார்.

# பொருளடக்கம்


| வரிசை எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வழக்கு தாக்கல் செய்வது எப்படி?(பரம ரகசியம்) | 9 |
| 2. | வழக்கு தாக்கல் செய்ய கட்டணம் இருபது ரூபாய்தான்! | 11 |
| 3. | திரைப்படத்தில் நீதிமன்றம் | 12 |
| 4. | சட்டத்தைக் கரைத்துக் குடிக்க வேண்டுமா? | 13 |
| 5. | இருவகை நீதிமன்றங்கள் | 18 |
| 6. | பல்வகை நீதிமன்றங்கள் | 21 |
| 7. | காவல்துறை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்! | 24 |
| 8. | காவல்துறையில் புகார் செய்வது எப்படி? | 26 |
| 9. | காவல்துறையா? கவனம் தேவை! | 28 |
| 10. | காவல்துறையில் விசாரணை எப்படி நடக்கிறது? | 32 |
| 11. | காவல்துறையினர் உரிமையியல் வழக்குகளை விசாரிக்கலாமா? | 36 |
| 12. | காவல்துறையின் அறியாமை! | 40 |
| 13. | தனியாருக்கும் கைது செய்வதற்கான அதிகாரம் | 45 |
| 14. | பொய்யான புகாரின்பேரில் விசாரிக்கப்பட்டால்.. | 47 |
| 15. | அரசு வழக்கறிஞரின் அறியாமை! | 51 |
| 16. | காவல்துறையின் 24 மணி நேர டைரி | 53 |
| 17. | பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்வது எப்படி? | 56 |
| 18. | குற்றவியல் நீதிமன்ற நடைமுறைகள் | 63 |
| 19. | மனு திருப்பப்பட்டால் என்ன செய்வது? | 66 |
| 20. | வழக்கு எப்படி விசாரணைக்கு வருகிறது? | 69 |
| 21. | சாட்சிகளை எப்படி தயார் செய்வது? | 73 |
| 22. | சாட்சிகளை எப்படி வரச் செய்வது? | 75 |

| | | |
|---|---|---|
| 23. | சாட்சியாக யார் யாரை அழைக்கலாம்? | 81 |
| 24. | இந்திய சாட்சிய சட்டம் காவல்துறையை நம்பவில்லை! | 83 |
| 25. | சாட்சி பயந்தால் என்ன செய்வது? | 87 |
| 26. | அவிடவிட் என்றால் என்ன? | 89 |
| 27. | தனியார் ஆஜராவதை நீதிமன்றம் விரும்புகிறதா? | 90 |
| 28. | நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரம் என்பது என்ன? | 93 |
| 29. | நீதிபதிகள் தவறு செய்தால் என்ன செய்வது? | 97 |
| 30. | மனு தள்ளுபடி செய்யப்படும் என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி? | 101 |
| 31. | நீதிமன்ற அவமதிப்பு என்றால் என்ன? | 103 |
| 32. | அழைப்பாணை வழக்கை எப்படி விசாரிக்கிறார்கள்? | 108 |
| 33. | டைரி பார்ப்பது எப்படி? | 110 |
| 34. | பிடியாணை வழக்கை எப்படி விசாரிக்கிறார்கள்? | 112 |
| 35. | வழக்கறிஞர் மட்டுமே ஆஜராக முடியுமா? | 114 |
| 36. | மனுவைத் தள்ளுபடி செய்தால் என்ன செய்வது? | 118 |
| 37. | குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞரின் பங்கு எத்தகையது? | 121 |
| 38. | நகல் பெறுவது எப்படி? | 130 |
| 39. | நகல் மனு திருப்பப்பட்டால் என்ன செய்வது? | 135 |
| 40. | ஆங்கில அறிவு எந்த அளவில் தேவை? | 138 |
| 41. | வாய்தா கேட்பது எப்படி? | 141 |
| 42. | வழக்கறிஞரை எப்போது வேண்டுமானாலும் நியமிக்கலாமா? | 144 |
| 43. | வழக்கறிஞரை எந்த வகையில் நியமிக்கவேண்டும்? | 145 |
| 44. | வாய்தா என்றால் என்ன? | 148 |

45. வாய்தா ஏன் வாங்குகிறார்கள்? 149

46. வாய்தா கேட்டால் செலவுத் தொகை தர வேண்டும்! 152

47. வழக்கில் வெற்றிபெற என்ன செய்ய வேண்டும்? 153

48. வழக்கறிஞர் ஏமாற்றினால் என்ன செய்வது? 155

49. மேல்முறையீடு செய்வது எப்படி? 158

50. மேல்முறையீட்டில் விசாரணை எப்படி நடக்கிறது? 163

51. அமர்வு நீதிமன்றத்தில் நகல் பெறுவது எப்படி? 164

52. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது எப்படி? 166


53. உயர்நீதிமன்ற மனு தமிழில் இருக்கலாமா? 167

54. உயர்நீதிமன்றத்தில் விசாரணை எப்படி நடக்கிறது? 169

55. ஐகோர்ட்டில் PIP ஆக ஆஜராகுபவர் "பார்டி இன் பெர்சன் கமிட்டியை" எதிர்கொள்வது எப்படி? 172

56. லஞ்சம் கேட்பவர்களைப் பிடித்துக் கொடுப்பது எப்படி? 174



வழக்கறிஞர் உதவியின்றி தாமே வாதாட நினைப்பவர் சட்ட புத்தகங்களை எல்லாம் கரைத்துக் குடிக்க வேண்டும் என்று அவசியம் கிடையாது.

–அருப்புக்கோட்டை தெய்வத்திரு.செந்தமிழ்க்கிழார்

# வழக்கு தாக்கல் செய்வது எப்படி?

## பரம ரகசியம்

ஒரு முட்டையை மீட்க நினைத்து கோர்ட்டுக்குப் போகிறவன் ஒரு கோழியை இழப்பான் என்று ஒரு பழமொழி இருக்கிறது. இது எவ்வளவு உண்மையான என்பது கோர்ட்டுக்குப் போனவர்களுக்குத்தான் தெரியும். கோழியையும் இழந்து முட்டையையும் மீட்க முடியாமல் நிலைகுலைந்து போனவர்களும் உண்டு.

பரம ரகசியம் என்பார்களே, அது நீதிமன்றங்களில் நிறைய புதைந்து கிடக்கிறது என்றால் மிகவும் ஆச்சர்யமாக இருக்கும். இது உண்மைதான்! இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு நீதிமன்றத்தில் தமக்குத் தாமே ஆஜராகி வாதாடும் வழிமுறைகளைத் தெரிந்து கொண்டால் முன்பு சொன்ன பழமொழி எல்லாம் ஒன்றுக்கும் உதவாத பழைய மொழியாகிவிடும்.

அரசாங்கம் மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே பல அமைப்புகளை உருவாக்கி இருக்கிறது. உதாரணத்திற்கு அஞ்சல் துறையை எடுத்துக் கொள்ளலாம். ஒரு ஐம்பது பைசா கார்டில் நாம் எழுதும் விசயங்கள் இந்தியா முழுவதும் சென்றடைகிறது. இதில் அரசாங்கத்திற்கு நஷ்டம்தானே?

மக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் லாப நஷ்டக் கணக்கெல்லாம் பார்ப்பதில்லை. தனது சேவை எந்த விதத்திலாவது மக்களுக்குச் சென்று பயன்படுகிறதா என்பதுதான் அரசாங்கத்திற்கு முக்கியம்.

அஞ்சல்துறையைவிட மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே

அமைந்த ஒரு அரிய அமைப்பு நீதிமன்றம்தான் என்றால் ஆச்சர்யமாக இருக்கிறது அல்லவா? இது உண்மைதான். விலைவாசி நாளுக்கு நாள் ஏறிக் கொண்டேதான் இருக்கிறது. சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியாவில் பஸ் கட்டணம், மின் கட்டணம் எல்லாம் கூட எகிறிக் கொண்டே போகிறது என்றாலும் சுதந்திரம் வாங்கிய பிறகு சில வருடத்திற்கு முன்பு வரை, ஒருமுறைகூட கட்டணம் உயர்த்தாத துறை நீதித்துறைதான் என்றால் ஆச்சர்யமாக இருக்கிறது அல்லவா?

நாடு விஞ்ஞானத்தில் எவ்வளவோ முன்னேறிக் கொண்டிருக்கிறது. தொலைபேசி முன்பு பணக்காரர்கள் வீட்டில்மட்டும்தான் இருக்கும். இன்று பாமரரும் கையில் வைத்துக் கொண்டு புழங்குகிற அளவிற்கு நாட்டின் முன்னேற்றம் மின்னல் வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது. செய்திகளைச் சொல்வதில் அஞ்சல்துறையையும் மொபைல் போன் என்னும் உலா பேசி மிஞ்சிவிட்டது. ஐம்பது பைசா கார்டில் நாம் எழுதும் செய்தி போய்ச் சேர ஐந்து நாள் ஆகும் என்றால், அதே செலவில் அரை நிமிடத்தில் செய்தி போய்ச் சேர்ந்து விடுகிறது.

இப்படி ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறி வருகின்றன. ஆனால் நீதிமன்றங்களும், காவல்துறையும் மட்டும் இன்னும் மாறாமல் அப்படியேதான் இருக்கிறது. காரணம் கோர்ட் இரகசியங்கள் அந்த அளவுக்கு கட்சிக்காரருக்குக்கூடத் தெரியாமல் பாதுகாக்கப்படுகின்றன. சட்டம் படித்து உங்கள் வழக்கில் நீங்களே ஆஜராகிவிட்டால் போதும்.

ஒரு பத்து செங்கல்லையும் கொஞ்சம் சிமெண்டையும் வைத்து ஒரு பெரிய மாடி வீடு கட்ட முடியுமா? முடியும். உங்கள் வழக்கில் நீங்களே ஆஜராகி வாதாடிக் கொண்டால் ஒரு பெரிய மாடி வீடு கட்டுவதற்கு பத்து செங்கல் என்பதே அதிகம். இத்தனை எளிதாகக் கோர்ட்டில் நாம் வாதாடுவதற்கு ஆதரவாக நீதிமன்ற கட்டணங்கள் இருக்கின்றன என்பதுதான் காரணம்.

# வழக்கு தாக்கல் செய்ய கட்டணம் இருபது ரூபாய்தான் !

நீதிமன்றத்தில் எவ்வளவு கட்டணம் வசூல் செய்கிறார்கள் என்ற விபரம் தெரிந்தால் ஆச்சர்யத்தின் உச்சிக் கிளைக்கே போய்விடுவீர்கள்.

சரி, கட்டண விகிதத்தைப் பார்ப்போம்.

ஒரு குற்றவியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு புதிதாகத் தாக்கல் செய்ய கட்டணம் எவ்வளவு தெரியுமா? வெறும் இருபது ரூபாய்தான். ஆம். உங்கள் வழக்கில் இருபது ரூபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப் – முத்திரைக் கட்டணம் செலுத்தினால் போதும். இந்த இருபது ரூபாய் கட்டணம் வழக்கு தாக்கல் செய்வதற்கு மட்டும் அல்ல. வழக்கு முடியும் வரை செல்லத் தக்கதாகும்.

மாவட்ட நீதிமன்றம், செசன்ஸ் கோர்ட்டில் என்றால் இருபது ரூபாய் முத்திரைக் கட்டணம் ஒட்ட வேண்டும்.

ஒரு டீயும், வடையும் சாப்பிட்டால் பத்து ரூபாய்க்கும் மேலாகவே ஆகிறது. இருபது ரூபாயில் ஒரு வழக்கா என்று ஆச்சர்யமாக இருக்கிறது அல்லவா? நீங்கள் டீ சாப்பிடும் செலவைவிட குறைவாக ஐகோர்ட்டிலேயே கிரிமினல் ஓ.பி.செக்ஷனில் ஒரு கேசே தாக்கல் செய்துவிடலாமே! ஆம். இதற்கு இருபது ரூபாய்தான் கட்டணம்.

ஐகோர்ட்டில் ஒரு வழக்கில் நகல் வாங்க வேண்டியிருந்தால் கட்டணம் எவ்வளவு தெரியுமா? மனுவில் ஐந்து ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டினால் போதும். மேலும் ஒரு ரூ.35/– கொடுத்து ரசீதும் பெற்றுக்கொள்ளலாம்.

மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் எல்லா நிறுவனங்களும் உள்ளன என்றாலும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டால் நிர்வாகம் சீர்குலைந்து போகும் அல்லவா? எனவேதான்

பயந்து பயந்தாவது மின் கட்டணம், தண்ணீர் வரி, வீட்டுவரிகளைக்கூட நாளுக்கு நாள் உயர்த்திக் கொண்டே போகிறார்கள். ஆனால் சுதந்திரம் வாங்கி எழுபத்து ஏழு வருடம் ஆகியும் நம்ப முடியாத அளவிற்கு மிகக் குறைந்த கட்டணத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துவிடும் நடைமுறை இருப்பதற்குக் காரணம் மக்களுக்கு எளிதில் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனாலும் இந்த நோக்கம் நிறைவேறி இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மக்கள் பல துறைகளிலும் அறிவில் முன்னேறிக் கொண்டே போனாலும் சட்டத் துறை அறிவில் பூஜ்யமாகவே இருப்பதுதான் காரணம்.

கிராமத்தில் மயிற்றால் கட்டி மலையை இழுக்கலாம் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இது மற்ற துறையில் முடிகிறதோ இல்லையோ, நீதித்துறையில் உங்கள் வழக்கில் நீங்களே ஆஜராகி வாதாடுவது எப்படி என்று தெரிந்து கொண்டால் இந்தச் சாதனையை நீங்களும் செய்து காட்டலாம்.

# திரைப்படத்தில் நீதிமன்றம்

நீதிமன்றம் என்ற பெயரைக் கேட்டாலே பலர் நடுங்குகிறார்கள். நியாயம் இருக்கிறது என்று தெரிந்தாலும்கூட நமக்கேன் வம்பு என்று பேசாமல் இருந்து விடுகிறார்கள். நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி எதுவும் தெரியாமல் இருப்பதே இதற்குக் காரணம்.

திரைப்படத்தில் நீதிமன்றக் காட்சிகள் சில வரும். மக்கள் அதைக் கற்பனை செய்து பார்க்கிறார்கள். நீதிமன்றத்தில் இவ்வளவு திறமையாக வாதாட வேண்டியிருக்கிறதா என்றெல்லாம் நினைத்துப் பார்க்கிறார்கள். வாழ்க்கையில் எங்கோ ஒரு மூலையில் பின்னப்படுகின்ற சிறு சிறு நிகழ்ச்சிகளைத்தான் திரைப்படத்தில் பெரிதுபடுத்திக் காட்டுகிறார்கள் என்பது என்னவோ உண்மைதான்.

ஆனால் அதுவே உதாரணம் ஆகிவிடாது.

திரைக்கதையில் அண்ணனும் தங்கையும் பாசம் மிகுந்து கட்டிப் பிடித்து உருகுகிறார்கள். இதுபோல் நம் குடும்பத்தில் யாராவது நடத்திக் காட்ட முடியுமா? இதுபோல்தான் நீதிமன்றக் காட்சிகளும்.

நீதிமன்றத்தில் தாமே வாதாடுவதற்கு மிகப் பெரிய அறிவாளியாகவும், புத்திசாலியாகவும் இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. கொஞ்சம் துணிச்சல் இருந்தாலே போதும். கூடவே சட்டம் தானாகவே வரும்.

நீதிமன்றத்தில் தம் வழக்கில் தாமே வாதாடலாம் என்ற விபரம் படித்தவர்களுக்குக்கூடத் தெரியவில்லை. மேலை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளில் வாழ்வியல், விஞ்ஞானம், மருத்துவம் படித்தவர்கள் வக்கீலை வைத்துக் கொள்ளாமலேயே தானே வழக்கு நடத்தி வெற்றி பெறுகிறார்கள். இந்தியர் நமது உரிமைகளைப்பற்றி தெளிவாகச் சொன்னால் அப்படியா என்று அதிசயப்படுகிறார்கள். நீதிமன்றத்தில் மிகக் குறைவான கட்டணம் வசூலிப்பதன் நோக்கமே மக்கள் தாங்களே நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான்.

## சட்டத்தைக் கரைத்துக் குடிக்க வேண்டுமா?

தரப்பினர் தம் வழக்கில் தாமே ஆஜராகி வாதாடிக் கொண்டால் ஒரு கோழியை மீட்க ஒரு உதிர்ந்த இறகு செலவழித்தாலே போதும்.

சட்டங்கள் அனைத்துமே ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. ஆங்கிலம் என்பது ஒரு மாய மொழி. அது நினைத்த பொருள் எல்லாம் தரும். ஒரு வாக்கியத்தின் உண்மையான அர்த்தம் அதை எழுதியவர்க்கு மட்டுமே தெரியும். தமிழும் அப்படித்தான். இப்போதைய விஞ்ஞான வளர்ச்சியில் ஒரு மொழியை உலக நாடுகளில் எந்த மொழிகளிலும் மொழி பெயர்க்கலாம். அதற்கான தளத்தில் சென்று

பயன்பெறலாம். எது எவ்வாறாயினும் உயர்நீதிமன்றம் ஆங்கிலம் மட்டும் வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பது முறியடிக்கப்பட வேண்டும்.

ஒருமுறை தமிழ்நாட்டில் மது விலக்கு தேவையா என்ற சர்ச்சை எழுந்தது. அப்போது தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இப்போதைக்கு அது தேவை இல்லை என்று தனது சொந்தக் கருத்தை வெளியிட சட்டசபையில் பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. அப்போது கருணாநிதி இப்படி சமாளித்தார். ‘இப் போதைக்கு அதாவது இந்தப் போதைக்கு இந்த சமயத்தில் கிடையாது என்றுதான் சொன்னேன்‘ என்று சமாளித்தார்.

தமிழை என்னளவுக்கு ஆராய்ச்சி செய்தவர்கள் யாரும் கிடையாது. இதுபற்றி, ’தமிழே, தமிழா உனக்காக!’ என்ற புத்தகத்தில் விரிவாக எழுதி இருக்கிறேன்.

திருக்குறள் உலகப் பொதுமறை என்று பெயர் பெற்ற நூல்தானே! அதில் உள்ள குறளுக்கு ஒவ்வொருவரும் ஒரு பொருள் சொல்வதைப் பார்த்தால் தலை சுற்றும்.

‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை‘

என்ற குறளுக்கு ஆன்மீகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் நீண்ட நாள்வரை கற்புக்கரசி மழை பெய்யச் சொன்னால் மழை பெய்துவிடும் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இது ஒரு உயர்வுநவிற்சி அணியின்பாற் படும். ஆனால் நாத்திகர்கள் இதைத் தலைகீழாக மாற்றி கற்புள்ள பெண் என்பவள், பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்றவள் என்று பொருள் சொன்னார்கள். கற்புள்ள பெண்ணாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி... பெய் என்றவுடன் மழை பெய்துவிடுமா? மழைக்கு என்ன அறிவா இருக்கிறது?

செந்தமிழே இந்த லட்சணத்தில் இருந்தால் ஆங்கிலத்தில் உள்ள

சட்டம் என்ன சொல்கிறது என்று யாருக்காவது தெரியுமா?

ஆங்கிலத்தில் உள்ள சட்டத்தை மொழிபெயர்க்கிறவர்களும் இப்படித்தான் பயந்து பயந்து எப்படியாவது பொருள் சொல்லிக் குழப்பிவிடுவார்கள். ஆங்கிலத்தை என்னளவுக்கு ஆராய்ச்சி செய்வர்கள் யாரும் இருக்க முடியாது. இதுபற்றி, 'இபபடித்தான் பேசணும் எழுதணும் இங்கிலீஷ்' என்ற தலைப்பில் ஒரு புத்தகமே எழுதி இருக்கிறேன்.

நான் தமிழில் வெளிவந்துள்ள பல சட்ட புத்தகங்களை எல்லாம் ஆராய்ந்தேன். யார் சொல்வது சரி என்று என்னாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த அனுபவத்திற்குப் பிறகு தமிழில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை ஆராய்ந்து பாமரர்க்கான சட்டங்கள் என்ற தலைப்பில் மிக எளிமையாகவும், யார் வேண்டுமானாலும் புரிந்து கொள்ளும் அளவிலும் எழுதி இருக்கிறேன்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தில் சரியாக எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் கூட தங்கள் வழக்கில் தாங்களே ஆஜராகி சட்டத்தில் வெளுத்து வாங்குகிறார்கள். இதற்கு நான் எழுதிய பாமரர்க்கான சட்டங்கள் உதவுகிறது என்றும், சட்டத்தை இத்தனை எளிமையாக யாராலும் எழுத முடியாது என்றும் பலரும் பாராட்டி உள்ளனர். இதைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக வைத்தால் மாணவர்கள்கூட சட்டம் படித்து விடுவார்கள் என்றும் கருத்து தெரிவித்துள்ளனர். நீங்களும் அதை வாங்கிப் படித்துத் தெரிந்து கொண்டால் எந்த ஒரு வழக்கிலும் ஆஜராகி நீதியை நிலைநாட்டமுடியும்.

நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில்தான் இருக்க வேண்டும் என்று தமிழக அரசு சட்டம்கூட இயற்றி உள்ளது. எனவே, ஆங்கில அறிவு இல்லாதவர்களும், எழுதப் படிக்கத் தெரியாதவர்களும்கூட தம் வழக்கில் தாமே ஆஜராகி வாதாடிக் கொள்ள முடியும். செல்போனிலேயே மொழிபெயர்ப்பு வசதிகள் வந்துவிட்டதே!

இந்திய அரசியல் சாசனம் கோட்பாடு 19-ன்படி உங்கள் வழக்கில் நீங்களே வாதாடிக்கொள்ளவும் எந்த ஒரு பிரச்சினையையும் சுயமாகத் தீர்த்துக் கொள்ளவும் உங்களுக்கு முழு உரிமை உண்டு.

அரசியல் சாசனம் கோட்பாடு 350-ன்படி தமிழில் மனு கொடுக்கவும், தமிழிலேயே பேசுவதற்கும், ஆங்கிலத்தில் உள்ள ஆவணங்களுக்கு தமிழில் மொழிபெயர்ப்பு பெறவும் உரிமை உண்டு. எனவே, நீதிமன்றங்களில் வாதாட வேண்டும் என்றால் சட்டத்தை எல்லாம் கரைத்துக் குடிக்க வேண்டுமோ என்ற கவலையே தேவை இல்லை.

குற்றவியல் நீதிமன்றங்களில் சட்ட பிரச்சினைகள் எல்லாம் குறுக்கிடுவதற்கு வாய்ப்பே இல்லை; நியாயம்தான் முக்கியம். என்றாலும் சட்டத்தை ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும். அதைவிட நீதிமன்ற நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம். இந்த நூல் முழுக்க முழுக்க அதற்காகவே எழுதப்பட்டதுதான்.

எழுதப் படிக்கத் தெரியாவிட்டால் என்ன செய்வது? கவலையே வேண்டாம். விபரம் தெரிந்தவர்களை மனு தயார் செய்யச் சொல்லி அந்த மனுவையே கோர்ட்டில் தாக்கல் செய்து உங்கள் பக்கம் இருக்கிற நியாயத்தை எடுத்துச் சொல்லலாம். கோர்ட்டில் வாதாடுவதற்கு கல்வியறிவின்மை ஒரு தடையே அல்ல. தற்போது உயர்நீதிமன்றத்திலேகூட இந்த அதிசயங்கள் எல்லாம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

சட்ட விதிகள் அனைத்தும் பாமரர்க்குச் சாதகமாகவே உள்ளன. குற்றவிசாரணைமுறைச்சட்டம் விதி 2(ஈ)யின் கீழ் ஒரு நீதிமன்றத்திற்குச் சென்று வாயினால் உங்கள் முறையீட்டைச் சொன்னால்கூட போதும். அதை நீதிபதி வழக்காகப் பதிவு செய்து நடத்தி முடிக்க வேண்டும் என்று சட்டம் தெளிவாகச் சொல்கிறது.

ஒரு உண்மை என்னவென்றால் படிக்காதவர்கள்தான் தங்கள்

பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துச் படித்தவர்களைவிட சொல்வதில் திறமையுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் பல விசாரணைகளில் நேரடியாகவே வழக்கறிஞர்களை விட வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கே பிரச்சினையின் கண்டுணர்ந்தேன். காரணம்

முழு உண்மையும் தெரியும் என்பதால் தங்கள் வழக்கில் தாங்களே வாதாடிக் கொள்கிறவர்கள்தான் நியாயமாகவும் திறமையாகவும் வாதாட முடியும்.

சட்டம் என்பது நியாயம்தானே? ஆனால் அது பொதுவான நியாயம். அதனால் நீதிபதி நமக்குப் பாதகமான தீர்ப்பை வழங்கினாலும் நீதிபதி மீது நாம் ஆத்திரம் கொள்ளத் தேவை இல்லை. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்து நியாயம் பெறலாம்.

ஒரு நீதிபதி தெரிந்தே தவறு செய்வது குற்றம் என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 219-வதுபிரிவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனவே தவறான தீர்ப்பு சொல்லும் நீதிபதிகளைச் சிறைக்கே அனுப்பலாம். பாதிக்கப்பட்டோர் கழகம் இதில் மிகவும் முனைப்பாக இருக்கிறது. அதனால் இனி நீதிபதி தெரிந்தே தவறு செய்ய மாட்டார் என நம்பலாம்.

சட்டக் கல்லூரியில் படித்து முடித்துவிட்டால்கூட உடனடியாக கோர்ட்டில் இறங்கி வாதாடிவிட முடியாது. இதற்காகவே பலர் மூத்த வழக்கறிஞர்களிடம் ஜூனியராக சிறிது காலம் வேலை பார்ப்பார்கள். இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டால் பி.எல்.படித்தவர்கள்கூட எந்த அனுபவமும் பெறத் தேவை இல்லை. அந்த அளவிற்கு கோர்ட் நடைமுறைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதைவிட சீனியர் வழக்கறிஞர்களுக்கே தெரியாத விசயங்கள்கூட இதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. காரணம் இவை அனைத்தும் ஆசிரியரின் நேரடி அனுபவங்கள் ஆகும். இந்தியக் குடிமகன் என்ற தகுதியில் உலக கோர்ட்டுவரை சென்று வாதாடலாம்.

வழக்கறிஞர்கள் தாக்கல் செய்கிற எல்லா மனுக்களுமே நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சில மனுக்கள் திரும்பப் பெற்று, சரி செய்து மீண்டும் தாக்கல் செய்ய வேண்டி வரும். இந்த நேரத்தில் எல்லாம் நடைமுறை விதிகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்பதுதான் காரணம்.

குற்றவியல் நடைமுறை விதிகள் என்று தனியாக ஒரு சட்டமே உள்ளது. ஆனால் இப்படி ஒரு புத்தகம் இருக்கிறது என்று நீதிமன்ற ஊழியர்களுக்கே தெரியவில்லை. இவர்கள் வழிவழியாக சீனியர் ஊழியர்கள் என்ன செய்தார்களோ அதைத்தான் செய்கிறார்கள். எனவே, நீதிமன்ற ஊழியர்களின் சில தவறான நடைமுறைகளும் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இதை நீதிமன்ற ஊழியர்களும் பின்பற்றினால் பாதிக்கப்பட்டவர்க்கு விரைவில் நீதிகிடைக்க ஏதுவாகும்.

நீதிமன்றத்தில் வாதாடும்போது பட்டிமன்றத்தில் பேசுவதுபோல் தூய தமிழில்தான் பேச வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நியாயத்தை உங்கள் மொழியில் எடுத்துச் சொன்னாலே போதுமானது. தரப்பினர் என்றுதான் பெயர். ஆங்கிலத்தில் மாஜிஸ்ட்ரேட் – MAGISTRATE தம் நடையில் நாம் கொச்சை மொழியில் சொல்வதை செந்தமிழ் நடையில் எடுத்து எழுதிக் கொள்வார்.

## இருவகை நீதிமன்றங்கள்

நீதிமன்றங்களில் இரு வகை உண்டு. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் என்றும், உரிமையியல் நீதிமன்றங்கள் என்றும் அவை பெயர் பெறும்.

ஒரு குற்றவியல் நீதிமன்றம் (MAGISTRATE COURT) எப்படி இயங்க வேண்டும் என்று குற்றவிசாரணை முறைச்சட்டம் (CRIMINAL PROCE- DURE CODE) எடுத்தியும்புகிறது.

கொலை, கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு போன்ற குற்றம்

சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் இந்த நீதித்துறை நடுவர்மன்றத்தில் விசாரிக்கப்படும்.

கொடுக்கல் வாங்கல் தகராறு, சொத்துப் பிரச்சினை போன்ற உரிமைத் தகராறுகள் பற்றி மாவட்ட உரிமையில் நீதிமன்றங்கள் (DISTRICT MUNSIF COURT) விசாரிக்கும். இந்த உரிமையியல் நீதிமன்றங்கள் எப்படி இயங்க வேண்டும் என்று உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தில் (CIVIL PROCEDURE CODE) விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதைத் தமிழில் சுருக்கமாக உ.வி.மு.ச. என்றும் ஆங்கிலத்தில் C.P.C. என்றும் குறிப்பிடுவார்கள்.

வழக்கறிஞர்களிலும் குற்றவியல் வழக்கறிஞர்கள் (CRIMINAL LAWYER) என்றும், உரிமையியல் வழக்கறிஞர்கள் (CIVIL LAWYER) என்றும் இரு பிரிவினர் உள்ளனர். சில வழக்கறிஞர்கள் இரு நீதிமன்றங்களிலும் ஆஜராவது உண்டு.

வழக்கறிஞர் உதவியின்றி தாமே வாதாட நினைப்பவர் சட்ட புத்தகங்களை எல்லாம் கரைத்துக் குடிக்க வேண்டும் என்று அவசியம் கிடையாது.

குற்ற விசாரணைமுறைச்சட்டம், இந்தியத் தண்டனைச் சட்டம், இந்திய சாட்சிய சட்டம் இவை மூன்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் வாதாட விரும்புகிறவர்களுக்கு அவசியம் தேவை. இந்திய அரசியல் சாசனம் பொதுவாக எல்லா நீதிமன்றங்களிலும் பயன்படத்தக்கதாகும். அதுபோலவே இந்திய சாட்சிய சட்டமும் எல்லா நீதிமன்றங்களுக்கும் உரியவை.

உரிமையில் நீதிமன்றத்தில் வாதாட விரும்புகிறவர்கள் உரிமையில் விசாரணைமுறைச் சட்ட புத்தகம் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். தற்போது பாமரர்களுக்கும் புரியும் வகையில் ஆசிரியரே இவற்றை எளிமையாக்கி பாமரர்க்கான சட்டங்கள் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். எழுத்துக்கூட்டி வாசிப்பவர்களால் கூட இதைப் படித்து சட்டத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இவற்றை மலிவுப் பதிப்பாக வெளியிட்டால் 200 ரூபாய்க்குள் வாங்கிவிட முடியும். தற்போது ஜெராக்ஸ் தயாரிப்பு புத்தகங்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஐந்து புத்தகங்களும் 350 ரூபாய் வரை ஆகும்.

பொதுவாக புத்தகங்களில் பொருளடக்கம் மட்டுமே இருக்கும். ஆனால் இந்தப் புத்தகத்தில் பொருளடக்கம், முக்கிய சட்ட விதிகளின் சுருக்கம் என்ற இரு வகை உண்டு. இதை சட்ட டைரி என்றுகூடச் சொல்லலாம். இது சட்டம் படித்து தம் வழக்கில் தாமே வாதாடுகிறவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

முதலில் இந்தச் சட்ட புத்தகங்களைக் கதைப்புத்தகம் படிப்பதுபோல் வேகமாக முழுக்க படித்து விட வேண்டும்.

புத்தகத்தின் பொருளடக்கத்தில் அதிகாரம் மற்றும் முக்கியமான சில தலைப்புகளும் இருக்கும். புத்தகத்தை இரண்டு முறை முழுக்க வாசித்துவிட்டால் பொருளடக்கத்தைப் பார்த்து நமக்குத் தேவையான பகுதியை மட்டும் எடுத்து தெளிவாகப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இப்படி பலமுறை பழகிவிட்டால் சட்ட சுருக்கம் நம் மனதில் பதிந்து விடும். தெரியாத விபரத்தை டைரியை எடுத்து பார்த்துத் தெரிந்து கொள்வதுபோல் தெரிந்து கொள்ளலாம்.

பாக்கெட் டைரியில் இப்படிப்பட்ட சட்ட சுருக்கத்தை ஒரு சின்ன தாளில் குறித்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். பிறகென்ன சட்டம் உங்கள் பாக்கெட்டிற்குள் அடங்கிவிடும்.

குற்றவியல் நீதிமன்றங்களில் முழுமையாகப் பயன்படுத்தத் தக்க சட்டம் குற்ற விசாரணைமுறைச் சட்டம் (CRIMINAL PROCEDURE CODE) என்பதாகும். இதைத் தமிழில் சுருக்கமாக கு.வி.மு.ச. என்றும் சொல்லலாம். ஆங்கிலம் கலந்த தமிழில் உச்சரிக்கும்போது சி.ஆர்.பி.சி. (Cr.P.C.) என்றும் சொல்லலாம்.

குற்றங்கள் பலவகைப்படும். இந்தக் குற்றங்கள் பற்றி இந்தியத் தண்டனைச் சட்டத்தில் (INDIAN PENAL CODE) விதிகள் வகுத்துக்

கூறப்பட்டுள்ளன. இதைத் தமிழில் சுருக்கமாக இ.த.ச. என்றும், தமிழ் கலந்த ஆங்கிலத்தில் இ.பி.கோ. என்றும் ஆங்கிலம் கலந்த தமிழில் ஐ.பி.சி. (IPC) என்றும் சொல்லலாம்.

குற்றவியல் நீதிமன்றங்களில் நடைபெறக்கூடிய சாட்சியங்கள் பற்றி இந்திய சாட்சிய சட்டம் (INDIAN EVIDENCE ACT) விரிவாக எடுத்தியம்புகிறது.

ஒரு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கில் ஆஜராகி தாமே வாதாட விரும்புவர்கள் இந்த ஐந்து புத்தகங்களையும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று அல்லது இரண்டு முறை முதலிலிருந்து கடைசிவரை படித்து விட்டு பிறகு நமக்குத் தேவையான பகுதியை மட்டும் பொருளடக்கத்திலோ சட்ட சுருக்கத்திலோ பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

ஒரு வழக்கில் தாமே ஆஜராகும்போது தம் பக்கம் நியாயம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நியாயம் இல்லாத வழக்கில் ஆஜராகி தோல்வி ஏற்பட்டால் அது அவரையே திருப்பித் தாக்கும். நியாயம் இருந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

பள்ளியில் படிக்கும்போது ஒன்றாவது வகுப்பு முடித்து இரண்டாவது வகுப்பு, ஆரம்பப் பள்ளிக் கல்வியை முடித்து உயர்நிலைப் பள்ளி, அதன் பின்பு கல்லூரிப் படிப்பு என்று வரிசையாகச் செல்வதுபோலவே நீதிமன்ற நடவடிக்கைகளிலும் செல்லவேண்டும்.

## பல்வகை நீதிமன்றங்கள்

குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் நீதிமன்றங்கள் தவிர்த்து வேறு சிறப்பான நீதிமன்றங்களும் உள்ளன.

மனிதர்கள் செய்கின்ற எல்லாக் குற்றங்களையும் இந்த இரண்டே நீதிமன்றத்தில் விசாரித்து தீர்ப்பும் வழங்கிவிடலாம். எனினும் குற்றங்கள் பெருகிக் கொண்டே போவதால் அவற்றைப் பல

வகைகளாகப் பிரித்து அவற்றிற்கான கிளைச் சட்டங்களும் உருவாக்கப்பட்டு அதற்கான சிறப்பு நீதிமன்றங்களும் நிறுவப்பட்டுள்ளன.

அவ்வகையில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தவறு செய்தால் அவர்களை விசாரிப்பதற்கென்று இளங்குற்றவாளி களுக்கான நீதிமன்றம் உள்ளது. இந்த நீதிமன்றம் ஒரு சீர்திருத்தப் பள்ளிபோல் செயல்படும்.

தற்போது மகளிர்க்கான காவல் நிலையங்கள் உள்ளது போலவே மகளிர் சம்பந்தப்பட்ட குடும்பம் சம்பந்தமான பிரச்சினைகளை விசாரிக்க குடும்பநல நீதிமன்றங்களும் நிறுவப்பட்டுள்ளன. இங்கு விவாகரத்து சம்பந்தப்பட்ட வழக்குகள், வாழ்க்கைச் செலவுத் தொகை கோருதல் போன்ற பிரச்சினைகள் இந்தக் குடும்பநல நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவு பெறுவது மட்டுமே நோக்கம் என்றால் முன்பு குற்றவியல் நீதிமன்றங்களிலும், உரிமையியல் நீதிமன்றங்களிலும் வழக்கு தாக்கல் செய்வது நடைமுறையில் இருந்து வந்தது. இவற்றிற்காக தற்போது குடும்பநல நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யலாம்.

போதைப் பொருள் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதோடு, குற்றம் செய்யவும் தூண்டுகின்றன. எனவே, இதை விரைந்து தடுக்க வேண்டியது அரசின் முக்கிய கடமையாயிற்று. எனவே, இதற்கென்று போதைப் பொருள் தடுப்பு நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக தொழிலாளர்கள் முதலாளிகளிடம் அடிமையைப் போலவேதான் இருந்தார்கள். இது அரசியல் சாசனம் கோட்பாடு 21-ன்படி வாழும் உரிமைக்குத் தடையாக இருந்ததால் தொழிலாளர் நலச் சட்டம் உருவாக்கப்பட்டு தொழிலாளர்க்கான நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர மத்திய குற்றப் புலனாய்வு நீதிமன்றம், பொருளாதார குற்றப்புலனாய்வு நீதிமன்றம், மனித உரிமை ஆணையம் போன்ற பல நீதிமன்றங்கள் உள்ளன. தற்போது நில அபகரிப்பு வழக்கை விசாரிப்பதற்கென்று புதிதாக அதற்கென்று நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன,

படைவீரர்கள் தவறு செய்தால் அவர்களை விசாரிப்பதற்கென படை நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

பெரிய ஊர்களில் குற்றவியல் நீதிமன்றங்களில் பல இருந்தால் நீதிமன்றம்-1, நீதிமன்றம்-2 என்று குறிப்பிட வேண்டும். தவிர துணை நீதிமன்றங்களும் உள்ளன. இவற்றில் சிறு வழக்குகளை மட்டுமே விசாரிப்பார்கள். இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் போது குற்றவியல் நீதிமன்றம்-2 என்று குறிப்பிட வேண்டும்.

சிறிய ஊர்களில் குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் இரண்டும் ஒன்றாகவே இருக்கும். இத்தகைய நீதிமன்றங்களில் பொதுவாக காலையில் குற்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளையும், மதியம் உரிமை வழக்குகளையும் விசாரிப்பார்கள்.

சென்னையில் உள்ளவை பெருநகர நீதிமன்றங்கள் (Metropolitan Magistrate Court) எனப்படும். இவை முக்கிய இடங்களான ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை, எழும்பூரில் உள்ளன. இவற்றில் பெருநகர நீதித்துறை தலைமை நடுவர் நீதிமன்றம் எழும்பூரில் உள்ளது.

இது தவிர மாவட்ட நீதிமன்றம், அமர்வு நீதிமன்றம், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் எனவும் உள்ளன.

மாவட்ட நீதிமன்றம் என்பது மாவட்டந்தோறும் இருக்கும். சில மாவடங்களில் கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் இருக்கும்.

அமர்வு நீதிமன்றம் என்பது (Sessions Court) செசன்ஸ் கோர்ட் ஆகும். அமர்வு நீதிமன்றம் என்பது ஒரு வழக்கை ஒரே அமர்வில்

விசாரித்து தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டதாகும். ஆனால் வழக்கறிஞர்களின் ஆதிக்கம் அதிகமாகி கீழ்கோர்ட் போலவே பல வருடங்கள் விசாரித்து முடிப்பதுதான் நடைமுறையில் உள்ளது. இது தவறு. இதுபற்றி பாயும் புலி பதிப்பகத்தில் புரட்சிப் பெண் என்ற சட்ட விழிப்புணர்வு நாடகம் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு கொலை வழக்கில் பைத்தியக்காரனாக நடித்து நீதிமன்றத்தையே ஏமாற்றிய ஒருவனை சரண் அடைய வைத்து ஒரு பெண் ஒரே விசாரணையில் முடித்து தீர்ப்பும் சொல்லிவிடுகிறாள். அமர்வு நீதிமன்றம் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். அமர்வு நீதிபதிகள் மட்டும் அல்ல, நீதிபதிகள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது.

# காவல்துறை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்!

நீதிமன்றத்தின் நேரடிப் பிரதிநிதிகள் காவல்துறையினர்தான். சமூகத்தில் எந்த ஒரு குற்றமும் நடைபெறாமல் தடுக்க கு.வி.மு.ச.36-ன்கீழ் உயர் காவல் அதிகாரிகளுக்கும், கு.வி.மு.ச.149-ன்கீழ் கீழ் கீழ்நிலை அதிகாரிகளுக்கும் சிறப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதைமீறிக் குற்றம் நடைபெற்றால் குற்றத்தை விசாரித்து தண்டனை அல்லது தகுந்த பரிகாரம் வழங்கும் கடமையைத்தான் நீதிமன்றம் செயல்படுத்துகிறது. அதனால் எந்த ஒரு நடவடிக்கையையும் காவல்துறை மூலமே செய்வது சாலச் சிறந்தது.

காவல்துறை பற்றி பொதுமக்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. இது சரியல்ல. காவல்துறை எப்படி செயல்படுகிறது என்று தெரிந்து கொண்டால் இந்த மனக்குறை நீங்கிவிடும்.

நீதிமன்றத்தில் வழக்காடுவது எப்படி என்று தெரிந்து கொள்வதற்கு முன்பாக காவல் துறையில் புகார் செய்வது எப்படி என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு நகர காவல்துறையில் காவல்துறை ஆய்வாளர்

(INSPETOR) அவர்களும், அவருக்குக் கீழே பணியாற்ற சார்பு ஆய்வாளர்கள் (LAW AND ORDERS AND CRIME SUB INSPECTOR) இருவரும் இருப்பர்.

ஒருவர் குற்றவியல் சார்பு ஆய்வாளர், இன்னொருவர் சட்டம் ஒழுங்கு சார்பு ஆய்வாளர்.

சமூகக் குற்றங்கள் குறித்த நடவடிக்கைகளை குற்றவியல் சார்பு ஆய்வாளர் கவனிப்பார். பொது அமைதி, ஒழுக்கம் குறித்த நடவடிக்கைகளை சட்டம் ஒழுங்கு சார்பு ஆய்வாளர் கவனிப்பார். இவர்களுக்குக் கீழ் தலைமைக் காவலர், காவலர்கள், ரைட்டர் மற்றும் சி.ஐ.டி.காவல் அலுவலர்களும் இருப்பர்.

இவர்களுக்குப் பெரிய அதிகாரிகளாக காவல்துறை துணை கண்காணிப்பாளர் (DUPUTY SUPERINTENDENT OF POLICE), மற்றும் உதவி கண்காணிப்பாளர் (ASSISTANT SUPERINTENDENT OF POLICE), இணை கண்காணிப்பாளர் (JOINT SUPERINTENDENT OF POLICE), இவர்க்கு மேலே கண்காணிப்பாளர், (SUPERIN- TENDENT OF POLICE) கூடுதல் கண்காணிப்பாளர் (ADDITIONAL SUPERINTENDENT OF POLICE) ஆகியோர் இருப்பர்.

இவர்களுக்கும் மேலாக காவல்துறை துணைத் தலைவர் (DEPUTY INSPECTOR GENERAL), இவர்க்கும் மேலாக காவல்துறைத் தலைவர் சட்டம் மற்றும் ஒழுங்கு (INSPECTOR GENERAL OF POLICE), இவர்க்கும் மேலாக காவல்துறை தலைமை இயக்குநர் (DIRECTOR GENERAL OF POLICE) ஆகியோர் உள்ளனர்.

மாவட்டங்களிலும், சென்னை போன்ற பெரநகரங்களிலும் காவல் ஆணையாளர் (COMISSIONER OF POLICE), மற்றும் காவல் உதவி ஆணையாளர் (DEPUTY COMMISSIONER OF POLICE) பலர் இருப்பர்.

சென்னை மற்றும் பிற மாநகராட்சிகளில் காவல் துறை ஆணையரகம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

காவல்துறை அமைப்பு பற்றிய விபரங்களை நாம் முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு ஒரு முக்கிய காரணமும் இருக்கிறது.

ஒரு கீழ்நிலை அதிகாரி சரியான நடவடிக்கை எடுக்காதபோது அதுகுறித்து மேல்நிலை அதிகாரிக்குப் புகார் செய்து ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி தீர்வு காணலாம்.

## காவல்துறையில் புகார் செய்வது எப்படி

காவல்துறை எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு போலீஸ் ஸ்டேண்டிங் ஆர்டர் (POLICE STANDING ORDER) என்ற விரிவான நடைமுறை விதிகள் உள்ளன. தமிழில் இதை காவல்நிலை ஆணைகள் என்று சொல்வார்கள்.

ஆனால் இப்படி ஒரு சட்ட நடைமுறை விதிகள் இருக்கின்றன என்று காவல்துறையில் கேள்விப்பட்டிருக்கிறார்களே தவிர யாரிடமும் இது பற்றிய புத்தகம் இல்லை என்பதை என் அனுபவத்தின்மூலம் தெரிந்து கொண்டேன். எனினும் தம் வழக்கில் தாமே வாதாடுகிறவர்கள் இந்த விதிகளைத் தெரிந்து கொண்டு சட்டப்படி நடக்காத போலீசாருக்கு நடைமுறை விதியை நினைவுபடுத்தினால் கடமையுடன் செயல்படுவார்கள் என நம்பலாம்.

தற்போது இந்தக் காவல்நிலை ஆணைகள் விதியையும் பாமரர்க்கான சட்டத்தில் சேர்த்திருக்கிறேன். காவல் அதிகாரிகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இது.

மேலும் காவல்துறை நடவடிக்கைகள் ஒரு குற்றவியல் நீதிமன்றம் செயல்படுத்தக்கூடிய குற்ற விசாரணைமுறைச் சட்ட விதிகளை ஒட்டியேதான் இருக்கிறது. எனினும் நீதிமன்ற நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்று 2019-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகளிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இதையும் தெரிந்து

வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இப்படி ஒரு நடைமுறை விதிகள் இருக்கிறது என்பது கோர்ட் ஊழியர்களுக்கே தெரியவில்லை. அதனால் அவர்கள் நமக்கு எதிராக நடந்துகொண்டால் இதில் உள்ள நடைமுறை விதிகளைச் சுட்டிக் காட்டினால் அவர்கள் நியாயப்படி செயல்படுவார்கள் என நம்பலாம்.

குற்றத்திற்கான தண்டனைகளை விளக்குவதுதான் இந்தியத் தண்டனைச்சட்டம். எனவே, ஒரு காவல்துறையிலோ, நீதிமன்றத்திலோ புகார் செய்யும் முன்பாக இந்தியத் தண்டனைச்சட்டம் கூறுகின்ற விதிகள் பற்றியும் ஓரளவு தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியத் தண்டனைச் சட்டம் புத்தகத்தை ஒருமுறை கதைப் புத்தகம் படிப்பதுபோல் படித்து விட்டு பிறகு தேவையானவற்றை பொருளடக்கத்தில் பார்த்து தெரிந்து கொண்டு அதைப் பயன்படுத்தலாம்.

நான் எழுதிய பாமரர்க்கான இந்தியத் தண்டனைச்சட்டம் படிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் மிகவும் எளிமையாக இருக்கும்.

காவல்துறையில் ஒரு புகார் செய்யும் முன்பாக அது சம்பந்தமான விபரங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டால் காவல்துறையினர் உங்களுக்குச் சாதகமாகவே இருப்பார்கள் என நம்பலாம்.

தொடர்ந்து குற்றம் செய்பவர்களையோ, ரவுடிகளையோ கண்டால்தான் காவல்துறையினர்க்கு வீரம் பொங்கிக்கொண்டு வரும். அரசியல்வாதிகளுக்குப் பயப்படுவதுபோல் நடிப்பார்களே தவிர உண்மையில் பயப்படமாட்டார்கள். என்றாலும் தற்போது நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென்றே தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு பெரிய பெரிய தலைவர்கள், மந்திரிகள் எல்லாம் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நீதித்துறையின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை அதிகப்படுத்தி உள்ளது.

அதே போல் நியாயமான கோரிக்கை எழுப்புகிறவர்களிடமும், நிர்வாக நடைமுறை பற்றி தெரிந்து வைத்து இருப்பவர்களையும் கண்டால் காவல்துறையினர் நிச்சயம் பயப்படுவார்கள். காவல்துறை அழைப்பாணைகள்(சம்மன்), நோட்டீஸ்கள், ஆஜர் வழிமுறைகளை அவசியம் அதன் சட்டப்பிரிவுகளைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

இதுவரை என்னைப் போலீசார் ஐந்து முறை கைது செய்துள்ளார்கள். ஆனால் நான்குமுறை காவல்நிலையத் திலேயே கு.வி.மு.ச. 50(2)-ன்கீழ் மனு கொடுத்து சொந்த ஜாமீனிலேயே வந்துள்ளேன். ஐந்தாவது முறை என்னைப் போலீசார் ஜாமீனில் விட மறுத்தாலும் நீதிபதியே பெயில் ஆர்டர்போட்டு ஜாமீன் கொடுத்து என்னை வெளியில் போக வற்புறுத்தியதால் ஜாமீனில் வந்தேன் என்பதும் சிறப்புச் செய்தி. இதுகுறித்து 'இயேசுவை சட்டம் மன்னிக்குமா?' என்ற புத்தகத்தில் விரிவாகக் காணலாம்.

இந்தச் சாதனையை நீங்களும் நிகழ்த்தலாம். ஆனால் உங்களிடம் நியாயம் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## காவல்துறையா? கவனம் தேவை!

காவல்நிலையத்தில் நமது புகாரை எழுத்து மூலமாகத் தரும்போது, முதலில் பெறுநர் : என்று எழுதி அதற்குக் கீழே உயர்திரு சார்பு ஆய்வாளர், நகர காவல்துறை என்று எழுதி ஊரின் பெயரை எழுத வேண்டும்.

அடுத்து மனுதார் என்று ஆரம்பித்து நமது பெயர், தந்தையார் பெயர், சுமாரான வயது, தொழில், முகவரி அனைத்தும் தெளிவாக எழுத வேண்டும்.

அடுத்து எதிர்மனுதார் என்று துவங்கி, நாம் யார் மீது புகார் செய்கின்றோமோ அவரது பெயர், தந்தையார் பெயர், (தெரியாவிட்டால் பரவாயில்லை), சுமாரான வயது, தொழில், முகவரி ஆகியன இருக்க

வேண்டும்.

அடுத்து பொருள் என்று தலைப்பிட்டு புகாரின் சுருக்கத்தை எழுத வேண்டும்.

காவல்நிலையத்தில் நம்மைப் போலவே பலர் புகார் செய்வார்கள். அதனால் சில வேளைகளில் மிகவும் பிசியாக இருப்பார்கள். அதனால் மனுவில் உள்ள சங்கதிகளைப் படித்துப் பார்க்கும் அளவிற்கு சார்பு ஆய்வாளருக்குப் பொறுமையும், நேரமும் இல்லாதிருக்கலாம். எனவே, பொருள் என்ற தலைப்பில் புகாரின் சுருக்கத்தை எழுதிவிட்டால் சார்பு ஆய்வாளருக்கு மேற்கொண்டு படிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் ஆர்வத்தைத் தூண்டும். இல்லை என்றால் மனுவை வாங்கி வைத்துக் கொண்டு பிறகு வாருங்கள் என்று தட்டிக் கழித்து விடுவார்கள்.

பொருள் என்ற தலைப்பில் சுருக்கத்தை எழுதிவிட்டு, கடுமையான குற்றமாக இருந்தால் கு.வி.மு.ச. 154-ன்கீழ்மனு என்றும், சாதாரண குற்றமாக இருந்தால் கு.வி.மு.ச.155-ன்கீழ் மனு என்றும் சட்ட பிரிவு குறிப்பிட்டால் காவல் சார்பு ஆய்வாளருக்கு பதட்டமே வந்துவிடும். உங்கள் புகாரை நியாயமாக விசாரிக்க வேண்டும் என்ற எண்ணம் அப்போதே பிறந்துவிடும். உங்கள் புகாரை நியாயமாக விசாரிப்பார்கள் என்றும் நம்பலாம்.இவ்வாறு சட்டப்பிரிவைக் குறிப்பிட்டால் இரண்டு ரூபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டிவிட வேண்டும்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தில் உள்ளவர்கள் பையில் பணம் வைத்திருக்கிறார்களோ இல்லையோ பத்து - இருபது ரூபாய்க்கு கோர்ட் ஸ்டாம்ப் மொத்தமாக வாங்கிப் பையில் எப்போதும் தயாராக வைத்திருப்பார்கள். அதனால் இவர்கள் காவல்துறையில் புகார் கொடுத்தால் மனுவில் ஸ்டாம்ப் ஒட்டும்போது வேண்டும் என்றே சார்பு ஆய்வாளர் எதிரே பையிலிருந்து எடுத்து ஒட்டுவார்கள். இந்த செய்கையைப் பார்த்தாலே போலீசாருக்குப் பயம் வந்து விடும். இதை

நீங்களும் பின்பற்றலாம்.

பொருளுக்குக் கீழே புகாரின் தன்மைகளைப் பத்தி பத்தியாக எழுத வேண்டும்.

பொதுவாக புகார் மனு சுருக்கமாக இருப்பதுதான் நல்லது. விசாரணையில் நமது கருத்தை விரிவாகக் கூறலாம். நமது புகார் முதலில் முதல் தகவல் அறிக்கையாகத்தான் பதிவு செய்யப்படுகிறது.

பாதிக்கப்பட்டோர் கழகத்தில் இன்னொரு வழிமுறையையும் பின்பற்றி வருகிறார்கள். ஒரு புகார்தாரருக்கு தாம் சொல்லும் சங்கதிகள் அனைத்தும் உண்மையானவை என்று நிரூபிக்கும் சுமை சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 105-ன்கீழ் இருக்கிறது. எனவே, 'என் புகாரில் உள்ள சங்கதிகளை என்னால் நிரூபிக்க இயலாமற் போனால் இ.த.ச.211-ன்கீழ் தண்டனையை ஏற்றுக் கொள்வேன் என்று சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் சுயபிரமாணமாக இதில் தேதியில் நானே கையெழுத்துச் செய்துள்ளேன்' என்று உறுதி மொழியும் தருகிறார்கள். இந்த உறுதிமொழியைப் பார்த்தாலே போலீசார் வாயை மூடிக் கொண்டு புகாரைப் பதிவு செய்து விடுவார்கள்.

இப்படி பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் புகார் மனுவில் உறுதிமொழி தருவதில் இன்னொரு மறைமுக நோக்கமும் உள்ளது.

போலீசார் குற்ற அறிக்கை (Charge sheet) தாக்கல் செய்யும்போது பொய்யான சாட்சிகளைப் பதிவு செய்து சில நேரம் குற்றவாளிகளை விடுவித்து விடுவார்கள். அப்படிப்பட்ட குறை வராமல் இருப்பதற்காக (Cr.P.C.) கு.வி.மு.ச. 173(2)-ன்கீழான புலனாய்வு இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது, போலீசார் 'உண்மையான சாட்சிகளைத்தான் விசாரித்து உண்மையான சங்கதிகளைத்தான் தெரிவித்துள்ளேன். இந்தக் குற்றச்சாட்டில் உள்ள சங்கதிகள் நிரூபிக்கப்படாமல் எதிரி விடுதலை செய்யப்பட்டால் இ.த.ச.167 மற்றும் இ.த.ச.197-ன்கீழ் தண்டனையை ஏற்றுக் கொள்வேன்' என்று உறுதிமொழியுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்றும்

வற்புறுத்துவார்கள். இப்படி உறுதிமொழி கொடுத்தால் எதிரி தப்பிக்க முடியாமல் போய்விடும் அல்லவா? அதற்கு முன்னுரையாகத்தான் இப்படி தாங்களே முதலிலேயே உறுதிமொழி தாக்கல் செய்வதை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். இப்படி உறுதிமொழி தந்தாக வேண்டும் என்றாலே பொய்ப் புகார்கள் கோர்ட்டுக்கு வராமல் போய்விடுமே.

புகாரை எழுதி சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் சுயஉறுதிமொழி தந்த பிறகு கீழே, இடது பக்கத்தில் அன்றைய தேதியும், ஊரும் எழுதி வலது பக்கத்தில் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

எழுதப் படிக்கத் தெரியாவிட்டால் என்ன செய்வது?

கவலையே வேண்டாம். அதற்கும் வழி இருக்கிறது.

காவல் நிலையத்தில் ரைட்டர் என்று ஒரு அலுவலர் இருப்பார். இவரிடம் விசயத்தைக் கூறினால் நாம் நமது மொழியில் சொல்லச் சொல்ல அவர் தமது மொழியில் எழுதிக் கொள்வார். பின் படித்துக் காட்டி கையெழுத்துப் பெற்றுக் கொள்வார்.

செய்யப்படும் புகாரின் தன்மையானது குற்றத் தன்மை உடையது என்றால். புகாரை குற்றத்துறை சார்பு ஆய்வாளரிடம் தர வேண்டும். கொடுக்கல், வாங்கல் பற்றிய உரிமைத் தகராறு சம்பந்தப்பட்டது என்றால் சட்டம் ஒழுங்கு சார்பு ஆய்வாளரிடம் தர வேண்டும்.

புகார் மனுவானது சட்டம் ஒழுங்கு சார்பு ஆய்வாளரால் விசாரிக்கப்படும்போது அது குற்றத்துறை தொடர்புடையதாக மாறிவிடுவதும் உண்டு. அந்த சமயங்களில் சார்பு ஆய்வாளரே விசாரணையை மாற்றி ஒப்படைத்து விடுவார்.

காவல்நிலையம் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சேவை அமைப்பாகும். எனவே, காவல் நிலையத்தில் புகார் செய்வதற்கு மனுவில் இரண்டு ரூபாய்க்கு கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டினால்

போதும். வேறு எவ்விதக் கட்டணமும் செலுத்தத் தேவை இல்லை.

காவல்நிலையம் பொதுமக்களுக்காக இரவு பகல் என்று பாராது இருபத்தி நான்கு மணி நேரமும் சேவை செய்யக் கூடிய ஒரு அமைப்பாகும். அதனால் காவல் நிலையத்தில் கதவு பூட்டப்படுவதே இல்லை. பகலில் மட்டும் அன்றி இரவில் புகார் பெறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்கள் தயாராகவே இருப்பார்கள். எனவே, காவல் நிலையத்தில் புகார் செய்வதற்கு நேரம், பொழுது எல்லாம் கிடையாது. எனினும் புகாரின் தன்மையைப் பொருத்து உடனடியாகவோ சற்று கால தாமதமாகவோ பதிவு செய்வார்கள்.

புகாரின் தன்மை அவசரம் இல்லாதது என்றால் காலை 10 மணி முதல் இரவு 8 மணிக்குள் புகார் தரலாம். ஞாயிற்றுக்கிழமை, அரசு விடுமுறை நாட்கள் இந்தக் கணக்கெல்லாம் காவல் நிலையத்தில் கிடையாது.

சார்பு ஆய்வாளருக்குப் பகலில் நிறைய வேலைகள் இருக்கும். நீதிமன்றங்களில் ஆஜராக வேண்டியதும் இருக்கலாம். இதனால் மாலை ஏழு மணியளவில் நல்ல மனநிலையில் சற்று ஓய்வாக இருப்பார்கள். இந்த நேரத்தில் புகார் மனு தருவதுதான் நல்லது.

# காவல்துறையில் விசாரணை எப்படி நடக்கிறது ?

மனுதார் ஒரு புகாரை அளித்தவுடன் உரிய சார்பு ஆய்வாளர் மனுவின் சாராம்சத்தை வைத்து அதை எப்படி விசாரிப்பது என்று முடிவு செய்வார்.

கொலை, கொள்ளை. திருட்டு போன்ற கடுமையான குற்றங்களாக இருந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை எனும் எப்.ஐ.ஆர். (FIRST INFORMATION REPORT) எழுதுவார்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் காவல்துறை அலுவலர்

நீதிமன்றத்தில் பிடி ஆணையின்றிக் கைது செய்யக்கூடிய குற்றம் (BAILABLE WARRANT) என்றும், பிடியாணையுடன் கைது செய்யக்கூடிய குற்றம் (NON BAILABLE WARRANT) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளளன. இவற்றை ஏற்புடைக் குற்றம் என்றும், ஏற்புடையன அல்ல என்றும் தமிழில் வழங்குவர்.

பொதுவாக இரண்டு வருடங்களுக்குமேல் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் பிடி ஆணையின்றிக் கைது செய்யக்கூடிய குற்றம் என்றும், இரண்டு வருடத்திற்குக் குறைவாக தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களை பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடாத குற்றங்கள் என்றும் கொள்ளலாம். இதுபற்றி கு.வி.மு.ச.2(22), (23)-ல் விளக்கப்பட்டுள்ளது.

புகாரின் தன்மையானது பிடியாணையின்றிக் கைது செய்யக் கூடிய குற்றமாக இருந்தால் உடனடியாக எப்.ஐ.ஆர். எழுதுவார்கள்; எழுத வேண்டும் என்பது விதி. எப்.ஐ.ஆர் எழுதியவுடன் அதைப் படித்துக் காட்டி புகார் அளித்தவருக்கு இலவசமாக ஒரு பிரதி கொடுப்பார். இந்த விதிபற்றி கு.வி.மு.ச. 154(2)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதார் பற்றி காவல்துறை அறிந்திருந்தால் அவர் தகுதி மிக்கவர் என்று கருதினால் எப்.ஐ.ஆர் நகல் தராமல் நழுவுவார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் முதல் தகவல் அறிக்கையின் நகல் தராமல் இருப்பது கு.வி.மு.ச. 154(2)க்கு எதிரானதாகும் என்று தெரியப்படுத்தினால் பயந்துபோய் நகல் கொடுத்துவிடுவார்கள். அதைவிட புகாரின் இறுதியில் சாட்சிய சட்டம் 70-ன்கீழ் உறுதிமொழியும் தந்திருந்தால் மறு பேச்சுப் பேசமாட்டார்கள்.

எப்.ஐ.ஆர் எழுதிவிட்டால் சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கண்டு பிடித்து உடனடியாகக் கைது செய்து இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் நீதிபதியின் முன் ஆஜர்படுத்திவிட வேண்டும் என்று கு.வி.மு.ச.57-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் போலீசார் இந்த

விதியை முறையாகப் பின்பற்றுவதில்லை.

குற்றம் சுமத்தப்பட்டவர் (குற்றவாளி –CONVICT) என்று குறிப்பிடுதல் கூடாது. ஒரு புகாரின் அடிப்படையில் விசாரித்து நீதிமன்றம் தீர்ப்பு சொல்கிற வரையில் குற்றம் சுமத்தப்பட்டவர் (ACCUSED) என்றே குறிப்பிட வேண்டும்.) சமூகத்தில் உயர் மதிப்பு பெற்றவராகவோ அல்லது அரசியல் செல்வாக்கு மிக்கவராகவோ இருந்தால் வேண்டும் என்றே தாமதப்படுத்துவார்கள். பல சமயங்களில் எப்.ஐ.ஆர். எழுதாமல் எதையாவது காரணம் சொல்வார்கள்.

புகார் கொடுப்பவர் செல்வாக்கு மிக்கவராக இருந்தாலும், தவறான வழியில் தூண்டப்பட்டு இருந்தாலும் நிரபராதிகள் மீதும் எப்.ஐ.ஆர் எழுதிவிட்டு பல மாதங்கள் வரை அப்படியே கிடப்பில் போட்டுவிடுவார்கள். அல்லது நீதிமன்றம் போகாமலே முடித்தும் விடுவார்கள்.

சில சமயம் தவறான எப்.ஐ.ஆர். பதிவு செய்துவிட்டு எதிர்மனுதாரைக் கூப்பிட்டு சமரசம் செய்து கொள்ளத் தூண்டுவார்கள். சமசரம் ஆகவில்லை என்றால் கைது செய்து வழக்கு போட்டுவிட்டு வழக்கு முடியும்வரை ஆஜராகாமலே கூட இருந்து விடுவார்கள். இது சட்டப்படி தவறாகும்.

சில எப்.ஐஆர்.களைச் சில மாதங்கள் வைத்திருந்து எதையாவது காரணம் கண்டு பிடித்து எழுதி முடித்து விடுவார்கள். இதுவும் சட்டப்படி தவறானதுதான்.

எப்.ஐ.ஆர். வரிசை எண்களைச் சரிபார்க்கும் வழக்கம் எந்த ஒரு நீதிமன்றத்திலும் இல்லை. இதனால் பொய்யான எப்.ஐ.ஆர்.களைப் பதிவு செய்வதும், இரண்டு பக்கமும் காசு கிடைத்தால் கோர்ட்டுக்குக் கொண்டு போகாமலே மறைத்துவிடுவதும் போலீசாருக்குக் கைவந்த கலையாக இருக்கிறது. நீதிமன்றம் இதில் கவனம் செலுத்தினால் நல்லது.

புகார் மனுமீது காவல்துறை சரியான நடவடிக்கை எடுக்காவிட்டாலும், தவறான புகார் செய்து துன்புறுத்தப்பட்டாலும் என்ன செய்வது என்பதுதானே பிரச்சினை. அவர்கள் இந்த நூலில் வரும் விசயங்களைக் கவனமாகப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் பிணையில் விடும் குற்றம் (BAIL- ABLE OFFENCE) என்றும், பிணையில் விடக்கூடாத குற்றம் (NON BAIL- ABLE OFFENCE) என்றும் இரு வகைகள் உள்ளன.

பிணையில் விடத் தகாத குற்றங்கள் என்றால் எப்.ஐ.ஆர். உடனடியாக பதிவு செய்யப்படும். பிணையில் விடத்தக்க குற்றமாக இருந்தால் புலன்விசாரணை செய்து தேவையானால் எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படும்.

எப்.ஐ.ஆர். பதிவு செய்ய முடியாத வழக்குகளை பெட்டிஷன் கேஸ் என்பார்கள். பெட்டிசன் கேஸ் என்பது மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரை அழைத்து விசாரித்து தீர்வு கண்டு மனுவை முடித்துவிடுவதாகும்.

பெட்டிசன் கேசாக இருந்தால் கு.வி.மு.ச.155-ன்கீழ் மனு என்று குறிப்பிட்டு மனு செய்ய வேண்டும். இத்தகைய பெட்டிஷன் கேசைப் பெற்றுக் கொண்டவுடன் சார்பு ஆய்வாளர் ஒரு ரசீது தருவார். புகாரைப் பெற்றுக் கொண்டதற்கு இந்த ரசீது ஒரு ஆதாரம் ஆகும். இந்த ரசீதில் புகார்மனுதாரரின் பெயர், முகவரி, புகாரின் தன்மை, புகார் அளித்த தேதி மற்றும் பிற விபரங்களும் இருக்கும்.

பெட்டிசன் கேசில் ரசீது தராமலே விசாரணையை முடித்துவிட வேண்டும் என்றே காவல்துறையினர் பெரிதும் விரும்புகிறார்கள். சில நேரங்களில் விசாரணையின் முடிவில் இந்த ரசீது தரப்படுவதும் உண்டு.

புகாரின் தன்மை உண்மையாக இருக்கும்பட்சத்தில், வற்புறுத்தியாவது இந்த ரசீதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் பெயரளவில் விசாரித்து விட்டு மனுவைக்

குப்பையில் போட்டு விடுவார்கள்.

ரசீது தந்து விட்டால் அதற்கென்றே தனி ஃபைல் போட்டு விசாரித்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் காவல்துறைக்கு உள்ளது. காவல்துறை நம் புகார்மனுமீது சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தில் தனிப் புகார் கொடுக்க இந்த ஒரு ரசீதே தக்க ஆதாரமாக இருக்கும். விசாரணையில் இந்த ஃபைலை கு.வி.மு.ச. 91-ல் கீழ் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து விசாரிக்கலாம்.

அமர்வு நீதிமன்றமாக இருந்தால் கு.வி.மு.ச. 397-ன்கீழ் கொண்டு வந்து விசாரிக்கக் கோரலாம்.

காவல்நிலையத்தில் செய்யப்படும் புகார்கள் அனைத்தும் உண்மையான புகார் அன்று. சிலர் வேண்டும் என்றே பிடிக்காதவர்களுக்குத் துன்பம் கொடுக்கவேண்டும் என்பதற்காக பொய்யான புகார் அளிப்பதும் உண்டு. இந்தப் புகார் உண்மையானதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு வழி இருக்கிறது. புகார் மனுதார் காவல்நிலையத்தில் ரசீது பெற்றுள்ளாரா என்று விசாரிக்க வேண்டும். ரசீது பெறவில்லை என்றால் அந்தப் புகாரை காவல்துறையே நம்பவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

பொய்யான புகாரை அளிப்பதற்கு வழக்கறிஞர்கள் துணை போகிறார்கள் என்பது மிகவும் வேதனையான விசயம்.

## காவல்துறையினர் உரிமையியல் வழக்குகளை விசாரிக்கலாமா ?

உரிமையியல் வழக்குகளை விசாரித்து முடிவெடுக்க காவல்துறைக்கு அதிகாரம் கிடையாது. என்றாலும் விசாரிக்கிறார்கள். இந்த மாதிரியான மனுக்களுக்கு ரசீது தரமாட்டார்கள்.

அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (DISTRICT MUNSIF COURT) பல வருடங்களாக ஒரு உரிமையியல் வழக்கு விசாரணையில் நிலுவையில் இருந்தது. வழக்கில் மனுதாராக இருப்பவர் தற்செயலாக ஒரு பிரபல வழக்கறிஞரைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் இந்த வழக்கு பற்றிய விசயத்தைக் கூறினார். அவர் ஒரு குற்றத்துறை வழக்கறிஞர்.

'இப்படியெல்லாம் வழக்கை நடத்திக் கொண்டிருந்தால் ஜெயிக்க முடியாது. ஒரு ஐயாயிரம் ரூபாய் எடுத்து வாருங்கள். சீக்கிரம் முடித்து விடுவோம்' என்றார்.

வழக்குதாரருக்கு தம் வழக்கில் சிறிதுதான் நியாயம் உள்ளது.. அதனால் ஐயாயிரம் ரூபாய் தயார் செய்து கொடுத்தார். சில வாரங்களிலே எதிர்மனுதார் பணிந்து போய் சொத்துக்களை விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொண்டார். இப்படி அதிசயிக்கத் தக்க வகையில் என்ன நடந்தது என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

அந்த எதிர்மனுதார் மீது பொய்யான வழக்கு பதிவு செய்வதுபோல் காவல்துறை நடந்து கொண்டதுதான் காரணமாக இருந்தது. காவல்துறை நடவடிக்கைகளும் நீதிமன்ற நடவடிக்கைகளும் எப்படி இருக்க வேண்டும் என்ற விபரம் தெரிந்து கொண்டால் இந்த மாதிரி எல்லாம் நம்மை யாரும் ஏமாற்றிவிட முடியாது.

காவல் நிலையத்தில் பெட்டிசன் கேசை அவசர மனு என்றால் மூன்று நாட்களிலும், அவசரம் இல்லை என்றால் ஒரு வாரத்திற்குள்ளும் விசாரித்து முடிக்க வேண்டும். ஆனால் காவல் நிலையத்தில் இந்த விதி அவ்வளவாகப் பின்பற்றப்படுவதில்லை. இந்த விதியைச் சுட்டிக்காட்டி விரைந்து நடடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தலாம்.

பெட்டிசன் கேசில் ரசீது கொடுத்துப் போகச் சொல்லிவிடுவார்கள். காலையில் மனு கொடுத்தால் மாலையில் வாருங்கள் என்பார்கள்.

மாலையில் மனு கொடுத்தால் காலையில் பார்க்கலாம் என்பார்கள். இந்த அலைச்சலை எல்லாம் பெரிதுபடுத்தக்கூடாது. உடனே விசாரிக்க வேண்டும் என்றால் பணம் செலவழிக்க வேண்டி வரும். இது சட்டப்படி குற்றம் ஆகும். மேலும் பணம் செலவழித்தால்தான் காரியம் நடக்கும் என்ற கருத்தும் சரியல்ல. ஏனென்றால் அவசரப்பட்டு பணம் கொடுத்து விட்டால் மேலும் மேலும் பணம் கறந்து விடலாம் என்ற எண்ணம் காவல் அதிகாரிக்கு வந்துவிட்டால் பிரச்சினை லேசில் முடியாது.

நியாயம் நம் பக்கம் இருக்கும்போது அவசரப்படாமல் நிதானமாகவே அணுக வேண்டும். அப்போதுதான் வெற்றி பெற முடியும்.

மனுவைப் பெற்றுக் கொண்டதும் எதிர்மனுதாரை அழைத்து விசாரித்து முடிவெடுக்க வேண்டுவது காவல்துறையின் கடமை ஆகும். ஆனால்

சில சமயம் பணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் வேண்டும் என்றே மனுதாரை அலையவைத்து பிறகுதான் எதிர்மனுதாரை வரச் சொல்வார்கள். அதுபற்றி அதிகம் கவலைப்படக்கூடாது. வெற்றி என்பது நம் விடாமுயற்சியில்தான் இருக்கிறது.

ஒரு புகார் சம்பந்தமாக காவல்துறை அலுவலர் விசாரிப்பதற்காக காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்று கோரினால் என்ன வேலை கிடந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு பதறி அடித்துக்கொண்டு ஓட வேண்டும் என்பது தேவையில்லை. நமக்கு தோதான நேரத்தில் ஆஜராகிறேன் என்று சொல்லிவிட்டு அந்த நேரம் ஆஜரானால் போதும். அதற்காக வருகிறேன், வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஏமாற்றினால் கோபம் அடைந்து விடுவார்கள். இது மனுதாருக்கு சாதகமாக அமைந்து விடலாம்.

கொலை, கொள்ளை போன்ற குற்றங்களில் நீங்கள் பொதுவான சாட்சியாக அல்லது சந்தேகத்தின் பேரில் விசாரிக்க

அழைத்தால் தைரியமாக கு.வி.மு.ச.160-ன்கீழ் அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று கோரலாம். அதில் நீங்கள் சம்பந்தப்படாமல் மூன்றாவது நபராக இருப்பது விசாரணையில் நிரூபணம் ஆனால் கு.வி.மு.ச. 160(2)-ன்கீழ் செலவுத் தொகையும் கேட்டுப் பெறலாம்.

பெட்டிசன் கேசை விசாரிக்கும் போது எதிர்மனுதாரிடம் சார்பு ஆய்வாளர் மனுதாரின் புகாருக்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள் என்று கேட்பார். நீங்கள் பதில் சொல்லச் சொல்ல சார்பு ஆய்வாளர் அதை எழுதிக் கொள்வார்.

சார்பு ஆய்வாளர் சில நேரம் ரைட்டரை எழுதச் சொல்வதும் உண்டு. இப்படி எழுதுவதற்கு முன் ஆட்சேபனையான கருத்துக்களை மறுப்பதற்கு மனுதாருக்கு உரிமை உண்டு. மனுதார் தாம் ஆட்சேபிப்பதற்கான காரணத்தை வாய்மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தெரியப்படுத்தலாம்.

கைது செய்வதற்கு அல்லாத குற்றம் பற்றி தமது காவல்நிலைய எல்லைக்குள் நடைபெற்றுள்ளதாக தகவல் தரப்படும்போது அதற்கென உள்ள புத்தகத்தில் சாராம்சத்தைப் பதிவு செய்து கொண்டு, அப்படி தகவல் கொடுப்போரை ஒரு குற்றவியல் நடுவரிடம் அனுப்ப வேண்டும் என்று குவி.மு.ச.155, உட் பிரிவு 1-ன்படி காவல்துறைக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட விதியை எந்தக் காவல்நிலையமாவது பின்பற்றுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

குவி.மு.ச. 155(2)-ல் இதுபற்றி மேலும் ஒரு விளக்கம் தரப்பட்டுள்ளது. கைது செய்தற்கு உரியதல்லாத குற்றத்தை ஒரு குற்றவியல் நடுவரின் ஆணை இன்றி மேற்கொண்டு புலன்விசாரண செய்யக்கூடாது என்றும் உள்ளது. இதுவும் காவல்துறையில் பின்பற்றப்படுவதில்லை. இப்படி நீதிமன்ற ஆணையின்படி விசாரித்தால் காவல்துறையில் தவறு நடக்க வாய்ப்பிராது என்று சட்ட வல்லுநர்கள் கருதியிருக்கக்கூடும். இது போலீசாருக்கு சாதகமாக

இல்லாததால் இதைப் பின்பற்றுவதில்லை. நீங்கள் எதிர்மனுதாராக இருந்தால் இந்த விதிபற்றி காவல்துறைக்கு நினைவுப்படுத்தலாம்.

ஒரு பெட்டிஷன் விசாரணையில் எதிர்மனுதாரை விசாரித்து மனுதாரிடமும் அதுபற்றி கேட்டறிந்து இருவரையும் சமரசம் செய்து முடிப்பதுதான் வழக்கம்.

அல்லது சில நேரங்களில் அவர்களே சமரசம் ஆகிவிட்டதாக முடித்து விடுவதும் உண்டு. இந்த முடிவு எந்தத் தரப்பினர்க்காவது சாதகமாக இல்லை என்றால் சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட மறுக்கலாம்.

கைது செய்யக்கூடாத சாதாரண குற்றங்களில் சமசரசம் ஆகவில்லை என்றால் அதை அறிக்கையாகத் தயார் செய்து நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.190-ன்கீழ் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்டம் தெளிவாக இருக்கிறது. இதையும் காவல்துறை அமுல்படுத்துவது கிடையாது. நீங்கள் எதிர்மனுதாரராக இருந்து காவல்துறையினர் மனுதாருடன் சமசரம் போக வேண்டும் என்று வற்புறுத்தினால் இந்த விதியை நினைவுபடுத்தி இதுவரை விசாரித்த சங்கதிகளை அறிக்கையாக தயார் செய்து கு.வி.மு.ச. 190-ன்கீழ் கோர்ட்டில் தாக்கல் செய்யலாமே என்று நினைவுப்படுத்தலாம்.

மனுதாராக இருந்தால் இதை ஒட்டி குற்றவியல் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.200-ன்கீழ் தனிப்பிராது வழக்கு (PRIVATE COMPLAINT) தாக்கல் செய்து வழக்கு தொடரலாம்.

# காவல்துறையின் அறியாமை

ஒரு காவல் அதிகாரியின் உண்மையான கடமை என்ன என்பதையும், தனக்குள்ள இயல்பான அதிகாரம் என்ன என்பதையும் காவல்துறையினர் அறியவில்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. இதனால் காவல் நிலையத்தில் பெரிய வீரர்களைப்போல் காட்டிக் கொள்கிற போலீஸ்காரர்கள் நீதிமன்றத்தில் அடிமையைப் போல்தான்

கையைக் கட்டிக் கொண்டு நீதிமன்றம் தவறு செய்தாலும் அதை வேடிக்கை பார்க்கிறார்கள்.

ஒரு கொலை வழக்கில் எத்தனை முயற்சி செய்து, உயிரைக் கொடுத்து சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். ஆனால் நீதிபதிகள் லஞ்சம் வாங்கிக் வாங்கிக் கொண்டு எதிரிகளை விடுதலை செய்யும்போது இவர்கள் வாயை மூடிக்கொண்டு மௌனியாக இருக்கிறார்கள். சட்டம் தெரியாததே இதற்குக் காரணம்.

ஒரு நீதிமன்றத்தில் தவறான தீர்ப்பு வழங்குவது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 219-வது பிரிவின்படி குற்றமாகும். இதுவரை எத்தனையோ தவறான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேல்நீதிமன்றத்தில் தலைகீழாக மாற்றி அமைக்கும் தீர்ப்புகள் அனைத்துமே கீழ்நீதிமன்றத்தின் தவறான தீர்ப்புகள்தானே! இதுவரை இந்தப்பிரிவின் கீழ் எந்த நீதிபதிக்காவது தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? இனிமேலாவது இதைச் செயல்படுத்தலாமே!

ஒரு வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டாலும் காவல்துறையின் பணி முடிந்து விடுவதில்லை. பிறகும் தொடர்ந்து புலன்விசாரணை செய்து அறிக்கை தயார் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று கு.வி.மு.ச.173(8) தெரிவிக்கிறது. இந்த விதியைப் பயன்படுத்தி, நீதிபதிகள் தவறான தீர்ப்பு சொன்னதாகக் கண்டறிந்தால், அதுபற்றி மேலும் புலன்விசாரணை செய்து, அத்தகைய அதிகாரிகளே மேல்முறையீடு செய்து நீதிபதிகளுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க இயலும். இதை எந்தக் காவலரும் செய்யாததால் பல சமயங்களில் நீதிபதிகள் துணிந்து தவறு செய்கிறார்கள்.

நீதிபதிகளின் தீர்ப்புகளை விமர்சனம் செய்யக்கூடாது என்று நீதிபதிகள் பாதுகாப்பு சட்டத்தில் உள்ளது என்று நீதிபதிகள் சொல்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்று அவர்களாகச் சொல்கிறார்களே தவிர, அந்தச் சட்டத்தைக்

கண்ணால்கூட அவர்கள் பார்த்ததில்லை என்பதை எனது அனுபவத்தில் கண்டேன்.

ஒரு நீதிபதி நல்லெண்ணத்தின்பேரில் பிறப்பித்த தீர்ப்புகளைக் குற்றம் சொல்லக்கூடாது என்றும், நல்லெண்ணத்தின் பேரில் செய்யப்பட்டுள்ளதா என்று பாமரன்கூட கேள்வி எழுப்பலாம் என்றும்தான் நீதித்துறை பாதுகாப்பு அலுவலர்கள் சட்டம் சொல்கிறது.

No Judge, Magistrate, Justice of the pease, Collector or other person acting judicially shall be liable to be sued in any Civil Court for any act done or ordered to be done by him in the discharge of his judicial duty, were are not within the limits of his jurisdiction. Provided that he at the time in goodfaith, believed himself to have jurisdiction to do order that act complained of; and no officer of any court or other person, bound to excute lawful warrents or other person acting judicially shall be liable to be sued in any Civil Court, for the excution of any warrant or order, which would be bound to excute, if with in the jurisdiction of the person issuing the same."

இந்த சட்டம் பிரிட்டிஷார் காலத்தில் 1850-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. இந்த நீதித்துறை பாதுகாப்பு சட்டத்தில் ஒரே ஒரு விதிதான் இருக்கிறது என்பதுகூட எந்த நீதிபதிக்கும் தெரியவில்லை.

நல்லெண்ணம் என்றால் என்ன என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 76வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. நல்லெண்ணம் பற்றி ஜெனரல் ரூல்ஸ் ஆப் ஆக்ட் 1868லும் இதுபற்றி விளக்கப்பட்டுள்ளது.

"Goodfaiths means a thing shall be deeemed done in goodfaith when it is in fact done honesty. Whether it is done neglently or not."

இதன்படி பார்த்தாலும் தவறான நீதிமன்றத் தீர்ப்புகளை விமர்சனம் செய்யலாம் என்பதே சரி.

நீதிமன்ற அவமதிப்பு சட்டத்திலும் 5 முதல் 9 வரையிலான விதிவிலக்குகள் தரப்பட்டுள்ளன. இது பத்திரிகைகளுக்குத்தான் பொருந்தும். காவல்துறையோ குற்றம் நடைபெறும் முன்பே தடுத்து நிறுத்த வேண்டிய கடப்பாடு கொண்டுள்ளது. எனவே, மேல்முறையீடு செய்து தவறான தீர்ப்புகள் வழங்கும் நீதிபதிகளுக்கு இ.த.ச. 219-ன்படி தண்டனை வாங்கிக் கொடுப்பதே சரி. இதைக் காவலர்கள் பின்பற்றினால் நீதிமன்றம்தான் காவல்துறைக்குப் பயப்படும். இப்போது நீதிபதிகள்முன் கையைக் கட்டிக் கொண்டு பவ்யமாக நிற்பது போல் நிற்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே!

ஒரு காவல்துறையின் உண்மையான பணி என்ன என்பதை நீதிமன்றமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால் எந்த ஒரு வழக்கிலும் சாட்சிகள் இருக்கிறார்களா என நீதிமன்றத்தில் கேட்கிறார்கள். இது எப்படி சரியாகும்?

சாட்சிகளைத் தயார் செய்து குற்றத்தை நிரூபிக்க வேண்டிய சுமை சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 105-ன்கீழ் புகார்தாரருக்குத்தான் இருக்கிறதே தவிர, இதன் முழுப் பொறுப்பும் போலீஸ்க்கு இல்லை. இந்த விபரம் நீதிமன்றத்திற்குத் தெரியாததால் எல்லா வழக்குகளிலும் சாட்சிகள் இருக்கிறார்களா என்று நீதிபதிகள் கேட்பதால் போலீசார் பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள் உண்மையில் ஒரு காவல் அலுவரின் பணி எந்தப் பக்கம் நியாயம் இருக்கிறது என்று கண்டறிந்து நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்வதுதான். அதனால் எவரேனும் பொய்யான புகார் செய்தாலும் எப்.ஐ.ஆர் பதிவு செய்ய மறுக்கக்கூடாது. ஆனால் புகாரைப் பெற்றுக் கொண்டு, எப்.ஐ.ஆர் பதிவு செய்வதற்கு முன்பாக புகார்தாரரிடம் கீழ்க்கண்டவாறு உறுதி மொழி பெற்றுக் கொள்ள வேண்டும்.

‘மேற்கண்ட சங்கதிகள் யாவும் மனுதாரின் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மை என்றும், சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும்

105-ன்படி இதில் உள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய சுமை எனக்கு இருக்கிறது என்பதை அறிவேன். விசாரணை முடிவில் குற்றத்தை நிரூபிக்க இயலாத பட்சத்தில் எதிரி விடுதலை செய்யப்பட்டால் இ.த.ச.211-ன்கீழ் நீதிமன்றம் வழங்குகின்ற நியாயமான தண்டனையை ஏற்றுக் கொள்வேன் என்று சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் பிரமாணமாக தேதியில் உங்கள் முன்பாக கையெழுத்துச் செய்தேன்.‘

இப்படி ஒரு உறுதிமொழியை எழுதிக் கேட்டாலே போதும். பொய்யான புகார் தருகிறவர் புகாரைப் பதிவு செய்யாமல் ஓடிப்போய்விடுவாரே! இந்த ஒரு விதியை நடைமுறைப்படுத்தினால் போதும். போலீஸ் நிலையத்தில் சில மணி நேரமாவது வேலை இருக்குமா என்பது சந்தேகம்தான்.

ஒரு குற்றம் நடைபெறும் முன்பாகவே அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை போலீசுக்கு கு.வி.மு.ச.149-ன்கீழ் நிபந்தனையாகவே விதிக்கப்பட்டுள்ளது. அதனால் சந்தேகத்தின் பேரில் எவர் ஒருவரையும் கைது செய்து விசாரிக்கவோ, கேள்விக்குத் தக்க பதில் சொல்ல மறுத்தால் தேவையான அளவுக்கு வன்முறையைப் பயன்படுத்தி விசாரித்து உண்மையைக் கண்டறியவோ காவல்துறைக்கு இயல்பான அதிகாரம் உள்ளது. ஆனால் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் காவல் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் இதுவரை தண்டனை வழங்காததால் பொய் வழக்கு போடுவதை போலீசாரும் ஒரு தொழிலாகவே வைத்திருக்கிறார்கள். காரணம் பொய் வழக்கு போடுவதில் இரண்டு பக்கமும் லஞ்சம் கிடைக்கிறதே!

ஆனால் தற்போது சட்டம் படித்து தன் வழக்கில் தானே ஆஜராகிறவர்கள் இப்படி பொய் வழக்கு போடும் போலீசாரைத் தண்டிக்காமல் விட மாட்டார்கள். எனவே, போலீசார் தங்களுக்குள்ள இயல்பான அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல் பயனுள்ள

வழியில் பயன்படுத்தினால் நாடு வேகமாக முன்னேறும் அல்லவா!

# தனியாருக்கும் கைது செய்வதற்கான அதிகாரம்

சமுதாயத்தில் ஒரு குற்றம் நடைபெறும்போதோ அல்லது நடைபெறப் போவதாக அறியும்போதோ பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து தகவல் தர வேண்டும் என்று கு.வி.மு.ச. 39-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்தக் குற்றங்கள் அவை என்பதும் இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றங்கள் நம்மைப் பாதிக்காவிட்டாலும் காவல்துறைக்கோ, நீதிமன்றத்திற்கோ தகவல் தர வேண்டிய கட்டாயம் இவ்விதியின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நமக்கெதற்கு வம்பு என்று விலகிப் போய்விடுவதே நமக்கு வழக்கமாக இருக்கிறது.

நீதிமன்றம் என்றாலே அலைய வைப்பார்கள். வீண் செலவாகும் என்ற தவறான அபிப்பிராயம் இருப்பதால்தான் இந்த அலட்சியம் ஏற்படுகிறது. சட்டம் படித்துக் கொண்டு தம் வழக்கில் தாமே ஆஜராகும் வழிமுறைகள் பற்றித் தெரிந்து கொண்டால் இந்த அபிப்பிராயம் மாறிவிடும்.

பிணையில் விடத்தகாத குற்றம் புரிந்த ஒருவரை காவல் அலுவலர்தான் கைதுசெய்ய வேண்டும் என்பதல்ல. தனி நபர் எவர் ஒருவரும் கைது செய்யலாம். தம்மால் கைது செய்ய முடியாத போது பிறரை வைத்தும் கைது செய்யலாம் என்று குவி.மு.ச. 43வது பிரிவில் தனியாருக்கும் கைது செய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அப்படி கைது செய்தவுடன் அருகில் உள்ள காவல் நிலையத்தில் அவரை ஒப்படைக்க வேண்டும் அல்லது நீதிமன்றத்தில்

ஆஜர்படுத்திவிட வேண்டும்.

ஒரு குற்றச் செயல் நடந்துள்ளபோது அதைப்பற்றி கண்டிப்பாகத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கு.வி.மு.ச.39(1)-ல் வற்புறுத்தப்பட்டுள்ளது. அப்படித் தகவல் சொல்லாமல் இருப்பது தவறு என்று சட்டத்திலும் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதாவது குற்றம் என்பது செய்யக்கூடாததைச் செய்வது மட்டும் அல்ல. ஒருவர் செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருப்பதும் குற்றம் என்று இ.த.ச. 2-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

சமூக முன்னேற்றத்தில் ஒவ்வொருவர்க்கும் பங்கு உண்டு. எனவே குற்றங்களைத் தடுக்க வேண்டியது, உரிய தகவல் தர வேண்டியது அவசியமும்கூட. இந்தப் பிரிவில் தற்போது லஞ்சம், ஊழல் குற்றங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே குடும்ப நலனில் மட்டும் இன்றி நாட்டு நலனிலும் அக்கறை உள்ளவர்கள் நீதிமன்றத்தில் தாங்களே ஆஜராகி வாதாடிக் கொள்ளும் வழிமுறை பற்றி அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அரசு அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவது சர்வ சாதாரணம். இப்படிப்பட்ட காட்சி நம்முன்னால் நடைபெற்றால் துணிந்து லஞ்சம் கொடுத்தவரையும், லஞ்சம் வாங்கியவரையும் கு.வி.மு.ச. 43-ன்கீழ் கைது செய்து காவல்துறையிடமோ கோர்ட்டிலோ ஒப்படைக்கலாம்.

இதுபோல் பாதிக்கப்பட்டோர் கழகத்தில் நீதிமன்றத்திலேயே லஞ்சம் வாங்கும் போது கைது செய்து பிடித்து நீதிபதியிடம் ஒப்படைத்து சஸ்பெண்ட் செய்து சாதனை படைத்துள்ளனர். இந்த சாதனையை அரசு அலுவலகத்தில் நீங்களும் செய்யலாம்.

லஞ்சம் கேட்கும் அதிகாரிகளை நேரடியாகக் கைது செய்ய முடியாது. இதற்கு என்ன செய்யலாம் என்பதற்கும் ஆலோசனை சொல்லித் தருகிறார்கள். அதாவது அரசு அதிகாரி லஞ்சம் கேட்டால் ஓங்கி கன்னத்தில் அறைந்துவிட வேண்டும். அவர் போலீசில் புகார் செய்து வழக்கு பதிவு செய்வார். விசாரணையில் நான் அறைந்தது

உண்மைதான். நான் அதற்கான தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இவர்க்கும் எனக்கும் வேறு எந்த முன்விரோதமும் கிடையாது. லஞ்சம் கேட்டார். அதனால்தான் அறைந்தேன் என்று நீதிமன்றத்தில் சொல்லிவிட்டால் நீதிபதியே என்ன செய்யலாம் என்று முடிவுசெய்து கொள்வார் என்பது இந்த ஆலோசனை. நீங்களும் செயல்படுத்தித்தான் பாருங்களேன்!

## பொய்யான புகாரின்பேரில் விசாரிக்கப்பட்டால்...?

காவல்நிலையத்தில் செய்யப்படும் புகார்கள் அனைத்தும் உண்மையானவை என்று சொல்லிவிட முடியாது. பிடிக்காத நபர்களுக்கு வீண் தொல்லை கொடுப்பதற்காக புகார் செய்வதும் உண்டு. இந்த மாதிரியான புகார்களில் எதிர்மனுதாராக இருந்தால் என்ன செய்வது?

விசாரணையில் நம்மிடம் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்.

கொடுக்கல் வாங்கல் தகராறு, சொத்துரிமை போன்ற பிரச்சினையாக இருந்தால் கோர்ட்டில் கேஸ் போடச் சொல்லுங்கள், நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிடலாம்.

ஒரு பெரிய இரகசியம் என்னவென்றால் போலீசில் பொய்ப்புகார் கொடுப்பதையே காவல்துறையினர் பெரிதும் விரும்புகிறார்கள். இதில் இரண்டு வகையான லாபம் இருக்கிறது.

பொய்ப்புகார் கொடுப்பவர், எதிர்மனுதார்மீது நடவடிக்கை எடுப்பதற்காக முதலிலேயே அன்பளிப்பு கொடுத்துவிடுகிறார்.

இதேபோல் எதிர்மனுதாரிடம் இரகசியமாக அவரை விசாரிக்காமல் இருப்பதற்காக எதிர்மனுதாரிடமும் லஞ்சம் வாங்கிக் கொள்வார்கள். காவல்துறையினர் சிலரைத் இதுபோல் லஞ்சம்

பெறுவதற்காக தூண்டிவிடுவதும் உண்டு.

நீங்கள் சொல்லும் நியாயத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் புகார்தாரருக்கு சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய சுமை இருக்கிறதே, அவரிடம் உறுதிமொழி வாங்கினீர்களா என்று கேட்டால் போதும்; திணறிவிடுவார்கள்.

மீனம்பாக்கம் போலீஸ்நிலையத்தில் என்னை ஒருமுறை கைது செய்து அழைத்துப் போனார்கள். உசேன்முகம்மது என்பவர் பாதிக்கப்பட்டோர் கழகத்தின் மக்கள் காவல் ஆய்வாளர். இவர்க்கு நான் ஆலோசனை சொல்கிறேன் என்பதால் இந்த வழக்கில் என்னையும் சேர்க்கத்தான் கைது செய்து கொண்டு போனார்கள்.

விவாதம் வந்தது. இன்ஸ்பெக்டரிடம் ‘புகார்தாரரிடம் உறுதி மொழி வாங்கினீர்களா? வாங்கவில்லை என்றால் நீங்கள் ஜெயிலுக்குப் போகிறாப்ல இருக்கும்‘ என்று சட்டம் பேசியதும் பயந்து எஸ்கேப் ஆகிவிட்டார். இரண்டு மணி நேரம் மீனம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் என் கஸ்டடியில் இருந்தது. கடைசியில் அவர்கள் செலவில் ஆட்டோ அமர்த்தி வீட்டுக்குக் கொண்டு வந்துவிட்டு சலாம் போட்டுப் போனார்கள் என்பது சிறப்புச் செய்தி. இதுபற்றி ஒரு பேட்டி கட்டுரையும் வெளிவந்துள்ளது. பேட்டி கட்டுரைகள் பற்றி ஏற்கனவே இரண்டு பாகங்கள் வந்துள்ளன. அனைத்தும் சட்டம் பற்றியவை என்பதால் காவல் நிலையத்திலும் கோர்ட்டிலும் விவாதம் செய்வதற்கான பயனுள்ள விசயங்கள் இதில் பெறலாம்.

காவல்துறையினர் அதிகம் மிரட்டினால் பயப்பட வேண்டியதில்லை. சட்டம் பேசினால் அவர்கள் பயந்து விடுவார்கள்.

பொய்யான புகார் அளிப்பவரிடம் உறுதி மொழி பெற வேண்டும் என்று வற்புறுத்தினாலே போதும். போலீசாரும், பொய்ப்புகார் கொடுத்தவரும் பயந்து விடுவார்கள்.

காவல்துறையில் பொய்யான புகார் அளிப்பது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 211-வது பிரிவின்படி குற்றம் ஆகும். எனவே,

சட்டம் படித்து இப்படி வாதாடினால் பொய்ப்புகார் பற்றி கவலைப்பட வேண்டியது நாம் அல்ல. புகார் கொடுத்தவரும், போலீசும்தான் பயப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவரிடமும், பாதிப்புக்குக் காரணமானவரிடமும் இரண்டு பக்கமும் அன்பளிப்பு பெறும் வழக்கம் காவல்துறையில் மட்டுமே முன்பு இருந்தது. இந்தத் தொற்றுநோய் தற்போது வழக்கறிஞர்களையும் பற்றிக் கொண்டுவிட்டது. பணம் கிடைத்தால் எதிர்க்கட்சிக்கு சாதகமாக வாதாடுவது என்பதைக் கொள்கையாகவே வைத்திருக்கிறார்கள். இனி இதுவும் முடியாது. இதுபற்றி வழக்கறிஞரால் பாதிப்பா என்ற புத்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

புகார்தாரர், போலீசார், நீதிபதிகள் உறுதிமொழி தருவதுபோலவே இனி வழக்கறிஞர்கள் வக்காலத்து தாக்கல் செய்யும்போதே, தரப்பினரிடம் நியாயம் இருக்கிறது என்றும், கட்சிக்காருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது என்னையும் கட்டுப்படுத்தும் என்றும் உறுதிமொழி தாக்கல் செய்தாக வேண்டும். இந்த நடைமுறை வந்துவிட்டால் வழக்கறிஞர்கள் கட்சி மாறுவதும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும்.

காவல்துறையினர் இரண்டு பக்கமும் அன்பளிப்பு வாங்கும் பழக்கம் அதுவும் உடையவர்களாக இருந்தாலும் விபரம் தெரிந்தவர்களிடம் சட்டம் பேசுகிறவர்களிடம் காசு கேட்கப் பயப்படுவார்கள். வற்புறுத்தியோ மிரட்டியோ அன்பளிப்பு கேட்டால் அடுத்த முறை வரும்போது தருகிறேன் என்று சொல்லிவிட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை என்னும் விஜிலன்சில் புகார் செய்தால் அவர்கள் பொறிவைத்து பிடித்துவிடுவார்கள். இதுபற்றி கடைசி அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நீதிமன்றத்தில் எந்தெந்த வழக்குகளை எல்லாம் தாக்கல் செய்யலாம் என்பதுபற்றி இந்தியத் தண்டனைச் சட்டத்தைப்

படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படி தாக்கல் செய்வது என்பது பற்றித் தெரிந்து கொள்வோம்.

மனுதாரின் புகாரை வைத்து எப்.ஐ.ஆர்.பதிந்து விட்டால் அவர்களே நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்வார்கள். அரசு வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி எதிரி குற்றம் செய்திருந்தால் அவர்க்குத் தண்டனை வழங்க நீதிமன்றத்திற்கு சிபாரிசு செய்வார். இத்தகைய எப்.ஐ.ஆர்.வழக்கில் நீதிமன்றம் கோரும்போது ஆஜராகி சாட்சி சொன்னால் போதும்.

இப்படி சாட்சி சொல்வதற்காக வெகுதூரத்தில் இருந்து வந்திருந்தால் கு.வி.மு.ச.312-ன்கீழ் மனு கொடுத்து செலவுத் தொகையும் பெற்றுக் கொள்ளலாம். போலீஸ் வழக்கில் புகார்தாரரும் முக்கிய சாட்சிதான்.

போலீஸ் வழக்கில் அரசு வழக்கறிஞருக்கு முழு அதிகாரம் வழங்கப்படுவதால் சில நேரம் எதிரி இவர்க்கு லஞ்சம் கொடுத்து குற்றத்திலிருந்து விடுதலையாக முயற்சி செய்யக்கூடும். அத்தகைய நேர்வில் கு.வி.மு.ச.302(2)-ல் மனு செய்து நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று, அரசு வழக்கறிஞரை நீக்கி விட்டு அந்த வழக்கை நாமே எடுத்து நடத்தலாம். இப்படிச் செய்தால் உண்மையான குற்றவாளி தப்பிக்க இயலாமற்போகும்.

இதுபோலவே அந்த வழக்கை நடத்துவதற்கு போதுமான தைரியம் வரவில்லை அல்லது சில சிரமங்கள் இருந்தது என்றால் கு.வி.மு.ச.2(17)-ன்கீழ் மனு செய்து நீதிமன்றத்தில் அனுமதி பெற்று நம் உறவினரையோ நண்பர்களையோ நமது சட்ட பிரதிநிதியாக ஆஜராகி அந்த வழக்கை எடுத்து நடத்தச் சொல்லலாம்.

பொதுநலத்தில் அக்கறை உள்ளவர்கள் மூன்றாவது நபராக மற்ற வழக்குகளிலும் கு.வி.மு.ச.302(1)-ன்கீழ் மனு செய்து அரசு வழக்கறிஞருக்கு ஆதரவாக அல்லது அவரை நீக்கிவிட்டு அந்த வழக்கை எடுத்தும் நடத்தலாம்.

பொதுநலத்தில் அதிகம் அக்கறை செலுத்துபவர்கள் கேஸ்போட ஹைகோர்ட்டுக்குத்தான் போகவேண்டும் என்பதில்லை. இதுபோல் கீழ் கோர்ட்டிலேயே புகுந்து நியாயத்தை நிலைநாட்டலாம். குறிப்பாக லஞ்சம் வாங்கியதாகப் பிடித்து தாக்கல் செய்யும் வழக்குகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றைம்பது வழக்குகளில் போலீசார் சரியாக வாதாடுவதில்லை. எதிரி போலீசுக்கு லஞ்சம் கொடுத்து சாட்சிகளை மாறிச் சொல்லச் சொல்லி தப்பித்து விடுகிறார். இந்தியாவெங்கும் இந்தக் கொடுமைதானே நடக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த கு.வி.மு.ச.302(1)ல் மனு செய்து அனுமதி பெற்று நீதிமன்றத்திற்கு வழிகாட்டலாம்.

லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று சேவை நிறுவனங்கள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அதற்குப் பதிலாக லஞ்சம் வாங்குகிறவர்களை கு.வி.மு.ச. 43-ன்கீழ் நேரடியாகக் கைது செய்தும், ஏற்கனவே நடைபெற்று வரும் விசாரணை வழக்குகளில் கு.வி.மு.ச. 302(1)ல் மனு செய்து அனுமதி பெற்றும் குற்றவாளிகளை சிறைக்கு அனுப்பிவிடலாம். அப்போதுதானே லஞ்சம் ஒழியும்? பாதிக்கப்பட்டோர் கழகம் இதில் முனைப்பாக செயல்பட்டு வருகிறது. லஞ்சத்தை ஒழிப்பதற்காக சம்பளம் வாங்காதோர் நடத்தும் சர்க்காரில் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்படுகிறார்கள். இனி லஞ்சம் மெல்ல மெல்ல ஒழிக்கப்பட்டுவிடும் என்று நம்பலாம்.

## அரசு வழக்கறிஞரின் அறியாமை!

நீதிமன்றங்கள் சட்டத்திற்கு உட்பட்டு நடக்காமல் போவதற்கு அரசு வழக்கறிஞரின் அறியாமைதான் காரணம் என்று துணிந்து சொல்லலாம். ஒரு அரசு வழக்கறிஞரின் பணி என்ன என்பது அவர்க்கும் தெரியவில்லை; நீதிபதிகளுக்கும் தெரியவில்லை.

ஒரு அரசு வழக்கறிஞருக்கு நீதிபதியைவிட சட்டமும் நியாயமும்

தெரிந்திருக்க வேண்டும். ஒரு வழக்கின் குற்றமானது எந்தப் பிரிவில் சேரும் என்று முடிவு செய்து நீதிமன்றத்திற்கு வழிகாட்டும் முக்கியப் பணி அரசு வழக்கறிஞரையே சார்ந்ததாகும். அது மட்டும் அல்ல; நியாயம் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து நீதிமன்றத்திற்கு தக்க வழிகாட்டுவதுதான் அரசு வழக்கறிஞரின் முக்கியப் பணியாகும். ஆனால் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதுதான் தன் பணி என்று இவரும் நம்பிக் கொண்டிருக்கிறார்; நீதிபதிகளும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

**சட்டம் என்பது காலத்திற்குத் தக்கபடி திருத்தம் செய்ய வேண்டியதாகும்.** காரணம் சட்டம் என்பது பொது நியாயத்தின் அடிப்படையில் இயற்றப்படுகிறது. ஒருவர்க்கு நியாயம் என்று படுவது மற்றொருவர்க்கு அது நியாயமாகத் தெரிவதில்லை. இம்மாதிரி சமயங்களில் சட்ட பிரச்சினைகள் நீதிமன்றங்களில் எழுவதுண்டு. இத்தகைய சட்ட பிரச்சனை எழும்போது, அதைத் தீர்த்து வைக்க வேண்டிய கடமை அரசு வழக்கறிஞர்க்கு உண்டு. எனவேதான் ஒரு அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தின் அனுமதியின்றியே எந்த ஒரு வழக்கிலும் தன்னிச்சையாக ஆஜராகலாம் என்று கு.வி.மு.ச.301-ல் சிறப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதும், ஜாமீனில் விடுவதா வேண்டாமா என்று கருத்துச் சொல்வதும்தான் அரசு வழக்கறிஞரின் முக்கியப் பணி என்று அவரும் நம்பிக் கொண்டிருக்கிறார். இதன் அடிப்படையில்தான் நீதிமன்றமும் செயல்பட்டு வருகிறது. அதனால் குற்றத்தைக் குறைக்க பாடுபடாமல் தங்கள் அறியாமையால் கடனுக்கு வேலைசெய்கிறார்கள்.

ஒரு அரசு வழக்கறிஞர், ஒரு வழக்கை ஏற்று நடத்துவதில் தவறு செய்தால் அல்லது அலட்சியப்படுத்தினால் நீதிமன்றத்தில் தானே ஆஜராகிறவர் கு.வி.மு.ச.302(2)-ன்கீழ் மனு செய்து அனுமதி பெற்று தானே எடுத்து நடத்தலாம். இத்தகைய விசாரணையில் அரசு

வழக்கறிஞர் தமது கடமையில் தவறியுள்ளார் என்பது நிரூபணம் ஆனால் இ.த.ச.166அ-ன்கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்று அதே நீதிமன்றத்தில் மனு செய்யலாம்.

அதேபோல் கு.வி.மு.ச.302(1)-ன்கீழ் நீதிமன்றத்தில் அனுமதி பெற்று வாதாடும்போது அரசு வழக்கறிஞர் கடமையில் தவறியிருந்தாலும் இ.த.ச.166அ-ன்கீழ் தண்டனை வழங்க அதே நீதிமன்றத்திலேயே மனு செய்யலாம்.

# காவல்துறையின் 24 மணி நேர டைரி

நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்கும்வரை அவரைக் குற்றவாளி (CONVICT) என்று குறிப்பிடக்கூடாது. குற்றம் சுமத்தப்பட்டவர் (ACCUSED) என்றே குறிப்பிட வேண்டும். இதுபோலவே காவல்றையில் விசாரிக்கும் பெட்டிசன் வழக்குகளில் (ரசீது வழங்கி விசாரிப்பது) எதிர்மனுதாரர் சாட்சி என்றே அழைக்கப்படுவார்.

இந்த விபரம் குவி.மு.ச. 161-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. எனவே, பெட்டிசன் வழக்குகளில் காவல் துறையில் சாட்சியை விசாரிப்பதுபோலவே விசாரிப்பார்கள்.

நீதிமன்றத்தில் டைரி இருப்பதுபோலவே காவல்துறையிலும் டைரி உண்டு. இந்த டைரியில் புலனாய்வு செய்த விபரங்ளை அன்றாடம் எழுதுவார்கள். ஆனால் நீதிமன்றத்தில் பார்ப்பதுபோல் இந்த டைரியை யார் வேண்டுமானாலும் பார்வையிடவோ பயன்படுத்தவோ முடியாது என்பதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. இது சரியல்ல.

ஒரு காவல் அலுவலர் இந்த இருபத்திநான்கு மணி நேர டைரியை தன் சொந்த அலுவலாக எழுதிவரவில்லை. சாட்சிய சட்டம் 74-வது பிரிவின்படி அரசின் அலுவலகங்களில் இருக்கிற அனைத்து ஆவணங்களுமே பொதுவானதுதான். பிரிவு 76-ன்படி இந்த

டைரியின் நகல் ஒன்றை எவர் ஒருவரும் பார்வையிடவோ கட்டணம் செலுத்தி தேவையான ஆவண நகல்களைப் பெறவோ இயலும் என்பதே சரி.

நேரடியாகப் பார்க்க முடியாது என்பது நடைமுறையில் இருந்தாலும் ஒரு வழக்கில் இந்த டைரியை சாட்சியாக நமக்கு உதவுவதற்காக அத்தகைய நாட்குறிப்புகளைக் கொண்டு வரச் செய்து அந்த நீதிமன்றம் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என கு.வி.மு.ச. 172-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

ஒரு காவல் நிலையத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு காவல் கண்காணிப்பாளருக்கு உள்ளது. மாதம் ஒருமுறையோ வாய்ப்பு இருக்கும்போதோ காவல் நிலையப் பணிகள் என்னென்ன நடந்துள்ளன என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த ஜெனரல் டைரி உதவியாக இருக்கிறது.

இந்த ஜெனரல் டைரி போக ஒவ்வொரு காவல் அலுவலரும் தனி டைரி ஒன்றும் எழுத வேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது.

காவல் நிலையத்தை 24 மணி நேரமும் திறந்தே வைத்திருக்க வேண்டும் என்று எப்படி விதிக்கப்பட்டுள்ளதோ அதுபோலவே ஒவ்வொரு காவல் அலுவலரும் ஒவ்வொரு நாளும் இந்த 24 மணி நேர டைரியை எழுத வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு நாளும் காலை ஆறு மணியில் இருந்து மறுநாள் காலை ஆறு மணி வரை என்னென்ன செய்தார் என்பது இந்த டைரியில் இருக்க வேண்டும்.

இந்த டைரியை அவ்வப்போது எழுதிவரவேண்டும் என்பது விதியாகும். அதாவது ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கோ அல்லது ஒரு மணி நேரத்திற்கொரு முறையோ அவ்வப்போது எழுத வேண்டும். காலை ஆறு மணிக்கு என்னென்ன செய்தார் என்பதை 6-30க்கு எழுத வேண்டும். இதுபோல் நாள் முழுவதும் என்னென்ன செய்தார் என்பதை எழுத வேண்டும். ஆனால் பெரும்பாலான அலுவலர்கள்

ஓரிடத்தில் அமர்ந்து மொத்தமாக எழுதுவதையே வழக்கத்தில் வைத்திருக்கிறார்கள். இது சரியல்ல.

காவல் அலுவலர் அவ்வப்போது உடனுக்குடன் டைரி எழுதவேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதற்கு காரணம் உள்ளது. காவல் அலுவலருக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி நாட்டில் அமைதியை நிலவச் செய்வதற்காக சில சிறப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவறாகக் கையாண்டுவிடக்கூடாது என்பதற்காகவே இந்த 24 மணி நேர டைரி எழுதும் கட்டாய முறை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனி டைரியை நீதிமன்றத்தில் பயன்படுத்த வேண்டும் என்றால் கு.வி.மு.ச. 91-வது பிரிவின்கீழ் கோர்ட்டில் மனு செய்து வழக்கின் புலனாய்வுக்காக கொண்டு வரச் செய்யலாம். இந்தப் பிரிவின்கீழ் தேவை எனில் எந்த ஒரு ஆவணத்தையும் கொண்டு வரச் செய்யலாம்.

காவல்துறையில் புகார் கொடுத்து சரியான நியாயம் கிடைக்காமல் நீதிமன்றத்தில் தனிப்பிராது என்னும் பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்திருப்பவர்கள் இந்த டைரியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கச் செய்து சரிபார்க்க வேண்டும் என்று மனு செய்து சரிபார்க்கக் கோரலாம். இப்படி சரிபார்ப்பார்கள் என்று தெரிந்தாலே காவல்துறையினர் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்வார்களே.

இதுபோல் அமர்வுநீதிமன்றத்திலோ உயர்நீதி மன்றத்திலோ கு.வி.மு.ச. 397-ன்கீழ் மனுச் செய்யலாம்.

இந்த மனுவை ஏற்று அப்படியே உத்தரவு பிறப்பித்து ஆவணங்களை மேலாய்வு செய்வதற்கு அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. 397-ன்கீழும், உயர்நீதி மன்றத்திற்கு கு.வி.மு.ச.401-ன்கீழும் சிறப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவின்கீழ் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் மனுச் செய்து

உத்தரவு பெறுவார்கள் என்பது தெரியுமாதலால் பாதிக்கப்பட்டோர் கழகத்தினரின் புகார் என்றாலே போலீசார் விழுந்தடித்து பதிவு செய்வது நடைமுறைக்கு வந்து விட்டது.

24 மணி நேர டைரி எழுதும் முறையைப் போலீசார் மட்டும்தான் எழுத வேண்டும் என்பதல்ல. நம் நலத்திற்காக நாமேகூட எழுதலாம். தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் கண்டிப்பாக எழுதவேண்டும் என்பதே சரி. இந்த முறை லட்சியவாதிகளுக்குப் பெரிதும் உதவியாகவே இருக்கும். வாழ்க்கையில் அலுத்து சலித்து வெறுத்துப் போனவர்கள்கூட இந்த டைரி எழுதும் முறையைக் கடைப்பிடித்து ஓய்வாக இருக்கும்போது திருப்பி திருப்பிப் பார்த்தால் மிகுந்த உத்வேகம் பெறலாம் என்பது உறுதி.

# பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்வது எப்படி?

ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும்முன் அந்த வழக்கில் நியாயம் இருக்கிறது என்று நீதிமன்றம் நம்பும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

ஒரு குற்றம் எங்கு நடந்துள்ளதோ அந்த வரம்பெல்லைக்குள் உள்ள நீதிமன்றத்தில்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும். இந்த விபரம் தெரியாதபோது உங்கள் எல்லையில் உள்ள காவல்நிலையத்திற்குச் சென்று எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டால் அவர்கள் சொல்லிவிடுவார்கள்.

குற்றவியல் நீதிமன்றங்கள் பல உள்ளன. ஒரே ஊரில் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரண்டாவது வகுப்பு நீதிமன்றம் என்றும் கூட இருக்கலாம். குற்ற அளவின் தன்மையைப் பொருத்து எங்கே புகார் செய்வது என்று முடிவு செய்ய வேண்டும். தவறான நீதிமன்றத்தில் மனு கொடுத்தாலும் அதனால் பெரிய பிழை

ஒன்றும் வந்து விடாது. மனு ஏற்க மறுக்கப்பட்டு திருப்பி அளிக்கப்படும். அதில் ஓரத்தில் ஏன் திருப்பப்பட்டது என்பதற்கான காரணம் எழுதப்பட்டிருக்கும். அதைத் தெரிந்து கொண்டு உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

மனு தயார் செய்யும்போது தலைப்பில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் என எழுதி, அதன் கீழே ஊரின் பெயரை எழுத வேண்டும். அதற்குக் கீழே மையத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் அல்லது சி.சி.எண் / 2012 என்று வருடத்தைக் குறிப்பிட வேண்டும். வழக்கு பதிவு செய்யப்பட்டதும் ஒரு எண் தரப்படும். அதைப் புள்ளி உள்ள இடத்தில் எழுதிக் கொள்ளலாம். அதற்கு வசதியாகவே இந்த இடைவெளி விடப்பட்டுள்ளது.

என்பதைத்தான் தமிழில் ஆங்கிலத்தில் Calendar Case No. ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் என்றும், சுருக்கமாக C.C.No. என்றும் குறிப்பிடுகிறோம்.

அடுத்து பெயர், தந்தையார் பெயர், சுமாரான வயது, முகவரி இவற்றை இடது பக்கத்தில் எழுதி - மனுதார் / குற்றப் புகார்தாரர் என்று வலது பக்கத்தில் எழுத வேண்டும். அதற்குக்கீழே தமிழில் எழுதுவதாக இருந்தால் தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்று குறிப்பிட வேண்டும். அல்லது ஆங்கிலத்தில் Party - in - Person என்றும் சுருக்கமாக PIP என்றும் குறிப்பிடலாம். இது எழுதப்படாவிட்டாலும் தவறில்லை. என்றாலும் இப்படி குறிப்பிட்டுவிட்டால் மனுதார் வழக்கறிஞர் இல்லாமல் வாதாடப் போகிறார் என்பதை நீதிமன்றம் முதலிலேயே புரிந்து கொள்ளும்.

அடுத்து இடது பக்கத்தில் எதிர்மனுதாரர்களின் பெயர், சுமாரான வயது, முகவரி எழுத வேண்டும். எதிர்மனுதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால் வரிசையாக எழுதி, எதிர்மனுதாரர்–1, எதிர்மனுதாரர் –2 என்று எழுத வேண்டும்.

குற்றவியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்ய

கட்டணம் 20 ரூபாய் ஆகும். இந்த இருபது ரூபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப்பை மனுவில் ஒட்ட வேண்டும்.

இந்த ஸ்டாம்ப்பை தலைப்பிலோ இடது பக்கத்திலோ வலது பக்கத்திலோ, கீழே உள்ள மார்ஜின் பகுதியிலோ எங்கு வேண்டுமானாலும் ஒட்டலாம்.

குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இதுபோல் புகார் கொடுப்பது பற்றி கு.வி.மு.ச.200-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கீழே மையத்தில் கு.வி.மு.ச.200-ன்கீழ்மனு என்று குறிப்பிட்டு அடிக்கோடிட வேண்டும்.

ஒரு குற்றம்பற்றி சரியாகப் புலனாகாத நிலையில் கு.வி.மு.ச.190(1)அ-வின் கீழ் முறையீட்டாகவும் தாக்கல் செய்யலாம். இந்தப் பிரிவின்கீழ் மனு செய்வது என்றால் புகாரில் சம்பந்தப்படாத ஆளாக இருந்து பொது நல முறையீடாகத் தாக்கல் செய்வது நல்லது.

பொது சுகாதாரக் கேடுகள், பொது வழிக்கு இடையூறு ஏற்படுத்துதல், பொது அமைதியைக் குலைத்தல் போன்ற பொதுநல வழக்காக இருந்தால் கு.வி.மு.ச.133-ன்கீழ் முறையீட்டு மனு என்று குறிப்பிட வேண்டும். இம்மனுவை பொதுவாக நிர்வாக நடுவர்களிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் ஐந்து வகையான ரிட் வழக்கு பதிவு செய்யலாம். அவற்றில் ஒன்று ஆட்கொணர்விக்கும் பேராணை (Habeas Corpus) என்பதாகும். இந்த வழக்கை கீழமை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யலாம். அவ்வாறான வழக்காக இருந்தால் கு.வி.மு.ச. 97-ன்கீழ் முறையீட்டு மனு என்று குறிப்பிட வேண்டும்.

புகாராக இல்லாமல் ஒரு சம்பவம் பற்றி - நமக்கு சம்பந்தம் இல்லாத பிரச்சினைகள் பற்றி தாக்கல் செய்வதாக இருந்தால் கு.வி.மு.ச.2(ஈ)-யின்கீழ் முறையீடு என்று குறிப்பிட வேண்டும். இந்தப்

பிரிவின்கீழ் அரசு அதிகாரிகள் மீதும் முறையீடு தரலாம்.

அரசு அதிகாரிகள்மீது புகார் செய்ய வேண்டும் என்றால் அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்று கு.வி.மு.ச.197-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை புகார் மனுதார்தான் வாங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட வில்லை. அதனால் முறையீட்டைத் தாக்கல் செய்து அதில் நியாயம் இருக்கிறது என்று தெரிந்தால் அனுமதி வழங்க வேண்டும் என்று நீதிமன்றமே அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.

அடுத்து புகாரின் தன்மையைச் சுருக்கமாகவும், பத்தி பத்தியாக பாரா பாராவாகவும் எழுத வேண்டும். 1,2,3 என்று பத்திகளுக்கு வரிசை எண்களைக் குறிப்பிட வேண்டும்.

கடைசியில், எனவே எதிர்மனுதார்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது என்று முடிக்க வேண்டும்.

மேற்படி குற்றம் இந்தியத் தண்டனைச்சட்டத்தின் எந்தப் பிரிவுகளில் (SECTION) அடங்கும் என்று பார்த்து விபரம் தெரிவிக்கலாம். தெரிவிக்காமலும் விட்டு விடலாம். தெரிவித்தால் மனுதார் சட்டம் படிக்கிறார் என்ற விபரத்தை நடுவர் புரிந்து கொண்டு நியாயமாக விசாரணையை நடத்த எண்ணுவார்.

அய்யா, வணக்கம் என்று சாதாரண கடிதத்தில் எழுதுவதுபோல் எந்த இடத்திலும் எழுதத் தேவையில்லை.

பிரைவேட் கம்ப்ளெய்ண்ட், பார்ட்டி இன் பெர்சன் என்றாலே எதையாவது காரணத்தைச் சொல்லி திருப்பி திருப்பி விடுவதை கோர்ட் ஊழியர்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இதற்கு அதிரடி மாற்றமாக ஒன்று செய்யலாம்.

போலீசில் புகார் செய்கிறவர்கள் எல்லாருமே உண்மையான புகாரைத்தான் தாக்கல் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

இதைத் தடுத்து நிறுத்த புகார்தாரரிடம் உறுதிமொழி பெற வேண்டும் என்பது பற்றி ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அதை இந்த மனுவில் நாமும் கடைப்பிடிக்கலாம்.

'மேற்கண்ட சங்கதிகள் யாவும் என் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மை என்று நம்புகிறேன். இதில் உள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய சுமை சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 105-ன்கீழ் எனக்கு இருக்கிறது என்பதை நான் அறிவேன். என்னால் அவ்வாறு நிரூபிக்க இயலாமல் எதிரி விடுதலை செய்யப்பட்டால் நீதிமன்றம் இ.த.ச.211-ன்கீழ் வழங்குகின்ற நியாயமான தண்டனையை மனதார ஏற்றுக் கொள்வேன் என்றும், சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் பிரமாணமாக

............... தேதியில் இதில் நானே கையெழுத்துச் செய்தேன் என்றும் உறுதி கூறுகிறேன்.'

இதுபோன்ற உறுதிமொழியையும் மனுவில் கொடுத்து விட்டால் இதைப் படித்தவுடன் நீதிபதியே உருகிப் போய்விடுவார்.

நீங்கள் ஒரு வழக்கில் எதிர்மனுதாரராக இருந்தால் இதுபோல் புகார் மனுதாரிடம் உறுதிமொழி பெற்று அதன் நகல் ஒன்று தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கலாம்.

கடைசியில் வலது பக்கம் கையெழுத்து செய்து மனுதார் /தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்று எழுதவேண்டும்.

புகாரை இரண்டு பக்கமும் எழுதலாம். முன்பு கார்பன் பேப்பர் வைத்து எழுதும் நடைமுறை இருந்தது. அது தேவையில்லை. ஜெராக்ஸ் மிஷன்கள் எங்கும் இருப்பதால் ஜெராக்ஸ் நகல் எடுத்து வைத்துக் கொண்டால் போதும்.

ஒரிஜினல் மனுவுடன் எத்தனை எதிர்மனுதார்கள் இருக்கிறார்களோ அத்தனை நகல் மனுவுடன் இணைக்க வேண்டும்.

பொதுவாக முதலில் வழக்கு தாக்கல் செய்யப்படும்போது டைப் செய்து தாக்கல் செய்வதே நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆனால் டைப் செய்துதான் ஆகவேண்டும் என்று கட்டாயம் இல்லை. வசதிக் குறைவானவர்கள் கையில் எழுதியே தாக்கல் செய்யலாம்.

கு.வி.மு.ச.2(ஈ)-ன்கீழான முறையீடு என்றால் எழுதக்கூடத் தேவையில்லை. வாயினால் சொன்னாலே போதும் என்று சலுகை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, எழுதப் படிக்கத் தெரியாதவர்களும், வசதி இல்லாதவர்களும் வாயினாலேயே தங்கள் முறையீட்டைச் சொல்லலாம்.

முதல் பிரதி - ஒரிஜினல் பச்சை திக் பேப்பரில் (கேங்கர் பேப்பர்) இருப்பது நல்லது. இப்போது வெள்ளைத் தாளிலும் தரலாம்.

பேப்பரில் லீகல் சைஸ் என்றும், ஏ-போர் சைஸ் என்றும் உள்ளது. நாம் சாதாரணமாகப் பயன்படுத்துவது ஏ-போர் சைஸ் பேப்பர்தான். லீகல் சைஸ் பேப்பர் என்பது நீளமாக இருக்கும். கோர்ட்டில் இப்போது ஏ-போர் (A4) சைஸ் பேப்பரில் தாக்கல் செய்வதையே விரும்புகிறார்கள். மற்றவற்றிலிருந்து வித்தியாசமாகத் தெரிய வேண்டும் என்பதற்காகவேதான் இந்த நடைமுறையை வைத்திருந்தார்கள். இந்த நடைமுறை இப்போது ஐகோர்ட்டில் மட்டும்தான் உண்டு, கீழமை நீதிமன்றங்களில் ஏ-போர் சைஸ் பேப்பரிலேயே தாக்கல் செய்யலாம். வாயினால் சொன்னாலே போதும் என்கிற போது பேப்பரைப்பற்றி என்ன இருக்கிறது?

எனினும் புகார் மனுவானது வழக்கு முடியும்வரை வைத்து பாதுகாக்கப்பட வேண்டி இருப்பதால் ஒரிஜினல் திக் பேப்பரில் இருந்தால் பாதுகாப்பாக இருக்கும் அல்லவா?

என்ன ஒரு பிரதியை எப்போதும் கைவசம் வைத்திருக்க வேண்டும். மனுவில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்காகவும் இதன் நகல் தேவையானபோது எடுக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு பிரதி கைவசம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

கடைசிப் பக்கம் காலியாக இருக்க வேண்டும். இல்லை என்றால்

தனியாக ஒரு பேப்பர் சேர்த்துக் கொள்ளவும்.

மனுவை நீள வாட்டில் இரண்டாக மடித்தால் பின்பக்கம் வெறுமனே இருக்கும். வலது பக்கத்தில் மேலே நீதித்துறை நடுவர் நீதிமன்றம் என்று எழுதி அடுத்த வரியில் ஊரின் பெயரை எழுத வேண்டும்.

குற்றவியல் நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சி.சி நம்பர்........... /2012. ஆங்கிலத்தில் C.C.NO...../ 2012 என்று இருக்கும். இது காலண்டர் கேஸ் நம்பர் (Calender Case Number) என்பதன் சுருக்கமாகும். தமிழில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்........../ 2012 என்பது பொருள். இந்த நடைமுறை எப்.ஐ.ஆர். பதிவு செய்து காவல்துறை மூலம் தாக்கல் செய்யும் வழக்குகளில் மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

நாம் புதிதாக தாக்கல் செய்வதால் பல்வகை மனு எண்.........../ 2012 என்றே குறிப்பிடலாம்.

கு.வி.மு.ச.39-ன்கீழான தகவலாக இருந்தால் தகவல் மனு எண்......./ 2012 என்று குறிப்பிட வேண்டும்.

கு.வி.மு.ச.2(ஈ)யின் கீழான முறையீடு என்றால் முறையீட்டு மனு எண். / 2012 என்றும் குறிப்பிடலாம்.

சற்று கீழே மனுதாரின் பெயர் எழுதி மனுதார் என்று எழுத வேண்டும். முழு முகவரி தேவையில்லை.

அடுத்து எதிர்மனுதாரின் பெயர் எழுதி - எதிர்மனுதார் என்று குறிப்பிட வேண்டும். எதிர்மனுதார்கள் பலர் இருந்தால் முதல் எதிர்மனுதாரின் பெயரை மட்டும் எழுதி மற்றும் பலர் என்று குறிப்பிட்டால் போதும். பின் பக்கத்தில் எதிர்மனுதார்களின் அனைவரது பெயரையும் எழுத வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

அதற்குக் கீழே மையப் பகுதியில் கு.வி.மு.ச.200-ன்கீழ் தனிப்புகார் அல்லது கு.வி.மு.ச.2(ஈ)-ன்கீழ் முறையீடு என்று வழக்கின் தன்மையைப் பொருத்து எழுதலாம். இது குறிப்பாகத் தெரிய

வேண்டும் என்பதால் தடி எழுத்தில் போல்டாக இருக்க வேண்டும்.

மேலும் அதைத் தனித்து காட்டுவதற்காக மேலும் கீழும் ஒரு நீளக் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

கடைசியில் மனுதாரரின் பெயரை எழுதி மனுதார் / தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்று எழுத வேண்டும்.

புகாரின் கடைசியில்தான் கையெழுத்துச் செய்ய வேண்டும். இந்தப் பக்கத்தில் கையெழுத்துச் செய்யத் தேவையில்லை.

இதுவே தயாரிக்கப்பட்ட மனுவாகும். இந்த மனுவுடன் உரிய சான்றாவணங்கள் (Documents) இருந்தால் அவற்றையும் இணைக்க வேண்டும். இவற்றில் முடிந்தால் ஒரிஜினலையோ அல்லது ஜெராக்ஸ் நகல்களையோ இணைக்கலாம். ஜெராக்ஸாக இருந்தால் நீதிமன்றம் விரும்பும்போது ஒரிஜினலைக் காட்டினால் போதும். ஒவ்வொரு இணைப்பு ஆவணத்திற்கும் டாக்சீட் போட வேண்டும். இது தற்போதுள்ள நடைமுறையாகும்.

# குற்றவியல் நீதிமன்ற நடைமுறைகள்

குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கென்று ஒரு நடைமுறை இருக்கிறது.

காலை பத்து முப்பது மணிக்கு நீதிமன்றம் தொடங்கும் நேரத்தில் கிரிமினல் நீதித்துறை நடுவர் (நீதிபதி – குற்றவியல் நீதிமன்றம் – அதாவது கோர்ட்டில் நீதிபதியை நடுவர் என்று சொல்வதே வழக்கத்தில் இருக்கிறது. ஆங்கிலத்தில் MAGISTRATE என்றும் சொல்வார்கள். மற்ற நீதிமன்றத்தில் நீதிபதி என்றே குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் JUDGE என்று குறிப்பிட வேண்டும்) தமது பணியைத் துவங்குவதற்காக ஆசனத்தில் அமரும் முன்பு வணக்கம் செலுத்திவிட்டு இருக்கையில் அமர்வார்.

இப்படி வணக்கம் சொல்வது தேவைதானா என்று எந்த நடுவரும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

பொதுவாக ஒருவர் வணக்கம் சொன்னால் பதிலுக்கு வணக்கம் சொல்வதுதான் வழக்கம். நீதிமன்றத்தின் தலைவராக இருக்கும் நீதிபதி தானாகவே மற்றவர்களைப் பார்த்து எதற்காகக் கும்பிட வேண்டும்.

இதுகுறித்து பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் சிந்தித்து விளக்கம் சொன்னார்கள். அதாவது இதற்கு முன்பு செய்த தப்பு, இனிமேல் செய்யப்போகும் தப்பு இவற்றை எல்லாம் மன்னித்து அருள வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி வணங்குகிறார்கள் என்று விளக்கம் சொல்கிறார்கள். நீதிபதிகள் சட்டம் தெரியாமல் கோர்ட்டை நடத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இந்த விளக்கமும் சரி என்றுதான் தோன்றுகிறது.

நடுவர் இருக்கையில் அமர்ந்ததும் நீதிமன்ற ஊழியர் அமீனா என்பவர் (தலையில் தலைப்பாகை அணிந்து விசேஷ உடையில் இருப்பவர்) நீதிமன்ற வாசற்புறமாக வந்து 'மனுதாரர், பிராதுதாரர்' என்று மூன்று முறை அறிவிப்புச் செய்வார். அப்போது அவர் கையில் உரிய மனுவைக் கொடுத்துவிட வேண்டும்.

சில நீதிமன்றங்களில் இதுபோல் அமீனா சொல்லாமலே மனுவை வாங்கிக் கொள்வது நடைமுறையில் உள்ளது. அதனால் மற்றவர்கள் மனுவைத் தரும்போது நாமும் கொடுத்துவிட வேண்டும்.

நடுவர் அந்த மனுவை வாங்கி சுருக்கக் கையெழுத்திட்டு வாங்கி வைத்துக் கொள்வார்.

காலையில்தான் மனு கொடுக்க வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தாலும் சென்னை போன்ற நகரங்களில் மனுவின் முக்கியத்துவத்தைக் கருதி மனு தருவதை அனுமதிக்கிறார்கள். இதுபோல் காலை கோர்ட் முடிந்து மதியம் கோர்ட் இடையிலும் இரண்டு மணிக்கு ஆரம்பிக்கும் போதும் மனு கொடுக்கலாம்.

நடுவர் அந்த மனுவை வாங்கி சுருக்குக் கையெழுத்திட்டு வைத்துக் கொள்வார்.

பழைய வழக்குகள் எல்லாம் முதலில் விசாரணைக்கு வரும். குறிப்பாக தள்ளிப் போடும் வழக்குகளை முதலில் விசாரணைக்கு எடுப்பார்கள். இதற்கு வாய்தா கொடுத்தல் என்று பெயர். இதன்பிறகு சுருக்கமாக விசாரிக்க வேண்டிய வழக்குகள் அடுத்து விசாரணைக்கு வரும். விரிவான விசாரணை தேவை உள்ள வழக்குகள் கடைசியில்தான் விசாரணைக்கு வரும். இந்த நடைமுறையால் வாய்தா வழக்குதாரர்கள் காத்துக்கிடக்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

குற்றவியல் நீதிமன்ற நடைமுறை மிகவும் ஆச்சர்யப்படத் தக்க வகையில் அமைந்த ஒன்றாகும். அதாவது வழக்கு தாக்கல் அப்போதே சிறிது நேரத்தில் விசாரணைக்கு வந்து விடும்.

பொதுவாக பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் வழக்குகள் நீதிமன்றப் பணிகள் துவங்கிய சில மணி நேரத்திற்குள் விசாரணைக்கு வந்துவிடும். அதனால் மனுவைக் கொடுத்துவிட்டு பேர் சொல்லிக் கூப்பிடும் வரை காத்திருக்க வேண்டும்.

பெரும்பாலும் இதுபோல் தனியார் ஒருவர் பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்வதை நீதிமன்றம் விரும்புவதில்லை. அதனால் எதையாவது காரணம் சொல்லித் திருப்பிவிடுவதையே வழக்கத்தில் வைத்திருக்கிறார்கள். வழக்கறிஞர் இல்லாமலே எல்லோரும் ஆஜராகிவிட்டால் கோர்ட் இமேஜ் பாதிக்கப்படும் என்று கருதுகிறார்களோ என்னவோ... நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் முன்பாக பத்து மணிக்கே சென்று நீதிமன்ற ஊழியரிடம் காட்டிச் சரி செய்து கொள்வது நல்லது.

எனவே

நீதிமன்றப் பணி காலை பத்து முப்பதுக்குத்தான் ஆரம்பமாகும் என்றால் கோர்ட் ஊழியர்கள் காலை பத்து மணிக்கே வந்துவிடுவார்கள். அதனால் அவர்களிடம் காட்டி மனு செய்வதில் சிரமம் இருக்காது.

எனினும் காலையில் நீதிமன்ற ஊழியர்கள் – அதுவும் பெஞ்ச் கிளர்க் என்று சொல்லக்கூடிய தலைமை அலுவலர் மிகவும் பிசியாக இருப்பார். எனவே, முன்தினம் மாலை ஐந்து மணி அளவில் அவர் ஓய்வாக இருக்கும்போது மனுவைக் காட்டிச் சரிசெய்து கொள்வதே மிகவும் நல்லது.

இதுபோல் தனியார் மனு தாக்கல் செய்யும்போது நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் மிகவும் அலட்சியமாகவே இருப்பது முன்பு சகஜமாக இருந்தது. தற்போது பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் அனைத்து இடங்களிலும் தாக்கல் செய்வது நடைமுறைக்கு வந்துவிட்டதால் தற்போது பார்ட்டி இன் பெர்சன் என்றாலே நீதிமன்றத்தில் தக்க முன்னுரிமை கொடுப்பார்கள். அதனால் தைரியமாக மனு தாக்கல் செய்யலாம்.

மனு சரிசெய்யப்பட்டு வழக்கு ஏற்கப்பட்டு விசாரணைக்கு வந்து விட்டால் நமது மதிப்பு மேலும் உயர்ந்துவிடும். அப்போது நமக்கு இருக்கும் மரியாதையே தனிதான்.

## மனு திருப்பப்பட்டால் என்ன செய்வது?

காவல்துறையில் செய்வதுபோல் எந்த ஒரு நீதிமன்றத்தில் அலட்சியமாகத் தள்ளிவிடமுடியாது. எனவே மனு ஏற்கப்படாமல் திருப்பி அளிக்கப்பட்டால் கவலைப்பட வேண்டியது இல்லை. ஏனெனில் இந்த மனு எதற்காகத் திருப்பி அளிக்கப்படுகிறது என்ற காரணத்தை அவர்கள் எழுத்து மூலமாகத் தெரிவித்தாக வேண்டும். மனுவைத் திருப்பி அளிக்கும்போது கையெழுத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

மனுவின் ஓரப் பகுதியில் மனு திருப்பப்பட்டதற்கான காரணங்கள் குறிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கும்.

கீழே காரணங்களைக் கண்டு பிடித்து மனுவைப் பூர்த்தி செய்து மீளவும் சமர்ப்பிக்கப்படுகிறது என்று கீழே எழுதிக் கையெழுத்திட

வேண்டும். இதை மறுநாளோ சில நாட்கள் கழித்தோ மீண்டும் நீதிமன்றம் துவங்கும் காலை நேரத்தில் அமீனாவிடம் கொடுத்துவிடலாம்.

சில சமயம் காரணங்கள் குறிக்கப்பட்டு கால அவகாசம் ஒரு வாரம் என்று எழுதப்பட்டிருக்கும். அந்த உரிய காலத்திற்குள் தாக்கல் செய்துவிட வேண்டும். முதல் மனுவாக இருப்பதால் பெரும்பாலும் கால அவகாசம் குறிப்பிடப்பட மாட்டாது.

அப்படி கால அவகாசம் குறிப்பிடப்பட்டு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்ய இயலவில்லையானால், காரணங்களைத் தெரிவித்து மன்னிப்புக்கோரும் மனு ஒன்றை இணைத்தால் போதும், ஏற்றுக் கொள்வார்கள்.

கோர்ட்டில் தாக்கல் செய்யப்படும் மனு திருப்பிவிடப்படுவது பற்றி குற்றவியல் நடைமுறையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது மனு திருப்பப்படும்போது அதற்கான காரணத்தைச் சொன்னால் போதாது, அதை எப்படிப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆலோசனையும் வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யும்போது புரியாவிட்டால் இந்த விதியை கோர்ட் ஊழியர்களுக்கு நினைவுபடுத்தி விளக்கம் கேட்கலாம். குறிப்பாக ஆங்கிலத்தில் எழுதி இருந்தால் படித்தவர்களுக்கேகூடப் புரியாது. அதனால் விளக்கம் கேட்பதில் கூச்சம் தேவையில்லை.

திருப்பப்பட்ட மனுவை மீண்டும் சமர்ப்பிக்கும் போது, குற்றவியல் நடைமுறை விதிகள் 2019-ன்படி மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது என்று பிரிவையும் சேர்த்து குறிப்பிட்டால் நிச்சயம் மீண்டும் திருப்பிவிடமாட்டார்கள் என நம்பலாம்.

குற்றவியல் நடைமுறை விதிகள் பற்றி பாயும்புலி பதிப்பகத்தில் பாமரர்க்கான குற்றவியல் நடைமுறை விதிகள் புத்தகமும்

வெளியிட்டுள்ளார்கள். இது படிக்கவும் புரிந்து கொள்ளவும் மிக எளிதாக இருக்கும். மேலும் குற்றவியல் மாதிரி மனுக்கள் என்ற தலைப்பில் ஒரு புத்தகமும் வெளியிட்டிருக்கிறார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கூடிய அனைத்து வகை மாதிரி மனுக்களும் இந்தப் புத்தகத்தில் உள்ளன. இதுபோல் சிவில் மாதிரி மனுக்கள், உயர்நீதிமன்ற மாதிரி மனுக்கள், நுகர்வோர் மாதிரி மனுக்கள், முறையீட்டு மாதிரி மனுக்கள், பல்வகை மாதிரி மனுக்கள் என்று அனைத்து வகையான மாதிரி மனுக்களும் கிடைக்கும். தேவைப்படுபவர்கள் நெ.227, 3வது தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை-37 என்ற முகவரியில் கேட்டுப் பெறலாம்.

தரப்பினர் தாமே ஆஜராகும்போது சிறிது நேரம் மட்டுமே செலவாகும். இதைப் பெரிதுபடுத்தாமல் விடா முயற்சியுடன் ஈடுபட வேண்டும்.

குற்றவியல் நீதிமன்றத்தில் எந்த ஒரு மனுவும் சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்றோ, முறையாகத் தாக்கல் செய்யப்படவில்லை என்றோ மறுக்கத்தான் முடியுமே தவிர விசாரிக்க இயலாது என்று சொல்ல முடியாது. அதனால் எத்தனை முறை அலைய வைத்தாலும் மனம் தளர்ந்து விடாமல் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

எத்தனை முயன்றும் காரியம் ஆகவில்லை என்றால் பாதிக்கப்பட்டோர் கழகத்திற்குத் தெரிவித்தால் நீதிபதிக்கு அவார்டு வழங்கி சரி செய்துவிடுவார்கள்.

வழக்கறிஞர்கள் ஏற்கனவே வருமானம் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் நாம் (PIP) பார்ட்டி இன் பெர்சனாக ஆஜராவதை விரும்பாமல் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும். இதை எல்லாம் பொருட்படுத்தத் தேவையில்லை. தொடர்ந்து வழக்கை நடத்தினால் முதலில் எதிர்ப்பு தெரிவித்தவர்கள்கூட பாராட்டவும் செய்வார்கள். இந்த அதிசயம் எல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

# வழக்கு எப்படி விசாரணைக்கு வருகிறது ?

வழக்கு சரியான முறையில் தாக்கல் செய்யப்பட்டால் சில மணி நேரங்களில் அது விசாரணைக்கு வந்துவிடும். விசாரணைக்கு ஏற்கும் முன்பாக அதற்கொரு எண் வழங்கப்படும். பிறகு அமீனா, நம் பேர் சொல்லி அழைப்பார். அப்போது நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளே செல்ல வேண்டும்.

பொதுவாக குற்றவியல் நீதிமன்றத்தில் இரண்டு சாட்சிக் கூண்டுகள் இருக்கும். குற்றம் சுமத்தப்பட்வர்களை விசாரிப்பதற்கென்று ஒரு பெரிய கூண்டும், சாட்சிகளை விசாரிப்பதற்கென்று சிறிய கூண்டும் இருக்கும். இதைப் பெட்டி என்று சொல்வதுதான் வழக்கத்தில் இருக்கிறது.

முதல் விசாரணை, மறு விசாரணை, குறுக்கு விசாரணை நடத்த இந்தச் சிறிய கூண்டைத்தான் பயன்படுத்துவார்கள். இந்தக் கூண்டு பெரும்பாலும் நடுவர் அவர்களின் இருக்கைக்கு எதிரே அருகில் இருக்கும். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்வதற்கு வசதியாக இப்படி அமைக்கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிக்க தனிக்கூண்டு இல்லாவிட்டால் குறிப்பிட்ட ஒரு இடத்தைத் தேர்வு செய்து நிற்க வைப்பார்கள்.

வழக்கு விசாரணைக்கு வந்தவுடன் சாட்சிக் கூண்டில் (பெட்டியில்) ஏறச் சொல்வார்கள். முதலில் சத்தியமாகச் சொல்கிறேன் என்று உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு உறுதி மொழி எடுத்துக் கொள்ள மறுப்பது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 178-வது பிரிவின்படி குற்றமாகும்.

சாட்சிகள் இப்படி உறுதிமொழி ஏன் எடுக்க வேண்டும் என்ற தத்துவம் எந்த நீதிபதிக்கும் தெரியவில்லை. இதை ஒரு சடங்காக வைத்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால்

இப்படி உறுதி மொழி எடுக்கும் போது சத்தியமாகச் சொல்கிறேன் என்று சொன்னால் மட்டும் போதாது. சத்தியமாகச் சொல்கிறேன் என்ற வாசகத்தோடு, 'நான் சொல்வதெல்லாம் என் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மைதான். நான் சொல்வது பொய்யானால், பொய் சாட்சியாக மாறினால் இ.த.ச.178-ன்கீழ் நீதிமன்றம் விதிக்கின்ற அதாவது பிறழ் சாட்சிக்கான தண்டனையை ஏற்றுக் கொள்வேன்' என்றும் உறுதிமொழி எடுக்க வற்புறுத்த வேண்டும். ஆனால் நீதிபதிகளுக்கு சட்டம் தெரியாததால் போலீசாரும். வழக்கறிஞர்களும் பொய்ச் சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்துவதில் முனைப்பாக இருக்கிறார்கள்.

ஒரு வழக்கில் புகார்தாரரே முக்கிய சாட்சியாவார். எனவே, சத்தியமாகச் சொல்கிறேன் என்று நீதிபதி சொல்லச் சொல்கிறபோது, கூடவே நீங்களாகவே, 'நான் சத்தியமாகச் சொல்கிறேன். நான் சொல்வது அனைத்தும் உண்மைதான் என்பதை நிரூபிக்க வேண்டிய சுமை சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 105-ன்கீழ் இருக்கிறது என்பதை அறிவேன். இதை நிரூபிக்க இயலாமற்போனால் இ.த.ச.211-ன்கீழ் நீதிமன்றம் வழங்குகின்ற நியாயமான தண்டனையை ஏற்றுக் கொள்வேன்' என்றும் உறுதி மொழி தரவேண்டும். இப்படி ஒரு உறுதிமொழி தந்துவிட்டாலே நம் வழக்கை விசாரிப்பதில் நடுவருக்கு ஆர்வம் அதிகம் பிறந்து விடும். அதுமட்டும் அல்ல. இனி வரும் மற்ற வழக்குகளில் இதுபோல் உறுதி மொழி தரவேண்டும் என்று அவராகவே வற்புறுத்தி வாங்கும்போது பொய் வழக்குகள் கோர்ட்டுக்கு வருவது ஒட்டுமொத்தமாக நின்று விடுமே!

இந்த உறுதி மொழி முடிந்தவுடன், நடுவர் அவர்கள் ஒரு படிவத்தில் உங்கள் பெயர், தந்தையார் பெயர், தொழில், வயது இவற்றைக் கேட்டு அவராகவே பதிவு செய்து கொள்வார். பிறகு நமது சாட்சியத்தைத் துவங்க வேண்டும்.

இது முதல் அனுபவமாக இருந்தால் சற்று நடுக்கம் ஏற்படும்.

ஆனால் சிறிது நேரத்தில் நம் எதிரே ஒரு நடுவர் அமர்ந்து இருப்பதையும், நமது சாட்சியத்தைக் கேட்க வழக்கறிஞர்களே ஆர்வம் காட்டுவதையும் பார்க்கும்போது நடுக்கம் குறைந்து ஒரு கம்பீரத் தோற்றமும் கணீரென்ற குரலும் வந்துவிடும்.

புகார்மனுவில் சாட்சியம் அளிக்கும்போது என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதைத்தான் சொல்ல வேண்டும் என்று கோர்ட்டில் வற்புறுத்துவதை ஒரு சடங்காகவேதான் வைத்திருக்கிறார்கள். இது சரியல்ல. மனுவில் உள்ளதை அப்படியே சொல்வதற்கு எதற்கு மீண்டும் விசாரிக்க வேண்டும்? இதுபற்றி சைதாப்பேட்டை 17-வது கோர்ட்டில் நான் விளக்கியபோது நான் சொன்ன கூடுதல் தகவல்களை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

எனவே நீங்களும் அதை அப்படியேதான் மனப்பாடம் பண்ணி சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. கூடுதல் தகவல் இருக்கலாம். இந்தக் கூடுதல் தகவல்கள் புகாரில் உள்ள சங்கதிகளை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர எதிரான சங்கதிகள் இருக்கக்கூடாது என்பதுதான் முக்கியம். அதனால் நீங்கள் சொல்வதை நடுவர் ஆட்சேபித்தால் மனுவில் உள்ள சங்கதிகளுக்கு எதிராக இருந்தால் நீக்கிவிடலாம் என்று தெரிவித்தால் ஆட்சேபனை நின்றுவிடும்.

சாட்சியம் கூறும் போது பட்டிமன்றத்திலோ, மேடையிலோ பேசுவதைப்போல் செந்தமிழில்தான் பேச வேண்டும் என்று தேவையில்லை. சாதாரண மொழியில் உங்கள் நண்பர்களோடும், உறவினரோடும் பேசுவதுபோலவே கூறினால் போதுமானது. நடுவர் அதைத் தமது மொழியில் சரியாக எடுத்து எழுதிக் கொள்வார்.

சாட்சியம் கூறும்போது சட்ட விதிகளின் எண்களைக் குறிப்பிட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் விதி எண்களைக் குறிப்பிட்டால் அது நடுவருக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கும். அதனால் வழக்கை உண்மையாக நடத்த வேண்டும் என்ற ஒரு

நிர்ப்பந்தமும் ஏற்படும். இப்படி விதிகளைக் கூறும்போது வழக்கறிஞர்களைப் போல சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டு இருந்தால் அது கேலிக்குரியதாகிவிடும். எனவே, நினைவில் வைத்திருந்து கூற வேண்டும். உள்ளங்கையில் பேனாவால் குறித்து வைத்துக்கொண்டு கூறினால் மரியாதை குறையாது, கூடும்.

மனுதார் சொல்லச் சொல்ல நடுவர் எழுதிக் கொண்டே இருப்பார். கூறி முடித்தபின் இன்னும் ஏதாவது சொல்ல வேண்டி இருக்கிறதா என்று முறைக்காகக் கேட்பார். இல்லை என்றதும் அதை முடித்து உரிய அலுவலரிடம் கொடுத்துவிட்டு, வேறு சாட்சிகளை அழைத்து வந்திருக்கிறீர்களா என்று கேட்பார். தம்மீது பிரியம் கொண்டு கூடவே வந்து சாட்சி சொல்ல யாராவது விரும்பினால் அவர்களைத் தொடர்ந்து விசாரிக்கச் சொல்லலாம். அல்லது சாட்சிகளை இனிமேல்தான் அழைத்து வரவேண்டும் என்று கூற வேண்டும். இப்படிக் கூறியதும் அடுத்த விசாரணை நாள் என்றைக்கு என்பதைக் கூறிவிட்டு அடுத்த வழக்கைக் கவனிக்கத் துவங்கிவிடுவார்.

மனுதாருக்கு அத்துடன் வேலை முடிந்து விடவில்லை. இன்னும் இருக்கிறது. மனுதாரால் சொல்லப்பட்டு நடுவரால் எழுதப்பட்ட சாட்சியம் உரிய அலுவலரிடம் வந்ததும் ஒரு புத்தகத்தில் வழக்கு எண், பெயர் போன்ற விபரங்களை எழுதிக் கொள்வார். அதுவரையில் மனுதார் காத்திருக்க வேண்டும்.

பிறகு சாட்சியம் சொல்லப்பட்ட விஷயங்கள் மனுதாரிடம் தரப்படும். அவர் அதைப் படித்துப் பார்த்து ஒவ்வொரு பக்கத்திலும் கீழேயும், முடிவிலும் கையெழுத்திட வேண்டும். கையெழுத்திடும்முன் படித்துப் பார்த்து அதில் மனுதாருக்கு ஆட்சேபனையான பகுதிகள் ஏதேனும் இருந்தால் அதை மாற்றச் சொல்லவோ. அல்லது நீக்கிவிடச் சொல்லவோ மனுதாருக்கு உரிமை உண்டு.

பிரைவேட் கம்ப்ளெய்ண்டுக்கு சான்றாவணங்கள் மட்டும்

போதாது. சாட்சியும் அவசியம் வேண்டும் என்று கருதப்படுகிறது. எனவே, மனுதார் தமக்குத் தெரிந்த முக்கியமான நபர்களை சாட்சியாக ஆஜராவதற்குத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

மனு விசாரணைக்கு உறுதியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிந்த நிலையில் நமக்கு சாட்சி சொல்ல வருபவர்கள் தயாராக இருந்தால் கூடவே அழைத்து வரலாம்.

மனுதாரின் பிரமாண வாக்குமூல சாட்சி முடிந்தவுடன், சாட்சியாக வந்துள்ளவரை அடையாளம் காட்டி விசாரிக்க வேண்டும் என்று கோரினால் நீதிமன்றம் அப்போதே தொடர்ந்து விசாரிக்கும்.

இந்தச் சாட்சிகள் போக வேறு சிலரையும் விசாரிக்க வேண்டியிருந்தால் அழைப்பாணை அனுப்பியோ, அனுப்பாமலோ மறு விசாரணை மேற்கொள்ளலாம்.

## சாட்சிகளை எப்படி தயார் செய்வது?

மனுதார் யாரையெல்லாம் சாட்சிகளாக விசாரிக்கக் கோர வேண்டும் என முதலிலேயே தீர்மானமான முடிவுக்கு வந்துவிட வேண்டும். சாட்சியை நேரில் சந்தித்து விபரம்கூறி நமக்குச் சாதகமாகப் பதில் சொல்வாரா எனக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏதோ ஆர்வத்தில் சரி என்று ஒப்புக் கொண்டுவிட்டு, சாட்சி மனுதாருக்கு எதிராகவோ, தேவை இல்லாத விஷயங்களைச் சொல்லி குழப்பியோ பதில் சொன்னால் வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுவிடும். எனவே, நமக்கு நம்பிக்கையான சாட்சிகளையே நீதிமன்றத்திற்கு அழைத்து வரவேண்டும்.

நீதிமன்றத்தில் சாட்சி சொல்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. படித்து விபரமானவர்கள்கூட சாட்சிக் கூண்டில் ஏறியதும் படபடவென்று நடுங்கிவிடுவார்கள்; நாக்கு குழறிவிடும்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் மனுதார் திறமையாகச்

சமாளிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. அதாவது சாட்சியத்தைக் கேள்வி – பதில் முறையில் தயார் செய்து கொள்ள வேண்டும். மனுதார் கேட்கும் கேள்விகளுக்கு ஆமாம் இல்லை என்று சாட்சியைத் தலையாட்டவைத்தாலே போதுமானது.

உதாரணத்திற்கு சாட்சி 10 மணிக்கு மனுதாரர் வீட்டில் இருந்தார் என்று சொல்ல வேண்டியிருந்தால், "பத்து மணிக்கு நீங்கள் எங்கள் வீட்டில்தானே இருந்தீர்கள்?" என்ற கேள்விக்கு சாட்சி தலையாட்டினால் போதும். நடுவர் அதைத் தம் மொழியில் எழுதிக் கொள்வார். இதுபோல் இல்லை என்பதற்கான கேள்வியையும் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இந்தக் கேள்வி – பதில்களை முன்பாகவே தயார் செய்து நாடகத்தில் ஒத்திகை பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டால் எவர் ஒருவரையும் சாட்சியாக நிறுத்திவிடலாம்.

சாட்சி வாய் திறந்து எதுவும் சொல்லாமல் தலையைத் தலையைத்தானே ஆட்டுகிறார். இந்தச் சாட்சியை எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று யாரும் மறுக்கமுடியாது.

உண்மையில் இதுபோல் சாட்சியை உருவாக்குவது பொய்ச் சாட்சிகளை வழக்கில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாகவே இருக்கும். வழக்கறிஞர்கள் இப்படித்தான் செய்கிறார்கள். சாட்சிக்கு லஞ்சம் கொடுத்து எதிரியை விடுதலை செய்யவேண்டி இருந்தாலும் இந்த வழிமுறையைத்தான் பின்பற்றுகிறார்கள். சட்டப்படி இதை அனுமதிப்பது தவறுதான். என்றாலும் நியாயத்திற்காக புகார்தாரர் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதில் தவறு இல்லை.

இந்தச் சாட்சியம் முதல் விசாரணை என்று சொல்லப்படுகிறது. இனி இதே சாட்சிகளை எதிர்மனுதாரோ, எதிர்மனுதாரரின் வழக்கறிரோ மறு விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் உரிமை உண்டு. இந்தக் குறுக்கு விசாரணையில் இதுபோன்ற பொய்ச் சாட்சியங்கள் எல்லாம் அடிபட்டுப் போகும்.

காவல் துறை வழக்குகள் பெரும்பாலானவை தோற்றுப் போய்விடுவதற்குக் காரணம் இதுபோன்ற பொய்ச் சாட்சிகளை உருவாக்குவதுதான். எப்படியோ இருக்கட்டும். தம் வழக்கில் தாமே வாதாடுகிறவர் இம்மியும் நியாயத்தில் இருந்து பிறழ்ந்துவிடக் கூடாது. நியாயத்தை நிலைநாட்டுவதற்காகத் திறமையைப் பல வழிகளில் செலுத்துவது தவறில்லை அல்லவா?

ஒரு சாட்சி மாறிச் சொல்லிவிட்டால் அது பிறழ்சாட்சி எனப்படும். இவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாகிவிட்டால் நீதிமன்றம் அந்த இடத்திலேயே சாட்சிக்கு இ.த.ச.193–ன்கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்பதுதானே சரி... நீதிபதிகளுக்கு சட்டம் தெரியாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்கி எதிரியை விடுதலை செய்கிறேன் என்று விடுதலை செய்து விடுகிறார்கள். தம் வழக்கில் தாமே வாதாடுகிறவர் இதுபோன்ற தவறுகளுக்கு இடங் கொடுத்து விடக்கூடாது. எதிர்தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சியானால் இ.த.ச. 193–ன்கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் ஒரு மனு செய்து நெருக்கடியை ஏற்படுத்தலாம்.

## சாட்சிகளை எப்படி வரச் செய்வது?

சில சாட்சிகள் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை (Summon) வந்தால் ஆஜராவது பெருமை என்று நினைப்பார்கள். இன்னும் சில சாட்சிகள் மேலதிகாரியிடமோ, முதலாளியிடமோ அனுமதி பெற்றே நீதிமன்றங்களில் சாட்சி சொல்ல வேண்டியிருக்கும். இத்தகைய சாட்சிகளுக்கு நீதிமன்றத்தில் அழைப்பாணை அனுப்ப மனுச் செய்ய வேண்டும்.

சாட்சிக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு மனு தாயார் செய்யும்போது வெள்ளைப் பேப்பரில் பேனாவால் எழுதினாலும் போதுமானது. அதன் ஒரு நகலை ஜெராக்ஸ் எடுத்து கையில் வைத்துக்கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் எது தாக்கல் செய்தாலும்

அதன் நகல் கண்டிப்பாக மனுதாரிடம் இருக்க வேண்டும்.

மனு தயார் செய்யும் போது தலைப்பில், மேலே நீதித்துறை நடுவர் மன்றம் என எழுதி அதன்கீழ் ஊரின் பெயர் எழுத வேண்டும். வழக்கு விசாரணை ஏற்கப்பட்டுவிட்டதால் ஒரு எண் கொடுக்கப்பட்டிருக்கும். முதல் சாட்சியத்தில் கையெழுத்துச் செய்யும்போது உரிய அலுவலரிடம் கேட்டு வழக்கு எண்ணைக் கையில் உள்ள புகார் பிரதி நகலில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக அந்த எண்ணை சி.சி.எண் 567/2012 என்பதுபோல் எழுத வேண்டும். சி.சி. எண் ஆங்கிலத்தில் CALENDER CASE கேஸ் என்பதாகும். தமிழில் இதற்கு ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் என்று அர்த்தம்.

இப்போது நாம் செய்யும் மனுவிற்கு தனியாக ஒரு எண் வழங்கப்படும். இதற்குப் பல்வகை மனு என்று பெயர். ஆங்கிலத்தில் Miscellaneous Petition என்று குறிப்பிடுவார்கள். தமிழில் இதைப் பல்வகை மனு என்று குறிப்பிடலாம். அல்லது ஆங்கிலத்தில் சுருக்கமாக M.P.No. என்றும் குறிப்பிடலாம்.

அதற்குக் கீழே உள் என்று எழுதி அடுத்த வரியில் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கும் சி.சி.எண்ணைக் குறிப்பிட வேண்டும். உள் என்று தமிழில் எழுதுவதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் IN என்றும் எழுதலாம்.

அதற்குக் கீழே இடது பக்கம் பெயரை மட்டும் எழுதி நேரே மனுதாரர் என்று குறிப்பிட வேண்டும். வழக்கு எண் தரப்பட்டு விட்டது. அதனால் இனி தாக்கல் செய்யும் எந்த மனுவிலும் முழு முகவரியும் எழுதத் தேவையில்லை. இதுபோலவே எதிர்மனுதாரரின் பெயரை எழுதி எதிர்மனுதார் என்று குறிப்பிட வேண்டும். எதிர்மனுதாரர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தால் முதல் எதிர்மனுதாரரின் பெயரை எழுதி மற்றும் பலர் என்று குறிப்பிட்டால் போதுமானது.

அதற்குக் கீழே இடம்விட்டு மையப் பகுதியில் பிராசஸ் மெமோ

என்று எழுதிக் கோடிட்டுக்காட்ட வேண்டும். அதுதான் நீதிமன்ற நடைமுறையில் இருக்கிறது. உண்மையில் கு.வி.மு.ச.202-ன்கீழ் பிராசஸ் மெமோ என்று குறிப்பிடுவதுதான் சரி. வழக்கறிஞர்கள் சட்டம் படிக்காமல் மொட்டை மனு கொடுத்தே காலத்தை ஓட்டிவிடுகிறார்கள். இதுபோல நாமும் இருக்கக்கூடாது. எந்த ஒரு மனு கொடுத்தாலும் அதில் சட்டப்பிரிவு கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் கடிதம் எழுதினாலும், வால்போஸ்ட் அச்சிட்டு ஒட்டினாலும் அதில் சட்டப் பிரிவு இருக்கும். ஒரு வேடிக்கை என்னவென்றால் இதுபோல் சட்டப்பிரிவு போட்டு கொடுத்தால் அதெல்லாம் தேவையில்லை என்கிறார்கள். இதைக் கேட்டு சிரிக்காமல் என்ன செய்வது? அதுபோலவே வழக்கறிஞர்கள் பயன்படுத்தும் அச்சிட்ட படிவங்கள்கூட பலவற்றில் சட்டப் பிரிவு இல்லாமல் மொட்டையாகத்தான் இருக்கிறது.

பிறகு கீழ்க்கண்ட சாட்சியை விசாரிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகிறது என்று எழுதி, சாட்சியாளரின் பெயர், முகவரி இவற்றை எழுதி வலது பக்க ஓரத்தில் கையெழுத்துச் செய்ய வேண்டும். கையெழுத்துக்குக் கீழே முழுப் பெயரையும் எழுதி மனுதார் / தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்று குறிப்பிட வேண்டும்.

ஒரு மனுவில் எத்தனை சாட்சிகளை வேண்டுமானாலும் விசாரிக்க வேண்டும் என்று மனு செய்யலாம்.

காவல் துறையில் புகார் கொடுத்தும் உங்கள் புகாரைப் பதியாமல் நீங்கள் அலைக்கழிக்கப்பட்டிருந்தால் இப்பிரிவின் கீழ் குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளருக்கு சம்மன் அனுப்பி அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, இந்தப் புகாரை ஏன் பதியவில்லை என்பதற்கான காரணத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் கோரலாம்.

எந்த ஒரு குற்ற வழக்கிலும் பாதிக்கப்பட்டவர் - புகார்தாரரே முக்கிய சாட்சி அதாவது முதல் சாட்சி ஆவார். ஒரு காவல்

அதிகாரியின் கடமை யார் புகார் தந்தாலும் உடனடியாக அதைப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு அவர்க்கும் விதிக்கப்பட்டுள்ளது. எனவே, பிரைவேட் கம்ப்ளெய்ண்டில் புகார் கொடுத்ததற்கான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் சார்பு ஆய்வாளர்க்கு அழைப்பாணை அனுப்பி வைக்க மனு கொடுத்து அவரை ஆஜர்படுத்தி கருத்து கேட்கவும் மனுதாருக்கு உரிமை உண்டு.

மனுவை நீளவாக்கில் பாதியாக மடிக்க வேண்டும். வலது பக்கம் (பின்பக்கம்) மேலே நீதிமன்றத்தின் பெயர். ஊர், பல்வகை மனு எண்..... /2012 என்று குறிப்பிட்டு அதற்குக் கீழே உள் என்றும் அதற்கடுத்த வரியில் ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்ணும், முதல் பக்கத்தில் குறிப்பிட்டது போலவே குறிப்பிட வேண்டும்.

மையப் பகுதியில் கு.வி.மு.ச. 202-ன்கீழ் பிராசசஸ் மெமோ என்று எழுதி மேலும் கீழும் அடைப்புக்கோடிட்டு தெளிவாகக் காட்ட வேண்டும். கொஞ்சம் இடம் விட்டு, கீழே மனுதாரின் பெயரை எழுதி மனுதார் / தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்றும் இன்னும் கொஞ்சம் கீழே இடம் விட்டு சாட்சியின் பெயரை எழுதி / சாட்சி என்றும் குறிப்பிட வேண்டும். சாட்சிகள் பலர் இருந்தால் முதல் சாட்சியின் பெயரை மட்டும் எழுதி மற்றும் பலர் என்று குறிப்பிட்டால் போதும்.

நீதிமன்றத்தின் மூலம் ஒரு சாட்சிக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு முதல் நபருக்கு கட்டணம் ரூ.4.50 பைசா ஆகும். அடுத்து ஒவ்வொருவருக்கும் 25 பைசா கட்டணம் செலுத்த வேண்டும். இதை கோர்ட் ஸ்டாம்பாக மனுவின் ஓரத்தில் ஒட்டிவிட வேண்டும். இந்தக் கட்டணம் புதிய கட்டண விகிதம். இருப்பினும் எவ்வளவு என்று நீதிமன்றத்தில் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

குற்றவியல் நீதிமன்றத்தில் எந்த ஒரு மனுவையும் நீதிமன்ற விசாரணை துவங்கும்போதுதான் தர முடியும் என்பது நடைமுறையில்

இருக்கிறது. ஆனால் பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்து முதல் விசாரணை அன்று இந்த சாட்சிகளுக்கான விசாரணை மனுவை அன்றே நடுவர் தமது அறையில் இருக்கும்போது தரலாம். இதை அனுமதிக்கிறார்கள்.

சாட்சிக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு கட்டணம் செலுத்துவதை படிகட்டுதல் என்று சொல்வார்கள். இந்தப் படி கட்டியதும் மனு உரிய புத்தகத்தில் பதிவு செய்யப்படும். பதிவு செய்த பிறகு அழைப்பாணை தயார் செய்து உரிய காவல் நிலையத்திற்கு அனுப்பிவைப்பார்கள்.

குற்றவியல் நீதிமன்ற வழக்குகளில் ஒவ்வொரு அழைப்பாணையும் காவல் துறை அலுவலர் மூலமாக உரியவர்க்கு சேர்ப்பிக்கப்படுகிறது. இந்த நடைமுறை பற்றி கு.வி.மு.ச. 62-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சிக்கு படி கட்டிய சில தினங்கள் கழித்து நீதிமன்றம் சென்று உரிய அலுவலரிடம் அழைப்பாணை அனுப்பி விட்டீர்களா என்று விசாரிக்க வேண்டும். அனுப்பிய தகவலைத் தெரிந்து கொண்டு உரிய சாட்சியாளரைத் தனியாகச் சந்தித்து பேசிவைத்துக் கொண்டு தயார் செய்து கொள்ள வேண்டும்.

பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் எனும் தனிப்பிராது வழக்குகளில் சாட்சிகள் சாட்சியம் சொல்ல அவ்வளவாக ஆர்வம் காட்டமாட்டார்கள். எனவே, விசாரணை நாளன்று கையோடு அழைத்து வந்து விட வேண்டும்.

விசாரணை அன்று வழக்கு எப்போது வரும் என்று சொல்ல முடியாது. அதாவது ஒரு சில மணிநேரங்கள் தாமதமாகலாம். அதுவரையில்கூட சிலர் பொறுமை இல்லாமல் வீட்டுக்குப் போய்விடுவார்கள். மனுதார்தான் இதுபோன்ற சூழ்நிலைகளில் பொறுமையாக இருந்து அவர்களை அங்கிருந்து. அகன்று விடாதபடிச் சமாளிக்க வேண்டும்.

வழக்கு விசாரணைக்கு வரும்போது அமீனா மனுதாரின் பெயரைச் சொல்லி அழைப்பார். ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதால் சாட்சி வந்திருக்கிறாரா என்று கேட்பார். அப்போது சாட்சிக்கு மனு தாக்கல் சாட்சியைக் காட்ட வேண்டும். சில வேளைகளில் அவர்களே சாட்சியின் பெயரைச் சொல்லி அழைப்பதும் உண்டு.

எதிர்பாராத வகையில் சாட்சி யாருமே வரவில்லை என்றால் வாய்தா கேட்கலாம். வாய்தா வாங்கிவிட்டால் வழக்கு சுமார் இருவாரம் கழித்து ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்பட்டால் சாட்சிக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்பி வைக்க படி செலுத்த வேண்டும்.

எந்த ஒரு வழக்கிலும் விசாரணை இல்லாமல் ஒத்தி வைக்கக்கூடாது என்றும், அப்படி ஒத்திவைக்க வேண்டும் என்றால் ஒத்திவைக்கக் கோருபவர் நியாயமான செலவுத் தொகை வழங்கிவிட்டால் அதைத் தக்க காரணமாக ஏற்றுக் கொள்ளலாம் என்றும் கு.வி.மு.ச. 309(2) தெரிவிக்கிறது. நீதியின் நோக்கம் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் இந்த விதியை நாமே பின்பற்றி கு.வி.மு.ச.309(2)ன்கீழ் மனு என்று எழுதி, நான் ஒத்திவைக்கக் கோருவதால் மேற்படி விதியின்படி நீதிமன்றம்

உத்தரவிடும்படியான நியாயமான செலவுத் தொகையை செலுத்திவிடுகிறேன் என்று மனு செய்து செலவுத் தொகையும் செலுத்திவிட்டால் இது ஒரு முன் உதாரணம் ஆகிவிடும். அடுத்து விசாரணை இல்லாமல் யாரும் ஒத்திவைக்கக் கோர மாட்டார்கள்.

எந்த ஒரு நபரும் நீதிமன்றத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டு ஆஜராகாமல் இருப்பது சட்டப்படி குற்றமாகும். இதுபோல் செலவுத்தொகை செலுத்திவிடுவதாக மனு செய்து செலுத்திவிட்டால் ஆஜராகாத குற்றத்தில் இருந்து விதிவிலக்காகிவிடும்.

சில சாட்சிகள் கட்டாயத்தின் பேரிலேயே வர விரும்புவார்கள். அல்லது வர மறுப்பார்கள். அத்தகைய சமயங்களில் சாட்சிக்கு பதிவு அஞ்சலின்மூலம் அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று

கோரலாம். இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஒரு கவரில் கட்டாய அழைப்பாணை அனுப்ப வேண்டியவரின் பெயர், முகவரியை எழுதி, பதிவு அஞ்சலுக்கான தபால்தலையைக் கவரில் ஒட்டி (கவரின் தலைப்புப் பகுதி ஒட்டாமல் இருக்கவேண்டும்.) உரிய அலுவலரிடம் ஒப்படைத்து விட வேண்டும். நீதிமன்றத்தில் உரிய அழைப்பாணையை உள்ளே வைத்து நீதிமன்ற முத்திரை குத்தி உரிய நபர்க்கு அனுப்பி வைப்பார்கள். நீதிமன்ற அழைப்பாணையைப் பதிவுத் தபாலில் பெற்றுவிட்டால் பிறகு யாரும் ஆஜராகாமல் இருக்க மாட்டார்கள்.

# சாட்சியாக யார் யாரை அழைக்கலாம்?

ஒரு வழக்கில் சாட்சியாக கணவன், மனைவி, மக்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களை சாட்சியாக அழைத்து வந்து பயன்படுத்தினால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று இந்திய சாட்சிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. காரணம் உண்மையாகச் சொல்லாமல் கூட்டிக் குறைத்துச் சொல்லக்கூடும் என்பதால், இவற்றை அக்கறையுள்ள சாட்சிகள் என்பார்கள்.

ஆனால், வழக்கின் தன்மையைப் பொருத்து இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

எடுத்துக் காட்டாக குற்றத்தன்மையானது மனுதாரரின் வீட்டிலோ தொழிலகத்திலோ நடைபெற்று இருக்கும்போது அங்கு நெருங்கிய உறவினர்களோ, தொழிலாளர்களோதான் இருப்பார்கள். அதனால் இவ்வேளைகளில் அக்கறை உள்ள சாட்சிகளைப் பயன்படுத்தலாம்.

ஆனால் உரிமையியல் வழக்குகளில் அக்கறை உள்ள சாட்சிகள்தான் மதிப்பு மிக்கவர்கள் என்று அதே சாட்சிய சட்டம் பிரிவு 120-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் கூலி வாங்கிக் கொண்டு சாட்சி சொல்வதற்கென்றே சிலர் இருக்கிறார்கள். காவல்துறையினரும், வழக்கறிஞர்களும் இவர்களைப் பயன்படுத்துவது உண்டு.

ஒரு வாகன ஓட்டி விதியை மீறிவிட்டார். போக்குவரத்து காவலர் அவரைப் பிடித்துவிட்டார். மாதக் கடைசியாக இருக்கும் சமயங்களிலும், வழக்கு தேவைப்படும் சமயங்களிலும் இதுபோன்ற குற்றங்களுக்கு பணம் கேட்கமாட்டார்கள்; கொடுத்தாலும் வாங்க மாட்டார்கள்.

இது கோர்ட் மூலம் விசாரணைக்கு வரும். விசாரணைக்கு அழைப்பாணை கொண்டு வந்து தரும்போது உரிய அலுவலர் கொஞ்சம் பணம் கொடுத்தால் அதை அப்படியே முடித்து விடலாம் என்பார். நீதிமன்ற நடைமுறை தெரிந்தவர்களுக்கு இது மிகவும் ஆச்சர்யமாக இருக்கும். விசாரணைக்கு வந்த பிறகு எப்படி முடிக்க முடியும் என்பதுதான் அவர்களது வியப்பு. இதற்கு ஒரு குறுக்கு வழியைப் பின்பற்றுகிறார்கள்.

காலையில் நீதிமன்ற வளாகத்தில் எந்த வழக்குகளிலும் சம்பந்தப்படாத நபர் சிலர் அங்கும் இருப்பார்கள். இவர்கள் கூலி வாங்கிக் கொண்டு சாட்சி சொல்வதற்காக வந்தவர்கள்தாம்.

காவல்துறை அலுவலரோ, வழக்கறிஞரோ முன்கூட்டியே இவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.

கிருஷ்ணன் என்பவர் வாகன விதியை மீறி செயல்பட்டதால் பிடிபட்டார் என்று வைத்துக் கொள்வோம். இவர்களில் யாருக்காவது கிருஷ்ணன் என்று பெயர் வைத்து ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.

நீதிமன்றத்தில் கிருஷ்ணன் என்று அழைத்ததும் இவர் போய் நிற்பார். இந்த மாதிரி வழக்குகளில் பொய்ச் சாட்சிகள் ஆஜராவார்கள் என்பது நீதிபதிக்கும் தெரியும். வழக்கறிஞராக இருந்தபோது இதேபோல் அவரும் பொய்ச் சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தியவர்தானே! அதுமட்டும் அல்ல. இந்த நடைமுறை ஆண்டாண்டு காலமாக நடந்துவரும் பழக்கம்தான். அதனால் ஆள் ஆஜராகிவிட்டாரா என்பதை மட்டும் பார்த்துவிட்டு அபராதம் விதித்து கட்டச் சொல்லி போகச் சொல்லிவிடுவார். வழக்கு அத்துடன் முடிந்து

விடும். கிருஷ்ணனுக்காக ஆஜராகியவர் உரிய புத்தகத்தில் கிருஷ்ணன் என்று கையெழுத்து செய்து விட்டு உரிய அலுவலரிடமோ, வழக்கறிஞரிடமோ கூலி வாங்கிக் கொள்வார். இதுபோன்ற நடைமுறைகளைப் பின்பற்றி நமக்கு எதிராக வழக்கறிஞர்களோ போலீசாரோ பயன்படுத்துவதை நாம் அனுமதிக்கக்கூடாது. அதே நேரத்தில் பொய்ச் சாட்சிகள் உருவாக்குவதை நாம் எந்த ஒரு நெருக்கடியான நேரத்திலும் பயன்படுத்துவது கூடாது.

## இந்திய சாட்சிய சட்டம் காவல்துறையை நம்பவில்லை!

நீதிமன்றத்தில் விரிவான விசாரணை ஏதுமின்றி சுருக்கமாக முடிக்கக்கூடிய வழக்குகளை பெட்டி கேஸ் என்பார்கள். இந்தப் பெட்டி கேஸ்களில் பெரும்பாலான சாட்சிகள் இதுபோல் கூலி வாங்கிக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

காவல்துறையினர் பெரிய வழக்குகளிலும் இதுபோல் சாட்சிகளைத் தயார் செய்வதுண்டு. இதனால்தான் இந்திய சாட்சிய சட்டம் காவல்துறையை நம்பவில்லை என்று தெரிகிறது. ஆனால் இந்த விதி பிரிட்டிஷார் காலத்தில் இயற்றப்பட்டது. இதை நீக்கிவிட்டு காவல்துறைக்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும். அப்போதுதான் உண்மையான சாட்சிகளைத் தயார் செய்து வழக்கை விரைவாகவும் நியாயமாகவும் முடிக்க இயலும்.

காவல்நிலையத்தில் எப்.ஐ.ஆர். பதிந்து உரிய நபரைக் கைது செய்து குற்றப் பத்திரிகை தயார் செய்கிறார்கள். இந்தக் குற்றப்பத்திரிகை தயார் செய்யும்போது நீதிமன்றம் விசாரணை நடத்துவது போலவே சாட்சிகளை விசாரித்து, புலன்விசாரணை செய்து உரிய சான்றாவணங்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்கிறார்கள். இந்தக் குற்றப் பத்திரிகையை காவல் நூற்றுக்கு நூறு

உண்மையாகவே துறையினர் செய்வார்களேயானால் நீதிமன்றம் விசாரிக்காமலே கூட தண்டனை வழங்கலாம். ஆனால் இதில் வேதனைப்படத்தக்க விசயம் என்னவென்றால் காவல்துறை தயாரிக்கும் இந்தக் குற்றப் பத்திரிகையில் சில விசயங்கள் மட்டுமே உண்மையாக இருக்கின்றன என்பதுதான். இதனால்தான் நீதிமன்றம் விரிவான விசாணை நடத்தி தீர்ப்பு வழங்குகின்றது. போலீசார் பொய்ச் சாட்சிகளை நிறைய உருவாக்குவதால்தான் பெரும்பாலான வழக்குகளில் குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள். இதை நீதிமன்றத்தின் அறியாமை என்றும்கூடச் சொல்லலாம். ஏனெனில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு சாட்சியத்திலும் பிரமாணம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று சட்டம் தெளிவாக இருக்கிறது.

போலீசார் குற்ற வழக்குகளில் எதிரியைக் கஸ்டடியில் வைத்து விசாரிக்கிறார்கள். இப்படி விசாரிக்கும்போது சில சாட்சிகள் சொன்னதாக பொய்யாக தாங்களே தயாரித்து கையொப்பம் வாங்கிக் கொள்கிறார்கள்.

இதுபற்றி கு.வி.மு.ச.173(2)-ல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

போலீசார் கு.வி.மு.ச.173(2)ன்கீழான புலனாய்வு இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது அதில் போலீசாரின் பிரமாணமும் தாக்கல் செய்ய வேண்டும். ‘நான் எதிரியை என் பாதுகாப்பில் வைத்து விசாரித்தபோது உண்மையான சாட்சிகளைத்தான் விசாரித்தேன். இதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மைதான். நீதிமன்றம் இதற்கு எதிரான தீர்ப்பு வழங்கினால் அது என்னையும் கட்டுப்படுத்தும். இ.த.ச.167 மற்றும் 197-ன்கீழ் நீதிமன்றம் வழங்குகின்ற தண்டனையை ஏற்றுக் கொள்வேன்‘ என்ற உறுதி மொழியையும் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் நிர்ப்பந்தம் செய்தால் போலீசார் பொய்ச் சாட்சிகளை உருவாக்குவது

தடுக்கப்பட்டுவிடும்.

இதுபோல் சாட்சிகளும் தாங்கள் உண்மையான சங்கதிகளைத்தான் தெரிவித்திருப்பதாக பிரமாணம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் கு.வி.மு.ச. 164(2)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும் பொய்யான சாட்சிகளைத் தயார் செய்த போலீசாருக்கு இதுவரை எந்த நீதிமன்றமும் தண்டனை வழங்காததால் இதை வாடிக்கையாகவே வைத்திருக்கிறார்கள்.

ஒரு காவல் அதிகாரியின் பணி குற்றத்தைக் கண்டு பிடிப்பதுமட்டும்தான் என்றாலும் தவறான அணுகுமுறையைக் கைக்கொள்ள நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது.

ஒரு சாட்சி பிறழ் சாட்சியானால், சாட்சிக்கும், அந்த சாட்சியைத் தயார் செய்தது வழக்கறிஞரானால் வழக்கறிஞருக்கும், போலீசாக இருந்தால் போலீஸ்க்கும் இ.த.ச.193-ன்கீழ் அவர்களுக்கு அங்கேயே தண்டனை வழங்க வேண்டும் என்பதுதானே சரி. ஆனால் சாட்சி பிறழ்சாட்சியாகிவிட்டால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்கி எதிரியை விடுதலை செய்து விடுகிறேன் என்கிறார்கள். இப்படி எந்தச் சட்டத்தில் இருக்கிறது என்று கேட்டால் யாருக்கும் சொல்லத் தெரியவில்லை.

எப்போதோ ஒரு முறை உச்சநீதிமன்றத்தில் எதிரியை விடுதலை செய்வதற்காக இப்படி ஒரு காரணத்தைக் கண்டு பிடித்துச் சொன்னதை இவர்கள் வழக்கமாகவே வைத்திருக்கிறார்கள். பிரைவேட் கம்ப்ளெய்ண்டில் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர்கள் இந்தத் தப்பை எல்லாம் தட்டிக் கேட்டு ஒரு பெரிய விழிப்புணர்வை உண்டு பண்ண வேண்டும்.

பொதுவாக எந்த ஒரு வழக்கிலும் நீதிபதிகள் சாட்சி இருக்கிறதா என்று கேட்பதை வழக்கமாகவேதான் வைத்திருக்கிறர்கள். அதற்காக பிறரைப் போலவே பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்து ஆஜர்படுத்துவது தவறு. மேலும் ஒரு சாட்சி, சாட்சிக் கூண்டில் ஏறி

சாட்சி சொல்வதோடு அவரது கடமை முடிந்து விடுவது இல்லை. மறு விசாரணை, குறுக்கு விசாரணை எல்லாம் உண்டு. இதில் மாறிச் சொன்னால் அந்த சாட்சிக்கும், மனுதாரருக்கும் தண்டனை கிடைக்கும். எனவே, மறந்தும் பொய்ச்சாட்சிகளை உருவாக்காதீர்கள்.

வழக்கறிஞர் இல்லாமல் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர்கள் இயன்ற அளவு தெளிவானவர்களையும், உயர்நிலையில் உள்ளவர்களையும் சாட்சியாகப் பயன்படுத்துவதுதான் நல்லது.

சாட்சியாக யாரை வேண்டுமானாலும் அழைக்க முடியுமா? நிச்சயமாக முடியும்!

ஒரு புகார் சம்பந்தமாக பல அதிகாரிகளுக்குப் புகார் செய்தும் நடவடிக்கை மேற்கொள்ளாததால்தான் இந்த தனிப் புகாரைத் தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் அந்த அதிகாரிகளையும் உங்கள் வழக்கில் ஒரு முக்கிய சாட்சியாக அழைத்து விசாரிக்கலாம்.

இதுபற்றி கு.வி.மு.ச.311-வது பிரிவில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின்கீழ் ஒரு முக்கிய சாட்சியை நீதிமன்றம் தன்னிச்சையாகவோ, தரப்பினரின் விண்ணப்பத்தின் பேரிலோ அழைத்து விசாரிக்கலாம். நீதிமன்றமே விசாரிக்கும்போது அதற்கான செலவுத் தொகையை அரசாங்கம் சாட்சிக்கு வழங்க வேண்டும் என்று குவி.மு.ச. 312-ன்கீழ் உத்தரவு பிறப்பிக்கும்.

மனுதார் தாமே சாட்சியாக அழைத்து விசாரிக்கக் கோரும் போது சாட்சி செலவுத் தொகை பெற விரும்பினால் மனுதாரே வழங்க வேண்டும்.

ஒரு மேல்முறையீட்டு வழக்கில் கீழமை நீதிமன்ற நீதிபதியைக்கூட இதுபோல் கு.வி.மு.ச. பிரிவு 311-ன்கீழ் அழைத்து விசாரிக்கலாம் என்று கு.வி.மு.ச. பிரிவு 404-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தப் பிரிவின் தத்துவம் என்னவென்றால், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது உத்தரவு சரியில்லை என்றுதான் மேல்முறையீடு செய்திருக்கிறார். எனவே,

மேல்முறையீட்டு மனுவின் நகல் ஒன்றை கீழமை நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பிவைத்து அவரிடம் கருத்து கேட்டு கோப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 404 தெரிவிக்கிறது. இதுபோல் மேல்முறையீட்டில் எந்த ஒரு நீதிபதியும் கருத்து கேட்காததால் மனுதார் தாமே வலிந்து அழைப்பாணை அனுப்பி வைத்து கருத்து கேட்க வற்புறுத்தலாம்.

கு.வி.மு.ச. 311-ன்கீழ் முக்கிய' சாட்சியாக ஆஜராகும் போதுதான் மனுதார் செலவுத் தொகை வழங்க வேண்டும். இப்போது கு.வி.மு.ச. 404-ன்கீழ் கீழமை நீதிமன்ற நீதிபதி ஆஜராவதால் செலவுத் தொகை எதுவும் வெலுத்தத் தேவையில்லை.

# சாட்சி பயந்தால் என்ன செய்வது?

சாட்சியம் கூறுபவர் தெளிவானவராக இருந்தால் அவரைச் சுதந்திரமாகச் சொல்ல விட்டு விடலாம். நடுக்கம் ஏற்பட்டாலும், குழப்பமடைந்து உளறுவார் என்று தெரிந்தாலும் மேற்சொன்னபடி கேள்வி பதில் என்ற முறையில் சாட்சியம் கூறச் செய்யலாம்.

பல வழக்குகளில் பொய்ச் சாட்சியை உருவாக்குகிறவர்கள் இந்த முறையைத்தான் பின்பற்றுகிறார்கள். நியாயத்திற்காகப் போராடுகிறவர் இந்தக் குறுக்கு வழியைப் பின்பற்றுவதால் தவறு ஒன்றும் இல்லை.

சாட்சி தன் மொழியில் கூறினாலும் நடுவர் அதைத் தம் மொழியில் எடுத்து எழுதிக் கொள்வார்.

சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முடிந்த நிலையிலும், வேறு சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியுள்ளதா என்று நடுவர் மனுதாரிடம் கேட்பார். வேறு சாட்சிகள் இல்லை என்றால் இத்துடன் எனது சாட்சிகளை முடித்துக் கொள்கிறேன் என்று மனுதார் எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்க வேண்டும்.

குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெறும் ஒவ்வொரு

விசாரணையையும் நடுவர் பதிவு செய்வார். குறிப்பாக சாட்சிகள் சாட்சியம் அளிக்கும்போது அதை நடுவர் தம் கைப்பட பதிவு செய்ய வேண்டும் என்று கு.வி.மு.ச. 274-வது பிரிவில் கட்டுப்படுத்தபட்டுள்ளது. அப்படி தம்மால் எழுத முடியாதபோது அதற்கான காரணத்தை எழுதிவைத்து விட்டு அவர் சொல்லச் சொல்ல இன்னொருவர் பதிவு செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது.

ஒரு சாட்சி சாட்சியம் அளிக்கும் போது ஒரு ரைட்டரைப் போல் அதை நடுவர் அப்படியே பதிவு செய்யக்கூடாது. சாட்சி சொல்லும்போது சாட்சியின் நடத்தையைப் பற்றியும், அவரது முக பாவனைகள் பற்றி தாம் அவசியம் எனக் கருதும் குறிப்பினையும் எழுதிக் கொள்ள வேண்டும் என்று கு.வி.மு.ச.280ல் நடுவருக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. இந்த விதியைப் பின்பற்றி பெரும்பாலான நடுவர்கள் பதிவு செய்வதில்லை. என்றாலும் சில நடுவர்களிடம் சாட்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் வழக்கம் காணப்படுகிறது. இதில் தேர்ச்சி பெற்ற நடுவராக இருந்தால் சாட்சி பொய்ச்சாட்சியம் அளிக்கிறார் என்பதை சில கேள்விகளிலேயே கண்டறிந்து அவர்க்குத் தண்டனை வழங்கிவிடலாம்.

சாட்சிகளை விசாரிக்கும் போது நடுவரே அவரைக் கேள்வி பதில் முறையில் விசாரித்தால் அப்போதே பொய்ச் சாட்சியத்தைக் கண்டு பிடித்துவிடலாம். ஆனால் இதை பெரும்பாலான நடுவர்கள் பின்பற்றுவதில்லை. கேள்விகள் கேட்பது வழக்கறிஞருக்கு மட்டும்தான் சொந்தம் என்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். வழக்கறிஞரை நடுவர்களாக நியமிப்பதால் வரும் கேடு என்று இதைச் சொல்லலாம். சாட்சிகளை மட்டும் அல்ல; எந்த விசாரணை என்றாலும் ஒரு நடுவர் கேள்வி - பதில் முறையில் விசாரிப்பதுதான் சிறந்தது. ஏனெனில், ஒரு விசாரணையில் மற்றவர்கள் கேள்வி எழுப்புவதற்கும், நடுவரே கேள்வி எழுப்புவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. மற்றவர்கள்

கேள்வி கேட்கும்போது தங்கள் தரப்பு வெற்றிபெற வேண்டும் என்பதில்தான் முனைப்பாக இருப்பார்கள். ஆனால், நடுவரோ உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதில் முனைப்பாக இருப்பதால் இதை ஒவ்வொரு நடுவரும் பின்பற்றுவதுதான் நல்லது.

## அவிடவிட் என்றால் என்ன?

ஒரு வழக்கில் ஒரு முக்கியமான சாட்சியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அந்த சாட்சிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளன. அல்லது இயலவில்லை என்றால் என்ன செய்வது?

அந்த சாட்சி தாம் சொல்லக்கூடிய சாட்சியத்தை மனுவாகத் தயார் செய்து கொள்ள வேண்டும். அவரை ஒரு நோட்டரி வழக்கறிஞரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அவர் முன்னிலையில் அந்தச் சாட்சியைக் கையெழுத்திடச் செய்து வழக்கறிஞரிடம் கையெழுத்துப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம். இதற்கு உறுதிமொழிச் சாட்சியம் என்று பெயர்.

இந்தக் கையெழுத்து ஒரு நீதிபதி அல்லது குற்றவியல் நடுவர், உயர்நீதிமன்றம் அல்லது அமர்வு நீதிமன்றம் நியமித்துள்ள சத்தியப்பிரமாண ஆணையர் அல்லது நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் வாங்கப்படலாம் என்று கு.வி.மு.ச. 297-வது பிரிவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த கு.வி.மு.ச.297-வது பிரிவின் கீழ் நடுவர் முன்பு தாக்கல் செய்து பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் சிலர் தங்கள் பிள்ளைகளின் பிறந்தநாள் சான்றுகூடப் பெற்றுள்ளனர்.

பொதுவாக பிரமாணம் தாக்கல் செய்யும்போது நோட்டரி வழக்கறிஞரிடம் அத்தாட்சி பெற்று தாக்கல் செய்வது மட்டும்தான் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் சட்டம் என்ன சொல்கிறது. ஒருவர் தாம் சொல்வது அனைத்தும் உண்மை என்று

தானே கையெழுத்துச் செய்தாலே போதும் என்று சாட்சிய சட்டம் 70-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. எனவே, தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் தன் சாட்சிகளை பிரமாணம் மூலம் தாக்கல் செய்ய வேண்டி இருந்தால், ‘மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டிய வரையில் உண்மை என்றே கருதுகிறேன். இதில் உள்ள சங்கதிகள் நிரூபிக்கப்படாமல் போனால் இ.த.ச.193-ன்கீழ் நீதிமன்றம் வழங்குகின்ற தண்டனையை ஏற்றுக் கொள்வேன் என்று சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் பிரமாணமாக இதில்... தேதியில் நானே கையெழுத்துச் செய்தேன்‘ என்ற உறுதி மொழியுடன் தாக்கல் செய்தாலே போதுமானது. இது சட்டப்படி சரியானதே! இதுவும் தக்க உறுதி மொழி ஆவணம்தான்.

# தனியார் ஆஜராவதை நீதிமன்றம் விரும்புகிறதா?

ஒரு பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் வழக்கானது கு.வி.மு.ச. பிரிவு 200-ன்கீழ் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த வழக்கு முதல் விசாரணையில் விசாரணக்கு ஏற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்ததா இல்லையா என்று கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் கண்டறிந்து தகுதி வாய்ந்தது அல்ல என்று கண்டறிந்தால் அதைத் தள்ளுபடி செய்யலாம் என்று நடுவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதை நடுவர்கள் தவறாகப் பயன்படுத்தி தனிப் பிராது வழக்குகளை எதையாவது காரணம் சொல்லி தள்ளுபடி செய்வதையே வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இதை நாம் அனுமதிக்கக்கூடாது. இதைத் தடுக்க புகார்தாரர் சங்கதிகளை நிரூபிப்பதற்கான பிரமாணம் தாக்கல் செய்துவிட்டாலே போதும். அதைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று நம்பலாம்.

தனிப் புகாரானது விசாரணைக்கு ஏற்கப்பட்டுவிட்டால்

கு.வி.மு.ச.202-ன்கீழ் மனுதாரின் சாட்சிகள் விசாரிக்கப் படுகிறார்கள். இந்தச் சாட்சிகளின் விசாரணையில் ஒரு நடுவர் வழக்கின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்கிறார் என்றாலும் இந்த வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளத் தக்கதா இல்லையா என்பதற்காக வாய்தா என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு ஒத்தி வைக்கிறார்கள்.

பொதுவாக ஒரு வழக்கு ஒத்திவைக்கப்படும்போது 15 நாட்களுக்குள் அதாவது இரண்டு வாரம் - 14 நாட்கள் இருக்கும்படி ஒத்தி வைப்பார்கள். நடுவர் இந்த வழக்கை ஒத்திவைக்கும் போது அவர் இந்த வழக்கு பற்றி என்ன முடிவு செய்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள வாய்தா தேதியை வைத்தே கண்டுபிடித்துவிடலாம். அதாவது வழக்கம் போல் இரண்டு வாரம் ஒத்திவைத்தால் வழக்கைத் தொடர்ந்து நடத்தப்போகிறார் என்றும், அதற்குக் குறைவாக மூன்று அல்லது ஐந்து நாட்கள் ஒத்திவைத்தால் கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் தகுந்த ஆதாரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப் போகிறார் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இதுபோல் அருப்புக்கோட்டை நடுவர் மன்றத்தில் வாய்தா தேதி அறிவித்தபோது நடுவருக்கு நோட்டீஸ் அனுப்பினேன். அதனால் பயந்து வழக்கை நான் விசாரிக்க விரும்பவில்லை என்று தெரிவித்து மாவட்ட நீதிபதியின் உத்தரவின் பேரில் அதை சாத்தூர் கோர்ட்டுக்கு மாற்றிவிட்டார்.

பொதுவாக தனியார் பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் தாக்கல் செய்வதை நீதிமன்றம் விரும்புவதில்லை. அதனால் எதையாவது காரணம் சொல்லி கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் தள்ளுபடி செய்கிறேன் என்பதே வழக்கத்தில் இருக்கிறது.

வழக்கறிஞர் இல்லாமல் ஒருவர் தாமே ஆஜராவதை நீதிமன்றம் விரும்பாததற்கு சில காரணங்கள் உள்ளன. ஒருவரைப் பின்பற்றி இதுபோல் பலரும் ஆஜராகிவிட்டால் நீதிமன்றத்தின் மரியாதை குறைந்து போகுமோ என்ற அச்சம் ஒரு காரணம். இதனால்

வம்படியாக இலவச சட்ட உதவிக்கு ஏற்பாடு செய்து விடுகிற நடுவர்களும் இருக்கிறார்கள்.

கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் தகுந்த ஆதாரம் இல்லை என்று தள்ளுபடி செய்யலாம் என்ற விதி பிரிட்டிஷார் காலத்தில் தங்கள் வசதிக்காக ஏற்படுத்திக் கொண்டதாகும். அதாவது நாட்டில் பிரச்சினை குறைந்துவிட்டால் விடுதலை கேட்டு போராட வந்து விடுவார்களோ என்ற பயத்தில் இப்படியும் செய்யலாம், அப்படியும் செய்யலாம் என்று சட்டம் வகுத்துள்ளார்கள். மேல்முறையீட்டில் லஞ்சம் வாங்கிக் கொண்டு குற்றவாளியை விடுதலை செய்துவிடும் நீதிபதிகளுக்கு இந்த நடைமுறை கு.வி.மு.ச. பிரிவு 389-ல் வசதியாக இருக்கிறது.

இதுபோல் தனியாரை ஆஜராகவிடாமல் செய்வதற்காக கீழமை நீதிமன்றத்தில் பயன்படுத்தும் விதிதான் கு.வி.மு.ச.பிரிவு 203.

புகார் மனுதாரர் தன் புகாரில் உள்ள சங்கதிகளை நிரூபிக்கத் தவறினால் இ.த.ச. பிரிவு 211-ன்கீழ் தண்டனையை ஏற்றுக் கொள்வேன் என்ற உறுதி மொழியும் தாக்கல் செய்திருந்தால் நீதிபதிகள் கு.வி.மு.ச. பிரிவு 203-ஐ ஒதுக்கி வைத்துவிட்டு, எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரிக்கவே விரும்புவார்கள் என நம்பலாம்.

கீழமை நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்துவிட்டால் அடுத்து என்ன செய்வது என்று தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் மேல்முறையீடு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்ய வேண்டும். இதற்கு அலைச்சல் அதிகமாகும், பணம் செலவாகும் என்று கிடப்பில் போட்டுவிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பிலும் எதையாவது காரணம் சொல்லி தள்ளுபடி செய்வதையே விரும்புகிறார்கள். அதனால் வெறுமனே தள்ளுபடி செய்துவிட்டால் அதே கோர்ட்டிலேயே இ.த.ச. பிரிவு 211-ன்கீழ் தண்டனை வழங்கிவிடுங்கள் என்றும் ஒரு மனு செய்து விட்டால் நீதிபதி பயந்துபோய் உத்தரவை ரத்து செய்துவிடுவார் என நம்பலாம்.

# நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரம் என்பது என்ன?

ஒரு நீதிமன்றத்தில் ஒரு நடுவருக்கு எந்த ஒரு வழக்கிலும் நீதியை நிலைநாட்டுவதற்காக தன்னிச்சையாக முடிவுசெய்வதற்கு விசேச அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரம் என்று பெயர். இந்த இயல்பான அதிகாரம் என்பது சட்டத்திற்கு உட்பட்டது அல்ல. அதாவது இந்த அதிகாரத்தை ஒரு நடுவருக்கு யாரும் வழங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்த விசேஷ அதிகாரத்தை

ஒரு நீதிபதி நியாயத்தை நிலைநாட்டுவதற்காகப் பயன்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். ஆனால், இந்த இயல்பான அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு இதுபோன்ற பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் வழக்குகளைத் தகுந்த ஆதாரம் இல்லை என்று தள்ளுபடி செய்து விடுவார்கள்.

நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரம் குறித்து இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 78-வது பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு கீழமை நீதிமன்ற நீதிபதி நீதியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தனது அதிகாரத்தையும் மீறி நல்லெண்ணத்துடன் செயல்படலாம் எனவும், இப்படி நல்லெண்ணத்துடன் செய்கின்ற செயலை எவரும் குற்றம் சொல்ல முடியாது என்றும் தெரிவிக்கிறது. ஆனால், ஒரு உத்தரவால் பாதிக்கப்பட்டவர், நீதிபதி நல்லெண்ணத்துடன் செயல்பட்டாரா என கேள்வி கேட்பதை இந்த விதி தடுக்கவில்லை.

தனியார் செய்கின்ற புகார் வழக்குகள் பெரும்பாலும் கீழமை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்படுகிறது என்ற விபரம் அமர்வு நீதிமன்றத்திற்கோ, உயர்நீதிமன்றத்திற்கோ தெரியாமல் இல்லை.

அதனால் தான் பாதிக்கப்பட்டவர் சீராய்வு மற்றும் மேல்முறையீடு செய்வதற்கான விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சில மேல்முறையீட்டு வழக்குகளில் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றி அமைக்கும்போது நடுவருக்குக் கண்டனம் தெரிவிப்பதும் உண்டு. இதற்குமேல் என்ன செய்துவிட முடியும் என்ற தைரியம் இதுபோன்ற சூழ்நிலைகளில் நிறையவே வந்துவிடுகிறது.

நீதிபதிகளுக்கு ஜட்ஜஸ் ஆக்ட் என்று தனியாக ஒன்று உள்ளது. இந்த சட்டம் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை ஆண்டபோது உருவாக்கப்பட்டது. இதில் நீதிபதிகள் மீது யாரும் வழக்கு தொடரமுடியாது என்று சட்டம் இருப்பதாக நம்பிக் கொண்டு இதுபோன்ற சட்டத்திற்கு உட்படாத செயல்களைத் துணிந்து செய்கிறார்கள்.

இந்தச் சட்டம் பற்றி ஏற்கனவே காவல்துறையின் அறியாமை என்ற அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை ஊழியர்கள் பாதுகாப்பு சட்டம் 1850 என்ற இந்தச் சட்டத்தில் ஒரே ஒரு விதி மட்டும்தான் இருக்கிறது. இந்தச் சட்டம் என்ன சொல்கிறது என்று எந்த நீதிபதிக்குமே தெரியவில்லை. நீதிபதிகள் மீது வழக்கு தொடர முடியாது என்று மனுவைத் திருப்பிவிட்ட சைதாப்பேட்டை 18-வது கோர்ட்டில் அந்தச் சட்டம் பற்றிய நகல் வேண்டும் என்று கேட்டபோது அந்தச் சட்டத்தைக் கண்ணால்கூட பார்த்தது கிடையாது என்று ஒத்துக்கொண்டார்கள். தலைப்பை மட்டும் வைத்துக் கொண்டு

இப்படி கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சட்டம் பற்றி சென்னை, அண்ணாசாலையில் உள்ள அரசு அச்சகத்தில் வாங்கிப் பார்த்தபோதுதான் நீதிபதிகளின் அறியாமை தெற்றென விளங்கியது. ஏனெனில் ஒரே ஒரு விதியை மட்டுமே கொண்டுள்ள இந்தச் சட்டத்தில் நீதிபதிகள் நல்லெண்ணத்தோடு

செய்கின்ற செயல்கள்மீது சிவில் வழக்குகள் தொடரமுடியாது என்று இருந்தது. இதைப் பார்த்து சிரிக்கத்தான் தோன்றியது. ஏனெனில் அரசியல் சாசனம் கோட்பாடு 361(4)-ன்கீழ் குடியரசுத் தலைவர்மீது கூட வழக்குத் தொடரலாம் என்றுதானே சட்டம் உள்ளது. இந்தப் பிரிவின்கீழ் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மீதே நான் ஒரு வழக்கு தொடர்ந்து மிகவும் சிரமப்பட்டு நம்பர் வாங்கினேன். இதை விசாரணைக்குக் கொண்டு வந்தால் தங்கள் வேலை பறிபோய்விடும் என்று கோர்ட் ஊழியர்கள் என்னைக் கையெடுத்து கும்பிட்டதால் அதை அப்படியே விட்டுவிட்டேன்.

ஜட்ஜஸ் ஆக்ட் உருவாக்கியபோது இருந்த நீதிபதிகளின் நிலைமை வேறு; தற்போதைய சுதந்திர இந்தியாவில் இருக்கிற நீதிபதிகளின் நிலைமை வேறு. பிரிட்டிஷார் காலத்தில் நீதிபதிகள் ஒதுக்கப்பட்ட மேல்ஜாதிக்காரராக இருந்தார்களே தவிர அவர்களால் சுதந்திரமாக எந்த ஒரு அரசாங்க நிகழ்ச்சியிலும்கூட கலந்து கொள்ள முடியாது. இன்றைய நிலைமை அப்படியா?

ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கீழமை நீதிமன்ற முடிவு மாற்றி அமைக்கப்படும்போது அது தவறான தீர்ப்பு என்று ஆகிவிடுகிறது அல்லவா? இப்படி தவறான தீர்ப்பு வழங்குவது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 219-வது பிரிவின்படி குற்றம் என்றுதானே சட்டம் சொல்கிறது. இதுவரை எந்த நீதிபதிக்காவது தண்டனை வழங்கி இருக்கிறார்களா?

நாவரசு கொலை வழக்கில் ஜான்டேவிட் என்பவர்க்கு கடலூர் செசன்ஸ் கோர்ட் இரண்டு ஆயுள் தண்டனை வழங்கியது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் ஜான் டேவிட் குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்துவிட்டது. இதை நான் எதிர்த்து கேள்வி கேட்டதற்காக இது நீதிமன்ற அவமதிப்பு என்று எனக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கினார்கள். ஆனால் இந்த வழக்கு

உச்சநீதிமன்றத்தில் ஆய்வு செய்யப்பட்டு செசன்ஸ் கோர்ட் விதித்த தண்டனையை உறுதி செய்துவிட்டது. ஜான்டேவிட் இப்போது கடலூர் மத்திய சிறையில் இருக்கிறார். இப்படி மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அல்லது உத்தரவை தலைகீழாக மாற்றி அமைப்பதற்கு முன்பாக அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் என்பது பற்றி கு. வி.மு.ச. 404-ல் விளக்கப்பட்டுள்ளது. அதாவது கீழமை நீதிமன்றத்தில் கருத்து கேட்காமல் மாற்றி அமைக்கக்கூடாது என்பதுதான் இந்த விதி.

ஜான்டேவிட்டை விடுதலை செய்வதற்கு முன்பாக உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கேட்டிருந்தால் அவர்கள் பதில் சொல்லமாட்டார்கள். எனினும் குற்றத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக எவ்வளவு லஞ்சம் கொடுத்தோம், அதெல்லாம் பாழாகிவிட்டதே என்று ஜான்டேவிட் தரப்பில் காட்டிக் கொடுத்திருப்பார்களே!

நீதிபதிகள் தாங்கள் எத்தனை தவறு செய்தாலும் கேட்கமுடியாது என்ற தைரியத்தில்தான் சில தவறான தீர்ப்புகளைத் துணிந்து வழங்குகிறார்கள். இந்த நிலைமை இப்போது மாறி வருகிறது. பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் நீதிபதிக்கு நோட்டீஸ் விடுவதும், நீதிபதிமீது வழக்கு போடுவதும் சர்வ சாதாரணம் ஆகிவிட்டது.

உதாணரத்திற்கு ஒன்று.

அம்பல் ஆறுமுகம் என்பவர் ஐந்தாவது வகுப்புவரை மட்டுமே படித்தவர். ஒரு கட்டிட கூலித் தொழிலாளி. பாதிக்கப்பட்டோர் கழகம் நடத்தும் சம்பளம் வாங்காதோர் சர்க்காரின் இன்ஸ்பெக்டராக பணியேற்று பிறகு சிறப்பு நீதிபதியாக நியமிக்கப்பட்டவர். இவர் தனது மனுவில் ஆறுமுகம் சிறப்பு நீதிபதி என்றே கையெழுத்துச் செய்வார். இதுபற்றி நீதிமன்றம் கண்டு கொள்ளாமல் இவர் வழக்கை விசாரணை இன்றி ஒத்திவைத்துக் கொண்டே போனார்கள். இதுகுறித்து சென்னை உய்நீதிமன்ற தலைமை நீதிபதி இக்பாலுக்கு ஒரு புகார் அனுப்பினார்.

அவர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் ஒரு புகார் அனுப்பி, 'இந்தப் புகாரை விசாரிக்கத் தெரியவில்லையே என்று மனம் வருந்தி நீங்கள் தற்கொலை செய்து கொண்டால் அதற்கு நானே பொறுப்பு – இப்படிக்கு, ஆறுமுகம், சிறப்பு நீதிபதி' என்று கையெழுத்துச் செய்து பதிவு அஞ்சலில் அனுப்பிவிட்டு நேரிலும் சென்று இதுபற்றி கேட்டார். பதில் சொல்ல முடியாமல் நடுங்குகிறார்களாம்.

கரூர் வாசுதேவன் என்பவர் மக்கள் ஆய்வாளர் ஆவார். இவர் கரூர் மாவட்ட ஆட்சியாளர் உமா மகேஸ்வரி என்பரிடம் இரண்டு புகார் கொடுத்தார். அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் அடுத்த கடிதத்தில், 'நீங்கள் மாவட்ட ஆட்சியாளராக இருப்பதால் எந்த பிரயோஜனமும் இலலை. அதனால் இத்துடன் விஷ மருந்துப்பாட்டிலும் இணைத்துள்ளேன். இந்த மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொள்ளவும். அதற்கான தண்டனை என்ன என்பதையும் தெரிவித்து விட்டுச் சாகவும்' என்று எழுதி இதன் நகல் பலருக்கும் அனுப்பி வைத்தார். உமாமகேஸ்வரி பயந்து போய் அவசர அவசரமாக மாற்றல் வாங்கிக் கொண்டு வேறு இடத்திற்குப் போய்விட்டார். இதுபற்றிய கடிதம் நீதியைத் தேடி மார்ச், 2012 இதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விபரத்தை எல்லாம் நீதிபதிக்கு நீங்கள் எடுத்துச் சொன்னால் உங்கள் வழக்கை நியாயமாக நடத்துவார் என நம்பலாம்.

## நீதிபதிகள் தவறு செய்தால் என்ன செய்வது?

நீதிபதிகள் தவறு செய்தால் அவர்களை விசாரித்து தண்டிக்க உயர்நீதிமன்றத்தில் நீதித்துறை விழிப்புப் பணி (Judicial Vigilance Cell) என்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த அமைப்பின் தலைவராக தனி அலுவலர் (Special Officer) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்குத் துணையாக பல அலுவலர்கள் உண்டு. இவர்கள் நீதிமன்றத்தில் நடைபெறும் தவறுகளைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

லஞ்ச ஒழிப்புத்துறை (Anti Corruption) போலவே இதுவும் செயல்படுகிறது. ஒரு நீதிபதி தவறு செய்தார் என்றால் அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கும், நீதிமன்ற அலுவல்களில் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அவரது அலுவல்களை நிறுத்தி வைக்கவும் இந்தக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. ஒரு வழக்கு நடந்து கொண்டிருந்தாலும், நடைபெற்று முடிந்திருந்தாலும் திடீரென்று விஜயம் செய்து அந்த வழக்கு சம்பந்தமாக புலன்விசாரணை செய்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இந்த அமைப்பின் செயல்பாடுகள் மிகவும் மந்தமாகவே இருக்கிறது.

தமிழக அரசு சட்டக் கல்லூரி மாணவர்களின் தேர்வுக்காக குற்றவியல் தத்துவம் என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளது. அந்தப் புத்தகத்தில்கூட இந்த நீதித்துறை விழிப்புப் பணி சரியாகச் செயல்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஒரு நீதிமன்ற நடவடிக்கையில் அதிருப்தி ஏற்பட்டால் அதுகுறித்து உயர்நீதிமன்ற நீதித்துறை விழிப்புப் பணிக்கு புகார் செய்யலாம். புகாரின் அடிப்படையில் ஆய்வாளர் சம்பந்தப்பட்ட நபரையும், அதுகுறித்த வழக்கின் போக்கையும் ஆய்வு செய்து மேலிடத்திற்கு அறிக்கை அனுப்பிவைப்பார். இதன் அடிப்படையில் தனி அலுவலர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் இந்த அமைப்பை ஏற்படுத்தி அதற்கான அதிகாரமும் வழங்கி இருக்கிறது. எனினும் இவர்கள் சரியான நடவடிக்கை எடுப்பதில்லை. அறிக்கை தயார் செய்வதோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

இந்தத் துறைக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அப்போது நீதித்துறை விழிப்புப்பணி தனி அலுவலராக இருந்த நவநீதம்

என்பவர் மீது ஒரு ரிட் வழக்கு தொடர்ந்தேன். முதல் விசாரணை வந்ததும் அந்த வழக்கு கோப்புகளை எல்லாம் ஐகோர்ட்டில் ஒளித்து வைத்துக் கொண்டார்கள். என்றாலும் அதன்பிறகு நீதித்துறை விழிப்புப்பணி சற்று சுறுசுறுப்பாக செயல்பட்டது எனலாம். ஒரு பெண் நீதிபதி அளவுக்கு மீறி சட்டத்திற்கு உட்படாதவாறு செயல்பட்டதால் அவரைப் பதவியிறக்கம் செயதார்கள். அதேபோல் என் வழக்கில் ஜப்தி இல்லாமல் ஜப்தி உத்தரவு பிறப்பித்த அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி அப்பாஸ் மந்திரி திருச்சி மாவட்ட நீதிபதியாக இருந்தபோது அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார் என்பது சிறப்புச் செய்தி.

சட்டம் படித்து தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் நீதித்துறை விழிப்புப் பணியை நாடி காலத்தை விரையம் செய்யத் தேவை இல்லை. நீதிபதிமீது குற்ற வழக்கே தொடரலாம்.

கு.வி.மு.ச.197–வது பிரிவில் இதுகுறித்து விளக்கப் பட்டுள்ளது. ஒரு நீதிபதி தாம் கடமையாற்றும் போது பணியில் தவறினால் அவர்மீது குற்ற வழக்கு தொடரலாம் என்றும் மாநில அரசின் அனுமதி பெற்று விசாரணை நடத்த வேண்டும் என்றும் சட்டத்தில் உள்ளது. இந்த அனுமதியை யார் வாங்குவது என்று அதில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. அதனால் கீழமை நீதிபதிக்கு எதிராக என்றால் மாவட்ட நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிபதிக்கு எதிராக என்றால் உயர்நீதிமன்றத்திலும் கு.வி.மு.ச.2(ஈ)யின்கீழ் ஒரு முறையீடு தாக்கல் செய்து விசாரித்து தக்க காரணம் இருந்தால் அனுமதி வழங்க நீதிமன்றம் அரசுக்கு சிபாரிசு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கலாம்.

நீதிபதிமீது குற்ற நடவடிக்கை எடுப்பதற்கு நீதித்துறை விழிப்புப் பணிக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, நீதித்துறை விழிப்புப் பணிக்குப் புகார் செய்து அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளாத பட்சத்தில் அதையே ஒரு ஆவணமாகச் சேர்த்தும்

குற்ற வழக்கு தொடரலாம். அல்லது நீதித்துறை விழிப்புப் பணி தனி அலுவலரையே முக்கிய எதிர்மனுதாராகச் சேர்த்து இந்த முறையீட்டைத் தாக்கல் செய்யலாம்.

உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை என்னும் ரிட் (Writ) வழக்குகளை விசாரிக்கிறார்கள். இந்தியத் திருநாட்டில் தமக்குரிய உரிமை மறுக்கப்பட்டது அல்லது விலக்கப்பட்டது என்பதைக் காரணம் காட்டி எவர் ஒருவரும் இந்த ரிட் வழக்கைப் பதிவு செய்யலாம். தமிழில் இந்த ரிட் வழக்கிற்கு நீதிப் பேராணை என்று பெயர். இந்த ரிட் வழக்கு நீதிபதி மீது மட்டும் அல்ல, உயர் பதவியில் இருக்கும் எவர் மீதும் வழக்கு பதிவு செய்யலாம்.

ரிட் வழக்கில் ஐந்து வகை உண்டு. அவற்றில் ஒன்று ஷெர்சியாராரி (Certiorary) ரிட் என்பது. ஒரு நீதிமன்றத்தில் தவறான முறையில் தீர்ப்பு வழங்கியிருந்தால் அந்தத் தீர்ப்பு குறித்து ஆராய்ந்து நீதிப் போராணை பெறுவதே இந்த ரிட்டின் நோக்கம்.

குவா வாரண்டோ (Quao Warranto) என்ற ரிட்டும் தவறான தீர்ப்பு சொல்லும் நீதிபதிமீது தொடரலாம். இவர் இந்தப் பதவிக்கு தகுதி உடையவர்தானா என்பதை அறிவதே இந்த நீதிப் பேராணையின் நோக்கம்.

உரிமை பாதிக்கப்படும் அனைத்து கோரிக்கைகளும் ரிட் வழக்கில் அடங்கிவிடும் என்று நம்பலாம்.

தற்போது நீதிபதிகள் மீது வழக்கு தொடர்வது அதிக அளவில் நடந்து வருவது ஒரு முன்னேற்றம்தான்.

முன்னாள் நீதிபதியும் சென்னை மாநில நுகர்வோர் தலைவருமான ஜனார்த்தனன் மீது பாதிக்கப்பட்டோர் கழகத்தின் சார்பில் சைதாப்பேட்டை 18–வது கோர்ட்டில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றம் விசாரிக்க உத்தரவிட்டதின் பேரில் அவர்மீது மயிலாப்பூர் காவல் நிலையத்தில் ஒரு எப்.ஐ.ஆரும் பதிவு செய்யப்பட்டது என்பது சிறப்புச் செய்தி.

ஐகோர்ட் தலைமை நீதிபதிகள் பலமுறை பாதிக்கப்பட்டோர் கழகத்தின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் உடனடியாக டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன.

## மனு தள்ளுபடி செய்யப்படும் என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி?

ஒரு வழக்கில் தாமே ஆஜராகிறவர் இந்த விசயங்களை எல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும். ஏனெனில் ஒருவர் நீதி கேட்டுப் போராடும்போது அவ்வளவு எளிதில் வெற்றியை அடைந்து விட முடியாது; தொடர்ந்து போராட வேண்டும்.

குற்றவியல் நீதிமன்றத்தில் ஒரு தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்து தரப்பினர் தாமே ஆஜராகும்போது இயன்ற அளவு அதைத் தள்ளுபடி செய்வதற்கே அக்கறை எடுத்துக் கொள்ளும் என்றால் மிகையல்ல. என்றாலும் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் தொடர்ந்து ஸ்டெப் ஸ்டெப் ஆக போவதால் இந்த நடைமுறை மெல்ல மெல்ல மாறி வருகிறது.

மனுதார் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்து அடுத்த விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா வேண்டாமா என்பதற்கு வாய்தா என்று நீதிமன்றம் குறிப்பிட்டாலே தள்ளுபடி செய்யப்போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக வாய்தா நாட்கள் மூன்று நாட்களோ அல்லது ஐந்து நாட்களோ அல்லது ஏழு நாட்களோதான் இருக்கும்.

இந்த விபரத்தை நீதிமன்றத்தில் அறிவிக்காவிட்டால் டைரியைப் பார்த்து விபரம் தெரிந்து கொள்ளலாம். தற்போது இ-கோர்ட் சர்வீசிலும் பார்க்கலாம்.

நீங்கள் புகார்தாராக உறுதிமொழியையும் தாக்கல்

செய்திருக்கிறீர்கள். எனவே, நீதிபதிக்கு தாக்கல் செய்யும்போது இதை நினைவுபடுத்தி வெறுமனே மனுவைத் தள்ளுபடி செய்யாமல் இ.த.ச.211-ன்கீழ் தண்டனையையும் வழங்கிவிடுங்கள் என்று பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்துவிட்டால் நீதிபதி தள்ளுபடி செய்ய மாட்டார் என்று நம்பலாம்.

ஒரு அரசு அலுவலருக்கு எந்த ஒரு பதிவுத் தபால் அனுப்பினாலும் அவர் பெற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. திருப்பி அனுப்பிவிட்டால் அதுவே ஒரு தக்க சான்றாவணம் ஆகிவிடும். அத்தகைய நீதிபதிமீது அந்த ஆவணங்களை வைத்தே மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.

ஒரு நீதிபதிக்கு பதிவு அஞ்சல் அனுப்புவது குற்றம் என்றே கோர்ட் ஊழியர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21 வது அத்தியாயத்தில் அவதூறு பற்றி விளக்கப்பட்டுள்ளது. பிரிவு 499-ல் இது பற்றி பல விதிவிலக்குகளும் தரப்பட்டுள்ளன. அதைப் பயன்படுத்தி நீதிபதியை எத்தகைய கேள்வியையும் நீங்கள் கேட்கலாம்.

ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அதை விமர்சனம் செய்வதோ பத்திரிகையில் வெளியிடுவதோ குற்றம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றம் சட்டப்படி செயல்படாவிட்டால் நல்லெண்ணத்தின் பேரில் பத்திரிகையில் வெளியிடலாம். வெளியிடுவதென்ன, தற்போது பாயும்புலி பதிப்பகத்தில் புத்தகமே வெளியிட்டுள்ள இயேசுவை சட்டம் மன்னிக்குமா என்ற புத்தகமே தக்க சான்று. ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் 479/2010 வழக்கானது ஆலந்தூர் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கை நீதிமன்றம் சட்டப்படி நடத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி புத்தகம் வெளியிட்டுள்ளது. விசாரணை துவங்கும் முன்பாகவே இரண்டு பாகமும் வந்துவிட்டது. மூன்றாவது நான்காவது பாகங்களும் தொடர்ந்து வரும். இதைவிட கோர்ட்டில் குற்ற அறிக்கை

தாக்கல் செய்யும் முன்பாகவே நீதிபதிமீது இரண்டு குற்ற அறிக்கையும், போலீஸ் மீது ஒரு குற்ற அறிக்கையும் நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்பது மேலும் ஒரு சிறப்புச் செய்தி.

எனவே, சட்டத்திற்குப் புறம்பாக மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தால் தயங்காமல் நோட்டீஸ் அனுப்பி கேள்வி கேட்டு கேஸ் போடவும் தயாராக இருந்தால் வழக்கைத் தள்ளுபடி செய்யாமல் நியாயமாக நடத்துவார் என நம்பலாம்.

## நீதிமன்ற அவமதிப்பு என்றால் என்ன?

ஒரு தனிப்பட்ட நபர்மீது கூறப்படும் அவதூறுக்குரிய குற்றச்சாட்டை எப்படி விசாரிக்க வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 199-ல் விளக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஒரு நடுவர் மீது கூறப்படும் குற்றச்சாட்டானது இந்த வகையில் அடங்காது. ஏனெனில் நீதிமன்றத்தின் நடுவர் என்பவர் ஒரு அரசு அதிகாரியே தவிர தனிப்பட்ட மனிதர் அல்ல. எனவே, இதனை அவதூறு என்று கருதாமல் நீதிமன்ற அவமதிப்பு (CONTEMPT OF THE COURT) என்ற பொதுவான குற்றத்தின்கீழ்தான் விசாரிக்க முடியும்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தில் எப்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பது பற்றி கு.வி.மு.ச. பிரிவு 345-ல் விளக்கப்பட்டுள்ளது.

ஒரு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் ஒருவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தைச் செய்தால் ஒரு நடுவருக்கு நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரத்தைப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. இதன்கீழ் அந்த நபரை அந்த நடுவர் அன்றே நீதிமன்றம் கலையும்வரை அங்கேயே காவலில் வைக்கலாம். அதாவது கோர்ட் முடியும்வரை எங்கும் செல்லக்கூடாது என்று தடைவிதித்து நீதிமன்றத்தின் வளாகத்தின் உள்ளேயே காவலில் வைத்திருக்கச்

செய்யலாம்.

இப்படி நீதிமன்றக் காவலில் வைப்பது என்றால் கையில் விலங்கு மாட்டி அறைக்குள் அடைத்து வைப்பார்களோ என்று பயப்படத் தேவை இல்லை. நீதிமன்ற வளாகத்தின் ஏதாவது ஒரு மூலையில் அமர்ந்திருக்கச் சொல்வார்கள்; அவ்வளவே!

இந்தக் குற்றத்திற்கு அன்றே விசாரணை நடத்தியாக வேண்டும். இந்த விசாரணையைத் துவங்கும்போது குற்றம் புரிந்ததாகக் கருதப்பட்டவருக்கு, இந்தப் பிரிவின்கீழ் ஏன் தண்டிக்கலாகாது என்பதற்கான காரணத்தைக் காட்டுவதற்காக ஒரு வாய்ப்பினைத் தர வேண்டும்.

இப்படி வாய்ப்புத் தரும்போது குற்றம் சுமத்தப்பட்டவர் தமது கருத்தை எடுத்துக் கூறலாம். இதை நடுவர் உண்மையாகப் பதிவு செய்தாக வேண்டும். எனவே நியாயத்திற்காகப் போராடுகிறவர்கள் நீதிமன்றத்தில் எவ்வளவு பிரச்சினை பண்ணினாலும் இந்தக் குற்றத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். ஏனெனில் இந்த விசாரணையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்வதற்கும் பாதிக்கப்பட்டவர்க்கு உரிமை உண்டு. இதுபற்றி கு.வி.மு.ச.345-ல் விரிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது.

சில நீதிமன்ற நடுவர்கள் இந்த மாதிரி சூழ்நிலைகளில் காவல்துறைக்குப் புகார் செய்து உள்ளே வைத்துவிடுவேன் என்று மிரட்டுவதுண்டு. அப்படி மிரட்டினால் அஞ்சத் தேவை இல்லை. ஏனெனில் கு.வி.மு.ச.199-ன்கீழ் ஒரு நபர் குற்றம் புரிந்தால் - குற்றம் புரிந்ததாகக் கருதினால் - அந்தக் குற்றவாளிக்கு ரூபாய் இருநூறு வரை அபராதம் விதிக்கலாம். அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால் ஒரு மாதம்வரை வெறுங்காவல் தண்டனை விதிக்க நடுவருக்கு அதிகாரம் உண்டு.

இந்தக் குற்றம் கடுமையானது என ஒரு நடுவர் கருதினால் இ.த.ச.228-வது பிரிவின்படி ஒரு நபருக்கு ஆறு மாதம் வரை

சிறைத் தண்டனை விதிக்கவும் நடுவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தண்டனையை விதித்தால் நடுவர் கு.வி.மு.ச.345(2)-ன்கீழ் முறைப்படி விசாரித்தாக வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு இதை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளவும் உரிமை உண்டு. எனவே, நியாயத்திற்காகப் போராடினால் ஒருவர் தம் வழக்கில் தாமே ஆஜராகும்போது ஒரு நடுவர் இந்தப் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்க மாட்டார் என நம்பலாம்.

நீதிபதிகளைக் கடுமையாக விமர்சனம் பண்ணிய பெருமை எனக்கே உண்டு. என்னுடைய விமர்சனத்தால் சில நடுவர்கள் தாங்கள் பிறப்பித்த உத்தரவையே மாற்றி இருக்கிறார்கள் என்பது நம்ப முடியாத ஒன்று. இதுபற்றி நீதியைத் தேடி நெடும் பயணம் என்ற புத்தகத்தில் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஒரு வழக்கில் தாமே ஆஜராகும்போது நியாயம் கருதி பதிவு அஞ்சல் அனுப்பி வைப்பது நீதிமன்ற அவமதிப்பின்கீழ் சேராது. ஏனெனில் மனுதாரர் இப்போது நீதிமன்ற வளாகத்தில் இல்லை. எனவே, ஒரு நடுவர் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் எழுத்து மூலமாக ஆணை பிறப்பித்தாக வேண்டும். அல்லது காவல்துறைக்குப் புகார் செய்து எப்.ஐ.ஆர். பதிந்து நடவடிக்கை மேற்கொள்ளச் செய்யலாம். ஒரு அரசு அதிகாரியான நடுவருக்கு இது அவ்வளவாகச் சாத்தியப்படாது. ஏனெனில் நடுவர் என்பவர் நீதிமன்றத்திற்கு மட்டுமே தலைவர் ஆவார். இதில் இன்னொரு சிக்கலும் இருக்கிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 499-வது பிரிவில் நீதிமன்ற நடவடிக்கைகளை விமர்சனம் செய்வது குறித்தும், பத்திரிகைகளில் எழுதுவது குறித்தும் ஐந்து விதிவிலக்குகள் தரப்பட்டுள்ளன. அதன்படி ஒரு வழக்கு நீதிக்குப் புறம்பாக நடந்ததாகக் கருதினால் நல்லெண்ணத்தின் பேரிலோ, பொது மக்கள் நலன் கருதியோ விமர்சனம் செய்வது குற்றம் அல்ல. எனினும் இப்படி ஒரு சட்டம்

இருக்கிறது என்று சட்டக் குழு வைத்திருக்கும் எந்தப் பத்திரிகைக்கும் கூடத் தெரியவில்லை.

அரசியல்வாதிகளின் அட்டூழியங்களை எல்லாம் அக்குவேறு ஆணிவேராகப் படம் பிடித்துக் காட்டி எழுதும் பத்திரிகைகள்கூட நீதிமன்ற அநியாயங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது பெரிய வேதனைக்கு உரியதாகும். இதைவிடக் கொடுமையான விசயம், தவறான தீர்ப்புகளைக்கூட அதிரடித் தீர்ப்பு என்று வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்துவதுதான்.

புத்தகங்கள் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரிகைகள் துணிந்து விமர்சனம் எழுதலாம். நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டு பேட்டி எடுத்து வெளியிடலாம். தவறு செய்யும் நீதிபதிகளைக் கண்டு பிடித்து பொதுமக்களுக்கு அடையாளங் காட்டலாம். இது சட்டப்படி சரியானதே. இதில் பெரிய சாதனை படைத்துள்ளது நீதியைத் தேடி சட்ட பத்திரிகைதான். தற்போது Neethiyai Thedi Youtube சேனலும் என்பது சிறப்பு செய்தியாகும்.

நீதியைத்தேடி பத்திரிகை நிருபர்கள் நீதிமன்ற வளாகத்திலேயே அமர்ந்து கண்காணிப்பதோடு சட்டத்திற்கு உட்படாத வழக்குகளில் மூன்றாவது நபராக மனு செய்து வாதாடியும் நீதியை நிலைநாட்டுகிறார்கள். குறிப்பாக சம்பளம் வாங்காதோர் நடத்தும் சர்க்காரின் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்கள், பொறிவைத்து பிடிக்கும் லஞ்ச வழக்குகளில் மூன்றாவது நபராக ஆஜராகி, லஞ்சம் வாங்கிய அரசு அதிகாரிகள் தப்பிவிடாதபடிச் செய்து வருகிறார்கள். சட்டம் படித்து நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் பாதிக்கப்பட்டோர் கழகத்தின் சம்பளம் வாங்காதோர் நடத்தும் சர்க்காரில் இன்ஸ்பெக்டர் ஆகலாம்.

தனிப்பிராது வழக்கில் நீதிபதிக்கு நோட்டீஸ் விட்டும் நடுவர் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டால் அதுவே மேல்முறையீட்டில்

தக்க ஆதாரம் ஆகிவிடும். எனவே நடுவர்கள் பயந்து வழக்கைத் தள்ளுபடி செய்யாமல் உண்மையாக நடத்துவார் என நம்பலாம்.

மேலும் ஒரு அரசு ஊழியர் பிரச்சினையை விரும்புவது இல்லை. ஏனெனில் அரசு ஊழியர்களுக்கு மேலும் மேலும் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. இந்த வாய்ப்பைக் கெடுத்துக் கொள்ள யாரும் விரும்புவது இல்லை.

அரசு ஊழியர் நடத்தைவிதிகள் சட்டப்படி ஒரு ஊழியர்மீது புகார் இருந்தாலே இந்தப் பதவி உயர்வைப் பாதிக்கும் என்பதால் நடுவர்களும் சட்டப்படி வாதாடுகிறவர்களைக் கண்டால் பயப்படவே செய்வார்கள்.

நீதித்துறை நடுவருக்கு பதிவு அஞ்சல் அனுப்பும் போது அதன் நகல்களை முதன்மைக் குற்றவியல் நடுவர்க்கும், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். இந்தத் தபால் பதிவுத் தபாலாகாத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. சாதாரணத் தபாலில் அனுப்பினாலே போதுமானது.

நடுவருக்கு அனுப்பும் மனுவின் கீழ் பணிந்து அனுப்பப்படுகிறது என்று எழுதி, யார் யாருக்கெல்லாம் அனுப்பி இருக்கிறீர்கள் என்ற விபரத்தையும் அதில் குறித்துவிட்டால் அதைப் பார்த்து நடுவர் கவனமாக செயல்படுவார் என்று நம்பலாம்.

செக்ஸ் டாக்டர் பல பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டு சிறை வைக்கப்பட்டார். அப்போது சிறையிலிருந்து நீதிபதி கற்பக விநாயகத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். இது கோர்ட் அவமதிப்பு என்று கற்பக விநாயகம் கண்டனம் தெரிவித்ததாக பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. ஒரு சிறைக் கைதி நடுவருக்கு தபால் எழுதுவது எப்படி கோர்ட் அவமதிப்பாகும் என்று பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் இதில் தலையிட்டதும் அந்த நீதிபதி தன் கருத்தையே மாற்றிக் கொண்டார். தற்போது பாதிக்கப்பட்டோர் கழகத்தில் நீதிபதிகளுக்கு நோட்டீஸ் விடுவது என்பது தண்ணிபட்ட பாடுதான்.

சில நேர்மையான நடுவர்கள் இதுபோல் நோட்டீஸ் பெற்றதும் தான் உண்மையாக வழக்கை நடத்த வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் கு.வி.மு.ச.பிரிவு 200-ன்கீழ் தாக்கல் செய்த வழக்கை கு..வி.மு.ச. பிரிவு 204-ன்கீழ் விசாரிக்க உத்தரவு பிறப்பிப்பார்கள்.

தனிப்பிராது வழக்கானது கு.வி.மு.ச. பிரிவு 204-ன்கீழ் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் போது அதை இருவகையாக விசாரிக்கலாம். இவை அழைப்பாணை வழக்கு என்றும், பிடியாணை வழக்கு என்றும் வழங்கப்படும்.

## அழைப்பாணை வழக்கை எப்படி விசாரிக்கிறார்கள்?

அழைப்பாணை வழக்காக இருந்தால் அடுத்த விசாரணை நாளன்று எதிர்மனுதார்களுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றத்தில் மனுதார் படி கட்ட வேண்டும் என்று உத்தரவிடுவார்கள்.

சாட்சிகளுக்குப் படி கட்டுவதுபோலவே எதிர்மனுதார்கள் ஒவ்வொருவருக்கும் படி செலுத்த வேண்டும்.

கு.வி.மு.ச. பிரிவு 204-ன்கீழ் நீதிமன்றம் இவ்வாறு ஒரு உத்தரவினைப் பிறப்பிக்கும்போது உரிய கட்டணம் செலுத்துவதுடன் உரிய புகார் மனுவின் நகல்களும் இணைக்க வேண்டும். இந்த மனுவை மறுநாளோ அல்லது அடுத்த நாளோ கோர்ட் துவங்கும் காலை நேரத்தில் கொடுத்துவிட வேண்டும்.

இதுபோல் படி செலுத்துவற்குரிய காலம் மூன்று நாட்கள் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே மூன்று நாட்களுக்குள் படி செலுத்திவிட வேண்டும்.

இப்படி ஒரு மனுவைக் கொடுக்கும்போது மனுவைக் கொடுத்துவிட்டு காத்திருக்க வேண்டியது இல்லை. மாலையிலோ, மறுநாளோ உரிய அலுவலரிடம் இந்த மனு பற்றி விசாரித்துத்

தெரிந்து கொள்ளலாம். மனு சரியாகப் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மனு திருப்பப்பட்டுவிடும்.

மனு திருப்பப்படும்போது அதற்குரிய காரணங்கள் மனுவில் சொல்லப்பட்டு இருக்கும். காரணங்களைப் பூர்த்தி செய்து மீண்டும் தரலாம். இதுபோல் ஒரு மனுவைத் தாக்கல் செய்வதில் ஒரு வசதியும் இருக்கிறது.

இந்த மாதிரி மனு தாக்கல் செய்யும் போது மனுதார் தான் நேரடியாகக் கொடுக்க வேண்டும் என்பது தேவையில்லை. யார் எந்த மனுவைக் கொடுத்தாலும் அதை அப்படியே வாங்கிக் கொள்வதுதான் அமீனாவின் கடமை.

எனவே, மனுவை நீதிமன்றத்திற்கு நேரடியாகச் சென்று கொடுப்பதில் சிரமம் இருந்தால் வேறு ஆள்மூலம் விபரம் சொல்லி இந்த மனுவைக் கொடுத்துவிடடு வரச் சொல்லலாம். அதைவிட அன்றைய வழக்கு விசாரணைக்கு வரும் நபர் யார் என்பதைக் கண்டறிந்து அவர்மூலம். இந்த மனுவைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் இன்னும் சிரமம் குறையும். மறுநாள் அலுவலக நேரத்தில் சென்று அலுவலரிடம் ளசென்று விசாரித்துக் கொள்ளலாம்.

உரிய நீதிமன்ற அலுவலகத்தில் மனுதாரைப் பற்றிய கருத்து இப்போது வேறு விதமாக மாறி இருக்கும். முதலில் பதில் சொல்ல அலட்சியமும் வெறுப்பும் காட்டிய ஊழியர்கள் தற்போது பதில் சொல்வதில் ஆர்வமும் பணிவும் காட்டுவார்கள். ஒரு பிரபலமான வழக்கறிஞருக்கு இருக்கும் மரியாதையைவிட அதிகமாகவே இருக்கும். அதனால் தைரியமாக விளக்கம் கேட்கலாம். சில வேளைகளில் எதிர்விளைவுகளும் ஏற்படும். அதாவது சரியான தகவல் சொல்ல மாட்டார்கள். அல்லது எதையாவது சொல்லி கடத்திவிடவே முயற்சி செய்வார்கள். இந்த மாதிரி சமயங்களில் டைரியைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போது இ;கோர்ட் சர்வீசிலும் பார்க்கலாம்.

# டைரி பார்ப்பது எப்படி?

எல்லா நீதிமன்றங்களிலுமே ஜெனரல் டைரி என ஒன்று உண்டு. இந்த டைரியில் அன்றைக்கன்று நடைபெறும் செயல்முறைகள் பற்றி உடனுக்குடன் பதிந்து விடுவார்கள். இந்த டைரி வெளியில்தான் இருக்கும். அதனால்தான் இதற்கு ஜெனரல் டைரி என்று பெயர். யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். டைரி வெளியில் இல்லாவிட்டால் டைரி

வேண்டும் என்று கேட்டால் உள்ளே இருந்து எடுத்துக் கொடுத்துவிடுவார்கள்.

இந்த டைரியின் மேல் அட்டையில் எந்தத் தேதியில் இருந்து இந்த டைரி துவங்குகிறது என்ற விபரம் இருக்கும். பல வருடங்களுக்கு முந்திய டைரியைக்கூட பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். கேட்டு வாங்கிப் பார்க்கலாம்.

. உதாரணமாக விசாரணை நாள் அன்று எதிர்மனுதார்களுக்குப் படி செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளதா, என்ன உத்தரவாகியுள்ளது என்ற சந்தேகம் எழுந்தாலும் இந்த டைரியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். உரிய அலுவலர் நமக்குத் தெரிவித்த கருத்தில் சந்தேகம் ஏற்பட்டாலும் இந்த டைரியில் பார்த்து சரிபார்த்துக் கொள்ளலாம்.

இதுபோல் டைரி பார்க்கின்ற விபரம் அலுவலருக்குத் தெரிந்து விட்டால் மறந்தும் தவறான தகவல் சொல்லமாட்டார் என்று நம்பலாம்.

டைரியைப் பார்க்கும்முன்பு மேல் அட்டையில் முதலில் தேதியைக் கவனிக்க வேண்டும். விசாரணைக்கான தேதிக்கு உட்பட்டு உள்ளதா என்பதைப் பார்த்து முடிவுசெய்து கொள்ள வேண்டும். பிறகு டைரியைத் திறந்தால் தேதியை சிவப்பு மையில் எழுதி இருப்பார்கள்.

உரிய தேதியைக் கண்டு பிடித்து அந்தப் பகுதியை எடுத்துக்

கொள்ள வேண்டும். இடது பக்கத்திலிருந்து முதலாவது வழக்கு எண் இருக்கும். சி.சி.203/2012 என்பது போல இருக்கும். இதில் உங்கள் வழக்கு எண்ணைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். அந்த எண்ணுக்கு நேரே அன்றைய நீதிமன்ற விசாரணையின் சுருக்கம் எழுதப்பட்டு இருக்கும்.

உதாரணமாக மனுதார் ஆஜர்; எதிர்மனுதாருக்கு அழைப்பாணை அனுப்ப படி செலுத்த உத்தரவிடப்படுகிறது என்பதுபோல இருக்கும்.

தமிழ்நாட்டில் கீழமை நீதிமன்றங்களில் தமிழ் மொழியைத்தான் பயன்படுத்த வேண்டும் என அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. அரசியல் சாசனம் கோட்பாடு 350-ன்படி மாநில நிர்வாக மொழியைத்தான் கீழமை நீதிமன்றங்கள் பயன்படுத்த முடியும் என்பதால் கீழமை நீதிமன்றங்களில் தமிழில்தான் டைரி எழுத வேண்டும். ஆனால், சில நீதிமன்றங்களில் ஆங்கிலத்திலும் டைரியை எழுதுகிறார்கள். இது புரியாவிட்டால் தைரியமாக உரிய அலுவலரிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த டைரியை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். இந்த டைரி பார்க்கும் முறையைத் தெரிந்து கொண்டாலே பிறரின் உதவி அதிகம் தேவைப்படாது என்பதுடன் நீதிமன்றத்தின் சரியான நடவடிக்கைகளைப் புரிந்து கொண்டு நம் வழக்கை நடத்திச் செல்ல ஏதுவாகவும் இருக்கும்.

இந்த ஜெனரல் டைரியை அன்றாடம் எழுத வேண்டியிருப்பதால் நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கும் போதோ அவர்கள் நீதிமன்றப் பணி முடிந்து எழுதிக் கொண்டிருக்கும் போதோ மிக அவசரம் என்றால் விபரத்தைச் சொல்லிக் கேட்டு வாங்கிப் பார்க்கலாம். இந்த ஜெனரல் டைரியை மாலை நான்கு மணிக்குமேல் சென்று பார்ப்பதுதான் நல்லது.

ஒரு அலுவலகத்தில் பலவிதமான ஊழியர்கள் இருப்பார்கள். ஒரு சில ஊழியர்களுக்கு இதுபோல் வழக்கறிஞர் இல்லாமல்

ஆஜராவது ஆச்சர்யத்தை ஏற்படுத்தும். அத்தகைய ஊழியர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவரோடு அதிகமான தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

# பிடியாணை வழக்கை எப்படி விசாரிக்கிறார்கள்?

குவி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் செய்யப்படாத ஒரு வழக்கு பிடியாணை வழக்காகவும் (WARRANT CASE) இருக்கலாம்.

ஒரு குற்றவியல் நடுவர் மேற்படி வழக்கை பிடியாணை வழக்காக நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தால் அந்த எதிர்மனுதார்களுக்கு அழைப்பாணை அனுப்பியோ, பிடியாணை பிறப்பித்து காவலர் மூலம் கைது செய்து ஆஜர்படுத்தவேண்டும் என உத்தரவிடவோ நடுவர்க்கு அதிகாரம் உண்டு.

இந்த விபரங்களை எல்லாம் டைரியில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

காவல் அறிக்கையின் மீது அல்லாமல் தொடரப்படும் பிடியாணை வழக்குகளை விசாரிக்கும்முறை பற்றி கு.வி.மு.ச. பிரிவு 244 முதல் பிரிவு 250 வரையில் விளக்கப்பட்டுள்ளது. இதன்படி தனிப் பிராது பிடியாணை வழக்கில் எதிரி (எதிர்மனுதார்) முன்னிலைப்படும்போது அல்லது குற்றத்தரப்பினரையும், காவலர் மூலம் அவர்களுக்கு ஆஜர்படுத்தப்படும்போது ஆதரவாகக் கொண்டு வரப்படும் சாட்சிகளையும் விசாரிப்பார்கள்.

இந்த விசாரணையில் குற்றத்தரப்பினர் எந்த ஒரு சாட்சியையாவது விசாரிக்க வேண்டும் என்றாலும் அல்லது எந்த ஒரு சான்றாவணத்தையாவது (Document) கொண்டு வரவேண்டும் என்று வேண்டுதல் விடுத்தாலும் நீதிமன்றம் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற உத்தரவிடும்.

இந்த சமயத்தில் கூட எதிர்மனுதார் மீது எத்தகைய வழக்கும் உருவாக்கப்படவில்லை என்று கருதினால் அவரை விடுவிப்பதற்கு நீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது. ஒரு தனி வழக்கில் தாமே ஆஜராகும் போது இந்தக் கண்டத்தையும் தாண்டியாக வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க எதிர்மனுதார் வழக்கறிஞரின் உதவியை நாடி தவறான வழியில் முயலக்கூடும். அதனால் மனுதார் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் இத்தகைய சமயத்தில் ஒரு அதிரடி வேட்டு வெடிப்பார்கள். அதாவது, 'குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்வதாக இருந்தால், இ.த.ச. பிரிவு 211-ன்கீழ் எனக்கு தண்டனை வழங்கிவிட்டால், நீங்கள் வழங்கிய தண்டனை சரியா என்று மேல்கோர்ட்டில் பார்த்துக் கொள்கிறேன்' என்று மனு கொடுத்தால் போதும். எதற்கு வம்பு என்று நீதிபதி உண்மையாகவே விசாரிக்கத் தொடங்கிவிடுவார்.

கு.வி.மு.ச. பிரிவு 245-ன்கீழ் எதிரி விடுவிக்கப்பட வில்லையானால் அதன்பிறகு தான் எதிர்மனுதார்மீது குற்றச்சாத்து (Charge Sheet) வரையப்படும்.

எதிரிகள்மீது குற்றச்சார்த்து வனையப்படும்வரை ஒரு மனுதார் தம் வழக்கைக் கொண்டு போய்விட்டால் நீதி கிடைக்க வாய்ப்பு உண்டு.

குற்றச்சார்த்து வனையப்பட்டுவிட்டால் எதிரிக்கு அதைப் படித்துக்காட்டி, குற்றத்தை ஒப்புக் கொள்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்று நீதிமன்றம் கேட்கும். எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டால் நீதிமன்றம் அவருக்குத் தணடனை விதித்து தீர்ப்பு வழங்கி வழக்கை முடித்துவிடும்.

ஒத்துக்கொள்ளவில்லையானால் குற்றத் தரப்பு சாட்சிகளை விசாரித்து, தற்காப்பு சாட்சியம் முடிந்து எதிரிக்கு விடுதலை அல்லது தண்டனை வழங்கப்படும்.

எதிரி விடுதலை செய்யப்பட்டால் நீதிமன்றம் புகார் மனுதாருக்கு இ.த.ச. பிரிவு 211-ன்கீழ் தண்டனை வழங்கும்.

ஆனால் சட்டம் தெளிவாக இருந்தாலும் வெறுமனே எதிரியை விடுதலை செய்வதுதான் நடைமுறையில் இருக்கிறது. அதனால் புகார் மனுதாராக இருந்தால் இதுகுறித்து நீதிமன்றத்திலேயே ஒரு மனு செய்தால் எதிரிக்கு தண்டனை கிடைக்கும். இதுபோல் வெறுமனே எதிரியை விடுதலை செய்யாமல் புகார்தாரருக்கும் தண்டனை வழங்கி உத்தரவிடும் சட்ட நடைமுறை செயலுக்கு வந்துவிட்டால் பொய்ப் புகார் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடுமே!

## வழக்கறிஞர் மட்டுமே ஆஜராக முடியுமா?

கு.வி.மு.ச. பிரிவு 204-ன்கீழ் அழைப்பாணை வழக்காகக் கருதி விசாரணை நடைபெறும்முன் கு.வி.மு.ச. பிரிவு 204(4)-ன்கீழ் உரிய படியைச் செலுத்திவிட வேண்டும். அழைப்பாணை மனுவும் புகார் மனுவின் நகல்களும் தாக்கல் செய்தபின் அடுத்த விசாரணை நாளன்று விசாரணை ஆரம்பமாகும்.

ஓர் அழைப்பாணை வழக்கில் எதிர்மனுதார் மரியாதை மிக்கவராகவோ, மேலதிகாரியிடமோ, முதலாளியிடமோ உடன் அனுமதி பெற்று வர இயலாதவராகவோ இருக்கலாம். இதை ஒரு பெரிய குற்றமாகக் கருதக்கூடாது என்பதற்காக கு.வி.மு.ச. பிரிவு 205-ல் ஒரு விதி வகுக்கப்பட்டுள்ளது.

ஓர் அழைப்பாணையை விடுக்கும் நீதிமன்றம் (குற்றவியல் நடுவர்) தாம் தக்கதெனக் கருதுமிடத்து எதிரி நேரில் வரவேண்டியதில்லை என்றும் அவரது வாதுரைஞர் (Advocate) மட்டும் வந்தால் போதும் என்றும் பணிக்கலாம்‘ என்பதே அந்த விதியாகும்.

இந்த விதியானது அழைப்பாணை வழக்கில் மட்டுமே செல்லத்தக்கதாகும். எனினும் காவலர் மூலம் தொடரும் பிடியாணை

வழக்குகளில்கூட கு.வி.மு.ச. பிரிவு 205-ன்கீழ் வழக்கறிஞர் மனு கொடுப்பதும், அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதும் நடைமுறையில் இருந்து வருகிறது. இது சரியல்ல. இதை ஒருவரும் ஆட்சேபனை செய்வதில்லை. காரணம் வழக்காடுபவர் இரண்டு பக்கமும் வழக்கறிஞராக இருப்பதால்தானோ என்னவோ. ஒரு பிடியாணை வழக்கில் புகார் மனுதார்களாகிய சாட்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அதனால் பலமுறை அழைப்பாணை பெற்றும் அவர்கள் விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆனால் பிடியாணை வழக்காக இருந்ததால் எதிரிகள் தவறாமல் ஆஜராக வேண்டியிருந்தது.

ஒரு குற்றவியல் நீதிமன்றத்தில் ஓர் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்ட எவரும் அதிலும் குறிப்பாக காவல் துறையில் புகார் செய்த சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தால் கு.வி.மு.ச. பிரிவு 171-ன்கீழ் பிடியாணை பிறப்பித்துக் காவலர் மூலம் ஆஜர் படுத்த வேண்டும் என்றும், அந்த வழக்கின் விசாரணைக் காலம் முடியும்வரையில் நீதிமன்றத்தோடு கூடிய சிறையில் வைக்க வேண்டும் என்றும் விரிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. துவக்கத்தில் அருப்புக்கோட்டை வழக்கறிஞர் சங்கம் என் மீது போட்ட பொய் வழக்கில் விசாரணைக்கு ஆஜராகாமல் தண்ணி காட்டிக் கொண்டிருந்தார்கள். விருதுநகர் நடுவர் நீதிமன்றத்தில் இந்தப் பிரிவின்கீழ் நான் மனு செய்து புகார்தாரர்களாகிய வழக்கறிஞர்களுக்கே வாரண்ட் போட வைத்தேன் என்பது சிறப்புச் செய்தி.

பொய் வழக்குகளில் இதுபோல் விசாரணை இல்லாமல் எதிரிகளை அலைய வைத்தால் - மனுதார் சார்பில் வழக்கறிஞர் மட்டும் ஆஜராவதை நம்பலாம். அனுமதிக்காமல், கு.வி.மு.ச. பிரிவு 171-ன்கீழ் மனுச் செய்து ஒரு நெருக்கடியை ஏற்படுத்தினால் வழக்கில் விரைந்து நீதி நிலைநாட்டப்படும் என நம்பலாம்.

கு.வி.மு.ச. பிரிவு 205-ஐ அழைப்பாணை வழக்கில் மட்டும்தான் பயன்படுத்த முடியும். மேலும் இந்த விதியின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, தகுந்த காரணம் இருக்கவேண்டும் என்றும், அந்தக் காரணத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு வழக்கில் எதிர்மனுதார்கள் வேண்டும் என்றே ஆஜராகாமல் அவமதித்த சூழ்நிலையில் இந்த விதியைக் கடைப்பிடிப்பது தகுந்த காரணம் ஆகாது. தனியாக வழக்கில் ஆஜராகும்போது இந்த விதியை எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு வழக்கு நடத்தினால் விரைந்து நீதி கிடைக்க ஏதுவாகும்.

கு.வி.மு.ச. 205 விதியை மிகச் சிறிய வழக்குகளிலும், வெறும் சான்றாவணங்களை மட்டுமே வைத்து முடிவு செய்யக்கூடிய சாதாரண வழக்குகளிலும் மட்டுமே பயன்படுத்த முடியும். எனவே எதிர்மனுதார்களைக் காப்பாற்றும் நோக்கில் நீதிமன்றம் இந்தப் பிரிவின்கீழ் செயல்படுவதாக மனுதாருக்கு உறுதியாகத் தெரிந்தால் இதை ஆட்சேபனை பண்ணலாம்.

இந்த ஆட்சேபனையை வாய்மூலம் அல்லாமல் எழுத்து மூலமாகச் செய்ய வேண்டும். கு.வி.மு.ச. 395-வது பிரிவில் இதற்கான வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, கு.வி.மு.ச. பிரிவு 395-ன்கீழ் கு.வி.மு.ச. பிரிவு 205-ன்கீழ் பிறப்பித்த உத்தரவு செல்லத் தக்கதுதானா என்று கண்டறிய உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி விளக்கம் கேட்க வேண்டும் என்றும் அதுவரையில் வழக்கை நடத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் மனுச் செய்யலாம். இந்த மனுவின் நகலை முதன்மைக் குற்றவியல் நடுவர் அவர்களுக்கும், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கும் தபாலில் அனுப்பி வைக்கலாம்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் மனுவில் பணிந்து அனுப்பப்படுகிறது என்று இந்த விபரத்தைக் குறித்தால் நடுவர் தம்

நிலையிலிருந்து பின்வாங்கிக் கொள்ளக்கூடும்.

ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இன்னொரு மனுச் செய்தால் அதையும் சேர்த்து விசாரிக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும். குற்றவியல் நீதிமன்றத்தில் இதைக் குற்றப் பல்வகை மனு (Criminal miscellaneous Petition) என்று சொல்வார்கள்.

மனுச் செய்யும்போது வழக்கு எண்ணை எழுதி அதன்கீழ் (Cr.m.p.) என்றோ அல்லது தமிழில் குற்றப்பல்வகை மனு எண் என்றோ எழுதி கொஞ்சம் இடம்விட்டு / மார்க் எழுதி ஆண்டு எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

இதற்கு ஒரு எண் தரப்படும்.

அதன்கீழே உள் என்றோ ஆங்கிலத்தில் IN என்றோ குறிப்பிட்டு அதன் கீழே வழக்கு எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது இதுபோல் எத்தனை குற்றப் பல்வகை மனு வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம். ஒவ்வொரு மனுவிற்கும் ஒரு பல்வகை மனு எண் வழங்கப்படும். இதையும் ஒரு வழக்காகவே கருதி விசாரித்து முடிவு செய்யப்படும்.

கு.வி.மு.ச. பிரிவு 203-ன் கீழ் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது மனுதாரரைப் பலவீனப்படுத்தும் முயற்சி என்பதை அறிந்து இயன்ற அளவிற்கு இந்த உத்தரவை அமுல்படுத்த அனுமதிக்கக்கூடாது.

இந்த உத்தரவு ஏற்படாமல் விசாரணை துவங்கினால் நீதிமன்றம் எதிர்மனுதாரர்களைப் பெட்டியில் (கூண்டு) ஏற்றி விசாரணை செய்யும். எதிர்மனுதாரர்களுக்கு அனுசரணையாகக் கொண்டு வரும் சாட்சியங்களையும் விசாரித்து பதிவு செய்து கொண்டபின் முதல் விசாரணை முடிந்து விடும்.

பிடியாணை வழக்குகளில் நடப்பதைப் போலவே மறு

விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையும் நடைபெறும். பின் விசாரணைகளைத் தொகுத்து, இரு தரப்பிலும் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை ஆய்வு செய்து நீதிமன்றம் உத்தரவு வழங்கும்.

## மனுவைத் தள்ளுபடி செய்தால் என்ன செய்வது ?

ஒரு தனிப்பிராது வழக்கை கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் தகுந்த ஆதாரம் இல்லை என்று தள்ளுபடி செய்து விட்டால் என்ன செய்வது?

தள்ளுபடி செய்த உத்தரவு நகல் கேட்டு மனுச் செய்ய வேண்டும். ஒரு வழக்கில் தீர்வு காணும்போது அதுபற்றிய கருத்தைப் பதிவு செய்து முடிவு செய்த பிறகே உத்தரவு வழங்குவது சாதாரண வழக்கமாகும். இதுவே சட்டப்படியும் சரியானதுமாகும். அதாவது ஒரு முடிவான தீர்ப்போ, உத்தரவோ வழங்கும்போது நடுவர் அதை நீதிமன்றத்தில் படித்துக் காட்ட வேண்டும். ஆனால் கு.வி.மு.ச. பிரிவு 203-ன்கீழ் அவசரமாகத் தள்ளுபடி செய்யப்படும் வழக்கில் இதுபோல் படித்துக் காட்டப்படுவதில்லை. காரணம் மற்ற உத்தரவுகளில் எல்லாம் உத்தரவு முழுவதையும் எழுதிய பிறகே உத்தரவுபற்றி சொல்வார்கள். ஆனால் தனிப் பிராதில் உத்தரவு பற்றி தள்ளுபடி செய்யப்பட்டது என்று மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறார்கள். இது சட்டப்படி சரியல்ல.

இவ்வாறு ஒரு வழக்கின் முடிவைத் தயார் செய்யும் முன்பே உத்தரவை மட்டும் அறிவிப்பது நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது போலவே ஆகும். இந்த முறை செருப்புக்குத் தகுந்தாற்போல் காலை வெட்டும் முறையாகும். இதைத் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர்கள் கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது.

இதைத் தடுத்து நிறுத்த “மனுவைத் தள்ளுபடி செய்தால்மட்டும் போதாது. நான் பொய்யான புகார் செய்திருப்பதால் இ.த.ச. பிரிவு 211-ன்கீழ் தண்டனையும் வழங்கிவிட வேண்டும்.” என்று வாய்மூலமாகவோ எழுத்து மூலமாகவோ பதிவு செய்து விட்டால் நீதிபதி கொஞ்சம் யோசிப்பார்.

இதுபோல் தவறான தீர்ப்பு வழங்கும்போது உடனடியாக நகல் கேட்டு மனு செய்ய வேண்டும். மனுவுக்கு நகல் தராமல் காலம் கடத்துகிறார்கள் என்றாலே சட்டத்திற்குப் புறம்பாக தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நகல் கேட்டு மனுச் செய்யும் போது கு.வி.மு.ச. பிரிவு 363-ன்கீழ் மனு என்றே தாக்கல் செய்ய வேண்டும். என்றாலும் கீழமை நீதிமன்றத்தில் மட்டும் அல்லாமல் அமர்வு நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தில்கூட சட்டப் பிரிவு குறிப்பிடப்படாமல் நகல் மனு செய்வதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு வழக்கில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட நபர்க்கு கு.வி.மு.ச. பிரிவு 363(1)-ன்கீழ் நீதிமன்றம் இலவசமாகவே உத்தரவு நகலை வழங்க வேண்டும். அதுபோல் பாதிக்கப்பட்ட - தண்டனை பெற்ற நபர் உத்தரவின் மொழி புரியாதபோது அவர் கேட்டுக் கொண்டால் அவர் விரும்பிய மொழியில் மொழிபெயர்த்து நகல் வழங்க வேண்டும் என்றும் கு.வி.மு.ச. பிரிவு 363(2)-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோலவே நேரடியாக அல்லாமல் எவ்வாறாகவேனும் பாதிக்கப்பட்டிருந்தாலும் அல்லது சிறப்பாக காரணம் ஏதேனும் இருந்தாலும் இலவசமாகவே நகல் வழங்க வேண்டும் என்றும் கு.வி.மு.ச. பிரிவு 363(5) தெரிவிக்கிறது. கட்டணம் செலுத்தாமல் பெற வேண்டியிருந்தால் சிறப்பான காரணங்கள் எவை என்று குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

இதுபோலவே வழக்கில் சம்பந்தப்படாத மூன்றாவது நபரும் கு.வி.மு.ச. பிரிவு 363(6)-ன்கீழ் மனுச் செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி தேவையான நகல் பெற்றுக் கொள்ளலாம். பொதுநல வழக்கு தாக்கல் செய்கிறவர்கள் எந்த ஒரு வழக்கிலும் இந்தப் பிரிவின்கீழ் மனு செய்து நகல் பெற இயலும்.

எனினும் இந்தப் பிரிவின்கீழ் நகல் மனு செய்தால் பிரமாணமும் தாக்கல் செய்ய வேண்டும் என்று சைதாப்பேட்டை கோர்ட்டில் தெரிவித்தார்கள். மூன்றாவது நபர் வழக்கறிஞர்மூலம் இதுபோல் பிறர் வழக்கில் நகல் பெறும்போதுதான் அவிடவிட் தேவை என்றும், மனுதார் நேரடியாக இந்த நகல் மனுவைத் தாக்கல் செய்திருப்பதால் அவிடவிட் தேவையில்லை என்றும் விளக்கம் தெரிவித்தபோது நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டு நகல் வழங்கியுள்ளது.

**தற்போது தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகவும் பிரபல்யமாகப் பேசப்படுகிறது. இந்தச் சட்டமே தேவையில்லை.** இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 74-ன்கீழ் அரசு அலுவலகத்தில் உள்ள அனைத்து ஆவணங்களும் பொது என்றும், பிரிவு 76-ன்கீழ் இதை எவர் ஒருவரும் பார்வையிடவோ, உரிய கட்டணம் செலுத்தி நகல் பெறவோ இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட வேறு என்ன சட்டம் தேவை.

தனி நபர்க்கு இத்தனை சட்ட அனுகூலம் இருக்கும் போது வழக்கறிஞர்கள் தாங்கள் இல்லாமல் எதுவும் நடக்காது என்பதுபோல் நீதிமன்றத்தின் செயற்பாடுகளை ஆக்கி ஒரு நாட்டில் அரசியல்வாதிகளின் ஆதிக்கம் எந்த அளவிற்கு இருக்கிறதோ அதைவிட அதிகமாகவே நீதிமன்றத்தில் ஆக்கிரமித்து வழக்கறிஞர்கள் செயல்பட முனைகிறார்கள் என்பதே உண்மை.

# குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களின் பங்கு எத்தகையது ?

ஒரு உரிமையியல் வழக்கில் வேண்டுமானால் வழக்கறிஞர்கள் முன்னின்று வழக்கை நடத்தலாம். உரிமையியல் வழக்கு என்பது சட்டப்பிரச்சினை சம்பந்தப்பட்டது. ஆனால் குற்றவியல் வழக்கு அப்படிப்பட்டதல்ல. நியாயம்தான் முக்கியம்.

ஒரு வழக்கு எந்தப் பிரிவைச் சேரும் என்று நடுவர் அவர்களே முடிவு செய்து கொள்வார். தேவை என்றால் அரசு வழக்கறிஞரின் உதவியை நாடியும் நடுவர் சட்டப்பிரிவு பற்றி ஆலோசனை கேட்டு செயல்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, வழக்கறிஞர்களின் துணை கொலை, கொள்ளை போன்ற பெரிய வழக்குகளில் வேண்டுமானால் தேவையானதாக இருக்கலாம். ஆனால் எதற்கெடுத்தாலும் வழக்கறிஞர்கள் நான்தான் எல்லாம் என்பதுபோல் முன்னால் வந்து நிற்பதும் நீதிமன்றம் அதை அனுமதிப்பதும் சரியல்ல.

ஒரு குற்றவியல் வழக்கில் ஒரு வழக்கறிஞர் தரப்பினருக்காக ஆஜராகிறார். இப்படி ஆஜராவதற்கு தரப்பினர் மனு செய்து அதை நீதிமன்றத்தில் தெரியப்படுத்தி அனுமதி பெற்றிருந்தால்தான் ஆஜராக முடியும். சிறு வழக்குகளில் கு.வி.மு.ச. 205-ன்கீழ் நீதிமன்றம் வழக்கறிஞர்களை அனுமதிக்கிறது. பிற வழக்குகளில் வழக்கறிஞர் ஆஜராகும்முறை பற்றி கு.வி.மு.ச.303-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றம் சாட்டப்பட்டுள்ள எந்த ஒரு நபரும் அல்லது இந்தச் சட்டப்படி நடவடிக்கைக்கு ஆட்பட்டுள்ள எந்த ஒரு நபரும் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் ஒருவர் மூலம் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை படைத்தவராவார்.' இதுவே கு.வி.மு.ச. 303 விதியாகும்.

தற்காத்துக் கொள்ளுதல் என்றால் என்ன? ஒருவர் இருட்டில்

போகிறார். தற்காப்புக்காக கையில் ஒரு டார்ச் லைட்டோ, ஒரு குச்சியோ எடுத்துக் கொண்டு போகிறார். இந்தத் தற்காப்புக் கருவிகள் அவருக்கு ஒரு சிக்கல் வரும்போது உதவக்கூடியவைதாம். அவ்வளவே! ஒரு டார்ச் லைட்டோ, ஒரு குச்சியோ ஒருவரை இருட்டில் வழிநடத்திச் செல்லாது. இந்தத் தற்காப்புக் கருவிகளைப் போலத்தான் வழக்கறிஞர் ஒரு கட்சிக்காரருக்கு உதவ முடியும். ஆனால் கோர்ட்டில் என்ன நடக்கிறது? வழக்கறிஞர் ஒருவர் தம் கட்சிக்காரருக்காக ஆஜராகும்போது முழுப் பொறுப்பையும் கையில் எடுத்துக் கொண்டு ஒரு சர்வாதிகாரி போலச் செயல்படுகிறார். இது சட்டப்படி சரியல்ல.

இந்தத் தவறான வழிகாட்டுதலால்தான் பல வழக்குகளில் நியாயம் தோற்றுப் போவதும், குற்றவாளிகள் விடுதலையாவதும் நடக்கிறது.

மருத்துவத் தொழிலைப் போலவே வழக்கறிஞர் தொழிலும் சமூக சேவையை நோக்கமாகக் கொண்டதாகும். எனவே, வழக்கறிஞர்கள் வருமானத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படாமல் நீதியை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

குற்ற விசாரணைமுறைச் சட்டத்தில் வழக்கறிஞர்கள் ஆஜராவது பற்றி எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. தரப்பினர் வேண்டினால் கு.வி.மு.ச.303-ன்படி வழக்கறிஞர் கட்சிக்காரரின் தற்காப்பிற்காக மட்டுமே இருக்க முடியும்.

இந்தியச் சாட்சிய சட்டத்திலும் வழக்கறிஞர்கள் ஆஜராவது பற்றி எந்த இடத்திலும் இல்லை. ஆனால் ஒரு குற்றம் சாட்டப்பட்ட ஒருவர்க்காக வாதாடலாம் என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஒரு குற்றத்தை உருவாக்கப் போகிறேன் என்பவர்க்காக வாதாடினால் அது குற்ற உடந்தையின் பாற்படும். இது தண்டிக்கக் கூடிய குற்றம் ஆகிவிடும்.

ஒரு வழக்கறிஞர் மேல்முறையீட்டில் குற்றவாளிக்காகவும் வாதாடலாம் என்று சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குற்றவாளிக்காகவும் வாதாடலாம் என்று சொல்லப்பட்டதன் உள் நோக்கம் யாதெனில், எந்த ஒரு மனிதனும் நிரந்தரக் குற்றவாளி அல்ல. சந்தர்ப்பமும், சூழ்நிலையும்தான் ஒருவரைக் குற்றவாளி ஆக்குகிறது. அது மட்டும் அல்ல, ஒரு நிரபராதியைக்கூட பொய்யான சாட்சியங்களை உருவாக்கி குற்றவாளியாக ஆக்கிவிடும் கொடுமையும் நடக்கிறது.

குற்றவியல் சட்டத்தில் ஒரு பழமொழி உண்டு. 'ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கப்படலாம்; ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது!' என்பதே அது. இந்தப் பழமொழியே சரியல்ல. ஆயிரம் குற்றவாளிகள் தப்பிவிட்டால் ஒரு நாட்டின் நிலைமை என்ன ஆகும்? இதை நான் மிகவும் கடுமையாக ஆட்சேபித்ததால் தற்போது இதை நான்கு குற்றவாளிகள் என்று மாற்றி அமைத்திருக்கிறார்கள். சமீபத்தில் சுதந்திரம் என்ற வழக்கறிஞர் குமுதம் ரிப்போர்ட்டரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதில் நான்கு குற்றவாளிகள் தப்பித்தாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்று எழுதியிருக்கிறார். இதையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. குற்றவாளிகள் தப்பித்தாலும் என்ற வாசகமே தவறானதாகும். ஒரு குற்றவாளி தப்பிக்கிறார் என்றால் சட்டம் சரியில்லை என்றுதானே பொருள்? சரியில்லாத சட்டத்தைத் தூக்கி குப்பையில் எறிந்து விடாமல் கோர்ட்டில் நடைமுறைப்படுத்தினால் மக்களுக்கு நியாயம் எப்படி கிடைக்கும்? ஒரு குற்றவாளி குற்றத்திலிருந்து தப்பிவிட்டால் மீண்டும் குற்றம் செய்யாமல் இருப்பானா? சட்டம் சரியாக இருந்தாலும் தங்கள் வருமானத்திற்காக வழக்கறிஞர்கள் நடைமுறைகளை மாற்றாமல் வைத்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

குற்ற உடந்தை பற்றி இந்திய சாட்சிய சட்டத்தில் ஒரு விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒருவர் கள்ள நாணயம் தயாரித்தாக கைது செய்யப்பட்டார் என்றால் அவருக்காக ஒரு வழக்கறிஞர் வாதாடலாம்.

ஆனால், கள்ள நாணயத்தை உருவாக்கப் போகிறேன் என்று சொன்னால் அவர்க்காக வாதாடக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த விளக்கமும் சரியல்ல.

கள்ள நாணயத்தை உருவாக்கியதாக கைது செய்யப்பட்ட நபர்க்காக ஆஜராகும் வழக்கறிஞர், அந்தக் கைதியை ரகசியமாக விசாரித்து, தான் குற்றம் செய்யவில்லை என்று உறுதியாகத் தெரிவித்த பிறகே அவர்க்காக ஆஜராகலாம் என்பதுதானே சரி.

பக்கத்து வீட்டுக்காரருடன் வாய்க்காலில் தண்ணீர் புழங்குவது பற்றி தகாரறு, என்ன செய்யலாம் என்று ஒருவர் வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்கிறார். 'அப்படியா சொன்னார்? ஏன் பேசாமல் இருந்தீர்கள்? கையைக் காலை வாங்கிவிட்டு வாருங்கள், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!' என்று ஒரு வழக்கறிஞர் ஆலோசனை சொன்னால் இது இ.த.ச.107-ன்படியான குற்ற உடந்தையாகிவிடும். இ.த.ச. 109-ன்படி இது தண்டிக்கப்படத் தக்க குற்றம் ஆகிவிடும். இந்திய சாட்சிய சட்டம் 106-ன்படி தவறான ஆலோசனை வழங்கியதாகவும் ஆகிவிடும்.

அரசு வெளியிட்டுள்ள குற்றவியல் தத்துவம் என்ற நூலில் வழக்கறிஞர்கள்தான் நிறைய குற்றத்தை உருவாக்குகிறார்கள் என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெறுமனே குற்றம் சாட்டிவிட்டால் போதுமா? தீர்வு காண வேண்டாமா?

பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் ஒரு புதிய நடைமுறையை உருவாக்கி இருக்கிறார்கள். எதிர் தரப்பில் ஒரு வழக்கறிஞர் ஆஜராகி இருந்தால் வெறுமனே வக்காலத்து தாக்கல் செய்தால் அதை ஒத்துக் கொள்வதில்லை. கீழ்க்கண்ட உறுதிமொழியையும் கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள்.

'என் கட்சிக்காரருக்காக நான் வாதாட இருக்கும் வழக்கில் என் கட்சிக்காரரிடம் நியாயம் இருக்கிறது என்பதை அறிவேன். என்

கட்சிக்காரருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது என்னையும் கட்டுப்படுத்தும். இது குற்றவாளிக்காக வாதாடிய குற்ற உடந்தை ஆகிவிடும் என்பதால் கட்சிக்காரருக்கு வழங்கும், தண்டனை மற்றும் அபராதத்தில் நான் பாதியை ஏற்றுக் கொள்கிறேன்!'.

பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் பிறர்க்காக சட்ட பிரதிநிதியாக ஆஜராகும் போது, இத்தகைய உறுதிமொழியை அவர்களாகவே தாக்கல் செய்துவிடுவதால், வழக்கறிஞர்களும் இதுபோல் தாக்கல் செய்துவிட வேண்டிய கட்டாயத்தில் விழிக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தில் இன்னொரு நடைமுறையும் வைத்திருக்கிறார்கள். ஒருவர்க்காக சட்ட பிரதிநிதியாக ஆஜராகும் போது, தாம் எந்த கட்டணமும் தரப்பினரிடம் பெறவில்லை என்று உறுதி மொழியும் தாக்கல் செய்துவிடுகிறார்கள். அதுபோல் ஒரு வழக்கறிஞரும் உறுதி மொழி தாக்கல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். வழக்கறிஞர் கட்டண சட்டப்படி ஒரு வழக்கறிஞர் கட்சிக்காரரிடம் கட்டணம் வசூல் செய்தால் கஞ்சிகூட குடிக்க முடியாது. எவ்வளவு கட்டணம் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளட்டும். அது அவரது திறமை. ஆனால் கட்சிக்காரரிடம் பெற்ற கட்டணத்திற்காக வழங்கப்பட்ட ரசீதையும் வக்காலத்தில் இணைத்து விட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இதனாலேயே பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் வழக்கு தாக்கல் செய்தால்

எதிரிக்காக வாதாட வழக்கறிஞர் கிடைப்பது அரிதாகிவிடுகிறதாம். இந்தக் கோரிக்கையும் நியாயமானதுதானே!

ஒரு வழக்கறிஞர் தம் கட்சிக்காரருக்காக வாதாடும் போது அந்த வழக்கில் இரகசியமான சங்கதிகள் ஏதேனும் இருந்தால் அதை எதிர்மனுதாரர்களுக்கோ, எதிர்மனுதாரின் வழக்கறிஞருக்கோ தெரியாமல் பாதுக்காக்கப்பட வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் என்ன?

சில வழக்கறிஞர்கள் எதிர்மனுதாரிடம் குறிப்பிட்ட தொகையை

வாங்கிக் கொண்டு கட்சிக்காரரை ஏமாற்றும் வகையில் நடந்து கொள்வார்கள். அதாவது கட்சிக்காரருக்காக ஆஜராகாமல் எதிர்மனுதார்களுக்கு உதவும் வகையில் எக்ஸ்பார்ட்டீ ஆக விட்டுவிடுவது, காசு கிடைத்தால் திடீரென்று அரசியல்வாதி போல் கட்சி மாறிவிடுவது போன்ற செயல்களில் எல்லாம் வழக்கறிஞர்கள் ஈடுபடுகிறார்கள். பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் வற்புறுத்துவதுபோல் வழக்கறிஞர்களும் உறுதிமொழி தாக்கல் செய்ய வேண்டும் என்ற நடைமுறை வந்து விட்டாலே இந்தக் கொடுமைகள் எல்லாம் அரங்கேறாது என நம்பலாம்.

மதுரை அமர்வு நீதிமன்றத்தில் என்னுடைய வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் எனக்கு எதிராக எதிர்மனுதார்கள் சார்பில் காந்திதாஸ் என்ற புகழ் பெற்ற வழக்கறிஞர் ஆஜரானார்.

இந்த வழக்கில் என்னைப் பணிய வைப்பதற்காக எனது நண்பர் ஒருவர் பழனிக்குருசாமி என்ற தமிழாசிரியரையும் கைது செய்து வழக்கு போட்டுவிட்டார்கள். இவருக்கு வேலை போய்விட்டதால் மிகவும் கஷ்டப்பட்டார். என்ன செய்வது என்று ஆலோசனை கேட்பதற்காக என்னை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்று இதே காந்திதாசிடம் ஆலோசனை கேட்டார். காந்திதாஸ் எங்களிடம் நியாயம் இருப்பதால் எப்படி செயல்பட வேண்டும் என்று ஆலோசனை கூறினார். அதற்காக பழனிக்குருசாமி சிறு கட்டணமும் கொடுத்திருந்ததை அறிவேன். அதனால் காந்திதாஸ் எனக்கு எதிராக ஆஜராகக்கூடாது என்று ஆட்சேபனை செய்தேன்.

காந்திதாஸ் தான் இலவசமாகத்தான் ஆலோசனை வழங்கினேன் என்று வாதிட்டார். இலவசமாக ஆலோசனை வழங்கினாலும் இந்திய சாட்சிய சட்டம் 126-வது பிரிவின்படி இவர் எங்களுக்கு எதிராக வாதாடுவதை நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது என்று மனு கொடுத்தேன். அமர்வு நீதிபதி என் மனுவை ஏற்று

விசாரித்து காந்திதாஸ் அந்த வழக்கில் விலகிக் கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டதால் அவர் விலகிக் கொண்டார். ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞரை வழக்கிலிருந்து வாபஸ் வாங்க வைத்த அதிசயம் இது என்றே குறிப்பிடலாம்.

இரு தரப்பிலும் வழக்கறிஞர்கள் ஆஜராகும்போது தவறுகள் செய்வதையும் தங்களுக்குள் ரகசியமாகப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஆனால் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆஜராவது பற்றி விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் நியாயம் கிடைக்கும்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தினரை சமாளிக்க முடியாமல் நீதிபதிகள் ஒரு புதிய வழிமுறையைக் கையாளத் துவங்கி விட்டார்கள். வம்படியாக இலவச சட்ட உதவி வழக்கறிஞரை நியமித்துக் கொள்ள வற்புறுத்துவதுதான் அது. இது சட்டப்படி சரியல்ல,

இலவச சட்ட உதவி வழக்கறிஞரை நியமிப்பது பற்றி குற்ற விசாரணைமுறைச் சட்டம் விதி 304-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு அமர்வு நீதிமன்றத்தில் நடைபெறும் ஒரு விசாரணையில் குற்றச்சாட்டுக்கு உட்பட்ட எவரும் அவர் ஏழை என்ற காரணத்திற்காக வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி இல்லாதபோது அவருக்காக நீதிமன்றம் இலவச சட்ட உதவி வழக்கறிஞரை நியமிக்க வேண்டும் என்பதுதான் அந்த விதி.

ஒரு அமர்வு நீதிமன்றத்தில் கொலை, கொள்ளை போன்ற கடுமையான குற்றச்சாட்டுடைய குற்றங்கள்தான் விசாரணைக்கு வரும். இங்குதான் எதிரி இலவச சட்ட உதவி பெற முடியும். ஆனால் சாதாரண வழக்குகளிலும் இலவச சட்ட உதவி வழக்கறிஞரை நியமிப்பதை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். தனி வழக்கில் மனுதார் இதை ஆட்சேபனை செய்யலாம். அதுபோல மனுதாருக்கு இலவச சட்ட உதவி வழக்கறிஞரை நியமிக்க நீதிமன்றம் வற்புறுத்தினாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தேவை இல்லை.

அமர்வு நீதிமன்றத்தில் தரப்பினருக்காக மெமோ ஆப் அப்பியரன்ஸ் (MEMO OF APPEARANCE) தாக்கல் செய்து வழக்கறிஞர் ஆஜராவது நடைமுறையில் இருந்து வருகிறது. மனுதார் தன் வழக்கில் தானே ஆஜராகிறபோது எதிர்த் தரப்பினருக்காக வழக்கறிஞர் இதுபோல் அப்பியரன்ஸ் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கறிஞர் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். அதனால் விசாரணையில் வரம்புமீறி நடந்துகொண்டார். இதை மனுதார் ஆட்சேபித்தபோது நீதிமன்றம் கண்டு கொள்ளாமல் அலட்சியப்படுத்தியது. அதனால் மனுதார், அந்த வழக்கறிஞர் தரப்பினருக்காக மெமோ ஆப் அப்பியரன்ஸ் தாக்கல் செய்துள்ளாரா என்று வினவினார். நீதிமன்றம் ஆம் என்றது.

உடனே மனுதார் அந்த வழக்கறிஞர் தமது தரப்பினருக்காக எந்தச் சட்டப்பிரிவின்கீழ் இந்த அப்பியரன்ஸ் தாக்கல் செய்துள்ளார் வினவினார். நீதிமன்றத்திற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அதனால் வழக்கறிஞரையே பதில் சொல்லும்படி கேட்டுக் கொண்டது.

அந்த வழக்கறிஞருக்கும் சொல்லத் தெரியவில்லை. அதாவது தம் மனுவை எந்தப் பிரிவின்கீழும் அல்லாமல் வெறுமனே மெமோ ஆப் அப்பியரன்ஸ் என்று தலைப்பிட்டு தாக்கல் செய்துள்ளார்.

மனுதார் இதை ஆட்சேபித்தார். ஒரு நீதிமன்றத்தில் எந்தப் பிரிவு என்று குறிப்பிடப்படாமல் வழக்கறிஞர் மனு செய்ததை இந்த நீதிமன்றம் எந்தப் பிரிவின்கீழ் ஏற்றுக் கொண்டது என்று கேட்டதும் நீதிபதி கோபம் கொண்டு காவல்துறையினரை அழைத்து மனுதாரை அப்புறப்படுத்தும்படி ஆணையிட்டார். காவல் அலுவலர் அருகில் வந்தபோது நீதிமன்றம் எந்தப் பிரிவின்கீழ் என்னை அப்புறப்படுத்த உத்தரவிட்டுள்ளது என்று கேட்டதும் வழி தெரியாது நீதிபதி அந்த வழக்கை ஒத்திவைத்துவிட்டு வேறு வழக்கை விசாரிக்கத் துவங்கினார்.

பிறகும் மனுதார் விடவில்லை. நான் பேசியது நீதிமன்ற அவமதிப்பு என்றால் கு.வி.மு.ச. 345-ன்கீழ் என் வாக்குமூலத்தைப்

பதிவு செய்கிறீர்களா என்று கேட்டதும் நீதிபதி ஆடிப் போய்விட்டார்.

வழக்கறிஞர்கள் தரப்பினருக்காக ஆஜராவது வழக்கறிஞர்கள் சட்டம் பிரிவு 32-ன்படித்தான் என்று வழக்கறிஞர்களுக்கும் தெரியவில்லை; நீதிமன்றத்திற்கும் தெரியவில்லை.

என்றாலும் இந்தப் பிரிவின்படி ஆஜராவதிலும் வழக்கறிஞர்களுக்கு சிக்கல் இருக்கிறது.

வழக்கறிஞர்கள் சட்டம் என்பது வழக்கறிஞர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. வழக்கறிஞர்களுக்கு கைவிலங்கு போன்ற சட்டம்தான் இது. அதனால், தரப்பினர்க்காக வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்யும்போது, அதில் கையெழுத்துச் செய்தால் மட்டும் போதாது. கீழ்க்கண்ட உறுதி மொழியையும் தந்தாக வேண்டும்.

இந்தக் கட்சிக்காரரை எனக்குத் தெரியும். இவரிடம் நியாயம் உள்ளது. இவர் தெரிவித்த சங்கதிகள் பற்றி நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். இவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டு எதிரி விடுதலை செய்யப்பட்டால் இ.த.ச.211-ன்கீழ் மனுதாரருக்குத் தண்டனை வழங்கும் போது அதில் எனக்கும் பங்குண்டு. அல்லது இந்த எதிரிக்குத் தண்டனை கிடைத்தால் அதில் எனக்கும் பங்குண்டு மேற்கண்ட சங்கதிகளைப் பிரமாணமாகத் தாக்கல் செய்கிறேன்‘.

இதுபோன்ற உறுதிமொழியுடன் வக்காலத்து தாக்கல் செய்தால்தான் அது செல்லுபடியாகும். ஆனால் வழக்கை நடத்துகிறவரும், வழக்கை எதிர்த்து நடத்துகிறவரும் வழக்கறிஞர்களாக இருப்பதால் சட்டப்பிரிவு குறிப்பிடப்படாமல் வக்காலத்து தாக்கல் செய்வதையும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் இந்த விபரங்களை எல்லாம் நன்கு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எனினும் எதிர்மனுதாரருக்காக ஆஜராகும் வழக்கறிஞரை இதைக் காரணம் காட்டி முதலிலேயே தடுத்து பிரச்சினை

எழுப்பக்கூடாது. சரியான சமயம் பார்த்து நீதிமன்றத்தைத் திகைப்பில் ஆழ்த்தி ஒரு நெருக்கடியை உண்டு பண்ணி வழக்கில் வெற்றி பெற வேண்டும்.

ஒரு வழக்கில் பி.எல்.படிக்காதவர்களும்கூட பிறருக்காவும் வாதாடலாம் என்று கு.வி.மு.ச. 2(17)-ல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தப் பிரிவின்கீழ் மனுச் செய்து யார் யாருக்காக வேண்டுமானாலும் வாதாடலாம். அதேபோல் Judicial Notifications, the High Court of Madras, [conduct of proceedings byParty in Person] Rules 2019... [REC No. 83831A/2019/F1] High Court of Madras 4th November படியும் எவர் ஒருவருக்காகவும் யார் வேண்டுமானாலும் ஆஜராகலாம்.

வழக்கறிஞர் சட்டம் (ADVOCATE ACT) பிரிவு 32-ன்படி பி.எல்.படிக்காத ஒருவர்கூட, கோர்ட்டில் ஆஜராகிய அனுபவம் பெற்றிருந்தால் தங்கள் பெயரைப் பார்கவுன்சிலிலும் பதிவு செய்து கொள்ளலாம் என்பது சிறப்புச் செய்தி! இது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்து சட்டப் பிரதிநிதி நாகராஜன் ஒரு உத்தரவே பெற்றார் என்பது கூடுதல் சிறப்புச் செய்தி.

சிறு குற்றங்களுக்கான அழைப்பாணை வழக்குகளில் எதிரி தமது குற்றத்தை ஒத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு வராதபோதும் அபராதத் தொகையைச் சேர்த்துச் செலுத்துவதற்குத் தயாராக இருந்தால் வழக்கறிஞர் மட்டுமே ஆஜரானால் போதும் என்று கு.வி.மு.ச.206-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிரி குற்றத்தை ஒத்துக்கொள்ளும் போது இதை ஆட்சேபிக்கத் தேவையில்லை.

## நகல் பெறுவது எப்படி ?

பொதுவாக நீதிமன்றங்களில் நகல் பெறுவதற்கென்றே ரெடிமேட் பாரம் அச்சடித்து கடைகளில் விற்பார்கள். அதைப் பூர்த்தி செய்து கொடுக்கலாம் என்றாலும் குற்றவியல் நீதிமன்றங்களில் இந்தப்

பாரங்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. வெள்ளைத் தாளில் எழுதிக் கொடுத்தாலே போதுமானது.

நகல் கேட்டு மனுச் செய்யும் போது மேலே நீதித்துறை நடுவர் மன்றம் என எழுதி, அதன் கீழ் ஊரின் பெயரும், அதன் கீழே வழக்கு எண்ணும் எழுத வேண்டும்.

இடதுபுறத்தில் மனுதாரின் பெயரை எழுதி / மனுதார் என்றும், அதற்கடுத்த வரியில் எதிர்மனுதாரின் பெயரை எழுதி / எதிர்மனுதார் என்றும் எழுத வேண்டும். எதிர்மனுதார்கள் பலர் இருந்தால் முதல் எதிர் மனுதாரின் பெயரை மட்டும் எழுதி மற்றும் பிறர் என்று குறித்தாலே போதுமானது. அனைவர் பெயரையும் எழுத வேண்டியதில்லை.

அதுபோலவே மனு முதலில் தாக்கல் செய்யப்படும்போது மட்டும்தான் முழு முகவரியும் தேவை. பிற சமயங்களில் பெயரை மட்டும் எழுதினாலே போதும்.

மனுவில் அதற்குக் கீழே மையப் பகுதியில் கு.வி.மு.ச. 363-ன்கீழ் நகல் கோரும் மனு என்று எழுதி அடிக்கோடிட வேண்டும். நகல் மனுவில் இதுபோல் சட்டப்பிரிவைக் குறிப்பிடுவது நடைமுறையில் இல்லை. அதனால் நகல் கோரும் மனு என்று குறித்தாலும் போதுமானது.

அதன்கீழே வழக்கானது தேதியில் முடிந்துள்ளது. மேல்முறையீடு (APPEAL) செய்வதற்காக நகல் கொடுத்தருளுமாறு பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது என்று எழுத வேண்டும். அல்லது வழக்கு முடிந்த தேதி என்று தேதியை மட்டும் சுருக்கமாகக் குறிப்பிட்டாலும் போதுமானது.

கு.வி.மு.ச. 203-ன்கீழ் ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்படும் போது அதை எதிர்த்து அப்பீல் செய்யும் போது அதை மேல்முறையீட்டு மனு என்று குறிப்பிடலாகாது. சீராய்வு மனு (Revision Petition) என்றே குறிப்பிட வேண்டும்.

ஒரு வழக்கில் நகல் கோரும்போது எந்தக் காரணத்திற்காக என்று தெரிவிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எனினும் கு.வி.மு.ச. 363(5)-ன் கீழ் இலவச நகல் கோரும் போது மட்டும் சிறப்பான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட நகலைத் தரப்பினர் மட்டுமின்றி வழக்கில் சம்பந்தம் இல்லாத மூன்றாவது நபரும் கூட எந்த ஒரு நீதிமன்றத்திலிருந்தும் நகல் பெறலாம். இதற்கு குவி.மு.ச.363(6)-ன்கீழ் மனு என்று குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு மூன்றாவது நபர் நகல் கோரும் போது வழக்கறிஞர் மூலம் மனு செய்தால் உரிய கட்டணத்தைச் செலுத்துவதோடு உறுதி மொழிப் பத்திரமும் தாக்கல் செய்ய வேண்டும். வழக்கறிஞர் இல்லாமல் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் - அல்லது நகல் கேட்டு மனு செய்கிறவர், சாட்சிய சட்டம் பிரிவு 70-ன்கீழ் மேற்கண்ட சங்கதிகள் உண்மை என தேதியில் கையெழுத்துச் செய்தேன் என்று பிரமாணமாக குறிப்பட்டாலே போதுமானது.

மனு எதற்காகத் தேவைப்படுகிறது என்ற காரணத்தைச் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை. எனினும் சில நீதிமன்றங்களில் இதை எழுத வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். நியாயத்திற்காகப் போராடும்போது இரகசியம் என்பதே இருக்கக்கூடாது அல்லவா? அதனால் விரிவான காரணங்களை எழுதி நகல் மனு தாக்கல் செய்வதே நல்லது. அத்துடன் அந்த வழக்கு முடிவு செய்யப்பட்ட தேதியும் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும்.

தீர்ப்பு ஆங்கிலத்தில் - அல்லது புரியாத மொழியில் இருந்து அதன் மொழிபெயர்ப்பு தேவைப்பட்டால் கு.வி.மு.ச.363(3)-ன்கீழ் மனு என்று குறிப்பிட வேண்டும்.

ஒரு வழக்கில் எதிரி தண்டிக்கப்பட்டால் அந்த உத்தரவு நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று கு.வி.மு.ச.363(1)-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே எதிரி விடுதலை செய்யப்பட்டால் மேல்முறையீடு செய்து கொள்வதற்காக புகார்தாரருக்கு அந்த உத்தரவின் நகல் கு.வி.மு.ச.363(2)-ன்கீழ் இலவசமாக வழங்க வேண்டும் என்று விதி உள்ளது. நீதிமன்றம் வழங்காவிட்டால் தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் இந்த விதியைச் சுட்டிக் காட்டி மனு செய்யாமலே நகல் பெறலாம்.

மனுவின் கீழே கையெழுத்துச் செய்து மனுதார் என்று பெயரை எழுத வேண்டும்.

இந்த மனுவை முன் பக்கத்தில் இரண்டாக மடித்து பின்பக்கம் வலது பக்கத்தில் மேலே நீதிமன்றத்தின் பெயர், ஊர், வழக்கு எண் குறிப்பிட வேண்டும்.

மனுதாரின் பெயரை எழுதி மனுதார் என்று குறிப்பிட வேண்டும்.

அடுத்த வரியில் எதிர்மனுதாரின் பெயரை எழுதி எதிர்மனுதார் என்று குறிப்பிட வேண்டும். எதிர்மனுதார்கள் பலர் இருந்தால் மற்றும் பிறர் என்று குறிப்பிட்டால் போதும்.

மையப் பகுதியில் கு.வி.மு.ச.363-ன்கீழ் மனு என்று அல்லது உள் விதியையும் குறிப்பிட்டு நகல் கோரும் மனு என்று தனியாகக் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

அதற்குக் கீழே மனுதாரின் பெயர் எழுதி மனுதார் என்று குறிப்பிட்டு தன் வழக்கில் தானே ஆஜராகிறார் என்று குறிப்பிட வேண்டும். அல்லது ஆங்கிலத்தில் Party - in - Persion என்றும் குறிப்பிடலாம்.

குற்றவியல் நீதிமன்றத்தில் நகல் பெறுவதற்குக் கட்டணம் அவசரம் என்றால் இருபது ரூபாய் கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டவேண்டும். உத்தரவு நகல் வாங்க வேண்டியிருந்தால் கூடுதலாக பத்து ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும்.

சில சமயங்களில் பழைய வழக்குகளில் நகல் வாங்க வேண்டியிருக்கும். ஒரு வருடம் முடிந்து விட்டால் தேடுதல் கட்டணம்

ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய்வீதம் கூட்டிக்கொள்ளவும்.

ஒரு நகல் மனுவில் அதே வழக்கு சம்பந்தப்பட்ட எத்தனை நகல் வேண்டுமானலும் வாங்கலாம். ஒரே கட்டணம்தான். எனவே, ஒரு வழக்கில் நகல் கோரும்போது, உத்தரவு நகல், சாட்சியங்களின் வாக்குமூல நகல், பி.எக்ஸ்ட்ராக்ட் டைரி மற்றும் தேவையான நகல்களையும் கேட்டு மனுச் செய்ய வேண்டும்.

நீதிமன்றத்தில் நகல் வழங்கும்போது நகல் முத்திரைத் தாள்களில் (COPY PAPER) தான் வழங்குவது நடைமுறையில் உள்ளது.

நகல் முத்திரைத்தாள் ஒவ்வொன்றும் ஒரு ரூபாய் முத்திரை பதிக்கப்பட்டதாகவோ ஸ்டாம்ப் ஒட்டியதாகவோ இருக்க வேண்டும். முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடம் இதை விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இது பழைய நடைமுறை. இதை மாற்றி காலத்திற்குத் தக்கவாறு ஜெராக்ஸ் நகல் வழங்கினால் நீதிமன்ற ஊழியர்களுக்கு வேலை மிச்சமாவதோடு தவறான நகல் வழங்கும் தீமைகளும் தடுக்கப்பட்டுவிடும்.

நகல் மனுவை நீதிமன்றம் துவங்கும் காலை நேரத்தில்தான் தர வேண்டும் என்பதில்லை. நண்பர்கள் மூலமாகக்கூட இதைத் தரலாம். இதைவிட அன்றைய தேதியில் வழக்கில் ஆஜராகிறவர்களில் நமக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் இருந்தால் அவர் மூலமாகக் கொடுக்கச் செய்தால் நேரம் மிச்சமாகும். இந்த விபரம் முன்பே தெரிய முடியாது போனால் காலையில் பத்தரை மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நமக்குத் தெரிந்தவர் யாராவது இருக்கிறாரா என்று தேடிப் பிடித்து இந்தப் பணியை அவரிடம் ஒப்படைக்கலாம். பிறகு மாலையிலோ மறுநாளோ சென்று விபரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக நகல் கேட்டு விண்ணப்பித்தால் அவசர நகல்கள் மூன்று நாட்களிலும், அவசரம் அல்லாத நகல்கள் ஒரு வாரத்திலும் தர வேண்டும் என்று நகல் விதிகள் உள்ளன. ஆனால் வழக்குகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதால் இந்த விதியை நகல் தரும் அலுவலகத்தில் பின்பற்ற முடியவில்லை. தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் இயன்ற அளவு பொறுமையைக் கடைப்பித்து நீதிமன்ற ஊழியர்களுடன் சுமுக உறவு வைத்துக் கெள்வதே நல்லது. எனினும் மனுதாரை ஏமாற்றும் நோக்கிலோ மிரட்டுதல் அல்லது அலட்சியப்படுத்தும் நோக்கிலோ நடந்து கொண்டால் தைரியமாகப் புகார் தரலாம்.

எந்த ஒரு அரசு ஊழியரும் தம்மீது ஒரு சின்னப் புகார் வருவதைக்கூட விரும்பமாட்டார்கள். ஏனெனில் அரசு ஊழியர் நடத்தை விதிகள் மிகக் கடுமையாக உள்ளன.

## நகல் மனு திருப்பப்பட்டால் என்ன செய்வது?

மனுதார் ஒரு நகல்மனு கொடுத்தால் ஒன்று அல்லது இரண்டு (NUMBER) நாட்களில் சி.ஏ.எண் (COPY APPLICATION) ஒரு எண் தருவார்கள். மாலை நேரத்தில் நீதிமன்ற அலுவலகத்திற்குச் சென்று உரிய அலுவலரிடம் இதுபற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த எண்ணைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மனு சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் திருப்பி அளிக்கப்படும். உரிய புத்தகத்தில் கையெழுத்துச் செய்து விட்டு அதை வாங்கிப் பார்த்தால் மனு திருப்பப்பட்ட காரணங்கள் பதிவாகி இருக்கும். இதைப் பூர்த்தி செய்து, மீளவும் சமர்ப்பிக்கப்படுகிறது என்று எழுதி கீழே கையெழுத்தும், தேதியும் இட்டு மீண்டும் நீதிமன்றப் பணி துவங்கும் காலை நேரத்தில் தர வேண்டும்.

ஒரு மனு திருப்பப்படும்போது அதை மீண்டும் சமர்ப்பிப்பதற்காக ஒரு கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு வார கால அவகாசம்

கொடுப்பது பொதுவாக நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தக் கால அவகாசம் முடிவடையும் முன்பாகவே மனுவை சமர்ப்பித்துவிட வேண்டும்.

எதிர்பாராத சமயங்களில் இந்தக் கால அவகாசத்திற்குள் மனுவை மீண்டும் சமர்ப்பிக்க முடியவில்லை என்றால் கவலைப்படத் தேவை இல்லை. புதிதாக ஒரு மனு எழுதி கொடுக்க வேண்டும். பத்து ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் இது அதிகச் செலவு, அவ்வளவுதான். அல்லது கால தாமதத்திற்கான மன்னிப்புக்கோரும் மனு ஒன்றை இணைத்தால் அதையே கூட தாக்கல் செய்யலாம்.

ஒரு நகல் மனு கொடுத்தால், அது உத்தரவு ஆகிவிட்டால் அந்த நகல் பெறுவதற்கு எத்தனை முத்திரைத் தாள்கள் அளிக்க வேண்டும் என்று நகல் கோரும் அலுவலகத்தில் உரிய அலுவலரிடம் – ஜெராஸ்தார் என்று இவர் அலுவலகத்தில் அழைக்கப்படுவார் – இவரிடம் விசாரித்தால் தகவல் தெரிவிப்பார்.

எத்தனை பேப்பர் சமர்ப்பிக்க வேண்டுமோ அத்தனை பேப்பர்களை உரிய விற்பனையாளர்களிடம் வாங்கி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதை அலுவலகத்தில் எப்போது வேண்டுமானாலும் நகல் வழங்கும் அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம். காலையில்தான் தரவேண்டும் என்பதில்லை. ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்காதவர்கள் பச்சைப் பேப்பரில் ஒரு ரூபாய்க்கான ஸ்டாம்ப் ஒட்டியும் சமர்ப்பிக்கலாம்.

மாவட்ட நீதிமன்றங்களில் என்றால் ஜெராஸ்தார் அலுவலகம் என்று தனியாகவே இருக்கும். இங்கே அலுவலகம் திறந்திருக்கும் எந்த நேரத்திலும் தரலாம். இங்கு நகல் கோரும் டைரி ஒன்றும் இருக்கும். நகல் மனு எண் மட்டும் பெற்றுவிட்டால் இந்த டைரியைப் பார்த்தே அனைத்து விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

கீழமை நீதிமன்றங்களில் நகல் பெறுவதற்கு இன்னொரு முறையும் இருக்கிறது. ஒரு வழக்கில் இரண்டாவது – மூன்றாவது

தடவையாக நகல் பெற வேண்டியிருந்தால் அந்த நகலில் எத்தனை பேப்பர் இருக்கும் என்பது தெரியும் ஆதலால் அத்தனை பேப்பர்களைச் சேர்த்தே நகல் மனு தரலாம். இந்த வழிமுறையைப் பின்பற்றும்போது ஒன்றிரண்டு முத்திரைத்தாள்கள் சேர்த்தே இணைக்கலாம். மீதி இருந்தால் திருப்பித் தந்து விடுவார்கள்.

இந்த நடைமுறை கீழமை நீதிமன்றங்களில் மட்டும்தான் இருக்கிறது. இதைக் காரணம் காட்டி மேல்நீதிமன்ற ஊழியர்களிடம் பிரச்சினை எழுப்ப வேண்டாம்.

சிலர் இந்த நடைமுறையைப் புதிய வழக்குகளில் பின்பற்றுகிறார்கள். ஒரு உத்தேசமாக நகல் முத்திரைத் தாள்களை இணைத்து மனு செய்கிறார்கள். அதிகமாக இருந்தால் திருப்பி வாங்கிவிடலாம். குறைவாக இருந்தால் எத்தனை எத்தனை தாள்கள் குறைகின்றனவோ, அத்தனை அத்தனை தாள்களை மட்டும் வாங்கி சமர்ப்பித்துவிடலாம்.

ஒரு நகல் மனு திருப்பப்படும்போது உரிய ஸ்டாம்ப் ஒட்டவில்லை என்றோ உத்தரவு தேதி சரியாக இல்லை என்பதுபோன்றோ சாதாரண காரணங்களாகவே இருக்கும். இதைப் பூர்த்தி செய்து மீண்டும் சமர்ப்பிக்கலாம்.

தமிழகத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் தமிழில்தான் இருக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டுப்படுத்தி உள்ளது. சட்டத்திலும் மாநில அரசின் நடைமுறை மொழிதான் பயன்படுத்த வேண்டும் என்று சரியாகவே உள்ளது. என்றாலும் பெரும்பாலான நீதிமன்றங்களில் இப்படி திருப்பி அளிக்கும்போது ஆங்கிலத்தில் காரணத்தை எழுதுவார்கள். இவர்கள் என்ன எழுதி இருக்கிறார்கள் என்று ஆங்கிலம் நன்கு தெரிந்தவர்களால்கூட கண்டு பிடிக்க முடியாது. அத்தனை வீச்செழுத்தில் எழுதுவார்கள். அப்படி படிக்க முடியாமல் இருந்தால் உரிய அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள சில தீர்ப்புகளில் அல்லது உத்தரவுகளில் சில குறைகள் மறைக்கப்பட்டு இருக்கும். ஆங்கிலத்தை ஒரு விபச்சார மொழி என்றே கூறலாம். நாம் ஆறுமுகம் என்று தமிழில் அழகாகக் கூறுகிறோம். இதையே வடநாட்டில் ARUMUGAM என்பதை அறுமுகம், எருமுகம், ஏறுமுகம் என்று பல கோணங்களில் சொல்வார்கள். இதுபோலவே ஆங்கிலத்தில் உள்ள சில விபச்சார வார்த்தைகள் கோர்ட்டில் தவறு செய்பவர்களுக்கும் உதவுகிறது. BY, AS என்ற வார்த்தைகள் இடத்திற்குத் தகுந்தாற்போல் பல பொருள்களில் வரும்.

ஒரு வழக்கில் ATTACHED BEFORE JUDGEMENT BY 12.6.90 என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. இது 12-6-90-ம் தேதிக்கு முன்பா, பின்பா, அல்லது அதே தேதியிலா என்று விளக்கம் கேட்டபோது நீதிபதிக்கு சொல்லத் தெரியவில்லை. காரணம் இது மூன்று காலத்திற்கும் வரும். தவறான தீர்ப்புகளில் இதுபோன்ற ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆங்கிலம் என்பது ஒரு மாய மொழி. அது நினைத்த பொருள் எல்லாம் தரும். ஆங்கிலத்தை விபச்சார மொழி என்றுதான் சொல்ல வேண்டும். அதை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான் இருக்கிறது. இந்த மாயம்பற்றி தெளிவாக அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள், நான் எழுதிய 'இப்படித்தான் பேசணும், எழுதணும் இங்கிலீஷ்' என்ற புத்தகத்தைப் படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

## ஆங்கில அறிவு எந்த அளவில் தேவை?

மனுதார் தன் வழக்கில் தானே ஆஜராகும்போது நீதிமன்ற ஊழியர்கள் சிலர் வேண்டும் என்றேகூட ஆங்கிலத்தில் எழுதுவார்கள். இன்னும் கொஞ்சம் மேலே போய் புதிதாக வீச்செழுத்தில்கூட எழுதுவார்கள். திருப்பி அளிக்கப்பட்ட மனுவில் என்ன விபரம் எழுதி

இருக்கிறது என்று புரியாவிட்டால் உரிய அலுவலரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வழக்கறிஞர் இன்றித் தாமே ஆஜராகிறவர்கள் சிறிதளவாவது ஆங்கில அறிவு உடையவராக இருந்தால் நல்லது. ஏனெனில், ஒவ்வொன்றுக்கும் ஊழியரிடம் கேட்டுக் கொண்டிருந்தால் அவர்கள் எரிச்சல் அடைவார்கள். அதுமட்டும் இன்றி மேல்நீதிமன்றங்களுக்குச் செல்லும்போது ஓரளவு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். என்றாலும் இது பெரிய பிரச்சினை இல்லை. தற்போது பாதிக்கப்பட்டோர் கழகத்தில் ஆங்கிலம் பற்றி ஏ.பி.சி.டி. தெரியாவர்கள் எல்லாம் கோர்ட்டில் ஆஜராகி சாதனை செய்கிறார்கள். ஆங்கில அறிவைவிட கோர்ட் நடைமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டாலே போதும்.

நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தால் உடனே முடிந்து விடாது. வருடக்கணக்கில்கூட ஆகலாம். எனவே, துவக்கத்தில் ஆங்கில அறிவு இல்லாவிட்டாலும் கூட சிறிது முயற்சி எடுத்துக் கொண்டால் விரைவில் தேவையான ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.

இந்த ஆங்கில அறிவுபற்றி இன்னொரு உண்மையையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் பி.ஏ., எம்.ஏ., படித்தவர்களால்கூட நீதிமன்ற ஆங்கிலத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. இவற்றை அனுபவத்தில்தான் பெற்றாகவேண்டும். எனவே ஓரளவு ஆங்கிலம் தெரிந்து கொண்டாலே போதுமானது.

முயற்சி என்பது சூழ்நிலைக்குத் தக்கவாறு அமையும். நீங்கள் ஆங்கிலம் படித்தாகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டால் பள்ளிக்கூடத்தில் பத்து வருசமாகப் படிக்கிற ஆங்கிலத்தை பத்தே மாதத்தில் படித்து விடலாம்.

ஒரு சந்தேகம் பற்றி விபரம் கேட்டால் அதற்குச் சொல்ல முடியாது என்று எந்த ஊழியரும் மறுக்க முடியாது.

ஒரு நீதிமன்றத்தின் மொழி என்ன என்பதை கு.வி.மு.ச. 272-ல் தெளிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு நீதிமன்றத்திலும் அந்தந்த மாநிலத்தின் மொழிதான் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதுதான் இந்த விதி. தமிழகத்தில் தமிழ்தான் மாநில மொழியாக இருப்பதால் நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழில்தான் இருக்க வேண்டும்.

நீதி, நியாயம் பெறுவதற்கு ஒரு மொழி தடையாக இருக்கக்கூடாது என்பதால் கு.வி.மு.ச.277-ன்கீழ் ஒரு சாட்சி எந்த மொழியில் வேண்டுமானாலும் சாட்சியம் தரலாம் என்று விதிவிலக்கு தரப்பட்டுள்ளது, புகார்தாரரைப் பொருத்தமட்டில் அந்த வழக்கில் முதலாவது சாட்சி அவர்தான்.

ஒரு மாநிலத்தின் மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதை அந்த மாநில அரசே முடிவு செய்யலாம் என்று அரசியல் சாசனம் கோட்பாடு 350 தெரிவிக்கிறது. தமிழகத்தில் தமிழ்தான் மாநில மொழி என்பதால் நீதிமன்ற செயல்பாடுகள் அனைத்தும் தமிழில் இருப்பதுதான் சரி. அதனால் ஆங்கிலமே தெரியாவிட்டாலும் கவலைப்படத் தேவையில்லை.

ஒரு வழக்கில் எந்த ஒரு ஆங்கில உத்தரவோ, நடவடிக்கையோ மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதற்கு மொழிபெயர்ப்பு வேண்டும் என்று கேட்டுப் பெறலாம்.

இதற்காகவே ஒவ்வொரு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும் (SESSIONS COURT) ஒரு மொழிபெயர்ப்பாளர் (TRANSLATOR) நியமிக்கப்பட்டுள்ளார். கீழமை நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பு நகல் கேட்டு மனு செய்தால் அவர்களே அதை மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து நகல் பெற்று வழங்குவார்கள்.

எந்த ஒரு வழக்கிலும் நியாயம் கிடைப்பதில் ஒரு மொழி தடையாக இருக்கக்கூடாது என்று கு.வி.மு.ச.277-ம் பிரிவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதன்படி டெல்லியில் இருந்து ஒரு

சாட்சியை வரவழைத்து தமிழ்நாட்டில் ஆங்கிலத்திலோ இந்தியிலோ கூட சாட்சியம் சொல்ல வைக்கலாம். அதுபோலவே தமிழ்நாட்டுக்காரர் ஒருவர் உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஒரு நீதிமன்றத்தில் ஆஜராகி தமிழில் சாட்சியம் கூற முடியும். எனவே, தன் வழக்கில் தானே ஆஜராகிறவர் ஆங்கில அறிவு இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. நாளடைவில் பழக்கத்தில் தாமாகவே அனுபவத்தின்மூலமாக நிறைய விஷயங்களையும், சில முக்கியமான ஆங்கில வார்த்தைகளையும் நாம் கற்றுக் கொள்ளலாம்.

## வாய்தா கேட்பது எப்படி ?

மனுதார் தன் வழக்கில் தானே ஆஜராகும்போது விசாரணை நாளில் வரமுடியவில்லை என்றால் வாய்தா கேட்கலாம். வாய்தா கேட்கும் அச்சடித்த ரெடிமேட் பாரங்கள் கடைகளில் கிடைக்கும். அதில் ஒன்றிரண்டைக் கையில் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அச்சிட்ட பாரங்களில் சட்டப் பிரிவு குறிப்பிடப்படாமலேதான் உள்ளது. அறியாமையின் காரணமாக நீதிமன்றமும், வழக்கறிஞர்களும் இதைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவது வேதனையான விசயம். இந்தத் தவறு உயர்நீதிமன்றத்திலும் – உச்சநீதிமன்றத்திலும் கூட நடக்கிறது. இதைவிட வேதனையான விசயம் – சட்டப்பிரிவு குறிப்பிட்டு தாக்கல் செய்த நகல் மனுவை உயர்நீதிமன்றத்திலேயே வாங்க மறுத்தார்கள் என்பதுதான். சட்ட அறிவில் நீதிமன்றங்கள் அந்த அளவில் பூஜ்யமாகவே இருக்கிறது. அதனால் நீதிபதிகள் செக்குமாடு போல் சின்ன வட்டத்திற்குள் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். இந்த நடைமுறை தற்போது பாதிக்கப்பட்டோர் கழகத்தினரின் அதிரடி நடவடிக்கையால் மெல்ல மெல்ல மாறி வருவது மகிழ்ச்சியான விசயம்.

பொதுவாக குற்றவியல் நீதிமன்றத்தில் மனு வெள்ளைத் தாளில் எழுதிக் கொடுத்தாலே போதுமானது. மனுவில் இருபது ரூபாய்

ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும்.

வழக்கு விசாரணையில் இருந்தால் வாய்தா மனு செய்யும் போது மனுவின் மையத் தலைப்பில் கு.வி.மு.ச.309-ன்கீழ் மனு என்றும் குறிப்பிட வேண்டும்.

இந்த மனுவை நேரடியாகக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. வேறு யார் மூலமாக வேண்டுமானாலும் கொடுத்தனுப்பலாம். காலையில் நீதிமன்றம் துவங்கும் நேரத்திலாவது, வழக்கு விசாரண வரும் நேரத்திலாவது தரலாம்.

வெளியூரில் இருந்து விசாரணைக்கு வரமுடியவில்லை என்றால் என்ன செய்வது? நீதிமன்றத்தில் விசாரணை நாள் அன்று பத்தரை மணிக்குள் கிடைக்கும்படி விரைவு அஞ்சல் (Speed Post) அனுப்பி வைத்தாலே போதுமானது. இதுவும் உரிய மனுவாகவே ஏற்றுக் கொள்ளப்படும்.

தற்போது தமிழில் விரைவு அஞ்சல் அனுப்புவதும் நடைமுறையில் இருக்கிறது. அதனால் வழக்கு எண் குறிப்பிட்டு முக்கிய காரணங்களால் ஒத்தி வைக்க வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டாலே போதும்.

நீதிமன்றம் சென்று அடுத்த விசாரணை நாள் எப்போது என்று டைரியில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அல்லது உரிய அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தேவை இல்லாமல் வாய்தா கேட்பதும், வழக்கறிஞர் கேட்காமலே நீதிமன்றம் தேவைக்கும் அதிகமாக விசாரணையை ஒத்திவைப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. தம் வழக்கில் தாமே ஆஜராகிறவர் இந்தத் தவறான நடைமுறையை அனுமதிக்கக்கூடாது. இதுபற்றி குற்றவிசாரணைமுறைச்சட்டம் பிரிவு 309-ல் விரிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது.

கு.வி.மு.ச.309(1)-ல் ஒரு வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்

கொண்ட நீதிமன்றம் சாட்சிகள் வருகை தந்துள்ளபோது அந்த வழக்கை ஒத்தி வைக்காமல் தொடர்ந்து விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்தால் தகுந்த காரணத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நீதிபதியிடம் வழக்கை எதற்காக ஒத்தி வைக்கிறீர்கள் என்று காரணம் கேட்டு விவாதம் செய்யலாம். இதுபோல் காரணம் கேட்டால் அடுத்தடுத்து வழக்கை விரைவாகவும் நியாயமாகவும் முடிக்க நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்பலாம்.

இதுபோல் நீதிமன்றத்தில் விளக்கம் கேட்பது நீதிமன்ற அவமதிப்பு ஆகாது. எனினும் சொல்லத் தெரியாதவர்கள் கோபப்படுவதும் உண்டு. அப்படி கோபப்பட்டால் நீங்கள் அடுத்த ஆயுதத்தைக் கையில் எடுத்துவிட வேண்டியதுதான்.

ஒரு வழக்கில் மனுதார் அல்லது எதிர்மனுதார் வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என்று மனு செய்தால், மனு செய்கிறவர் எதிர்த்தரப்பினர்க்கு செலவுத் தொகை வழங்குவதை நியாயமான காரணமாகக் கொள்ளலாம் என்று குவி.மு.ச. 309 விளக்கம் (2)-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்தரப்பினர் ஒத்தி வைக்கக் கோரினால் இப்பிரிவின் கீழ் செலவுத் தொகை வேண்டும் என கேட்டு மனு செய்யலாம். இதுபோன்ற நடைமுறை குற்றவியல் நீதிமன்றத்தில் மட்டும் அல்லாமல் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் எல்லா நீதிமன்றங்களிலும் மனு செய்து செலவுத் தொகை வாங்கி விடுகிறார்கள். ஒருவர் தொழிலாளர் நீதிமன்றத்தில் 500 ரூபாய் பெற்றார். சென்னை நுகர்வோர் கோர்ட்டில் இப்பிரின்கீழ் பலமுறை 500 ரூபாய் வாங்கியும் சிலர் சாதனை படைத்திருக்கிறார்கள்.

யாருமே வாய்தா கேட்காமல் நீதிமன்றம் தன்னிச்சையாக ஒத்திவைத்தால் என்ன செய்வது? நீதிமன்றம் செலவுத் தொகை தர வேண்டும் என்றும் கேட்கலாம். இப்படி கேட்டாலே வாய்தா ஏன்

போடுகிறீர்கள் என்று நாம் கேட்டால் கோபப்படும் நீதிபதிகள் வாயைப் பொத்திக் கொள்வார்கள்.

குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜராகிறவர் பக்கத்து ஊரில் இருந்து வருவதால் 500 ரூபாய்வரை செலவுத் தொகை பெறலாம்.

இந்த விதியைப் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவும் செய்கிறார்கள். வாய்தா கேட்டு விரைவு அஞ்சல் அனுப்பும்போதே கு.வி.மு.ச. 309 விளக்கம் (2)-ன் கீழ் வழக்கை ஒத்திவைக்கக் கோருவதால் ஐம்பது ரூபாய் மணியார்டரும் அனுப்பிவைக்கிறேன். மீதியை நீதிமன்ற விசாரணையில் செலுத்தி விடுகிறேன் என்றும் குறிப்பில் எழுதிவிடுவார்கள். இதுபோல் நாமே செலவுத் தொகை செலுத்திவிட்டால் அடுத்த தடவை எதிர்த்தரப்பினர் வாய்தா கேட்டால் நாம் சுலபமாக வாங்கிவிடலாம் என்று இப்படி தந்திரம் செய்கிறார்கள்.

இன்னும் சிலர் இப்படி விரைவு அஞ்சலும் பணமும் அனுப்பிவிட்டு, எப்போதாவது நீதிபதி விடுப்பில் சென்றுவிட்டார் அல்லது ஏதோ ஒரு காரணத்திற்காக விசாரணை நடக்காமல் வாய்தா போட்டால் இவர்கள் நீதிமன்றம் செலவுத் தொகை தரவேண்டும் என்று கேட்டு அடம்பிடிப்பார்கள். பாதிக்கப்பட்டோர் கழகம் என்றாலே நீதிமன்றத்திற்குப் பெரிய தலைவலிதான்!

# வழக்கறிஞரை எப்போது வேண்டுமானாலும் நியமிக்கலாமா?

ஒரு வழக்கில் தாமே ஆஜராகின்றவர் தவிர்க்க முடியாத காரணங்களால் தொடர்ந்து ஆஜராக முடியாவிட்டாலும், ஒரு வழக்கறிஞரை நியமித்தால் நல்லது என நினைத்தாலும் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு வழக்கறிஞரை நியமித்துக்கொள்ளலாம். பொதுவாக வழக்கறிஞர்கள் பற்றி பொதுமக்களிடம் நல்ல

அபிப்பிராயம் கிடையாது.

காசு கிடைத்தால் கட்சி மாறுவதில் அரசியல்வாதிகளை விட மோசம். இதைவிடக் கொடுமையானது சில வழக்கறிஞர்கள் நீதிபதியோடு தொடர்பு வைத்துக் கொண்டு தமது கட்சிக்காரருக்கு ஆதரவான தீர்ப்பைப் பெற்றுவிடுகிறார்கள் என்பதுதான்.

ஒரு வழக்கில் வெற்றி பெற வேண்டும் என்றால் எதிரி வழக்கறிஞரைப் போய்ப் பார் என்று சொல்கிற அளவிற்கு இந்த நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அதனால் வழக்கறிஞரை நியமிப்பதில் கவனம் அதிகம் தேவை.

வழக்கறிஞர்க்குப் பதிலாக சட்ட பிரதிநிதியும் நியமித்துக் கொள்ளலாம். உங்கள் நண்பரையோ அல்லது உங்களுக்கு ஆதரவாக வாதாடத் தகுதியுள்ள ஒருவரையோ நீங்கள் சட்டபிரதிநிதியாகவும் நியமித்துக் கொள்ளலாம். கு,வி.மு.ச.2(17)–ன்கீழ் மனு என்று தலைப்பிட்டு நீங்கள் நியமிக்கும் பிரதிநிதியை நீதிமன்றம் எனக்காக வாதாட அனுமதிக்க வேண்டும் என்று மனு செய்து அனுமதி பெற்றுக் கொண்டால் போதும். ஒரு வழக்கறிஞர்க்கு என்ன அதிகாரம் உள்ளதோ அதே அதிகாரம் உங்கள் சட்ட பிரதிநிதிக்கும் உண்டு. இதுபோல் பாதிக்கப்பட்டோர் கழகத்தில் நிறையப்பேர் மற்றவர்களுக்காக ஆஜராகியும் உள்ளனர்.

## வழக்கறிஞரை எந்த வகையில் நியமிக்க வேண்டும்?

வழக்கறிஞர்கள் ஒரு வழக்கை ஏற்கும் முன் அதற்குப் பல வகைகளில் கட்டணம் வசூல் செய்கிறார்கள். முன் பணமாக (ADVANCE) ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் கொடுப்பது ஒரு முறை.

முன் பணம் கொடுக்கும் முன்பாக ஒரு மொத்தத் தொகையைப் பேசிக் கொண்டு அதை எத்தனை தவணைகளில் தருவது என்று பேசிக் கொள்வது ஒப்பந்த (CONTRACT) முறையாகும்.

சிலர் முதலில் ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு வழக்கு வெற்றி பெற்றவுடன் ஒரு தொகையைக் கொடுத்து விடுவதாகப் பேசிக் கொள்வார்கள். இவற்றில் எந்த வகை நமக்கு ஒத்துவரும் என்று கண்டறிந்து அந்த வழிமுறையை மேற்கொள்ளலாம். என்றாலும் ஒப்பந்த முறையே சிறந்தது. இதனால் வழக்கு விரைவாகவும், நியாயமாகவும் நடைபெறும் என்று நம்பலாம். எனினும் ஒரு வழக்கறிஞரை நியமிக்கும் போது வெற்றி பெற சில விதிமுறைகளைக் கவனத்துடன் கையாள வேண்டும்.

முதலில் எந்த முறையில் வழக்கறிஞரை நியமித்துக் கொண்டாலும் கொடுத்த பணத்திற்கு ரசீது வாங்கிவிட வேண்டும்.

எந்த ஒரு வழக்கறிஞரும் தமது கட்சிக்காரருக்குக் கேட்காமலே ரசீது கொடுக்கும் வழக்கம் வைத்துக் கொள்வதில்லை. வழக்கறிஞர் தம் தொழிலில் நேர்மையாக நடக்கவில்லை என்பதற்கு இது ஒன்றே போதிய சான்றாகும்.

பணம் கொடுத்துவிட்டு வெறும் கையோடு திரும்பி வருவது வழக்கறிஞர் அலுவலகத்தில் மட்டும்தான் நடக்கிறது. பலசரக்கு கடையில் ஐம்பது பைசா சில்லரை தரமுடியவில்லை என்றால்கூட ஒரு மிட்டாய் கொடுத்து நாணயமாக நடந்து கொள்கிறார்கள். பஸ்ஸில் ஏழு ரூபாய் கொடுத்தாலும் டிக்கெட் கொடுக்கிறார்கள். ஆனால் ஆயிரக் கணக்கில் கட்டணம் வசூல் செய்கிற வழக்கறிஞர்கள் ரசீது தராமல் இருப்பது என்ன நியாயம்?

வழக்கறிஞரிடம் ரசீது கேட்டால் ரசீது கொடுக்கும் வழக்கம் எல்லாம் கிடையாது என்றுதான் சொல்வார்கள். அதற்காக விட்டுவிடக்கூடாது; வற்புறுத்தியாவது கேட்டு வாங்கிவிட வேண்டும்.

ரசீது புத்தகம் எல்லாம் கிடையாது என்று சில வழக்கறிஞர்கள்

அடித்துச் சொல்வார்கள். நிறுவனம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் ஆஜராகும்போது இவர்கள் ரசீது கொடுத்ததுதான் ஆக வேண்டும். அதனால் கண்டிப்பாக ரசீது புத்தகம் வைத்திருப்பார்கள்.

புதிதாகத் தொழில் துவங்கிய சில வழக்கறிஞர்களிடம் ரசீது புத்தகம் இல்லாமலும் இருக்கலாம். அத்தகைய சமயங்களில் பணம் கொடுத்ததற்கு லெட்டர் பேடிலோ அவர்கள் முகவரி பதித்த முத்திரைப் பேப்பரிலோகூட வவுச்சர் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். அல்லது வெறும் தாளிலாவது எழுதி அவர்களிடம் கையெழுத்தும் முத்திரையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது G-Pay மூலம் பணம் தரலாம். இதுவே நல்லது.

இப்படி வற்புறுத்தி ரசீது அல்லது வவுச்சர் எழுதி வாங்கிக் கொண்டால் அல்லது G-Pay மூலம் பணம் செலுத்தியிருந்தால் இயன்ற அளவு நேர்மையாக நடப்பார் என நம்பலாம். இந்த ரசீது இருந்தால் வழக்கறிஞர் உண்மையாக நடந்து கொள்ளாத பட்சத்தில் நுகர்வோர் கோட்டில் வழக்கு தொடர்ந்து நஷ்ட ஈடு பெறவோ, அல்லது பார்கவுன்சிலில் புகார் செய்து அவரது தொழிலில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தவோ முடியும். எனவே, ரசீது தரமறுக்கும் வழக்கறிஞரை நியமிக்காமல் இருப்பதே நல்லது.

பகுதி பகுதியாகக் கட்டணம் செலுத்துவதில் ஒரு பாதிப்பு உண்டு. அதாவது வழக்கறிஞர் வேண்டும் என்றே நீண்ட நாட்களுக்கு வழக்கை இழுத்தடித்துக் கொண்டே போகலாம். இதனால் நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

வழக்கறிஞர் கட்டணச் சட்டம் என்று உள்ளது. இந்தச் சட்டத்தில் குற்றவியல் நீதிமன்றங்களில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கு எந்தக் கட்டணமும் செலுத்தத் தேவை இல்லை என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக கட்டணம் பற்றி சிவில் நீதிமன்றங்களில் வழக்கறிஞர் பெற வேண்டிய கட்டணம் பற்றி மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்களில் கீழ்நீதிமன்றத்தில் 2500 முதல்

3000 ரூபாய் வரையும், உயர்நீதிமன்றத்தில் 5000 ரூபாய் முதல் 1200 வரையும் கட்டணமாக தரப்பினரிடமிருந்து வழக்கறிஞர் பெறலாம் என்று பொதுவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தரப்பினரிடம் இருந்த கட்டணம் பெறுவதே சட்டத்திற்கு உட்பட்டதல்ல. வழக்கறிஞர் தொழில் ஒரு சேவைத் தொழில்தான் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? ஆனால் வழக்கறிஞர்கள் என்ன செய்கிறார்கள்? கட்சிக்காரரின் மனநிலையைக் கணக்கிட்டு பல ஆயிரக் கணக்கில் வசூல் செய்துவிட்டு ரசீதும் கொடுக்காமல் ஏமாற்றிவிடுகிறார்கள்.

இலவச சட்ட உதவிக்கழகத்தின்மூலம் நியமிக்கப்படும் வழக்கறிஞருக்கு அரசாங்கமே 2500 முதல் 3000 ரூபாய் வரை கட்டணம் செலுத்திவிடுகிறது. அதனால் ஒரு தரப்பினர் வழக்கறிஞரை நியமித்தால் இரண்டு மடங்கு ரூபாய் கட்டணமாக வாங்கிக் கொண்டு வழக்கை நடத்திக் கொடுப்பதுதானே சரி? ஆனால் கட்டணம் நிர்ணயிப்பதை கட்சிக்காரர் எந்த பரபரப்பில் இருக்கிறார் என்பதைப் பொருத்தும், வசதி வாய்ப்புகள் எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டும் அதற்குத் தக்கவாறு கட்டணம் வசூல் செய்துவிட்டு ரசீது கொடுக்க மறுப்பது எந்த வகையில் நியாயம்? கட்டணம் வசூல் செய்வது அவரது திறமை என்றாலும் வக்காலத்து தாக்கல் செய்யும்போது கட்டணம் எவ்வளவு பெற்றார் என்ற விபரத்தையும் தெரிவிப்பதுதானே நியாயம்?

## வாய்தா என்றால் என்ன?

ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அந்த வழக்கை விசாரிக்காமலோ அல்லது அடுத்த விசாரணைக்காகவோ ஒத்தி வைப்பது வாய்தா (POSTPONE) எனப்படும்.

வாய்தா வழங்கும்முறை பற்றி குற்றவிசாரணை முறைச் சட்டம்

விதி 309-வது பிரிவில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. என்றாலும் இந்த விதியை எந்த நீதிமன்றமும் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

ஒரு வழக்கில் வாய்தா கொடுப்பதா வேண்டாமா என்பதை நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்.

எனினும் வழக்கறிஞர்கள் தங்கள் வசதிக்காக வாய்தா வாங்குவதைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு தன்னிச்சையாகச் செயல்படுகிறார்கள்.

காலையில் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களின் கூட்டம் மொய்த்துப்போய் இருக்கும். அரை மணி நேரம் கழித்துப் பார்த்தால் ஐந்து அல்லது ஆறு வழக்கறிஞர்கள்கூட இருக்க மாட்டார்கள். அவ்வளவு பேரும் வாய்தா வாங்கிவிட்டுப் போய்விடுவார்கள்.

வழக்கறிஞர் என்றாலே வாய்தா வாங்குகிறவர்தான் என்று சொல்லும் அளவிற்கு இந்த நடவடிக்கைகள் உள்ளன.

இதில் இன்னொரு இரகசியமும் உள்ளது. அது மனுதாரால் போடப்பட்ட பொய் வழக்கு என்றால் இயன்ற அளவு வாய்தா வாங்கி இழுத்தடிப்பதற்கு கட்சிக்காரரே ஊக்கம் ஊட்டுகிறார் என்பதுதான்.

எந்த ஒரு நீதிமன்றமும் வழக்கை விரைந்து முடிக்கவே விரும்புகிறது. ஆனால் வழக்கறிஞர்கள் தேவை இல்லாமல் வாய்தா கேட்பதால்தான் வழக்கு நீண்டு கொண்டே போகிறது. வழக்குகளும் குவிந்து கொண்டே போகின்றன. இரு தரப்பிலும் வழக்கறிஞர்கள் இருப்பதால் இதுபோல் தேவை இல்லாமல் ஒத்தி வைக்கப்பட்டு நீண்டு கொண்டே போகின்றன. தன் வழக்கில் தானே ஆஜராகின்றவர் இதுபோல் எதிர்தரப்பு வழக்கறிஞர் வாய்தா கேட்டால் கு.வி.மு.ச.309 விளக்கம் (2)-ன்கீழ் செலவுத் தொகை வேண்டும் என்று கேட்கலாம். இது பற்றி முன்பே சொல்லபட்டுள்ளது. செலவுத் தொகை வாங்கிவிட்டால் வழக்கு நியாயமாகவும், விரைவாகவும் முடியும் என நம்பலாம்.

## வாய்தா ஏன் வாங்குகிறார்கள்?

வழக்கறிஞர் ஒரு தரப்பினருக்காக ஆஜராகும்போது கட்சிக்காரர்

உடல் நலம் இல்லாமல் அல்லது வேறு முக்கிய காரணங்களால் ஆஜராக முடியவில்லை என்றால் வழக்கறிஞர் தரப்பினருக்காக மனு செய்து வாய்தா வாங்கிக் கொள்கிறார்.

பிடியாணை வழக்குகளில் அக்யூஸ்டு எனும் கடுமையாகக் குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீனில் வெளிவந்து இருந்தால் அவர்மீது நடவடிக்கை மேற்கொள்வதுதான் சட்டப்படி சரியானதாகும். ஒவ்வொரு விசாரணை அன்றும் இந்த ஒரு சட்டத்தை மட்டும் நீதிமன்றங்கள் கடைப்பிடித்தால் நியாயமான வழக்குகள் நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் என நம்பலாம். ஆனால் வழக்கறிஞர்கள் வேலையில்லாமல் திண்டாட நேரும் என்றோ என்னவோ இதுபற்றி நீதிமன்றமோ வழக்கறிஞர்களோ கண்டு கொள்வதில்லை.

பொய்யான வழக்கு பதிவு செய்திருந்தால் நீதிமன்றமும் வழக்கறிஞர்களும் கூட்டு வைத்துக்கொண்டு எதிரியை ஜாமீனில் வந்துவிட்டால், இனிமேல் கோர்ட்டிலிருந்து சம்மன் அனுப்பும்போது ஆஜரானால் போதும் என்று சொல்லி கிடப்பில் போட்டு விடுவதையும் வழக்கத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த சட்டத்திற்குட்படாத நடைமுறையை தனிப்பிராது வழக்கிலும் கடைப்பிடிக்கிறார்கள். தம் வழக்கில் தாமே ஆஜராகிறவர் இந்த நடைமுறையை எல்லாம் கடுமையாக எதிர்க்க வேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும்.

ஒரு வழக்கை ஒத்திவைக்க வேண்டுமா வேண்டாமா என்பது நீதின்றத்தின் இயல்பான அதிகாரத்தைப் பொருத்ததாகும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வழக்கை ஒத்தி வைக்கும்போது நீதிமன்றம் தகுந்த காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று கு.வி.மு.ச.309(1)-ல் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதைப் பெரும்பாலான நீதிமன்றங்கள் பின்பற்றுவதில்லை. தரப்பினர் தாமே ஆஜராகும்போது இதை எல்லாம் அனுமதிக்கக்கூடாது.

காரணம் இல்லாமல் வழக்கை நீதிமன்றம் ஒத்திவைத்தால் தகுந்த காரணம் தெரிவிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தை

வற்புறுத்த மனுதாருக்கு உரிமை உண்டு. இது மனுதாருக்கு உள்ள இயல்பான அதிகாரம். இந்த அதிகாரம் பற்றி மனுதாருக்கு சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 105-ல் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுந்த காரணம் என்பது வழக்கிற்குத் தேவையான ஆவணங்கள் அல்லது வல்லுநர்களின் அறிக்கை வரவேண்டியிருக்கிறது; அல்லது முக்கிய சாட்சியை அழைத்து விசாரிக்கவேண்டி இருக்கிறது; வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதேயாகும். வழக்கறிஞருக்கு வேறு கோர்ட்டில் வேலை இருக்கிறது என்பதெல்லாம் தகுந்த காரணம் ஆகாது. எனினும் இதுபோல் எதிர்மனுதாரின் வழக்கறிஞர் வேறு கோர்ட்டில் விசாரணை இருக்கிறது என்று தெரிவித்தால் அந்த வழக்கை கொஞ்ச நேரம் ஒத்தி வைத்து மீண்டும் விசாரிக்க வேண்டும் என கோரலாம். இதற்கு பாஸ் ஓவர் (PASS OVER) என்று பெயர். சட்டப் பிரச்சினை எழும்போது சில சமயம் நீதிமன்றமே கூட இந்தப் பாஸ்ஓவரை தரப்பினரிடம் கேட்பதுண்டு. இந்தப் பாஸ் ஓவரை நீதிபதிகளுக்கு அதிக அளவில் வழங்கிய பெருமை எனக்கே உண்டு என்று நான் சொல்லிக் கொள்வதிலும் தவறு இல்லை என்றே கருதுகிறேன். இதுபற்றி நீதியைத் தேடி நெடும் பயணம் என்ற புத்தகத்தில் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

தகுந்த காரணம் இருக்கும்போது நீதிமன்றம் அதை பதினைந்து நாட்களுக்கு மிகாமல் ஒத்தி வைக்க வேண்டும் என்று கு.வி.மு.ச.309(1)

தெரிவிக்கிறது. ஆனால் தேவை இல்லாமல் ஒத்திவைத்துக் கொண்டே போவது நடைமுறையில் இருக்கிறது. வழக்கறிஞர்களை நீதிபதிகளாக நியமிப்பதால் வரும் குறை என்றுக்கூட இதைச் சொல்லலாம்.

இப்படி தகுந்த காரணம் கேட்கும் உரிமை வழக்கறிஞர்களுக்கும் இருந்தாலும் அதை அவர்கள் பயன்படுத்துவது கிடையாது. ஆனால்

தாமே ஆஜராகிறவர் இதை எல்லாம் அனுமதிக்கக்கூடாது.

# வாய்தாகேட்டால் செலவுத் தொகை தரவேண்டும்!

சில சமயங்களில் நீதிமன்றம் தரப்பினரின் மனுவை ஆராய்ந்து வழக்கை ஒத்திவைப்பதும் சரியானதே. ஆனால் அத்தகைய சமயங்களில் நீதிமன்றம் ஒரு உத்தரவினைக் கண்டிப்பாகப் பிறப்பித்தாக வேண்டும்.

ஒரு தரப்பினர் நீதிமன்றத்திடம் வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என்று மனுச்செய்தால் அதை அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளலாம். அப்படி ஒத்திவைக்கும் முன்பாக எதிர்த்தரப்பினருக்கு உரிய செலவுத் தொகை வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடவேண்டியதும் அவசியமாகும்.

ஒருவர் வெளியூரிலிருந்து பஸ்ஸுக்குச் செலவு செய்து நீதிமன்றத்திற்கு வந்திருக்கலாம். வழக்கு ஒத்திவைப்பதால் பஸ் செலவும் வருமானமும் பாதிக்கிறது அல்லவா? எனவே, இந்தச் செலவை நியாயமான அளவில் வாய்தா கேட்கும் தரப்பினர் செலுத்தினால் வழக்கை ஒத்திவைப்பதற்கான தகுந்த காரணமாகக் கொள்ளலாம் என்று கு.வி.மு.ச.309 விளக்கம் (2)-ல் கூறப்பட்டுள்ளது.

தரப்பினர் ஒருவர் தாமே தம் வழக்கில் ஆஜராகிறபோது நீதிமன்றத்தில் இதுபோல் எதிர்த்தரப்பினர் ஒத்திவைக்க மனு கொடுத்தால் தாராளமாக செலவுத் தொகை கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். மனு செய்ய வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. கு.வி.மு.ச. 309 விளக்கம் (2)-ன்கீழ் செலவுத்தொகை வேண்டும் என்று வாயினாலே கேட்டால்கூடப் போதும்.

எதிர்த்தரப்பினர் ஆஜராகாமலே ஒத்திவைத்தால் அல்லது நீதிமன்றம் செலவுத் தொகை தர உத்தரவிட மறுத்தால் மனுச்

செய்தும் பெறலாம்.

சில சமயங்களில் நீதிபதி விடுமுறை எடுத்துவிட்டார் அல்லது வேறு கோர்ட்டுக்குப் போய்விட்டார் என்று நீதிமன்ற ஊழியர்கள் தன்னிச்சையாக ஒத்திவைத்தால் இதுபோன்று ஒரு மனு கொடுத்து செலவுத் தொகை வேண்டும் என்று கேட்டு அதிர்ச்சி வைத்தியம் பார்க்கலாம். பாதிக்கப்பட்டோர் கழகத்தினர்க்கு இது கைவந்த கலையாக இருக்கிறது. தொழிலாளர் நல நீதிமன்றம், நுகர்வோர் நீதிமன்றம்– இவற்றில்கூட செலவுத் தொகை பெற்று சாதனை படைத்து வருகிறார்கள். இதனால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும்போது மற்ற வழக்குகளை வாய்தா போட்டுவிட்டு இவர்கள் வழக்கை அன்றைய தேதியில் மற்றொரு நீதிமன்றத்தில் விசாரிக்க ஏற்பாடு செய்வதும் நடந்து வருகிறது. இதை நீங்கள் நீதிமன்ற ஊழியரிடம் சுட்டிக் காட்டினால் உங்கள் வழக்கையும் மற்றொரு நீதிமன்றத்தில் விசாரிக்க ஏற்பாடு செய்வார்கள் என்று நம்பலாம்.

# வழக்கில் வெற்றி பெற என்ன செய்யவேண்டும்?

ஒரு வழக்கறிஞரிடம் வழக்கை ஒப்படைத்துவிட்டு உரிய கட்டணம் செலுத்திவிட்டால் நம் கடமை அத்துடன் முடிந்து விட்டது என்று கருதக்கூடாது.

வழக்கறிஞர் நீதிமன்றத்தில் வாதாடுவதை ஒரு தொழிலாக வைத்திருக்கிறார். அதனால் ஒரு வழக்கில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்ற ஆராய்ச்சியோ, வழக்கு தோற்குமா, வெற்றி பெறுமா என்ற கவலையோ அக்கறையோ அவர்க்கு அதிகம் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது,

மற்ற தொழில்களைப் போலவே வழக்கறிஞர் தொழிலிலும் போட்டி அதிகமாகத்தான் உள்ளது. எனவே, வருமானம் ஒன்றையே

குறிக்கோளாகக் கொள்வதை குற்றம் சொல்ல முடியாது. எனினும் நாம் செலுத்திய கட்டணத்திற்கு நியாயமாகவும் அக்கறையாகவும் செயல்படுகிறாரா என்பதைக் கண்காணித்துவர வேண்டும்.

முதலில் தம் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து நகல்களும் தம் கைவசம் வைத்திருப்பது மிகவும் அவசியம். வழக்கு சம்பந்தமான சான்றாவணங்கள் நம் கைவசம் வைத்திருந்தால் வழக்கறிஞர் ஓரளவுக்கு நியாயமாக நடப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

ஒவ்வொரு விசாரணையிலும் என்ன நடந்திருக்கிறது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். விசாரணை நடந்து இருந்தால் அது சம்பந்தமாக உடன் மனு போட்டு வாங்கச் சொல்லி கையில் ஒரு ஜெராக்ஸ் நகல் வைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்த்தரப்பினரிடம் தவறான ஒப்பந்தம் செய்து கொண்டு ஆஜராகாமல் எக்ஸ்பார்ட்டீ ஆகத் தீர்ப்பு வழங்கத் துணை செய்வது என்பது நீதிமன்றங்களில் அதிக அளவில் நடந்து வருகிறது. சிவில் வழக்குகளிலும் சிறு குற்ற வழக்குகளிலும் வழக்கறிஞர்கள் இதை ஒரு கொள்கையாகவேதான் வைத்திருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் தங்களை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற தைரியத்தில்தான் இப்படி எல்லாம் செய்கிறார்கள். வழக்கறிஞர் சரியில்லை என்றால் பார்கவுன்சில் சென்றுதான் புகார் செய்ய வேண்டும் என்பதல்ல. அதே கோர்ட்டிலேயே கு.வி.மு.ச.2(ஈ)-யின்கீழ் முறையீடு என்று தலைப்பிட்டு முறையீடு தாக்கல் செய்து ஒரு நெருக்கடியையும் ஏற்படுத்த முடியும். ஆனால் அதற்கான ஆவணங்கள் நம் கைவசம் இருக்க வேண்டும்.

டைரி பார்க்கும் பழக்கம் உள்ளவர்கள் டைரியைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். டைரியில் அன்றன்றைக்கு நடைபெறும் வழக்குகளை அன்றன்றே பதிவு செய்தாக வேண்டும் என்பதால் பதிவு செய்துவிடுவார்கள். வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்றால் அதில் தெரிந்து விடும். டைரி பார்ப்பதால் வழக்கில் என்ன

நடந்துள்ளது என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

சிவில் வழக்குகளிலும், பிரைவேட் கம்ப்ளெய்ண்ட் வழக்குகளிலும் எக்ஸ்பார்ட்டீ ஆகத் தீர்ப்பளிப்பது சர்வ சாதாரணாக நடக்கும். சில பொய் வழக்குகளில் காவல்துறையினரும் இதற்கு ஒத்துழைக்கிறார்கள் என்பதுதான் மிகவும் வேதனையான விசயம்.

டைரி பார்க்கும்முறை தெரியாவிட்டாலோ நீதிமன்றத்திற்குப் போக நேரம் இல்லாவிட்டாலோ என்ன செய்வது? அதற்கும் வழி இருக்கிறது.

வழக்கறிஞரிடம் வழக்கு துவங்கிய நாளிலிருந்து அன்றைய தேதி வரை உள்ள பி.எக்ஸ்ட்ராக்ட் டைரி (B. EXTRACT DIARY) நகல் ஒன்று நீதிமன்றத்திலிருந்து வாங்கித் தரவேண்டும் என்று வற்புறுத்தி வாங்கிப் பெற வேண்டும்.

இந்த எக்ஸ்ட்ராக் டைரியில் ஜெனரல் டைரியில் பதியக்கூடிய அத்தனை விசயங்களும் வரிசைக்கிரமமாக வந்து விடும். இதை ஒரு வழக்கின் வரலாற்றுச் சுருக்கம் என்று கூடச் சொல்லலாம். சிவில் நீதிமன்றங்களில் பெறுவது ஏ எக்ஸ்ட்ராக்ட் டைரி என்றும், குற்றவியல் நீதிமன்றங்களில் வழங்கப்படுவது பி.எக்ஸ்ட்ராக்ட் டைரி என்றும் வழங்கப்படும்.

சில வழக்குகளில் நியாயம் இருந்தால்கூடத் தோற்றுப் போகும். அந்த வழக்குகளின் எக்ஸ்ட்ராக்ட் டைரி வாங்கிப் பார்த்தால் வழக்கு ஏன் தோற்றது என்பதற்கான காரணத்தைப் கண்டுபிடித்துவிடலாம்.

பெரும்பாலும் மேல்நீதிமன்றத்தில் மேல்முறையீடு (Appeal) செய்யும் போது உத்தரவு நகல் வாங்கும் போது இந்த டைரியை வாங்கிப் பார்க்க வேண்டும் என்ற விபரம் வழக்கறிஞர்களுக்குக் கூடத் தெரியவில்லை.

## வழக்கறிஞர் ஏமாற்றினால் என்ன செய்வது?

கட்சிக்காரரிடம் பணம் வாங்கிக் கொண்டு வழக்கறிஞர்

ஏமாற்றுவது என்பது எந்தக் காலத்திலும் இருந்து வருகிறது. தரப்பினரிடம் விழிப்புணர்வு இல்லாததே காரணமாகும்.

ஒரு வழக்கறிஞர் கட்சிக்காரர்களுக்கு எதிராக நடக்கக்கூடாது என்று சாட்சிய சட்டம் பிரிவு 126-ல் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதுபோல் வழக்கறிஞர் சட்டத்திற்குப் புறம்பாக2 நடந்தால் அவர்மீது இந்தியத் தண்டனைச்சட்டத்தின் 109-வது பிரிவின்படி குற்றவியல் வழக்கு தொடர முடியும். அதே நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.2(ஈ)யின்கீழ் ஒரு முறையீடும் தாக்கல் செய்யலாம்.

வழக்கறிஞர்க்குக் கட்டணம் செலுத்திய ரசீது இருந்தால் நுகர்வோர் கோர்ட்டிலும் வழக்கு தொடரலாம். கட்டணம் வாங்கிக் கொண்டு வழக்கில் ஆஜராகாமல் இருந்த வழக்கறிஞர்களுக்கு ஏற்கனவே நுகர்வோர் நீதிமன்றங்கள் தரப்பினருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று பல வழக்குகளில் உத்தரவிட்டுள்ளன.

சில வழக்கறிஞர்கள் நியாயமாக வாதாடினாலும், வழக்கில் நியாயம் இருந்தாலும் சில சமயம் தோற்றுப் போய்விடுவதுண்டு. ஒரு வழக்கு தோற்றுப் போய்விட்டது என்பதை மட்டுமே காரணம் காட்டி வழக்கு தொடர முடியாது. எனினும் தவறாக தரப்பினருக்காக குற்றவாளிக்கு ஆதரவாக வாதாடினால் தண்டனையும் அபராதமும் உண்டு. அதாவது எதிரிக்கு ஆஜராகிய வழக்கில் எதிரிக்கு அபராதம் தண்டனை வழங்கப்படும் போது அந்த வழக்கில் எதிரி குற்றவாளி என்று தெரிந்தே வழக்கறிஞர் ஆஜராகி இருக்கிறார் என்பது தெரியவந்தால் எதிரிக்கு வழங்கிய தண்டனையில் பாதி வழக்கறிஞருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் மனு செய்வது வழக்கத்தில் இருக்கிறது. இதுவரை வழக்கறிஞர்க்கு இதன்படி தண்டனை வழங்காவிட்டாலும் இனி வழங்கியே ஆக வேண்டும் என்பதில் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் பெரும் முயற்சியில் இருக்கிறார்கள்.

வழக்கறிஞர்களைக் கட்டுப்படுத்துவதற்கென்று வழக்கறிஞர்

சட்டம் (Advocate Act) உள்ளது.

உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அவை (Bar Council) உள்ளது.

ஒவ்வொரு வழக்கறிஞரும் தொழில் துவங்கும் முன்பாக இங்கே பெயரைப் பதிவு செய்தாக வேண்டும். இங்கு தங்கள் பெயரைப் பதிவு செய்யும் வழக்கறிஞர்கள் சில உறுதிமொழிகளையும் எடுத்துக் கொள்வார்கள். இவற்றில் கட்சிக்காரருக்கு நியாயமாக நடக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும். எனவே, தரப்பினர்க்கு எதிராக நடந்து கொள்ளும் பட்சத்தில் அட்வகேட் ஆக்ட் 1961-ன் பிரிவு 35-ன் கீழ் வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பார்கவுன்சிலில் புகார் செய்யலாம். எனவே, வழக்கறிஞரால் பாதிக்கப்பட்டவர்கள்

திரு செயலாளர் அவர்கள்,

வழக்கறிஞர் அவை,

உயர்நீதிமன்ற வளாகம்,

சென்னை- 600 104 - என்ற முகவரிக்குப் புகார் செய்யலாம்.

இது சம்பந்தமான விதிமுறைகளையும், விண்ணப்பத்தையும் பார்கவுன்சிலில் நேரிலேயோ தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

வழக்கறிஞர் அவைக்குப் புகார் செய்வதென்றால் சில விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

1. புகார் மனு ஏழு பிரதிகள் இருக்க வேண்டும்.

2. புகார் மனு ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டும் என முன்பு விதிக்கப்பட்டது. தற்போது தமிழிலும் தரலாம் என விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3.மனுவுடன் உரிய சான்றாவணங்கள் தாக்கல் செய்யும்போது ஒரு மனுவில் உண்மை நகலுடன், பிற ஆறு பிரதிகளிலும் உரிய ஜெராக்ஸ் நகல் இணைக்கவேண்டும்.

4. ரூ. 1750/-க்கான வங்கி வரைவோலை திரு.செயலாளர்,

பார் கவுன்சில்ஆப் தமிழ்நாடு என்ற பெயரில் எடுத்து இணைக்க வேண்டும். இந்தத் தொகையானது விண்ணப்பக் கட்டணம், வழக்கறிஞர்க்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைப்பதற்காக செலுத்த வேண்டும்.

இந்த முறைப்படி புகார் செய்தால் உரிய வழக்கறிஞரை வரவழைத்து நீதிமன்றத்தில் விசாரிப்பதுபோலவே விசாரிப்பார்கள். புகார் மனுதார் சாட்சிகள் இருந்தால் தம் செலவிலேயே அழைத்துச் சென்று சாட்சியம் கூறச் செய்யலாம்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் பார்கவுன்சில் அவையிலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ அவரை நீக்கிவிடுவார்கள். இப்படிப் பெயர் நீக்கம் செய்யப்பட்டு விட்டால் அந்த வழக்கறிஞர் கோர்ட்டில் யாருக்காவும் ஆஜராக முடியாது.

வழக்கறிஞர்மீது முதலிலேயே வழக்கு போடுவதைவிட இதுபோல் வழக்கறிஞர் அவைக்குப் புகார் செய்து, வழக்கறிஞர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அந்த உத்தரவு நகலை வைத்தே நஷ்டஈடு வழக்கு தொடர்ந்து எளிதில் உரிய நஷ்ட ஈடும் பெறலாம்.

அல்லது நீதிமன்றத்தில் புகார் செய்து சாதகமாக தீர்ப்பு கிடைத்தாலும் அதை வைத்தே வழக்கறிஞர் அவைக்குப் புகார் செய்து தொழில் செய்வதைத் தடை செய்யலாம்.

எல்லா வழக்கறிஞர்களையும் குற்றக்கண் கொண்டு பார்ப்பது சரியல்ல. சில வழக்கறிஞர்கள் தாமே வழக்கில் ஆஜராகிறவர் மீது பிரியம் காட்டுவதும் உண்டு. அத்தகைய வழக்கறிஞரைத் தேடிக் கண்டு பிடித்து சுமுகமான உறவு வைத்துக்கொண்டால் தகுந்த ஆலோசனை வழங்குவார்.

# மேல்முறையீடு செய்வது எப்படி?

ஒரு வழக்கில் கீழமை நீதிமன்றம் தகுந்த ஆதாரம் இல்லை

என்றோ குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றோ வழக்கைத் தள்ளுபடி செய்யும் போதோ அல்லது எதிரியாக இருக்கும் போது தண்டனை வழங்கப்பட்டது சரியல்ல என்று கருதும்போதோ அமர்வு நீதிமன்றத்தில் (Sessions Court) மேல்முறையீடு (Appeal) செய்யலாம்.

கு.வி.மு.ச.203-ன்கீழ் தகுந்த ஆதாரம் இல்லை என்று மனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும் அமர்வு நீதிமன்றத்தில் சீராய்வு மனு (Revision Petition) தாக்கல் செய்யலாம்.

பொய்ப்புகாரில் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்துவிட்டால் தப்பித்தால் போதும் என்று பெருமூச்சு விடுவதுதான் பாமரர்களின் வழக்கம். ஆனால் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் நீதிமன்றம் இப்படி வெறுமனே விடுதலை செய்வதை அனுமதிப்பதில்லை.

ஒரு புகார்தாரருக்கு குற்றப் புகாரில் உள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய சுமை இருப்பதால் இ.த.ச.211-ன்கீழ் தவறாகப் புகார் கொடுத்தவர்க்குத் தண்டனை வழங்காமல் தன்னை விடுதலை செய்தது சரியல்ல என்று அமர்வு நீதிமன்றத்தில் கு.வி.மு.ச. 378-ன்கீழ் சீராய்வு மனு செய்து தீர்வுகாண்பதிலும் முன்னணியில் நிற்கிறார்கள். அதனால் காலப்போக்கில் பொய்ப் புகார் எல்லாம் இனி கோர்ட்டில் வராது என்று நம்பலாம்.

முதலில் வழக்கு நடந்த நீதிமன்றத்தின் உத்தரவு நகல் கேட்டு மனுச் செய்து நகல் (CERTIFIED COPY) பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேல்நீதின்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் முப்பது நாட்களாகும்.

நகல் மனு கோரும் போது அவசர மனு என்றால் மூன்று நாட்களில் தர வேண்டும் என்று நடைமுறை விதி உள்ளது. ஆனால் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கி கொண்டே போவதால் குறிப்பிட்ட

காலத்திற்குள் நகல் தர இயலவில்லை.

அதனால் ஒரு புதிய நடைமுறையும் வைத்திருக்கிறார்கள். அதாவது மேல்முறையீடு செய்ய கால அவகாசம் முப்பது நாட்கள் என்பதை வழக்கு முடிந்த தேதியிலிருந்து கணக்கிடாமல் நகல் வழங்கிய தேதியிலிருந்து முப்பது நாள் என்று கணக்கில் கொள்வதை பின்பற்றுகிறார்கள். அதனால் நகல் பெறுவதில் எத்தனை தாமதம் ஆனாலும் கவலை இல்லை. நகல் பெற்ற முப்பது நாட்களுக்குள் மேல்முறையீடு மனு செய்தால் போதும்.

முப்பது நாட்கள் என்பது நகல் தயாரான நாள் என்று கணக்கிடப்படுவதால் நகல் தயாரானவுடன் விரைந்து பெற்றுக் கொண்டு மேல் முறையீடோ சீராய்வோ தாக்கல் செய்துவிட வேண்டும்.

முறைப்படி விசாரித்து முடிவு செய்த வழக்காக இருந்தால் கு.வி.மு.ச.372-ன்கீழ் மேல்முறையீட்டு மனு (APPEAL) என்று குறிப்பிட வேண்டும்.

தம் வழக்கில் தாமே ஆஜராகின்றபோது பெரும்பாலான வழக்குகளில் கீழமை நீதிமன்றங்கள் கு.வி.மு.ச. 203-ன்கீழ் தகுந்த ஆதாரம் இல்லை என்று தள்ளுபடி செய்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்த நடைமுறை இப்போது வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. அதாவது புகார் மனுதார் மனு தாக்கல் செய்யும்போதே சங்கதிகள் நிரூபிக்கப்படாவிட்டால் இ.த.ச.211-ன்கீழ் தண்டனையை எற்றுக் கொள்வேன் என்ற உறுதி மொழியும் தாக்கல் செய்து விடுவதால் நீதிமன்றங்கள் எதற்கு வம்பு என்று நேர்மையாக விசாரித்து முடிப்பதையே விரும்புகின்றன என்பது ஒரு நல்ல மாற்றம் என்றே சொல்ல வேண்டும்.

அதையும் மீறி தள்ளுபடி செய்தால் கு.வி.மு.ச.398-ன் கீழான சீராய்வு மனு (REVISION PETITION) என்று அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

இதுபோல் ஒரு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டபோது மதுரை அமர்வு நீதிமன்றம் அரசு வழக்கறிஞரை எதிர்மனுதாராகச் சேர்க்க வேண்டும் என்று மனுவைத் திருப்பி அளித்தது. இது சரியல்ல என்றும், காவல்துறை பதிவு செய்த வழக்குகளில் மட்டுமே அரசு வழக்கறிஞரை எதிர்மனுதாராகச் சேர்க்க வேண்டும் என்று விளக்கம் அளித்தபோது அதை மதுரை அமர்வு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

சீராய்வு மனு தயார் செய்யும் போது கீழமை நீதிமன்றத்தில் தயார் செய்வதுபோலவே தயார் செய்ய வேண்டும். வழக்கு பற்றிக் குறிப்பிடும் / 2012 என்றோ இடத்தில் குற்றவியல் சீராய்வுமனு எண் ஆங்கிலத்தில் Cr.R.P.No..../2012 என்றோ குறிப்பிட வேண்டும். CRIMINAL REVISION PETITION என்பதன் சுருக்கம்தான் இது.

வழக்கு மனுவுடன் கீழமை நீதிமன்றத்தின் சான்றிட்ட நகலில் ஐந்து ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும். குற்றவியல் சீராய்வு மனு என்று குறிப்பிடும் போது இந்தச் சீராய்வு மனு எந்த வழக்கிலிருந்து பிறந்திருக்கிறது என்பதை நீதிமன்றம் அறிந்து கொள்வதற்காக உள் என்று குறிப்பிட்டு அந்த வழக்கு எண், நீதிமன்றத்தின் பெயர், ஊர் ஆகியன குறிப்பிட வேண்டும். பின்பக்கமும் இதுபோல் குறிப்பிட வேண்டும்.

மனுவின் முடிவில் கீழமை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து மீண்டும் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது என்று குறிப்பிட வேண்டும்.

பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் இதுபோல் மேல்முறையீடோ சீராய்வு மனுவோ தாக்கல் செய்யும் போது கீழமை நீதிமன்ற நீதிபதியையே முதல்

எதிர்மனுதாராகச் சேர்க்கிறார்கள். ஒரு மேல் விசாரணையைத் துவங்கும் மேல்நீதிமன்றம் கீழமை நீதிமன்றத்திடம் கருத்து கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்று கு.வி.மு.ச.404-வது பிரிவில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்நீதிமன்றத்தில் கீழமை நீதிமன்ற நீதிபதியை முதல் எதிர்மனுதாராகச் சேர்த்துள்ளது சரியே என்று வாதம் செய்கிறார்கள். இதையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதுபோல் கீழமை நீதிமன்ற நீதிபதியை முதல் எதிர்மனுதாராகச் சேர்ப்போம் என்பது தெரிந்தாலே அவர்கள் சட்டப்படி விசாரித்து முடிவு செய்வார்கள் அல்லவா?

பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் எந்த மனு தாக்கல் செய்தாலும் அவிடவிட் என்கிற பிரமாணம் தாக்கல் செய்வதும் வழக்கம். அதுபோலவே மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டால் நீதிமன்றம் விதிக்கின்ற தண்டனையையோ அபராதத்தையோ ஏற்றுக் கொள்வேன் என்றும் உறுதி மொழி தருகிறார்கள்.

இப்போது பாதிக்கப்பட்டோர் கழகத்தினர்க்கு நீதிமன்றம் என்பது ஒரு விளையாட்டு மைதானம் போல் ஆகிவிட்டது. அதனால் இத்தகைய உறுதிமொழியில், ‘நான் சரியான வருமானம் இல்லாதவன். அதனால் நீதிமன்றம் அபராதம் விதித்தால் என்னால் செலுத்த முடியாது. எனவே, கூடுதல் தண்டனை வழங்கிடுமாறு வேண்டுகிறேன்‘ எனறும் உறுதி மொழி தருகிறார்கள். இந்த முறையை நீங்களும் பின்பற்றலாமே!

கீழமை நீதிமன்றத்தில் பணி துவங்கும் காலை நேரத்தில் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை அமர்வு நீதிமன்றத்தில் கிடையாது. அலுவலக நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் உரிய அலுவலரிடம் கொடுத்துவிடலாம். அல்லது உரிய அலுவலகத்தில் மனு தாக்கல் செய்ய இ-பைலிங் செக்ஷனில் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

கீழமை நீதிமன்றத்தில் மனு விசாரணைக்கு உடனே வருவதுபோல் எல்லாம் இங்கே வராது. தாக்கல் செய்யப்பட்ட மனு உரிய புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் நீதிபதியின் பார்வைக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கோ செல்லும். மனு

சரிபார்க்கப்பட்டு சரியாக இருந்தால் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு எண் வழங்கப்பட்டிருக்கும். அத்துடன் மனு விசாரணைக்கு வரும் நாள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பொதுவாக மனுவை அலுவலத்தில் சமர்ப்பித்து ஒரு வாரம் கழித்து நீதிமன்றத்திற்குச் சென்று செசன்ஸ் கிளர்க்கிடம் இதுபற்றிய விபரம் தெரிந்து கொண்டு உரிய நாளில் ஆஜராக வேண்டும்.

மனு சரியாகப் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது திரும்பிவிடும்.

திரும்பப் பெறும்போது உரிய புத்தகத்தில் கையெழுத்திட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். காரணங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து மீண்டும் தாக்கல் செய்ய வேண்டும்.

# மேல்முறையீட்டில் விசாரணை எப்படி நடக்கிறது ?

முதல் விசாரணை நாளன்று மனுதார் ஆஜராகிறபோது மனுதாரின் முறையீடு என்ன என்பதைத் தெரிந்து கொண்டு நீதிபதி அவர்கள் எதிர்மனுதார்க்கு படி கட்ட உத்தரவிடுவார். கீழமை நீதிமன்றத்தில் போலவே நபர் ஒருவர்க்கு ரூ.4.50பைசாவும், இரண்டாவது நபர்க்கு ரூ.2.50பைசாவும் ஸ்டாம்ப் ஒட்டி மனுச் செய்ய வேண்டும். இத்துடன் எத்தனை எதிர்மனுதார்கள் இருக்கிறார்களோ அத்தனை மனுவின் ஜெராக்ஸ் நகலும் இணைக்க வேண்டும்.

படி கட்டி விட்டால் போதாது. எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்க நீதிமன்றம் தபால் அனுப்புவதற்காக எதிர்மனுதாரர்களின் முகவரி எழுதி உரிய அஞ்சல் தலை ஒட்டிய கவரும் இணைக்க வேண்டும். இந்த நடைமுறை மேலாய்வு மனு செய்யும்போது மட்டும்தான். சீராய்வு மனு என்றால் பதிவு அஞ்சல் கவர் எல்லாம் இணைக்கத் தேவையில்லை.

நீதிமன்றத்தில் என்ன நடைபெற்றுள்ளது என்பதை உறுதியாகத்

தெரிந்து கொள்ள டைரி பார்ப்பதை ஒரு முக்கியக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

ஊழியர்கள் சில நேரம் வேண்டுமென்றோ எரிச்சலின் காரணமாகவோ அல்லது அலட்சியத்தின் காரணமாகவோ தவறான தகவல் தரவும் வாய்ப்பு உண்டு. ஊழியர்கள் சொன்னது சரியாக இருக்கிறதா என்று டைரியில் பார்த்து சரிபார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை சுருக்கமாகவே இருக்கும். ஒரு சீராய்வு மனு சரியான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கருதும் போது கீழமை நீதிமன்றத்தின் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று கு.வி.மு.ச. 398-ன்கீழ் உத்தரவிடப்படும். சரியான காரணம் இல்லை என்று கருதும் போது மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படும்.

கீழமை நீதிமன்றத்தில் போலவே நியாயத்தை நிலைநாட்டுவதற்காக எத்தனை பல்வகை மனு வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம். அத்தனை மனுக்களுக்கும் ஒரு எண் வழங்கப்பட்டு முடிவு செய்யப்படும். மேல்முறையீட்டு விசாரணை என்றால் எதிர்மனுதார்களுக்கு அழைப்பாணை மற்றும் மனுவின் நகல் அனுப்பி வைக்கப்பட்டு விரிவான விசாரணை நடக்கும்.

மனுதார் மனு தள்ளுபடி செய்யப்பட்டால் நீதிமன்றம் விதிக்கின்ற அபராதம் அல்லது தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் என்று உறுதிமொழியுடன் தாக்கல் செய்துவிட்டால் உண்மையாகவே விசாரித்து உத்தரவிடப்படும் என நம்பலாம்.

## அமர்வு நீதிமன்றத்தில் நகல் பெறுவது எப்படி?

ஒரு உத்தரவு சம்பந்தமாகவோ வேறு நகல் கேட்டோ அமர்வு

நீதிமன்றத்தில் அலுவலக நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் மனு செய்யலாம்.

அமர்வு நீதிமன்றத்தில் நகல் அலுவலகம் என்று தனிப் பிரிவு இருக்கும். அங்கு உரிய அலுவலரிடம் தரலாம். அல்லது அதற்கென்று இருக்கும் பெட்டியில் போட்டுவிடலாம். வாய்ப்பு இருந்தால் சிறிது நேரம் கழித்துச் சென்று நகல் மனு எண்... Copy Application No..... கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்.

கீழமை நீதிமன்றத்தில் கொடுத்ததுபோல முத்திரைத் தாள்களைச் சேர்த்தே இணைக்க முடியாது. வெறும் மனு மட்டும்தான் தர வேண்டும். கட்டணமாக பத்து ரூபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும்.

அமர்வு நீதிமன்றத்தில் மனு செய்தால் பொதுவாக ஒரு வார காலத்தில் உத்தரவாகி வந்துவிடும். நகல் அலுவலகத்தில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் புத்தகம் இருக்கும். நகல் கொடுத்த தேதியை ஞாபகம் வைத்துக் கொண்டு உரிய புத்தகத்தில் டைரி பார்ப்பதுபோல் பார்க்க வேண்டும். அதில் எத்தனை முத்திரைத்தாள்கள் எந்தத் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற விபரமும் இருக்கும். பொதுவாக உத்தரவு தேதியிலிருந்து நான்கு நாட்கள் அவகாசம் வழங்குவது நடைமுறையில் இருக்கிறது.

குறிப்பிட்ட கடைசி நாட்களுக்குள் உரிய முத்திரைத் தாள்கள் சமர்ப்பிக்காது போனால் மனு செல்லாததாகிவிடும். மீண்டும் புதிய மனு தர வேண்டும். மறு உத்தரவு வரும் வரையில் காத்திருக்க வேண்டும். அல்லது காலாவதியான மனுவுடன் உரிய காரணங்களுடன் மன்னிப்பு கோரும் மனு இணைத்து தாக்கல் செய்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும். மனு திருப்பப்பட்டால் உரிய முறையில் பூர்த்தி செய்து மீண்டும் சமர்ப்பிக்கலாம். கட்டணம் தேவை இல்லை.

அலுவலகத்தில் CALL FOR BOOK என்று ஒரு நோட்டு இருக்கும்.

அதில் வழக்கு எண், நகல் மனு எண்ணை வைத்து பார்த்தால் விபரம் தெரிந்து கொள்ளலாம். அதில் வழக்கு எண், உரிய முத்திரைத்தாள்கள் எவ்வளவு என்ற விபரம் இருக்கும்.

முன்பெல்லாம் முத்திரைத்தாள்கள் சமர்ப்பிக்கும் போது முத்திரைத்தாள் விழுந்துவிடாதபடி அனைத்தையும் ஓரத்தில் தையல் போட்டு தைத்து இரண்டாக மடித்து ஒரு மூலையில் வழக்கு எண், பெயர், எத்தனை முத்திரைத்தாள்கள் என்பதை சுருக்கமாக எழுதி உரிய அலுவலரிடம் தர வேண்டும். தற்போது நகல் கட்டணம் மெமோ மூலமாகத்தான் நீதிமன்ற வில்லையாக கட்டணம் செலுத்த வேண்டும்.

நகல் பெறுவதற்குரிய கால அவகாசம் எவ்வளவு என்பதை உரிய அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மிக அவசரம் என்றால் அதுபற்றி குறிப்பிட்டுச் சொன்னால் வரிசைப்படி வருவதற்கு முன்பாகவே நகல் தயாரித்துத் தருவார்கள்.

## உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது எப்படி?

ஒரு அமர்வு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை நகல் பெற்ற முப்பது நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

கீழமை நீதிமன்றத்தில் மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு, அமர்வு நீதிமன்றத்திலும் கீழமை நீதிமன்றத்தின் உத்தரவு சரியானதே என்று தள்ளுபடி செய்யப்பட்டு இருந்தால் கு.வி.மு.ச. 482-ன்கீழ் மனு என்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் பல பிரிவுகள் உள்ளன. குற்றவியல் பிரிவு (CRIMINAL O.P. SECTION) என்று தனியாக இருக்கும். அங்குதான் மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். மனுவுக்குத் தலைப்பிடும் போது

Crl. O.PN........2012 என்று குறிப்பிட வேண்டும். கிரிமினல் ஒரிஜினல் பெட்டிஷன் (CRIMINAL ORIGINAL PETITION) என்பதன் சுருக்கம்தான் இது.

இந்த மனுவில் இருபது ரூபாய்க்கான முத்திரைக் கட்டணம் ஒட்டி தாக்கல் செய்ய வேண்டும். அத்துடன் கீழமை நீதிமன்ற உத்தரவின் சான்றிட்ட நகலும், அமர்வு நீதிமன்ற உத்தரவின் சான்றிட்ட நகலும் இணைக்க வேண்டும். சான்றிட்ட உண்மை நகல்களில் தனியாக ஐந்து ரூபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப் ஒவ்வொன்றிலும் ஒட்ட வேண்டும்.

## உயர்நீதிமன்ற மனு தமிழில் இருக்கலாமா?

உயர்நீதி மன்றத்தைப் பொருத்த மட்டில் ஆங்கிலத்தைத்தான் முழுக்க முழுக்க பயன்படுத்துகிறார்கள். என்றாலும் ஆங்கிலத்தில்தான் மனு இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. இதுபற்றி அரசியல் சாசனத்தில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு மட்டும் ஆங்கிலத்தில் இருந்தால் போதும் என்றும் மற்ற நடவடிக்கைகள் தமிழில் இருக்கலாம் என்றும் விதிவிலக்கு தரப்பட்டுள்ளது. இந்தியக் குடிமகன் ஒவ்வொருவர்க்கும் சுதந்திரமாகப் பேசவும், எழுதவும் கோட்பாடு 19–ன்படி முழுச் சுதந்திரம் உள்ளது. எனவே நியாயம் பெறுவதில் ஒரு மொழி தடையாக இருக்க முடியாது.

உயர்நீதிமன்றத்தில் ஆங்கித்தில்தான் பெரும்பாலும் பேசுகிறார்கள் என்றாலும் ஆங்கிலம் பேசத் தெரியாவிட்டால் தமிழில் பேசவும் அனுமதிக்கிறார்கள். தமிழில் பேச உரிமை இருக்கும்போது மனு செய்ய உரிமை இல்லாமல் எப்படி போகும்?

தற்போது உச்சநீதிமன்றத்தில் கூட தமிழில் வாதாடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக அண்மையில் மார்க்கண்டேய கட்ஜு என்ற நீதிபதி ஒரு விழாவில் இதைப் பெருமையோடு தெரிவித்துள்ளார்.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாது என்றால் மனு விசாரணைக்கு வரும் முன்பாகவே செக்சன் ஆபீசரிடம் (SECTION OFFICER) இதுபற்றி விபரம் தெரிவித்தால் தமிழ் தெரிந்த நீதிபதி விசாரிக்கும் கோர்ட்டுக்கு அவர் அனுப்பி வைப்பார்.

உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்துமே ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. அதனால் உயர்நீதிமன்றம் வரை சென்று வாதாடும் வரை போராட வேண்டியிருக்கும் போது சிறிதளவாவது ஆங்கிலம் தெரிந்து வைத்துக் கொண்டால்தான் நல்லது. உயர்நீதிமன்றத்தில் பணிகள் ஓய்வில்லாமல் இருக்கும். சிறு சிறு சந்தேகங்களைக்கூட பிறரிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தால் இந்த நிலை மனுதாருக்கு நீதி கிடைப்பதில் தாமதத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

ஒரு முறை உயர்நீதிமன்றத்தில் சுபாஷன் ரெட்டி என்பவர் தலைமை நீதிபதியாக இருந்தார். இவர்க்கு தமிழ் தெரியாது. பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் நிறைய வழக்குகள் தாக்கல் செய்தது பெரும் கஷ்டமாக இருந்தது. அதனால் ஒரு புது நடைமுறையை அமுல்படுத்த ஆணையிட்டார். அதாவது மனு மட்டும் அல்லாமல் அதில் இணைக்கப்படும் கீழமை நீதிமன்ற ஆவணங்களும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துதான் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார். இப்படி தேவையான விதிகளை வகுத்துக் கொள்ளலாம் என்று கு.வி.மு.ச. 477–ல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால் அதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா? பாதிக்கப்பட்டோர் கழகத்திலிருந்து இதற்கு கடுமையான ஆட்சேபம் செய்து அவர் மீது ஒரு வழக்கே பதிவு செய்யப்பட்டது. நமது எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு

கேரளாவுக்குப் போய்விட்டார். வழக்கு தாக்கல் செய்த போதே அவர் உத்தரவு கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

ஈஸ்வரி என்ற பெண் எழுதப் படிக்கக்கூடத் தெரியாதவர். இவர் ஆந்திராக்காரர். இவர்கூட உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணைக்குக் கொண்டு வந்தார். ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் ஒரு பெரிய அதிசயம் நடந்துள்ளது.

மன்னம்மாள் என்ற பெண் கைநாட்டு போடும் கிராமத்துப் பெண். இவரது வழக்கறிஞர் சரியில்லாததால் இதுபற்றி நீதிபதியிடம் முறையிட்டு வழக்கறிஞர் இல்லாமல் தானே வாதாடுவதாக வாய் மூலமே அனுமதி பெற்று சிறப்பாக வாதாடி தனக்கு ஆதரவான உத்தரவையும் பெற்று சாதனை படைத்தாள் என்பது நம்பமுடியாத செய்தி. ஆனாலும் இது உண்மை. இது பல வருடங்களுக்கு முன்பு நடந்தது.

மன்னம்மாள் போல பல சின்னம்மாள்கள் கோர்ட்டுகளில் என்னென்ன சாதனை எல்லாம் பண்ணுகிறார்கள் என்பதை பாதிக்கப்பட்டோர் கழகத்தை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

# உயர்நீதிமன்றத்தில் விசாரணை எப்படி நடக்கிறது?

முன்பெல்லாம் வழக்கு தாக்கல் செய்தவுடன் அன்றே டைரியில் பதிவு செய்து வரிசை எண் கொடுப்பார்கள். இதைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அன்றோ அல்லது சில நாள் கழித்தோ டைரியைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம். தற்போது S.R.No. உங்கள் போனுக்கு SMS ஆக வந்துவிடும்.

உயர்நீதிமன்றத்தில் எத்தனை சரியாக மனு தாக்கல் செய்தாலும் சில உப்புப் பெறாத காரணங்களைச் சொல்லி திருப்பி திருப்பிவிடுவதை வழக்கமாகவேதான் வைத்திருந்தார்கள். இதனால்

கோபம் கொண்ட பாதிக்கப்பட்டோர் கழகத்தினர் அந்த ஊழியர்மீதே ஒரு வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் தற்போது பார்ட்டி இன் பெர்சன் என்றாலே முக்கியத்துவம் தருகிறார்கள் என்பது சிறப்புச் செய்தி.

மனு திருப்பப்பட்டிருந்தால் அதில் சில காரணங்கள் சொல்லப்பட்டிருக்கும். அதைப் பூர்த்தி செய்து மீண்டும் சமர்ப்பிக்கலாம். இந்த டைரி எப்போதும் மேஜைமீது வெளியில்தான் கிடக்கும். பல மாதங்களுக்கு முந்திய டைரிகூட இங்கு இருக்கும். டைரியைப் பார்த்து முதலில் வரிசை எண்ணைக் கண்டு பிடித்து, அதில் வழக்கு எண், வழக்கின் கோப்பு – கேஸ் கெட் எந்த அலுவலரிடம் இருக்கிறது என்று சுருக்கெழுத்தில் இருக்கும். அது யார் என்று தெரிந்து கொண்டு அவரிடம் விசாரித்து தெரிந்து கொள்ளலாம்.

தற்போது உயர்நீதிமன்றத்தில் தகவல் மையமும் இருக்கிறது. இந்தத் தகவல் மையத்தைத் திறக்க என் வழிகாட்டுதலே துணை இருந்தது என்றால் மிகையல்ல. ஒருமுறை பெரிய வழக்கு போட வேண்டும் என்பதற்காக 32 எதிர்மனுதார்களைச் சேர்த்து ஒரு ரிட் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு கோப்புகளை ஒரு சாக்குப் பையில் கொண்டு போய்த்தான் சமர்ப்பித்தேன். அட்டெஸ்ட் கேட்டபோது பயந்துபோய் தர மறுத்துவிட்டார்கள். நான் நினைத்தது போலவே கேஸ் கட்டு காணாமல் போய்விட்டது. பிறகு போலீசில் புகார் செய்து வரவழைத்தேன். இந்த நீதிப் போராட்டத்தின் விளைவாகத்தான் அப்போது தலைமை நீதிபதியாக இருந்த ஏ.பி.ஷா அவர்கள் முதலில் அட்டெஸ்ட் வழங்கும் பாரம் எண் 620-ஐ வெளியிட உத்தரவு பிறப்பித்தார். அதைத் தொடர்ந்து தகவல் மையமும் திறக்கப்பட்டது என்பது சிறப்புச் செய்தி. இங்கு எந்த ஒரு வழக்கு பற்றி விபரம் கேட்டாலும் பிரிண்ட் எடுத்தே கொடுத்துவிடுகிறார்கள்.

முன்பெல்லாம் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு

விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால் உரிய எண் வழங்கப்படும். அது முக்கிய டைரியில் பதிவாகிவிடும். இதைப் பார்த்து தெரிந்து கொண்டு உரிய அலுவலரிடம் கேட்டு என்று விசாரணைக்கு வரும்... எந்தக் கோர்ட்டில் விசாரணைக்கு வரும்... என்று விபரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். தற்போது உங்கள் போனுக்கு SMS ஆக வந்துவிடும்.

சில சமயம் விசாரணைத் தேதி மட்டும்தான் சொல்வார்கள். எந்தக் கோர்ட் என்று தெரியவில்லை என்றால் விசாரணை நாளன்று பத்து மணிக்கே அலுவலகம் சென்று உரிய அலுவலரிடம் கேட்டால் எந்தக் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று சொல்லி விடுவார்.

உயர்நீதிமன்றத்தில் பல கோர்ட்டுகள் உள்ளன. ஏராளமான வழக்குகள் விசாரணைக்கு வருகின்றன. அதனால் விசாரணை நாளன்று விசாரணைக்கு வருகின்ற வழக்குகளுக்கெல்லாம் ஒரு வரிசை எண் கொடுத்திருப்பார்கள். இது அச்சிடப்பட்டு கோர்ட் வாசலில் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கும். முதலில் எந்த கோர்ட் என்று தெரிந்து கொண்டு அந்தக் கோர்ட் வாசலில் அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைத்துள்ள பட்டியலில் நமது வழக்கு எந்த எண் என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். கீழ்கோர்ட்டில் போல எப்போது விசாரணைக்கு வருமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. இங்கு வரிசை எண் படித்தான் விசாரணைக்கு வரும். அதனால் அந்த நேரத்தில் கூப்பிடும்போது ஆஜராகிவிட வேண்டும்.

பொதுவாக ஜாமீன் தரக்கூடிய வழக்குகள் முதலிலும், முதல் விசாரணை வழக்குகள் அடுத்ததாகவும், விரிவான விசாரணை தேவைப்படும் வழக்குகள் பிற்பகலிலும் விசாரணைக்கு வருவதும் நடைமுறையில் இருக்கிறது.

அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ள பாரம் பட்டியல் உரிய அலுவலகத்தில் (APPEAL SECTION) இலவசமாகவே கிடைக்கும். சில

குறிப்பிட்ட அளவே இங்கு விநியோகிப்பதால் காலையில் முந்திச் சென்றால்தான் இதைப் பெற முடியும்.

பட்டியல் கையில் இல்லை என்றால் விசாரணையின் போது நமது எண்ணுக்கு முந்தியவர் யார் என்று குறிப்பு வைத்துக் கொண்டு அவர் ஆஜரானதும் நாமே சரியாக அடுத்த விசாரணைக்கு முன்போய் நிற்கலாம்.

இலவசமாக பட்டியல் பெற்றவர்கள் அதைக் கையில் வைத்துக் கொண்டே அவ்வப்போது குறிப்பதும் சிலரின் வழக்கம். அவரிடம் தொடர்பு வைத்துக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம்.

உயர்நீதிமன்றத்தில் மிகச் சுருக்கமாகவேதான் விசாரணை நடக்கும். நிறைய வழக்குகளை ஒரே விசாரணையில் முடித்துவிடுவார்கள்.

மனுதாரரின் காரணங்கள் நியாயமானதாக இருந்தால் உயர்நீதிமன்றம் கீழமை நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து அமர்வு நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று அப்போதே உத்தரவைப் பிறப்பித்துவிடும். அல்லது மனுதாரின் மனு நிராகரிக்கப்படும்.

மனு தாக்கல் செய்யும் போதே ‘மனு தள்ளுபடி செய்யப்பட்டால். உரிய அபராதம் அல்லது தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்‘ என்ற உறுதி மொழியுடன் தாக்கல் செய்தால் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என நம்பலாம்.

# ஐகோர்ட்டில் PIP-ஆக ஆஜராகுபவர் “பார்டி இன் பெர்சன் கமிட்டியை” எதிர்கொள்வது எப்படி?

பாதிக்கப்பட்டோர் கழகம் சட்டம் பேசுவதிலும் வழக்குப் போடுவதிலும் பாயும் புலியாக செயல்படுவதால் நம்ம கழகத்தை சமாளிக்க முடியாமல் வக்கீல் இல்லாமல் வழக்கு போடுபவர்களை

வடிகட்டவும், நாம சட்டம் பேசும் அழகை ரசிக்கவும், 2019 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம், பார்டி இன் பர்சன் (PIPC) கமிட்டியை கொண்டுவந்து அந்த குழுவால் அனுமதிக்கப்படும் நபர்கள் மட்டும் உயர்நீதிமன்றங்களில் ஆஜராகலாம் என்ற நெறிமுறையைக் கொண்டு வந்துள்ளது.

மேற்றகாணும் தலைப்பில் நாம் இங்கு உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ய என்னென்ன ஆவணங்களை இணைக்க வேண்டுமென்றும் பார்டி இன் பர்சன் கமிட்டியை எவ்வாறு ஒன் பை ஒன்னாக பார்க்க வேண்டும் என்பதை பற்றி பார்ப்போம்.

இப்போது நாம் உயர்நீதிமன்றத்தில் ரிட் வழக்கு தொடுக்கணும் என்றாலே அது அரசு ஊழியர் மீதுதான் தொடுக்க இயலும். இப்ப அரசூழியர் நாம் கேட்ட ஆவணத்தை வழங்கவில்லையென்றாலோ அல்லது சட்ட விதிகளுக்கு மாறாக செயல்படுகிறார்கள் என்றாலோ அந்த அதிகாரி மீது ரிட் வழக்கு தொடுக்கலாம். இந்த ரிட் வழக்கு தொடுப்பதற்கு முன்பாக என்ன செய்ய வேண்டுமென்றால்–

முதலில் நாம் கோரிக்கை மனுவை அரசு அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். நம் மனுவை பெற்ற அரசு அதிகாரி மனுமீது நடவடிக்கை எடுக்காத போது அந்த அரசு அதிகாரியின் உயரதிகாரிகளுக்கு மேல்முறையீடு செய்து பார்க்கலாம். அப்பவும் கத ஆகலணா அந்த அதிகாரிக்கு லீகல் நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அதன் பிறகே ஆர்ட்டிக்கல் 226–ன் கீழ் ரிட் வழக்கு தொடுக்க முடியும்.

முதலில் ஆர்ட்டிக்கல் 226–ன் கீழ் ஒரு மனுவையும் அபிடவிட்டையும், டைப் செட்டையும், டேட் அண்டு எவன்சையும், சினாப்சிஸ், கோட்டிங் சீட், 750 ரூபாய்க்கான இ.கோர்ட் பீஸ், பார்ம் ஏ, பார்ம் பி–யையும் அதில் நோட்டரி பப்ளிக் கையெழுத்து பெற வேண்டும். பேட்டா சீட் ஒரு எதிர் நபருக்கு 30 ருபாய்க்கான கோர்ட் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும். எத்தனை எதிர்மனுதாரரோ அத்தனை

மனுதாரருக்கும் காப்பீஸ் வைத்து தர வேண்டும். யாரிடம் தர வேண்டும் என்றால் ரிட் மனு செக்ஷனில்தான் தர வணே்டும். ரிட் செக்ஷனுக்கு செல்ல வேண்டும் என்றால் பாஸ் பெறவேண்டும். பாஸ் பெற அனுமதிச்சீட்டு விணப்பத்தை பூர்த்தி செய்து அங்கிருக்கும் கண்ணாடி கவுண்டரில் இருக்கும் அலுவலரிடம் கொடுத்தால் அவர் உங்கள் ஆதார் கார்டை வாங்கிப் பார்த்து உங்கள் புகைப்படத்துடன் கூடிய பாஸ் தருவார்.

அதே பாசுடன் சென்றால் மத்திய காவலர் உங்களை சோதனை செய்து ரிட் செக்ஷனுக்குள் செல்ல அனுமதிப்பார். நீங்கள் ரிட் செக்ஷனுக்கு சென்று ரிட் மனு தாக்கல் செய்த அன்று மாலையே எஸ்.ஆர்.நம்பர் உங்கள் மொபைல் எண்ணிற்கு வந்துவிடும்.

இரண்டு நாட்கள் கழித்து ரிட் செக்ஷனில் விசாரித்தால் உங்கள் மனு Pary in Person Committee–க்கு சென்றிருப்பதாகவும் அங்கு சென்று PIPC–யில் ஆஜராக தகவல் கூறுவார்.

இ.இ. என்பவரையும்

எ.ஆர். என்பவரையும்

ஜே.ஆர். என்பவரையும்

ரிஜிஸ்ட்ராரையும் பார்த்து அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டீர்கள் என்றால் அவ்வளவுதான். உங்கள் ரிட் மனு W.P.No. ஆகிவிடும். அன்றோ மறுநாளோ மேற்படி தகவல் உங்கள் மொபைல் எண்ணிற்கு வந்துவிடும். விசாரணை தேதி அன்று உரிய நீதிமன்றத்தில் ஆஜராகி உங்கள் அய்ட்டம் வரும்போது நீதிபதியிடம் உங்கள் வாதத்தை வைக்கணும். அதே மாதிரி எதிர்த்தரப்பில் அரசு வக்கீல் வாதத்தை வைப்பார். இறுதியில் ஆர்டர் பகிரப்படும்.

குறிப்பு : கர்நாடக மரிநலத்தில் பிப்பாக(PIP) ஆஜராகுபவர்களுக்கு Form C தந்து இலவச வக்கீலும் உதவிக்கு கொடுத்துள்ளனர். அம்மாநிலத்தில் அதற்கு அரசாணையும்

அம்மாநில அரசு பிறப்பித்து பிப்பாக(PIP) ஆஜராகுபவர்களை ஊக்குவித்து வருகிறது என்பது சிறப்பு செய்தியாகும்.

# லஞ்சம் கேட்பவர்களைப் பிடித்துக் கொடுப்பது எப்படி?

தம் வழக்கில் தாமே ஆஜராகின்றபோது அடிக்கடி சந்தேகங்கள் எழும். இதைக் கோர்ட் ஊழியர்களிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும். அப்போதெல்லாம் அன்பளிப்பை எதிர்பார்ப்பார்கள். சில வழக்கறிஞர்கள் தங்கள் காரியம் விரைவாக முடியவேண்டும் என்பதற்காக தாங்களே விரும்பியும் லஞ்சம் கொடுப்பதால் இவர்கள் எதிர்பார்ப்பு நம்மிடமும் பெரிதாகவே இருக்கிறது. சிலர் பகிரங்கமாகவே கேட்பார்கள். லஞ்சம் கொடுப்பதும் குற்றம் என்று இ.த.ச.162-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் வழக்கில் எத்தனை தாமதம் ஆனாலும் அலைய வேண்டியிருக்கிறதே என்று கவலைப்படக்கூடாது.

அவர்களாகவே கேட்டால் ஒன்றிரண்டுமுறை தாக்காட்ட வேண்டும். அதையும் மீறிக் கேட்டால் அடுத்த முறை தருகிறேன் என்று வஞ்சகமில்லாமல் கூறிவிட்டு விபரத்தை எழுதி,

திரு. இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28

என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

இந்தத் தபால் கிடைத்தவுடன் அவர்கள் இதை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அங்கிருந்து ஆய்வாளர் ஒருவர் நம்மை வந்து சந்தித்து விபரம் கேட்பார். இது காலதாமதம் ஆகும் என்று தெரிந்தால் நேரடியாகவே மாவட்ட லஞ்ச ஒழிப்புதுறைக்கு தபாலில் அனுப்பியோ, நேரில் சென்றோ புகார் செய்யலாம்.

புகாரைப் பதிவு செய்து கொண்டு, அந்த ஊழியர் எவ்வளவு லஞ்சம் கேட்டார், எங்கே, எப்போது வரவேண்டும் என்ற விபரத்தை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். அத்துடன் லஞ்சம் கொடுப்பதற்காக பணத்தை அவர்களிடம் காட்ட வேண்டும். அந்த ரூபாய் நோட்டில் விசேச மையைத் தடவிக் கொடுப்பார்கள். அந்த மை கண்ணுக்குத் தெரியாது. பின்பு பணத்தை வாங்கிக் கொண்டு வந்துவிட வேண்டும்.

ஊழியர்களிடம் லஞ்சம் கொடுப்பதற்கு முன்னால் லஞ்ச ஒழிப்புத் துறையினர் தயாராக இருக்கின்றார்களா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். பிறகு லஞ்சம் வாங்கியதும் மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறையினர் வெளியாகி கையும் களவுமாகப் பிடித்து அவரைக் கைது செய்து விடுவார்கள்.

நீதிமன்றத்தில் லஞ்சம் வாங்கும்போது தங்களுக்குப் பிடிக்க அதிகாரம் இல்லை என்றும் உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதித்துறை விழிப்புப் பணிக்குப் புகார் செய்ய வேண்டும் என்றும் கூறி தப்பித்துக் கொள்ளவே பலரும் விரும்புகின்றனர். அதனால் ஒரு தந்திரம் செய்ய வேண்டும். லஞ்சம் கொடுப்பதை மாலை நேரத்தில் அலுவலகம் முடியப் போகும் சமயத்தில் கொடுத்து விட்டு வந்துவிட வேண்டும். அல்லது வெளியில் நிற்கிறேன். டீக் கடைக்கு வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சந்தேகம் இல்லாத அளவில் சொல்ல வேண்டும். வேலை முடியும் நேரத்தில் கொடுத்தால் பணத்தைச் செலவு செய்திருக்கமாட்டார். அதனால் வெளியே வரும் போது அடையாளம் காட்டியும் பிடித்துக் கொடுக்கலாம்.

லஞ்ச ஒழிப்புத் துறையிலும் பணிகள் மிகவும் மந்தமாகவே நடக்கின்றன. பல வழக்குகளில் பொறி வைத்துப் பிடித்தாலும் நீதிமன்றம் உப்புப் பெறாத காரணத்தைச் சொல்லி வழக்கிலிருந்து விடுதலை செய்வது சாதாரணமாக நடந்து வந்தது. இனி அது முடியாது. ஏனென்றால் இதுபோல் பாதிக்கப்பட்டோர் கழகத்தினர்

மூன்றாம் தரப்பினராக மனுச் செய்து வழக்கின் முடிவில் எதிரி விடுதலை செய்யப்பட்டால், எனக்கும் பொறி வைத்துப் பிடித்த விஜிலன்ஸ் அதிகாரிக்கும் தண்டனை வழங்கிட வேண்டும் என்று வற்புறுத்துவதால் இப்போது லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக சிறைக்குப் போவது பெரிய அளவில் நடந்து வருவது ஒரு பெரிய மாற்றம் என்றே கருத வேண்டும்.

பல சமயங்களில் பாதிக்கப்பட்டோர் புகார் செய்தாலும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் கண்டு கொள்வதில்லை. இதற்கு மாற்று வழி ஒன்றை வேளாங்கண்ணியைச் சேர்ந்த தார்கீஸ் என்பவர் கூறியுள்ளார்.

ஒரு ஊழியர் உங்களிடம் லஞ்சம் கேட்கிறார். நீங்கள் லஞ்சம் கொடுக்கக்கூடாது என நினைக்கிறீர்கள். அப்போது அவர் கன்னத்தில் 'பட்' என்று அறைந்து விட வேண்டும். நீங்கள் அறைந்ததாக அந்த ஊழியர் உங்கள் மீது வழக்கு தொடர்வார். கோர்ட்டில் விசாரணை வரும்போது 'நான் அவரை அறைந்தது உண்மைதான். அதற்காக முதலில் எனக்கு தண்டனை வழங்கிவிடுங்கள். எனக்கும் அந்த ஊழியர்க்கும் முன்விரோதம் எதுவும் கிடையாது. அவர் என்னிடம் லஞ்சம் கேட்டார். அதனால்தான் அவரை அறைந்தேன். அதற்கு என்ன தண்டனையோ அதை அவர்க்கு கொடுத்துவிடுங்கள்' என்று சொல்ல வேண்டுமாம். நல்ல யோசனைதான்.

ஆனால் பாதிக்கப்பட்டோர் கழகத்தைச் சேர்ந்த அம்பல் ஆறுமுகம் என்பவர் இதுபோல் நன்னிலம் கோர்ட்டில் ஒருவர் லஞ்சம் கொடுத்தபோது லஞ்சம் கொடுத்தவரையும், வாங்கியவரையும் கையோடு பிடித்து தனி அறையில் இருந்த நீதிபதிமுன் கொண்டு நிறுத்தி விபரத்தைச் சொல்ல, நீதிபதி விசாரித்து அந்த ஊழியரை தற்காலிக பணிநீக்கம் செய்து பிறகு பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது சிறப்புச் செய்தி. இதுபோல் திருத்தணி கோர்ட்டிலும் சாதனை செய்திருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டோர்

கழகம் என்று தெரிந்தாலே அவரிடம் லஞ்சம் கேட்கமாட்டார் என்பது மட்டும் அல்ல, அவர் இருக்கும்போது பிறரிடமும் லஞ்சம் வாங்க மாட்டார் என்பதே உண்மை.

லஞ்ச ஒழிப்புத் துறையினர் கைது செய்தால் அவர்களே வழக்கு போட்டு தண்டனையும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

ஆயிரக் கணக்கில் லஞ்சம் வாங்கினால்தான் குற்றம் என்பதல்ல. ஐந்து ரூபாய் வாங்கினாலும் அது குற்றம்தான்.

பணம் மட்டுமின்றி வெகுமதிப் பொருள்களோ, சலுகைகளோ பெறுவதுகூடக் குற்றம் என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 165-வது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

லஞ்சத்தை ஒழிப்பதில் பாதிக்கப்பட்டோர் கழகம் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறது. இதற்காக சம்பளம் வாங்காதோர் நடத்தும் சர்க்காரில் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் வாடிக்கையாளர்போல் அரசு அலுவலகங்களுக்குச் சென்று அங்கே லஞ்சம் கொடுப்பவரையும் வாங்குபவரையும் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தி இரு தரப்பினர்க்கும் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுபோல் பாதிக்கப்பட்டோர் கழக விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்கள் லஞ்சம் கொடுப்பவரையும் வாங்கியவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினால் விஜிலன்சில் கடமை தவறியதாக தண்டனை வழங்க நீதிமன்றத்தில் சிபாரிசு செய்யப்படும் என்று தெரிவித்து விட்டதால் தற்போது லஞ்ச ஒழிப்புத் துறையினர் புகார் வந்துவிட்டாலே ஓடி ஓடிப் பிடிப்பதை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அதுமட்டும் அல்ல. முன்பு பொறிவைத்து பிடித்தாலும் கைது செய்ததாக பத்திரிகையில் செய்தி கொடுத்துவிட்டு குற்றவாளிகளை ஜாமீனில் விட்டு விடுவார்கள். இப்படிச் செய்வது சட்டப்படி தவறு என்று சுட்டிக்காட்டியதால் தற்போது கைது செய்து சிறைக்கு அனுப்பவதையும் நடைமுறைப்படுத்தத் துவங்கிவிட்டார்கள்.

மேலும் முன்பு லஞ்சப் புகாரில் பொறிவைத்துப் பிடித்த குற்றவாளியிடமே பெருத்த தொகையாக லஞ்சம் வாங்கிக் கொண்டு அதில் சாட்சிகளுக்குக் கொஞ்சம் கொடுத்து மாறிச் சொல்லச் சொல்லி அவர்களைத் தப்பிக்க விட்டுவிடும் கொடுமையும் நடந்து வந்தது. பாதிக்கப்பட்டோர் கழகத்தின் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்கள் மூன்றாவது தரப்பினராக இப்படிப்பட்ட பொறிவைத்து பிடித்த வழக்குகளில் மனு செய்து நீதிமன்றத்திற்கு வழிகாட்டுவதால்

நாளடைவில் லஞ்சம் ஒழிக்கப்பட்டுவிடும் என்று நம்பலாம்.

சட்டம் படித்து நாட்டு நலனில் பெரிதும் அக்கறை உள்ளவர்கள் பாதிக்கப்பட்டோர் கழகத்தில் இணைந்து பொறுப்பாளர் ஆகலாம். இதற்கு எவ்வித கட்டணமும் கிடையாது. அதே நேரத்தில் சின்ன தப்பு செய்தாலும் ஆயுள் தண்டனை வழங்கப்படும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படுகிறது.

நீதியைத் தேடி என்ற பாமரர்க்கான சட்ட பத்திரிகையும் வெளிவருகிறது. ரூ.500 செலுத்தி ஆண்டு நன்கொடைதாரர் ஆகலாம். இது பத்திரிகை அல்ல, சட்ட களஞ்சியம். பழைய பத்திரிகைகளும் புத்தகமாகக் கிடைக்கும். பொறுப்பாளர் ஆக வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த பத்திரிகை செட் ஒன்று வாங்கிப் படித்துக் கொண்டால் சட்ட விழிப்புணர்வும் தைரியமும் பெறலாம். மேலும் Neethiyai Thedi Youtube சேனலைப் பாருங்கள். நீதியைத்தேடி வாட்ஸ்அப் குழுவிலும் இணையுங்கள். மேலும் விபரங்களுக்கு 9600765606 என்ற எண்ணில் அழைக்கலாம்.

லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்றால் பொதுமக்கள் செயல்படுவதைவிட அரசு ஊழியர்கள் முனைப்பாகச் செயல்பட வேண்டும். அப்போதுதான் முழுமையாகவும், விரைவாகவும் லஞ்சத்தை ஒழிக்க முடியும். லஞ்சம் வாங்குவது மட்டும் குற்றம் அல்ல. ஒருவர் லஞ்சம் கொடுத்து காரியம் சாதிக்க நினைத்தாலும் அதுவும் குற்றம் என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 162-வது

பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அரசு ஊழியர்களில் நேர்மையும் கடமை உணர்ச்சியும் உள்ளவர்கள் தங்கள் அலுவலகத்தில் யாராவது லஞ்சம் கொடுக்க முன்வந்தால் அவர்களைப் பிடித்து போலீசில் ஒப்படைத்து பெரிய புரட்சியைச் செய்யலாம். இதுகுறித்து 'லஞ்சம் கொடுத்தா லபக்!' என்று ஒரு நாடக புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது. நேர்மையாக நடக்க வேண்டும் என்று விரும்புகின்ற அரசு ஊழியர்கள் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது.

துணிச்சல் உள்ளவர்கள் மேல் அதிகாரிகள் லஞ்சம் வாங்கும்போது பிடித்துக் கொடுத்து வழக்கு போட்டு அரசுத் துறையில் ஒரு பெரிய மறுமலர்ச்சியையே ஏற்படுத்தலாம். இதற்கு பாதிக்கப்பட்டோர் கழகத்தின் முழு ஒத்துழைப்பும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : பாதிக்கப்பட்டோர் கழகம், நெ.227, 3வது தெரு, 7வது ப்ளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037. பேச : 9600765606. இமெயில் : neethiyaithedi2019@gmail.com.

-oOo-

